ஸ்ரீரங்கநாதப்பரப்பிரம்மணே நம:

ஸ்ரீ ஆக்நேய புராணத்தில் கூறும்

# துலாகாவேரி மகாத்மியம்.

இஃது.

845.

ஸ்ரீரங்கஸ்தலம்

ஸ்ரீ பராசரபட்டர் ஸ்ரீமஹா மஹோபாத்யாய

ஸ்ரீ அழகிய சிங்கர் பட்டரவர்களின்

திருவடிசம்பந்தர்

பெசல. நம்மாழ்வார் செட்டியார்

தெலுங்கில் வெளியிட்ட

ஷை மகாத்மியத்தின்படி

பண்டிதர்களால் மொழி பெயர்க்கப்பட்டு,

ஷெ செட்டியாரவர்களால்

சென்னை:

வெ. நா. ஜூபிலி பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

விலை அணா - 8.

*Registed Copy - Right.*

# விஷயசூசிகை.

-:0:-


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௧. | அகஸ்திய நாரதர்களால் அரிச்சந்திரமகாராஜனுக்குத் துலாகாவேரி ஸ்நாநமகத்துவம் விதிக்கப்பட்டது ... ... | ௧ |
| ௨. | காவேரி மகத்துவம் கேட்கும் முறை. ... ... | ௭ |
| ௩. | சந்திரகாந்தை வித்யாவதி என்பவர்களின் உபாக்கியானம். | ௧௩ |
| ௪. | சந்திரகாந்தை காவேரிஸ்நானஞ் செய்து தனது பாவத்தைப் போக்கிக்கொண்டது. | ௨௨ |
| ௫. | வைதராசிக்கும் நரகவாசிகளுக்கும் நடந்த சம்வாதம். | ௨௧ |
| ௬. | ஸ்ரீ விஷ்ணு கவசத்தினால் வேதராசியென்னும் விப்பிரன் முகதி பெற்றது. ... ... | ௩௫ |
| | ஸ்ரீ விஷ்ணு கவச ஸ்தோத்திர மகாமந்திரம (கவசம்.) | ௩௭ |
| ௭. | சுமேதாபசுந்த விருத்தாந்தம். | ௪0 |
| ௮. | சுசீலை தனது கணவனுக்குக் காவேரி மகத்துவத்தை வெளியிட்டது. . ... | ௫0 |
| ௯. | பிரமசர்மா உபாக்கியானம். ... | ௫௧ |
| | வைவஸ்வத ஸ்தவம். | ௬௧ |
| ௧0. | ஸராக விருத்தாந்தம். ... | ௬௬ |
| ௧௧. | பதுமசர்ப்பனுக்கும் திவ்விய புருஷனுக்கும் நடந்த சம்வாதம் ... ... | ௬௮ |
| ௧௨. | மண்டூகோபாக்யானம்; கார்த்திகைமாஸ ஸ்நாநவிசேடம். | ௭0 |
| | மண்டூகத்தின் பூர்வஜன்மம். | ௭௧ |
| ௧௩. | ஸோமவார விரதமகிமை. | ௭௪ |
| ௧௪. | ஸ்நாநவிதி. ... ... | ௭௮ |
| ௧௫. | சந்தாபனென்னும் பிராமணன் கதை. ... ... | ௮௧ |
| ௧௬. | சந்தனுபகாரகாவின் விருத்தாந்தம். ... ... ... | ௮௩ |
| | ஸ்ரீரங்கராஜநாயகஸ்தவம். | ௮௫ |
| | இராமாயண பாராயண மகிமை. ... ... . . | ௮௮ |
| ௧௭. | நாரதர் திரௌபதிக்கு மோக்ஷோபாயங்கூறுதல். ... | ௮௯ |
| ௧௮. | அருச்சுனனுக்கும் பிராமணனுக்கும் நடந்த சம்வாதம். | ௯௩ |
| ௧௯. | வாதராயணர் அருச்சுனனுக்குச் சுபத்திரை விவாகம் லப்தமாம்படிக்குக் காவேரி ஸ்நான மாடும் விதங் கூறுதல். | ௯௬ |
| ௨0. | சுபத்திரை விவாகம். | ௯௯ |
| ௨௧. | பலராமன் அருச்சுனனோடு யுத்தம் செய்ய ஆரம்பித்தல். | ௧0௮ |
| ௨௨. | கிருஷ்ண பலராமர் இந்திரபிரஸ்தமடைந்து, வதுவரர்களுக்குக் காவேரி மகத்துவத்தை யுரைத்தது. ... ... | ௧௧0 |
| | இலக்ஷ்மி ஹிருதய ஸ்தோத்திரம். ... ... | ௧௧௪ |
| ௨௩. | அகஸ்தியர் அரிச்சந்திரனுக்குக் காவேரியினது உற்பத்தியைப்பற்றி யுரைத்தது. | ௧௧௬ |
| ௨௪. | அகஸ்திய மாமுனிவர் லோபாமுத்திரையென்ற காவேரியை விவாகஞ் செய்து கொண்டது. ... ... | ௧௧௮ |
| ௨௫. | காவேரி கமண்டலத்தினின்றும் வெளிப்பட்டது. | ௧௨0 |
| ௨௬. | அகஸ்தியருக்கும் காவேரிக்கும் நடந்த சம்வாதம். | ௧௨௨ |
| ௨௭. | தேவர் முதலாயினோர் காவேரியைச் சேவித்தது. | ௧௨௪ |
| ௨௮. | சமுத்திர ராஜன் காவேரியை விவாகஞ்செய்துகொண்டது. | ௧௨௭ |
| ௨௯. | அரிச்சந்திரன் காவேரியின் மகத்துவத்தைப்புகழ்ந்தது. | ௧௨௮ |
| ௩0 | காவேரி சமுத்திர ஸங்கமத்தின் மகிமை. ... ... | ௧௩0 |

# முகவுரை

---

"உயர்வற வுயர்நல முடையவன்." ஆன சர்வேசுவரன் தமக்குரிய பரத்துவம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் அர்சசாவதாரம் என்னும்பஞ்சவடிவங்களில் சேதனர்களை உஜ்ஜீவிப்பதற்கே கொண்டது அர்ச்சாவதாரமாகும். அவ்வடிவமாக எழுந்தருளியிருக்குந் திவ்வியதேசங்களுள் சிறப்புற்றதாய்க் கோயில் என்ற திருநாமமே தனக்கு உரிய மங்கல திருநாமமாகக்கொண்ட சோழநாட்டுத் திவ்விய திருப்பதியான திருவரங்கம் பெரியகோயிலுக்கு, வட்டமாக வளைந்த ஹாரம்போலிருப்பதாய்த் தன்னைத்தியானித்தவர்களையுமஸ்பரிசித்தவர்களையும் உட்கொண்டவர்களையும் மூழ்கினவர்களையும் பாவனமுடையவர்களாக்கி, உடனே திவ்யதேகம் தந்து, விரசையில் மூழ்கச்செய்து, பெருமான் திருவடிச்சம்பந்தர்களாக்கும் பெருமை வாய்ந்த திருக்காவேரி தீரத்தத்தைப்பற்றி, ஆக்னேய புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்காவேரி புராணம் வடமொழியிலிருப்பதால் அப்பாஷையின் ஞேர்க்கேயன்றி, அதன் பிரபாவம் பிறருக்குத் தெரியாமையால் சில இஷ்டர்களிஷ்டப்படி யான் ௧௮௯௯௵ செப்டம்பர்௴ தெலுங்கில் மொழிபெயர்ப்பித்து அச்சிட்டிருக்கின்றேன். அத்தெலுங்கு புராணத்திற்கிணங்கப் பண்டிதர்களால் தமிழாக்கி, அநதந்தக் கட்டத்திற்குத் தக்க அழகிய சித்திரப் படங்களை அமைத்து இவ்வருடம் அச்சிட்டு முடித்தேன். இது சைவ வைஷ்ணவர்கள் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கி வாசிக்கத் தக்கது. இதில், தீர்த்தமான்மியமேதவிர, பல தருமோபாயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கல்விமான்கள் இதிலுள்ள குற்றத்தைக் கொள்ளாது குணமொன்றே கிரஹிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

பொல - நம்மாழ்வார் செட்டியார்.

ஸ்ரீ

ரீரங்கநாதபரப்பிரம்மணேநம:



ஆக்கினேயபுராணத்தில்

# துலாகாவேரி மகாத்மியம்.

## க-வது அத்தியாயம்.

—:o:—

శ్లో. సప్తప్రాకారమధ్యే సరసిజముకుళోద్భాసమానేవిమానే
కావేరీమధ్యదేశేమృదుతర ఫణిరాడ్భోగపర్యంకమధ్యే
నిద్రాముద్రాభిరామంకటినికట శిరః పార్శ్వవిన్యస్తహస్తం
పద్మాధాత్రీకరాభ్యాం పరిచితచరణౌ రంగనాథంభజామి·

அகஸ்திய நாரதர்களால் அரிச்சந்திரமகாராஜனுக்குத்
துலாகாவேரி ஸ்நாந மகத்துவம்
விதிக்கப்பட்டது.

ஸ்ரீஸூதபுராணிகர் சௌநகாதிருஷிகளை நோக்கிச் சொல்லுகிறார்: உறையூர்நகருக்கு அரசனான தர்மவர்மா வென்பவன் பார்கவோத்தமரான தால்பிய மகாருஷியைப் பணிந்து, அனந்த திவ்விய சரித்திரத்தைச் சிரவணித்துப் பின்னும் வினவினதாவது:— "சுவாமி! பிராணிகள் அனைவரும் எந்த உபாயத்தினால் இவ்வுலகில் அளவற்ற செல்வத்தையும், சற்புத்திரரையும், ஆயுள்விருத்தியை

யும் பெற்று மகாசுகசாலிகளாய் இருப்பார்கள்? எவ்விதத்தினால் சகலபாபங்களும் நிவாரணமாகும்? திருமகள் கேள்வனான திருமாலிடத்தில் பக்தியுண்டாவது எங்ஙனம்? எவ்விததர்மம் செய்வதினால் அக்கடவுள் சந்துஷ்டியடைந்து, மனிதர்களுக்குப் பக்தியையும் முக்தியையும் அளிக்கக் கிருபைகூருவார்? மேலும் பாபமே ரூபமாயிருக்கிற இக்கலியுகத்தில் கேவலம் பஞ்சமகா பாதகர்களாயிருந்தபோதிலும் அவர்களது பாபங்களையெல்லாம் போக்கி, அவர்களை முக்தியடையச் செய்விக்கவல்ல உபாயம் யாது? இவைகளையெல்லாம் தமது சிஷ்யனான அடியேனுக்குத் தேவரீர் கருணைகூர்ந்து ஸவிஸ்தாரமாய்க் கூறியருளவேண்டும்,, என்று கேட்கவே, பிராம்மணோத்தமரான தால்பியரும், தர்மவர்மாவை நோக்கி, ஓ! இராஜசிரேஷ்டரே! உமக்குப்பகவானுடைய திவ்யசரித்திரங்களைக் கேட்கவேண்டுமென்கிற ஆசை அதிகமாயிருப்பதினால், அவைகளைத் தெரிந்தவளவு யான் உனக்கு வெகு சந்தோஷத்துடன்சொல்லுகின்றேன் கேளும்.

### அரிச்சந்திரன் கிந்தமரை அவமதித்த பாபம் போக்கிக்கொண்டது.



முன் ஒருகாலத்தில் குருக்ஷேத்திரத்தில் சத்தியசந்தனாகிய அரிசசந்திரமகாராஜன் அனேகருஷிகளின் முன்னிலையில் அகஸ்தியமாமுனிவரைநோக்கி, இதேவிஷயத்தைக்கேட்க; அகஸ்தியரும் அதனைச் சவிஸ்தாரமாய்ச் சொல்லியருளினார். அதனை யான் இப்பொழுது நன்றாய் உமக்குப் புகலுகின்றேன்; கேட்பீராக:- முற்காலத்தில் அயோத்திமா நகரத்திற்கு அரசனாய் எங்கும் புகழ்பெற்று வாழ்ந்திருந்த அரிச்சந்திரமகாராஜன் அசுவமேதமென்னும் யாகத்தைச்செய்யக்கருதி, மகாபுண்ணிய க்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரமென்னுமிடத்திற்சென்று, அங்கிருந்த சௌநகாதி முனீஸ்வராகளைக் கிட்டி, மனக்களிப்புடன் அவர்கள் அனைவரையும் நமஸ்கரித்து, மிக வணக்கத்துடன் நின்றான். அங்ஙனம் நின்ற அரசனை அவ்வுத்தம முனிவரர்கள்

நோக்கி,"ஹரிபக்தசிரோன்மணியான அரிச்சந்திரமகாராஜனே வருவாயாக; உனது நாட்டிலுள்ள பிரஜைகள் யாவரும் சுகமாயிருக்கிறார்களா? உனது பகைவர் எல்லோரும் உன்னால் ஜயிக்கப்பட்டு வருகிறார்களா? தனதான்யாதி கோசங்களும் சேனைகளும் அபிவிர்த்தியடைந்து வருகின்றனவா? பந்துக்களையும் நேசர்களையும் பரிபாலித்து வருவதோடு, குடிகளிடத்தில் ஆறிலொரு கடமை வாங்கி அவர்களைப் போஷித்து வருகிறாயா? ஏனெனில் யாவனொருவன் தனது குடிகளைப் பாதுகாக்காமலிருக்கிறானோ அவன் ஓர் பிர்ம்ம கல்பம்வரையில் பலவிதநரகானுபவங்களை அனுபவித்துக் கடைசியில் நீசயோனியில் பிறப்பான். அப்படி அல்லாமல் குடிகளைமுறைப்படிப் பாதுகாத்துப் பிராமணபக்தி மேலிட்டிருப்பவனெவனோ அவன் பெரும்புகழையும் நீடியவாழ்வையும் அடைவான். ஆகிலும் நீயோ பிராமணபக்தியுடையவனாயும் பொறுமை தவம் ஈகை உறுதி வீரம் முதலியவைகளுக்கு இருப்பிடமாயும், நல்லோர்களால் கொண்டாடப்பட்டவனாயும் இருக்கின்றாய்; உனக்குயாது குறையிருக்கின்றது? "என்றிவ்வாறு அவனைப்புகழ்ந்து கொண்டாடியபின், அம்முனிவர்கள் எல்லோரும் அவனுக்குத் தருமத்தின்படி அதிதிபூசையியற்றி ஆசனமொன்றளிக்க; அரசனும் அதில் இருந்துகொண்டு அவர்களைநோக்கி, பக்தியுடன்வணங்கி, "அடிகளே! தபோமூர்த்திகளும் லோகபூஜ்ஜியருமான தேவரீரைத் தெரிசித்தமாத்திரத்தே நான் தன்யனும் அருள்பெற்றவனும் பரமபவித்திரனுமாயினேன். தாங்களெல்லோரும் இவ்வுத்தமக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருப்பீரென்றே இங்குவந்தேன். அடியேன் விண்ணப்பமொன்றுண்டு. அதனைச் செவிசாய்த்து அதற்கிணங்குமாறு செய்தருளவேண்டும். ஓ விப்பிரோத்தமர்களே! கடுமையான குடும்பபந்தங்களை எவ்வாறு கடப்பேன்? புத்தி முத்திகள் எவ்வாறு லபிக்கும்? சிரஞ்சீவிபதம் எப்படி லப்தமாகும்? குலவிருத்தியாவது எங்ஙனம்? எந்த உபாயத்தினால் ஸ்ரீஹரியானவர் பிரீதியடைந்து சகலபாக்கியத்தையும் அருளுவர்? இதனையோசித்து, தருமசாரமான தொன்றனை எனக்குபதேசிக்கவேண்டும்." என்று வினயபூர்வகமாய்க் கேட்டனன்.

அவர்களும் அவனைநோக்கி, இராஜசிகாமணியே! இப்பொழுது நீ தர்மபுத்தியோடுகேட்டவை மிகவும் சிறந்தன. நீ அசுவமேதம் என்னும் யாகத்தை முறைப்படிச்செய்வாயாகில், அதினால் ஜகதீசன் அதிகதிருப்தியடைந்து, இவ்வுலகத்தில் சகலவித நன்மைகளையும் கொடுத்து, மறுஜன்மத்தில் மோக்ஷசாம்பிராச்சியத்தையும் அளிப்

பார். மேலும் இந்தவேள்வியைச் செய்பவன் பிரமஹத்தியாதிபாபங்களைச் செய்திருந்தபோதிலும் அவைகளினீங்கிப் பரிசுத்தனாவான் என்றார்கள். இதனைக்கேட்ட அரசனும அவர்களைநோக்கி, "தபோதனர்களே! தேவரீர் கட்டளையிட்டபடியே அடியேன் அசுவமேதயாகத்தை இந்தக்ஷணமேசெய்ய விருப்பமுள்ளவனாயிருக்கிறேன் ஆகிலும் சகலமும்தெரிந்த நீங்கள்தான் அதனைமுறைப்படிச் செய்வித்துக்கொடுத்து அடியேனைக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும்." என்று பணிந்துவேண்டிக்கொண்டான். இத்தருணத்தில் அங்குநைமிசாரணியவாசிகளான ருஷிகள் பலரும் சூதபுராணிகரை முன்னிட்டுக்கொண்டுவந்து சேர்ந்தார்கள். அவர்கள் யாவரெனில், வசிஷ்டர் வாமதேவர் ஜாபாலி காஸ்யபர் பிருகு விசுவாமித்திரர் துர்வாஸர் ஹாரீதர் அத்திரி மங்களர் வீதிஹோத்திரர் காலவர் மார்க்கண்டேயர் அஸிதர் கண்வர் ஸிதர் யாஜர் உபயாஜநர் பரத்வாஜர் கௌதமர் பைலவர் பராசரர் வியாசர் சாதாதபர் முத்கலர் மௌத்கலர் கஷவர் வால்மீகர் வாருணர் அகஸ்தியர் மதங்கர் ஜாதகர்ணர் ஸுதீக்ஷணர் சநாநந்தர் சத்தியவிருதர் சத்தியதபஸ் ஆசுரி நாரதர் கவி தௌமியர் ஆங்கிரசு காளிந்தர் மாண்டவியர் கார்க்கர் கதக்ஷதர் ஹோதா தூமகேது ஜலப்லவர் ஊர்த்துவதேஜஸ் மகாதேஜஸ் சங்கர் லிகிதர் போதாயனர் யாக்கியவல்கியர் யக்கியகேது மரு க்ரது புலஸ்தியர் புலகர் கௌரர் ஆஸ்வலாயனர் ஆபஸ்தம்பர் யக்யராசி மரீசி பப்ரு முதலானவர்களாம். இவர்களுல் சிலர் சகலவேதவேதாந்த தத்துவங்களையுங்கரைகண்டவர்களாயும், சிலர் சன்னியாசிகளாயும், சிலர் வர்னப்பிரஸ்தர்களாயும், சிலர்பிர்ம்மசாரிகளாயும், சிலர்வாயுபக்ஷணர்களாயும், சிலர்உதிர்ந்த இலைகளைப்பக்ஷிப்பவர்களாயும், சிலர்சமதமாதிகுணங்கள் பொருந்தினவர்களாயும் இருந்தார்கள். இம்முனிகணங்கள் தங்கள் தங்கள் சிஷ்யப்ரசிஷ்யர்களுடனே குருக்ஷேத்திர வாசிகளான ருஷிகளிடத்தில் துலாகாவேரி மகத்துவத்தைக்கேட்கும்படிவர; அவர்கள் வரவைக்கண்டவுடன் குருக்ஷேத்திர வாசிகளான ருஷிகளும் எதிர்சென்று அழைத்துவந்து, அவரவர்களைத்தக்க ஆசனங்களில் இருக்கச்செய்து அருக்யபாத்யாசமநீயாதி உபசாரங்களைச்செய்து, ஒருவர்க்கொருவர் குசலப்பிரசினைசெய்துகொண்டார்கள். பின்பு அரிச்சந்திர மகாராஜனும் அங்குவந்த முனிவர்கள் எல்லோருக்கும் வந்தனைப்புரிந்து சொன்னதாவது:—

"ஓ! மகாருஷிகளே! அடியேன் யாதுதவம்செய்தேனோ நீங்கள் எல்லோரும் திருக்கூட்டத்துடனே இங்கு இப்பொழுது எழுந்தரு

ளப்பெற்றேன். இன்று அடியேனுடைய ஜன்மம் ஈடேறிற்று. அடியேனுடைய பிதிர்க்களும் திருப்தியடைந்தனர். தங்களைத்தரிசித்த அடியேனுக்கு ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவே பிரத்தியக்ஷமானார் போலும். கேவலம் மூடனும் ஐசுவரியமத்தனுமான அடியேனுக்குச் சாதுக்களான தங்களுடைய திவ்யசரணாரவிந்த தரிசனங்கிடைத்தது ஜன்மாந்திரத்தில் செய்தபுண்ணியத்தினது பலன்தான்." என்றுபலவாறுகொண்டாடிக் கைகட்டி வாய்புதைத்துநின்றான். உடனே ருஷிகளும் அவனைநோக்கி, வாராய் அரிச்சந்திரராஜனே! வசிஷ்டசிஷ்யனான உனக்கு நாங்கள் அதிகமாய்ச் சொல்லத்தக்கது ஒன்றுமில்லை. இதோ! இந்த ஆசனத்தில் உட்காருவாய்; என்று அவனுக்கு ஓர் ஆசனம்கொடுக்க; அவன் அதில் உட்கார்ந்தபின் சௌநகர் என்னும் ருஷியானவர் நாரதர் அகஸ்தியர் இவ்விருவரையும்நோக்கி "ஓ! அகஸ்திய நாரதர்களே! இவ்வரசன் இப்பொழுது அசுவமேதயாகஞ் செய்யக்கருதி இங்குவந்திருக்கின்றான்;இவனோமகாதயவுடையவன்; தர்மிஷ்டன்; சத்தியவிரதன் என்பது உங்களுக்கே தெரிந்தவிஷயம். நீங்களும் இப்பொழுது இங்குத் தற்செயலாய் வந்திருக்கிறீர்கள். ஆகையால் அவனது யாகத்தை நிறைவேற்றவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

இதைக்கேட்ட நாரதஅகஸ்தியர்களும் அவரைநோக்கி, முனிவரரே! இவ்வரிச்சந்திரராஜன் மிக்கபுண்ணியன்; அசுவமேதயாகம் புரிய யோக்கியமானவன்றான் சந்தேகமில்லை. ஆகிலும் இவன் முன்னம் விசுவாமித்திரரிடத்தில் கடன்பட்டு, அவரால் துரத்துண்டு,காடுகாடாய் அலைந்து, பசிதாகத்தினால்வருந்தி, மனஞ்சோர்ந்து இருக்குங்காலத்தில், அங்குத்தவம் புரிந்துகொண்டிருந்த கிந்தமர் என்னும் ருஷீஸ்வரரைக்கண்டு தனதுபுத்தி சுவாதீனமில்லாமலிருந்தபடியால் அவர்க்கு மரியாதை செய்யாமல் வாளா விருந்துவிட்டனன். அந்த ருஷியும் தமது ஞான திருஷ்டியால் இவனது நிலைமையை முற்றுமுணர்ந்து, தமமை அவமரியாதை செய்ததற்காக இவன்மீது கோபிக்காமல் இருந்துவிட்டனர். இவன் அந்தப் பிராமணோத்தமரை அவமதித்தது புத்திபூர்வகமா யிராதிருந்தபோதிலும் பிராம்மணாபசாரம் பொல்லாதது; யாவனொருவன் மனோவாக்குக்காயமென்றுசொல்லப்படுகிற திரிகரணங்களினாலும் ஓர்பிராமணனை அவமதிக்கின்றானோ அவன் பிரம்ம ராக்ஷஸனாய்ப்பிறந்து திரிவான். அவன் புத்திபூர்வகமாய்ச்செய்த அபசாரத்திற்குப் பிராயச்சித்தம் இல்லை. இவனோ அபுத்திபூர்வகமாய்ச் செய்தபடியால், அதற்கு ஓர் பிராயச்சித்தஞ்

செய்துவிட்டால் அந்ததோஷம் நீங்கிவிடும். பின்பு யாகம்செய்ய இவனுக்கு அதிகாரமுண்டாகும். அப்படிப்பட்ட பிராயச்சித்தமெதுவென்றால், துலாமாஸமென்கிற அற்பிசிமாதத்தில் காவேரிமகாநதியிலும், வைகாசிமாதத்தில் நர்மதாநதியிலும், ஒருதரம் ஸ்நாநஞ்செய்தால் முற்கூறியபிராமணபைசாசம்நீங்கி, யாகம்செய்வதற்குத்தகுதியுடையவனாவான். இந்தக்காவேரிநதிக்குத் துலாமாஸத்தில் ஏன் அவ்வளவுமகிமையென்றால், இவ்வுலகிலுள்ள அறுபத்தாறுகோடிதீர்த்தங்களும் மற்றும் பதினான்குலோகங்களிலுமுள்ள புண்ணியதீர்த்தங்களும் இக்காவேரிநதியில் தமதுபாவங்களை நிவர்த்தித்துக்கொள்ளுதற்கு அம்மாதத்தில்வந்துசேருகின்றன. ஆதலால் அந்தமாதத்தில் இந்நதியில் ஸ்நாநஞ்செய்பவருக்குச் சகலவித இஷ்டசித்திகளும் உண்டாவதுந்தவிர மோக்ஷப்பிராப்தியுமுண்டாகும். இந்தக் காவேரியென்னும் மகாபுண்ணிய நதியின்மகிமையை இரண்டாயிரம நாக்குகளையுடைய ஆதிசேஷன் பதினாயிர ஸம்வச்சரம்வரையில் வர்ணித்தும் அவனால் கூடாமற்போய்விட்டது. கேவலம் மகாபாபிஷ்டனாயிருக்கிறவன் இந்நதியில் ஸ்நாநஞ்செய்து மூன்றுராத்திரி தீரவாசஞ்செய்வானேயானால், அவன்செய்த பாபங்களெல்லாம் பஞ்சாய்ப்பறந்தோடிப்போகுமென்றால், பாபரகிதனான ஒருவன் ஸ்நாநஞ்செய்தாலவனுக்கு நற்கதிகிடைக்குமென்பதற்குச் சந்தேகமுண்டோ? மேலும் ஸஹ்யபர்வதந்தொடங்கிச் சமுத்திரம்வரையிலும் இம்மஹாநதியினது இருகரைகளிலும் அநேக விஷ்ணு க்ஷேத்திரங்களும், சிவக்ஷேத்திரங்களும், ருஷிகளின் திவ்வியாசிரமங்களும், நிறைந்திருக்கின்றன. பிர்ம்மா விஷ்ணு மகேஸ்வரர்களென்னும் திரிமூர்த்திகளுந்தவிர இம்மூன்றுலகங்களிலுள்ள மற்றெவரும் அநேககோடியுகம்வரையில் வர்ணித்தாலும் அவர்களால் துலாகாவேரியின் மகிமை இன்னதென்று உள்ளபடிச்சொல்வதற்குமுடியாது. காவேரியின் அலைகளெல்லாம் ஒவ்வொரு உத்தமநதிகளாகும். மணல்களெல்லாம் தேவசமூகங்களாகும். இதில் ஆடினால் சகலதீர்த்தஸ்நான பலனுண்டாகும். பூமியிலுள்ளபுழுதிகளும் புற்களும் ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களும் மேகத்தினின்றுபெய்கின்ற மழைத்துளிகளும் எவ்வளவோ அவ்வளவுகோடிக் கணக்கிலடங்கிய புண்ணியதீர்த்தங்கள் துலாமாதத்தில் இந்தகாவேரியை வந்தடைகின்றன. காவேரியில் துளிக்கும் ஒவ்வொருதிவலையும் ஒவ்வொருநதிகளேயாம். இந்நதியில் துலாமாதத்தில் ஸ்நாநமுடித்தவன் தனது துன்பங்களையோட்டி முராரியின் முண்டகபாதங்களை யடைகின்றான். ஆகையால் இ பரம

சிரேஷ்டனே! நீயும் துலாமாதத்தில் காவேரிஸ்நாநம் செய்வாயாகில் இஷ்டசித்தியைப் பெறுவாயென்பதிற் றடையில்லை. என்று இவ்வாறு உரைத்த அகஸ்தியநாரதர்களிருவரையும் அரிச்சந்திரன்பணிந்து 'ஓ ருஷீஸ்வரர்களே! உங்களுக்குத் தாஸனான அடியேன் கொண்டிருக்கிற ஓர் எண்ணத்தைக் கருணைக்கடலான நீங்கள் எப்படியாவது நிறைவேற்றி வைக்கவேண்டும். நீங்கள் இப்பொழுது சொன்ன துலாகாவேரியின் மகிமையை அடியேனுக்கு நன்றாய் விரித்துரைக்க வேண்டும். துலாமாசத்தில் காவேரியிலும், வைகாசிமாதத்தில் நர்மதையிலும் ஸ்நாநஞ்செய்யும் விதம் எப்படி? அவற்றின்பலன் எவை? பன்னிரண்டு மாதங்களுக்குள் இந்த அற்பிசி வைகாசி என்ற இரண்டு மாதங்களுக்கு மட்டும் அப்படிப்பட்ட ஏற்றம் எப்படிவந்தது? இவைகளுக்கு அதிதேவதைகள் யாவர்? அப்பொழுது தானம் செய்யவேண்டிய வஸ்துக்கள் எவை? இவைமுதலியவைகளை அடியேனுக்கு ஸவிஸ்தாரமாய்க் கூறவேண்டும்.'' என்று மிக்க வணக்கத்துடன் கேட்டனன்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

## இரண்டாம் அத்தியாயம்.

### காவேரிமகத்துவம் கேட்கும் முறை.

—:O:—

இவ்வாறு அரிச்சந்திரமகாராஜனால் வினவப்பட்ட அகஸ்தியமகாருஷியும் அகமகிழ்ச்சியுடன் அவனை நோக்கி, ஓ! மகாராஜனே நீ இப்படித் துலாகாவேரியினது சிறப்பைப்பற்றி எங்களைப் பிரசனை பண்ணினதற்காக, உன்னை வெகுவாய் மெச்சினேம். யாவனொருவன் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து, அதின் மகாத்மியத்தின் ஒரு அத்தியாயத்தையாவது ஒரு சுலோகத்தையாவது பக்தி சிரத்தையுடன் படிக்கின்றானோ அல்லது கேட்கின்றானோ அவனடையும் புண்ணியபலத்தை யளவிட்டுரைக்க ஸாக்ஷாத் மகாவிஷ்ணுவைத்தவிர வேறெவராலும் முடியாது. பூர்வஜன்மத்தில்செய்த புண்ணியத்தின் பிரபாவத்தினால் உனக்கு இப்படிப்பட்ட மகாருஷிகளாகிய ஸத்துக்களுடைய சகவாசங் கிடைத்தது. ஒருவன் அநேக ஜன்மங்களிற் செய்துவந்த உத்தம விரதங்கள் தவங்கள் வேதாத்யயனம் இவை முதலான ஸத்கர்மங்களால் சத்துக்களுடைய சகவாசத்தைப் பெறு

கிறான். அந்த சாதுக்களுடைய சேர்க்கையினால் புண்ணிய கதாச்சிரவணத்தில் புத்தி யுண்டாகின்றது. அப்படிப் புண்ணியகதைகளைக் கேட்பதினால் மநோவாக்குக்காயம் என்ற மூன்று கரணங்களினால் உண்டாகின்ற தோஷங்கள் நசிக்கின்றன. இப்படி நிர்த்தோஷனாய்விட்ட மாத்திரத்தில், அவன் மனதுக்கு ஓர் தெளிவுபிறக்கின்றது. இங்ஙனம் மனசு தெளிவுற்றவுடனே அவன் ஹரியினது பாதகமலங்களை இடைவிடாது தியானஞ்செய்கிறான். இங்ஙனம் ஒருக்கால் தியானம் செய்தவனுக்குப் புருஷோத்தமனானபகவான் பிரசன்னனாகித் தமது சாரூப்யததை அளிக்கின்றார். ஆகையால், அரசனே! நீ இனி எப்பொழுதும் சாதுக்களோடு சேர்ந்திருக்கவேண்டியது. யான் நீ கேட்டபடி துலாகாவேரியின் மகிமையைத்தெரிந்தமட்டில் விஸ்தாரமாய்ச் சொல்லுகின்றேன். துலாகாவேரியினுடைய ஜலத்திவலைகள் ஒவ்வொன்றும் புண்ணிய தீர்த்தங்கள். அந்நதியிலுள்ள மணல்கள் எல்லாம் தேவதைகள். ஆகையாற்றான் இக்காவேரிநதியானது மற்ற நதிகளைக்காட்டிலும் மிகச்சிறந்ததாயிற்று. தர்மார்த்த காமமோக்ஷமென்னும் நான்குவித புருஷார்த்தங்களுக்குள் மிகவும் உத்தமமான மோக்ஷகைவல்யமென்னும் புருஷார்த்தமானது இதினால் இலபிக்கும் துலாமாசத்தில் சகல புண்ணியதீர்த்தங்களும் இதில்வந்து கூடுகிறபடியால், அப்பொழுது இதில் ஸ்நானஞ்செய்பவர் பஞ்சமகாபாதகராயிருந்தபோதிலும் அவர்களுடைய பாவங்களையெல்லாம்போக்கி, அவர்களுக்கு அஸ்வமேதயாக பலனையளிக்கின்றது. அந்த துலாமாசத்தில் பூலோகத்திலுள்ள மகருஷிகளும் பரலோகத்திலுள்ள தேவாதி பிதிர்க்களும் இக்காவேரியை வெகுவாய்க் கொண்டாடுகிறார்கள். யாவனொருவன் துலாமாசத்தில காவேரியில் மூன்றுநாள் ஸ்நாநஞ்செய்கிறானோ? அவன் சகலபாபங்களும் நீங்கி, விஷ்ணுலோகத்தை யடைகின்றனன், பின்னும் எவனொருவன் காவேரிநதியில் மாசிமாதத்திலும் அற்பிசிமாதத்திலும் ஸ்நாநஞ்செய்கிறானோ அவன் மூன்றுகோடி குலங்களோடு பிர்ம்மலோகத்தில் சுகித்திருப்பான். துலாமாசத்தில் எவன் சற்பாத்திரமறிந்து அன்னதானமும் அல்லது பிதிர்க்களை உத்தேசித்து சிராத்த முதலியவையும் செய்கின்றானோ அவனுடைய பிதிர்க்கள் அதினால் கற்பகோடிகாலம் வரையில் திருப்தியடைகிறார்கள். என்று வேதங்களே முறையிடுகின்றன. மேலும் துலாமாசத்தில் பிரம்மாமுதலான தேவர்களும், ஏழுமாதாக்களும், சகல அப்ஸரஸுக்களும் பார்வதியும் சரஸ்வதியும் இலக்ஷ்மியும் இந்திராணியும் ரோகிணீ

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



தேவியும் இன்னுமுள்ள தேவஸ்திரீகளும் இந்தக்காவேரியில் ஒவ்வொருதினமும் வந்து ஸ்நாநம் செய்கிறார்கள். பலவாறு சொல்லுவதில் பிரயோஜனம் யாவை? மனிதர்களுக்குப் புத்தியையும் முக்தியையும் கொடுப்பதற்கென்றே பிர்மதேவர் நதிகளுக்குள் சிறந்ததாக இக்காவேரிநதியைச் சிருஷ்டித்திருக்கின்றார். யாவனொருவன் இந்தக்காவேரியின் சங்கமத்தில் விசேஷமாய்த் துலாமாசத்தில் தினந்தோறும் ஸ்நாநஞ்செய்கிறானோ அவன் தன்னையும் தன்னைப்பெற்றாரையும் தனதுமனைவியைச்சேர்ந்த பந்துக்களையும் ஆகிய மூன்று வர்க்க பந்துக்களை உத்தாரகம் பண்ணுகிறான். மேலும் காவேரியின் கரையருகில் இருக்கின்ற விருக்ஷங்கள், மிருகங்கள், பக்ஷிகள் இவைகள்கூட அந்நதியினது குளிர்ந்த ஜலக்காற்று மேலேபட்டு முக்தியடைகின்றன வென்றால், பகுத்தறிவுடைய மனிதர்கள் பக்திசிரத்தையுடன் அதில் ஸ்நாநம்செய்வார்களேயானால் அவர்கள் முக்தியடைவார்கள் என்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆயிரம் முகங்களையுடைய ஆதிசேஷனே துலாகாவேரி மகத்துவத்தை உள்ளபடி வர்ணிக்கச் சக்தியற்றவனானால், அதனையான் எங்ஙனம் வர்ணிக்கக்கூடும். ஆகிலும் தெரிந்தவளவு சங்கிரகமாய்க்கூறுகிறேன். காவேரிமகாநதியின் மகத்துவம், வித்துவான்களுடைய மகிமை, திருத்துழாயின் மகிமை, கங்கையின மகிமை, ஏகாதசியில உபவாசமிருப்பதன் மகிமை, திருத்துழாயால் பகவானுடைய மூர்த்தமாகிய சாளக்கிராமசிலைகளை யாராதிப்பதினால் உண்டாகும்மகிமை, இவை எல்லாவற்றையும் சொல்வதற்கு ஆதிசேஷனொருவனே தக்கவன். ஆகிலும் சக்கிராயுததாரியான ஸ்ரீஹரிக்கு உவப்பை யுண்டுபண்ணத்தக்க காவேரியின் வைபவத்தைமாத்திரம் யான்தெரிந்தமட்டில் இப்பொழுது உமக்குச் சொல்லுகிறேன். சற்று ஸாவதானமாய்க் கேட்பாயாக. ஒருவன் காவேரியை மனதினால் ஸ்மரித்தாலும், வாயினால்துதித்தாலும், கண்களால் தரிசித்தாலும், காதுகளால் கேட்டாலும், கைகளால் ஸ்பரிசித்தாலும், அதின்ஜலத்தில ஸ்நாநஞ் செய்தாலும், அவை அவன் ஜன்மாந்திரத்தில செய்தபுண்ணியத்தின் பலனென்றே நினைக்கவேண்டும். எவன் இக்காவேரியில் ஐப்பசி வைகாசி மாசி இந்த மாதங்களில் ஸ்நாநஞ் செய்கின்றானோ அவன் அடையும் பலத்தை யுரைக்க ஸ்ரீமந்நாராயண மூர்த்தியே தக்கவராவார். ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருப்பாதப் பெருவிரலிலிருந்து உற்பவித்த கங்கையானது எப்படி நதிகளுக்குள் சிறந்ததோ அப்படியும், புஷ்பங்களுக்குள் துளசியும், யக்யங்களுக்குள் பஞ்சமகாயக்யமும், விரததினங்களுக்

குள் ஏகாதசியும், தேவர்களுக்குள் ஸ்ரீமந்நாராயணனும், எழுத்துக்களுள் பிரணவமும், மந்திரங்களுக்குள் அஷ்டாக்ஷரமும், வேதங்களுக்குள் சாமவேதமும், ஏகாதசருத்திரர்களுள் சங்கரனும், பிராம்மண ஸ்திரீகளுக்குள் அருந்ததியும், ஸ்திரீகளுக்குள் இலக்ஷிமியும், தானங்களுக்குள் அன்னதானமும், கிரகங்களுக்குள் சந்திரனும், தேஜசுக்களுள் சூரியனும், யக்யங்களுள் மனோயக்யமும், பூஜைகளுக்குள் விஷ்ணுபூஜையும், ஆச்சிரமத்தில் கிருகஸ்தாச்சிரமமும், ஜாதிகளுக்குள் பிராம்மணஜாதியும், பொறுமையுடையவர்களுக்குள் பூதேவியும், அஸ்திரங்களுக்குள் பிர்ம்மாஸ்திரமும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள் ஸ்ரீரங்க க்ஷேத்திரமும், பரிசுத்தஞ்செய்வதில் இராமசேதுவும், சூக்தங்களில் புருஷசூக்தமும் பசுக்களுள் காமதேனுவும், சதுர்யுகங்களுள் கிருதயுகமும் எப்படி உத்தமோத்தம மானவைகளோ அப்படியே காவேரிமகாநதியானது மற்ற எல்லாநதிகளுக்குள் மிகச்சிறந்தது. கங்கைநதியை கீர்த்தனஞ்செய்வதாலும், தனுஷ்கோடியைத் தரிசிப்பதாலும், இராமாயணத்தைச் சிரவணம் பண்ணுவதாலும், முக்தியுண்டாகின்றது. காவேரியோ தன்னை ஸ்மரிப்பவர்களுக்கு முக்தியைத்தருகின்றது. ஸேதுதொடங்கிக் கைலாஸம்வரையில் நீளத்தில லட்சம்யோஜனையும் அகலத்தில் ஒன்பதினாயிரம்யோஜனைவிஸ்தீர்ணமுமுள்ள இத்தேசந்தான் கர்மபூமியென்று சொல்லப்படுகிறது. இதன் நடுவுள்ள பூமிமுற்றும் புண்ணியத்துக்குக் காரணமானது. இதுதவிர மற்றபூமிமுற்றும் போகத்தைத் தரத்தக்கது. அனேககோடி ஜன்மங்களில் செய்தபுண்ணியத்தினால் ஒருவனுக்கு நரஜன்மம் கிடைக்கின்றது. அப்படியனேககோடி ஜன்மத்தில் செய்த புண்ணியவசத்தால பிராமணஜன்மம் கிடைக்கின்றது. அந்தப் பிராமணஜன்ம மெடுப்பதிலும இந்தப்புண்ணியபூமியில் பிராமணனாய் வந்துபிறப்பது ஏதோ காகதாளீய மென்னும் நியாயப்படி தற்செயலாய் லபிக்கின்றது. ஆகையால், உலகத்தில் மனிதஜன்மம் எடுத்தும் எவனொருவன் காவேரியில் ஸ்நாநம் செய்யவில்லையோ அவன் கர்த்தபத்திலும் கேடானவன். அதிலும் முக்கியமாய் எவன் துலாமாசத்தில் காவேரிஸ்நாநம செய்கிறானோ அவன் தவம் தானம வேதாத்தியயனம் விரதம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஒருவன்காவேரியில் ஒருதடவைஸ்நாநம் செய்வானேயானால் அவன் உடனே சாக்ஷாத் ஸ்ரீமந்நாரயணனாகவே ஆய்விடுகிறான். மற்றவிரதங்களில் ஏதேனும் கிஞ்சித்து லோபம்நேரிட்டால் பிராயச்சித்தம் செய்யவேண்டும். காவேரிஸ்நாநத்திற்கோ அப்படியில்லை.

மந்திரம் மௌனம் நியமாதிகளில்லாமல் தூஷ்ணிஸ்நாந மொன்றே ஸப்தஜன்ம பாவங்களையும் ஓட்டிவிடும். நியமத்தோடு இந்த ஸ்நானஞ்செய்தால் மாதுரு பிதுர் பக்ஷங்களில் ஏழுதலைமுறைகளை உத்தரித்துச் சுத்தமாக்கும். இனி துலாகாவேரியில் ஸ்நாநம் செய்யும் விதியைச்சற்று விவரிப்பேன்கேளும். ஒருவன் இரவில் பிராம்ம முகூர்த்தமென்னும் நான்காவது யாமத்தில் எழுந்திருந்து ஸ்ரீமத்கமலாஸமேதனை ஸ்ரீமந்நாராயணனைத் தியானஞ்செய்து பின்பு கைகால் சுத்திசெய்து தந்ததாவனம்பண்ணி காவேரியை மனதினால் தியானித்துக்கொண்டே அகமர்ஷண சூக்தத்தோடுஸ்நாநஞ் செய்யவேண்டும். பின்பு புஷ்பாஞ்சலியால் காவேரியை அர்ச்சித்து, ஸ்ரீரங்கநாதனையும்நமஸ்கரித்துமகாபரிசுத்தனாய் ஜலத்தில் இருந்துகொண்டே அர்க்கியம் கொடுத்து ஆசமனஞ்செய்து, கரையிலேர்ந்து, தவளவஸ்திரத்தைத்தரித்து, புண்டரம்புனைந்து, சந்தியாவந்தனம் முதலிய நித்தியவிதிகளையும் முடிக்கக்கடவன். பின்னர் ஸ்நாநஞ்செய்பவர் எல்லோரும் ஒன்றாய்க்கூடி ஓர்சுத்தமானவிடத்தில் திவ்வியமான ஆஸனமிட்டு அதின்பேரில் சுத்தமாயும் வெளுப்பாயும் மிருதுவாயும் அழகாயுமிருக்கின்ற வஸ்திரத்தைப் பரப்பி அதின்மேல் ஜிதேந்திரியனையும் பரிசுத்தனையும் வேத வேதாந்தங்களின் உட்பொருளையுணர்ந்தவனையும் ஸதாசார சீலனையும் பதினெண்புராணங்களையு முணர்ந்தவனையுமிருக்கிற ஒருமகானை உட்காரச்செய்து, அந்தப் பௌராணிகரை ஓர்மனிதனென்று நினைக்காமல் ஸாக்ஷாத் வியாஸபகவான் என்றே நினைத்துக்கொண்டு, எல்லோரும் அவரைநோக்கி, "ஓ! பிராம்மணோத்தமரே! இப்பொழுது நாங்கள் துலாகாவேரியினது மாகாத்மியத்தைக் கேட்க விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால் தேவரீர் கருணைகூர்ந்து அதனை யடியேங்களுக்குச் சொல்லவேண்டும்." என்று விநயத்துடன் பிரார்த்தித்து, அவர் புராணபடனஞ்செய்து ஓயுமளவும் பக்திச்சிரத்தையுடன் மௌனமாய்க் கேட்கவேண்டும். காவேரிஸ்நாநஞ் செய்வதில் சில நியமங்கள் உண்டு; நியமமில்லாத ஸ்நானம் நிஷ்பலம், அந்த நியமங்களைச் செய்ய அசக்தர்களாயிருப்பவர் சாதாரணமாய் ஸ்நாநமட்டும் செய்தால் போதும். ஆகையால் அந்நியமங்களைக் கூடியமட்டும் சரிவர நடத்தவேண்டும். அவையெவையெனில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், பகலில் உறங்குதல், க்ஷௌளம்பண்ணிக்கொள்ளுதல், தாம்பூலம் தரித்துக்கொள்ளுதல், ஆசாரமின்றிப் போஜனஞ் செய்தல், ஸ்திரீகளோடு சங்கமம் செய்தல், துஷ்டர்களோடு சகவா

ஸஞ்செய்தல், வீண்பேச்சுகளைப் பேசுதல், பாயில் படுத்தல், நிஷித்த பதார்த்தங்களைப் புசித்தல், பரான்ன போஜனஞ்செய்தலாகும் இவைகளை முற்றும் விலக்கவேண்டும். இனிவிசேஷமாய்த் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்வோர் அநுஷ்டிக்கவேண்டிய நியமத்தைச் சங்கிரகமாய்ச் சொல்லுகிறேன். பெரும்பூசிணிக்காய், வெள்ளரிக்காய், கத்தரிக்காயின் பலவகைகள், மொச்சை, கொள்ளு, உளுந்து, காராமணி, கொத்துக்கடலை, துவரை, கீரைத்தண்டு, தோசக்காய், சுரைக்காய், முருங்கைக்காய், சக்கரைப்பூசணை, பீர்க்கங்காய், வெண்கலப்பாத்திரத்தில் சமைத்தல், பாத்திரபோஜனம, இராத்திரியிலாவது காலை மாலையிலாவது புஜித்தல், சோற்றின் அடிக்காந்தல், கருணைக்கிழங்கு, இலந்தை குழந்தைகள் சாப்பிட்டு மிகுந்தசோறு, பழையசோறு, எருமைப்பால, ஆட்டுப்பால், சுவாமிக்கு நிவேதனம பண்ணாத அன்னம், ஸ்திரீகள் சாப்பிட்டு சேஷமான அன்னம், சூத்திரசேஷமான அன்னம, மயிர்விழுந்த அன்னம், சிராத்தசேஷமான அன்னம, முதலியவைகளைப் புசிக்கலாகாது. ஓ அரசனே! உலகத்தில் கஷ்டப்படாமல புண்ணியம கிடைக்கமாட்டாது. ஆகையால் துலாகாவேரி ஸ்நாநம் செய்பவா இவ்வாறு நியமத்தோடு இருக்கவேண்டும். இங்கு விலக்கிய பதார்த்தங்களைப் புசிப்பவன் மறுஜனனத்தில பன்றியாய்ப்பிறப்பான். அப்படிக்கன்றி நியமத்தோடு துலாகாவேரி ஸ்நாநஞ் செய்பவன் ஸாக்ஷாத் தேவநாயகனுடைய வைகுண்டபதவிக்கு உரியவனாவான் என்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லை. விதிவழுவிர்ப்பெற்ற ஸ்நாநம் பாவம் ஒன்றையே போக்கும். மலமூத்திரங்களுக்கு உறைவிடமாயுள நீரிற்குமிழிபோன்றதுமான இந்தத்தேகம் நிலையற்றது தென்திசைக்கோமானாகிய யமன் மனிதர் உயிரைக்கவர்ந்துபோக எப்போது சமயமென்று ஸதா வழிபார்த்துக்கொண்டிருக்கின்றனன். மேலும் மனிதனுடைய வாழ்நாட்களைக் குறுக்குவதற்கென்றே உதயம அஸ்தமனம் என்ற இரண்டு சத்துருக்கள் தினமும ஏற்பட்டிருக்கிறார்கள். ஆகையால், ஒவ்வொரு தினத்தையும வீணாய்ப்போககலாகாது. தேகமோ இப்போது நமக்கு ஸ்வாதீனமாய் இருக்கின்றது. பஞ்சேந்திரியங்களும் பழுதில்லாமல் இருக்கின்றன. புண்ணியநதிகளோ வெகு சுலபமாய்க் கிடைக்கக்கூடியவைகளா யிருக்கின்றன. அவைகளில் ஸ்நாநம செய்தால் குளிராதிருக்கும்படி அதற்கு ஏற்பட்டிருக்கிற காலமும் சரத்காலமா யிருக்கின்றது. ஆகையால், மகாபாபியான ஒவ்வொருவனும் நித்திரையென்னும் பிசாசைப்போக்கி, உஷஸ்

காலத்தில் எழுந்திருந்து, காவேரியில் பக்தியுடன் ஸ்நாநம் செய்வானில், நிஷ்களங்கனாய் ஸ்ரீமந்நாராயணனுடைய தன்னடிச்சோதியை அடைவான் என்பதற்குச் சந்தேகமேயில்லை. என்று எனது வலதுகையை உயர்த்தி முக்காலும சத்தியமாய்ச் சொல்லுகிறேன், கேளும் மகாராஜனே என்றுரைத்துப் பின்னும் சொல்லத்தொடங்கினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
உ-வது அத்தியாயம முற்றிற்று.

---

மூன்றும் அத்தியாயம.

சந்திரகாந்தை வித்தியாவதி என்பவர்களின்
உபாக்கியானம.

— * —

அரிசசந்திர மகாராஜனே! நீ எவ்விதப் பிரயத்தினத்தாலும் துலாகாவேரிஸ்நாநம்செய்யவேண்டு. காவேரியினது மகிமையை உனக்கு இன்னும் சொல்லுகிறேனகேளும். மாத்ருஹத்தி பித்ருஹத்தி, பிராமணஹத்தி, கோஹத்தி, கர்ப்பஹத்தி, ஸ்திரீஹத்தி, சிசுஹத்தி முதலியவைகளைச செய்தவாகளும், குருபத்னீகமனம் புரிந்தவர்களும, வேதாத்தியயன சூன்யராயிருப்பவரும, சுராபானஞ்செய்பவரும, ஆகிய இவர்கள் எல்லோரும் காவேரியில ஒருதடவை ஸ்நாநஞ்செய்தால், உடனே பிர்மமலோகமடைந்து, அங்கிருப்பவர்களால் எப்பொழுதும் கொண்டாடப்படுவார்கள். காவேரி நதிக்குப் போய் ஸ்நாநஞ்செய்ய அசக்தர்களாயிருப்பவர்கள் அம்மகாநதியின் தீர்த்தத்தைக் கொண்டுவரச்செய்து, சீதஜலம் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத பட்சத்தில் வெந்நீராகச்செய்து ஸ்நாநஞ்செய்யலாம். அங்ஙனஞ்செய்துகொள்ள அசக்தராயிருப்பவர்கள் காவேரிமகத்துவம் வாசிக்கின்றவருக்குத் தன்னுலியன்றமட்டும் தனங்களுதவிப் பூஜிக்கவேண்டும். அதற்கும் அசக்தராயிருந்தால் பிறரைக்கொடுக்கும்படிச்சொல்லி, வாக்குசசகாயம் செய்யவேண்டும். ஸ்திரீகள் பாலர்கள் ஹீனஜாதியில் பிறந்தவர்கள் இவர்கள் எல்லோரும்காலையில் எழுந்திருந்து யாதொரு மந்திரமும் இன்றி, மௌனமாய்க் காவேரிஸ்நாநஞ் செய்யவேண்டும். யாவனொருவன் காவேரி ஸ்நாநஞ்செய்து திலாக்ஷதைகளால் தேவதைகளையும், ருஷிகளையும்,

பிதிர்க்களையும், உத்தேசித்துத் தர்ப்பணஞ்செய்கிறானோ அவனுடை யபிதிர்க்களும் தேவர்களும், இருடிகளும், யக்ஷகிம்புருஷ கந்தர்வ கின்னரர்களும் அதிகதிருப்தி யடைகின்றார்கள்.

அநதத் துலாமாதத்தில் செய்யவேண்டிய உத்தமதானங்களைச் சொல்லுகிறேன்கேளும். ஒருவன் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்த வுடன் நல்லபிராம்மணர்களுக்கு அடியில் விவரிக்கப்படும் தானங்க ளைச் செய்வதுமன்றி, பிதிர்கர்மாநுஷ்டானங்களையும் அனுசரித்து, அக்கால விர்த்தியான பதார்த்தகங்களைக்கொண்டு விப்பிரர்களுக்கு சிராத்தமிடுபவன் இகபோகங்களையெல்லாம அனுபவித்து, பிரம லோகததை இறுதியிலடைந்து பூச்சியனாயிருப்பான். விஷ்ணுவால யம் சிவாலயங்களில்சென்று நெய்யையாவது எண்ணெயையாவது வார்த்து, தீபம் சமர்ப்பிக்க வேண்டியது. அங்ஙனஞ்செய்பவன் சூரியலோகத்தை யடைகின்றான். அங்குள்ள போகங்களை வெறுக்க அனுபவித்து இறுதியில் இவ்வுலகில சுத்தஞானியாய்ச சனிப்பான். யாவனொருவன் அந்தமாஸத்தில் மகாதரித்திரனை ஓர்பிராமணனு க்கு வஸ்திரதானஞ் செய்கின்றானோ அவன் அதிகபாக்கிய சாலியாக வும், தீர்க்காயுஷ்யனுயுமிருந்து, சநதிரலோகத்தை யடைகின்றான். எவன் ஏழையாயும குடும்பியாயுமிருக்கின்ற ஓர் பிராமணனுக்கு பூமிதானமாவது கிருகதானமாவது செய்கின்றானோ அவன் இக போகங்களை நன்றாக அனுபவித்து, இறுதியில் பரலோகமான பிர்ம்மலோகத்தில் பறபல சுகானுபவஞ்செய்து, பின்பு பூமியில் சம் ராஷ்டுவாய்ப்பிறப்பான். எவன் பிராமணனுக்குத் தனதானியங் களைத் தானஞ்செய்கிறானோ அவன் குபேரனுக்குத்தோழனுவான். எவன் ஓர் மறையோனுக்கு மதுதானம செய்கிறானோ அவன் மல டனுயிருநதாலும் ஜன்மநதோறும ஸதபுத்திரவானுகவும பூபதியாக வும் ஜனிப்பான். எவன் ஓர் ஏழையான வேளாண்மைத்தொழிலோ னுக்கு எருதுகளைத் தானஞ்செய்கிறானோ அவன் கோலோக சுகங் களையனுபவித்துப் பின்னர் பூமியில் அரசனாய்ப்பிறப்பான். எவன் கன்றினோடு பசுவைத்தானம் செய்கிறானோ அவன் மகாசுகசாலி யாய்ப் பிதிர்லோகமடைவான். எவன் மகிஷதானம் செய்கிறானோ அவனுக்கும் அவன் வம்சத்தாருக்கும் மிருத்யுபயமென்பதே கிடை யாது. அவன் சந்ததியாரும் க்ஷீணிக்காத சதாயுசை யடைவார்கள். எவன் விதைதானம் செய்கிறானோ அவன் வெகுபுத்திரர்களையும் தீர்க்காயுசையும் அடைந்து, மறுஜன்மத்தில் திவ்வியஸ்திரீகளுடன் கூடிப் பின்னர் ஓர் கிராமாதிபதியாப் பிறப்பான். எவன் தரித்திர

னை பிராமணனுக்குத் தண்டுலதானம் செய்கிறானோ அவன்வீட்டில கலிபுருஷன் அணுகான்; எவன் கதலீல்லதானம் செய்கிறானோ அவன் அரம்பையோடு சுகித்திருப்பான். எவன் தேங்காயுடன் தாம்பூல தானஞ்செய்கிறானோ அவன் அரம்பைமுதலிய அப்ஸரஸுக்களோடு சுவர்க்கத்தில் விளையாடிக்கொண்டிருப்பான். கஸ்தூரி, கற்பூரம், சந்தனம், முதலான வாசனைத் திரவியங்களைத்தானம் செய்கிறவன், சுவர்க்கத்தில் தேவஸ்திரீகளுடன் சுகித்து மறுபடியும், பூமியில் சார்வபௌமனாய்ப் பிறப்பான். பசும்பால் நெய் தயிர் இவைகளைத் தானஞ்செய்பவன் பசுபுத்திராபிவிருத்தியுடையனாய்ப் பூர்ணாயுசை யடைவான். நெல்லிக்காய் மா முதலிய பதார்த்தங்களைத் தானம் செய்கிறவன் தத்துவஞானம் நிலைபெறப்பெற்று பாகவதோத்தமனாவான். எவன் பிதிர்க்களை உத்தேசித்துத் திலதானம் செய்கின்றானோ அவன் பிதிர்க்களுக்குக் கயாச்சிராத்தம் செய்த பலனைப்பெறுவான். ஏழையாயும் குடும்பியாயும் குளிரால் வருந்துகின்றவனுமான பிராமணனுக்குப் படுக்கை தலையணை துப்பட்டி முதலியவை தானம் செய்கின்றவன் தேவஸ்திரீகளுடன் சுகித்திருப்பான். குளிரால் வருந்துகின்றவனுக்குக் கம்பலதானஞ் செய்கிறவன் வாயுரோக முதலியவற்றினின்றும் விடுபடுவான். எவன் குடைதானம் செய்கிறானோ அவன் உப்பரிகையின் மேலிருந்து சந்தோஷிப்பான். எவன் அரங்கேசனது அர்ச்சனைக்காக மல்லிகை தாழம்பூ பாடலம் இன்னுமற்ற அந்நதியின் கரையிலுள்ள சுகந்த புஷ்பங்களையும் கொண்டு வந்து சமர்ப்பிக்கின்றானோ அவன் அனேக போகங்களை அனுபவித்துக் கடைசியில் பிரமலோகமடைந்து, அங்கு வெகுகாலமிருந்து, மீண்டும் விஷ்ணுபக்தனாகவும் தனிகனாகவும் சத்புத்திரவானாகவும் ஜனிப்பான். யாவனொருவன் உத்தம அந்தணனுக்கு இரண்டு யக்யோபவீததானம் செய்கின்றானோ அவன் பத்து ஜன்மம் வரையில் மகா வேதவித்தான பிராமணோத்தமனாகவே பிறப்பான். ஓர் பிரம்மசாரிக்கு மௌஞ்சி தானம் செய்கின்றவன் ரோகமற்றவனாயும் சகல கலைகளையு முணர்ந்தவனாயு மிருப்பான். எவன் பூணூலுக்காகப் பருத்திதானம் செய்கிறானோ அவன் குஷ்டரோகத்தினின்றும் விடுபட்டு, நல்ல பிராமண ஜன்மமடைவான். யாவனொருவன் ஒருவிஷ்ணு பக்தனுக்குத் திருத்துழாய்த்தானம் செய்கின்றானோ அவன் அடைவதற்கரிய லோகங்களையடைந்து, பின்பு பூலோகத்தில் சார்வபௌமனாக வந்து பிறப்பான். சமித்து தானம் செய்கின்றவன் அக்கினி

ஹோத்திரம் செய்கிறவனாகப் பிறப்பான். எவனொருவன் காவேரி தீர்த்தத்தில் துலாமாஸத்தில் ஷட்ரஸோபேதமான அன்னதானஞ் செய்கிறானோ அவன் சாக்ஷாத் தேவனேயல்லது வேறில்லை. பயறு உளுந்து, தேன், எண்ணெய், மிளகாய், வெல்லம், கடலை, சர்க்கரை, நெய், முதலிய பதார்த்தங்களைத் தன் சக்திக்கியன்றமட்டும் தானம் கொடுக்கின்றவன் ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்களை அடைவானென்பதற்கு ஐயமில்லை. எவன் துலாமாசத்தில் திருவரங்கமா நகரில் காவேரி ஸ்நாநஞ் செய்கிறானோ அவனடையும் பலத்தைச் சொல்ல ஸ்ரீஹரிதான் தக்கவர். துர்நடத்தையுள்ள ஒரு பிராமண ஸ்திரீயானவள் காவேரி ஸ்நானஞ் செய்து, சுவர்க்கமடைந்து, பின்பு விஷ்ணுபக்தையாய்ப் பிறந்து விஷ்ணுலோகஞ் சென்றாள். மூன்றரைக்கோடி புண்ணியதீர்த்தங்களும் கடவுளின் கட்டளையால் துலாமாஸத்தில் கங்கையை முன்னிட்டுக் கொண்டு காவேரியில் வந்து சேருகின்றன. யாவனொருவன் எந்த பலத்தைக் குறித்து நூறுவருஷம் நியமத்துடன் கங்கா ஸ்நாநஞ் செய்கிறானோ அவன் துலாமாஸத்தில மாத்திரம் காவேரிஸ்நாநஞ் செய்வானானால் உடனே அதேபலத்தை அடைவான். முன் ஒரு காலத்தில் கங்கையானவள் பிரமனையடைந்து, "சுவாமி! என்னுடைய தீர்த்தத்தில் அநேக பாபிகள் ஸ்நாநஞ் செய்து அவர்களுடை பாபங்களை யெல்லாம் என்னிடத்தில் விட்டுவிட; அதினால் நான் மிகவும் பாபிஷ்டையாய் விட்டேன்; இப்பாபங்களை எங்ஙனம் தொலைப்பேன். என்று வணங்கிக் கேட்கப் பிரமதேவரும் மனமுவந்து, "நீ துலாமாஸத்தில் அரங்கநாதனுடைய சந்நிதியில் காவேரியில் ஸ்நாநஞ் செய்வாயேயானால் உன் பாவங்கள் தொலைந்து, நீயும் பரிசுத்தையாவாய் ,, என்று நியமித்தருளி; அப்படியே கங்கையும் வருடந்தோறும் துலாமாதத்தில் காவேரியில் ஸ்ரீரங்கநாதனது சந்நிதியில்பிரதிதினமும் ஸ்நாநஞ் செய்து வருகின்றாள். காவேரியில் யாதொரு நியமுமின்றிக் கேவலம் முசலத்தைப்போல விழுந்து ஸ்நாநம்செய்கின்றவனே தன் ஏழுதலைமுறைப் பாவங்களைப் போக்குவானென்றால், பக்திச்சிரத்தையுடனும் நியமத்துடனும் துலாகாவேரி ஸ்நாநஞ் செய்பவன் கோடி குலங்களின் பாவத்தைப் போக்கின்றானென்பதற்குச் சந்தேகமென்னை? என்றிங்ஙனம் சொன்ன அகஸ்தியமா முனிவரை நோக்கி, அரிச்சந்திரன், கூறுகிறான்.

அகஸ்திய மகாமுனி





அரிச்சந்திர மகாராஜன்

"ஓ முனிசிரேஷ்டரே! தாங்கள் ஏதோ ஒரு கெட்ட பிராம்மண ஸ்திரீயானவள் காவேரிஸ்நானஞ் செய்து சுவர்க்கமடைந்தாளென்று அருளிசசெய்தீர்கள். அந்தஸ்திரீயாவள்? அவள் கணவன்யார்? மகா பாவியான அம்மடந்தை எவ்வாறு நல்லுலகடைந்தனள்? இதனை யடியேனுக்கு ஸவிஸ்தாரமாயுரைக்கவேண்டும் உலகங்களை அனுக்கிரகிப்பவரும், நிர்ஹேதுவாய் எங்களைப் போன்றாரிடம் தயையுடையவருமான உங்களைப்போதத முனிசிரேஷ்டர்களே எங்களைப்போன்ற மாணுக்கர்களுக்கு அதிரகசியங்களை உபதேசிப்பார். ஆகையால், தாஸனை என்னிடம் தயைகூர்ந்து கூறியருளவேண்டும். தங்கள் பாதகமலங்களுக்கு அநேகவந்தனம் செய்கிறேன்," என்று வேண்டிக்கொள்ளவே அகஸ்தியரும் சொல்லத்தொடங்கினர்.

கேளும் மகாராஜனே! ருஷ்யபர்வதத்திற்குச் சமீபத்தில் க்ருதமாலையெனனும் நதியின் தீரத்தில் மதுரையென்றவோர் அழகிய நகரமுண்டு அந்நகர் அநேக ரத கஜ துரக பதாதியென்னும் சதுரங்கசேனைகளால் சூழப்பட்டும், ஆழ்ந்த அகழிகளாலும் உயர்ந்த மதில்களாலும் மாடமாளிகை கூடகோபுரங்களாலும் பிரகாசித்தும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்ற நான்கு வருணத்தாரால் நிறைந்ததுமாயிருந்தது. அப்பட்டணத்தில் நான்குவேதம் ஆறு சாஸ்திரம் அறுபத்துநான்கு கலைஞானங்களையும் ஐயமறக் கற்றவராயும், சாந்தரும ராவகுணசீலரும் சீதோஷ்ண சுகதுக்க லாபாலாபம ஜயாபஜயங்களில் அதீதப்பட்டவராயும் மாச்சரியமில்லாதவராயும், மகாவிஷ்ணுபக்தராயும், வந்த அதிதிகளை யெல்லாம் பூசிப்பவராயும், நிர்வைரியாயுமிருந்த வேதராசியெனப் பெயர் பூண்ட ஓர் அந்தணச் சிரேஷ்டரிருந்தார். அந்தப் பிராம்மணோத்த

மருக்கு அதிரூபலாவண்யவதியாயும், யௌவனவதியாயும், மகாபதிவிரதாசிரோன்மணியாயு மிருந்த சந்திரகாந்தை யென்ற ஓர் பத்தினி இருந்தனள். அவள் தனது கணவனைச் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனாகப் பாவித்து, அவனுக்குக்கைகால் பிடித்தல் முதலிய சிசுரூஷைகளைச் செய்துகொண்டுவந்தனள். இவளுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில் புருஷனைக்கொன்றவளும், விகாரரூபமுடையவளும், அனேக பதிவிரதைகளின் பாதிவிரத்யத்தைக் கலைத்தவளும, வ்யபிசாரியுமான வித்யாவதி யென்று ஓர் பாரப்பினி இருந்தனள். குடிலவிர்த்தியும் சபலபுத்தியுமுடைய அவள் இந்தச் சந்திரகாந்தையினது கற்புநிலைமையை முற்றுங்கெடுக்க நினைத்து, ஓர் நாள் அவளை நோக்கிச் சில வசனங்களைக் கூறுவாள்.

"ஓ! என்கண்ணுக்குக் கண்ணுகிய சந்திரகாநதையே! நான உனக்கு இதவசனம் கூறுகிறேன். உனக்கு இரகசியம ஏதேனுமிருந்தால் என்னோடுகூறுவாய்; நின்னுடைய கணவன் விருத்தனுயிருத்தலால் உனக்கு வசமாயிருக்கிறானே? நீயோ அதிக சௌந்தரிவதியாயும் யௌவனவதியாயு மிருக்கின்றனை; உனக்கு எந்த புருஷன்பேரிலாவது இஷ்டமிருந்தால்தால் அதனை உடனே எனக்கு

சந்திரகாந்தை பதிவிரதை.



வித்யாவதி விபசாரி

ரகசியமாய்த்தெரிவி; யான் உனது இஷ்டத்தைப் பூர்த்திசெய்விக்கின்றேன், ஸ்திரீகளுக்கு யௌவனம் எப்பொழுதும் சாஸ்வதமல்ல; காலதேசங்களும் எப்பொழுதும் ஒரு விதமாயிராது; ஆகையால், நமக்கு யௌவனப்பருவம் இருக்கிறவரையில் நாம் ஒருவருக்குங் கட்டுப்படாமல் இஷ்டப்படி சம்போக சுகங்களை யனுபவிக்கவேண்டும்; ஆகையால் உனக்கு இஷ்டமிருந்தால் சொல்; நான் அதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்கின்றேன்; என்றாள். இந்தக்கொடிய

வசனமாகிய நாராசம் காதில் பட்டவுடனே மகா பதிவ்ரதையான சந்திரகாந்தையும் கோபமும் வெட்கமு முற்றவளாய் அவளை நோக்கி, மறுமொழி யுரைத்ததாவது. 'என்னடி துஷ்டை! நீ என்னை நோக்கி வாய்கூசாமல் இப்படிச்சொல்லுகின்றனே? உனக்குப் பதில் உரைக்காமல் சென்றேனே யானால், என்னையும் எல்லோரும் துஷ்டையென்று சொல்லும்படி அபாண்டமான வியபசாரப் பட்டத்தை நீ எனக்குக்கட்டிவிடுவாய். அதற்காகப்பயந்து உனக்கு மறுமொழி சொல்லுகிறேன் கேள். ஸ்திரீகளுக்கு மாதவிடாயான ஐந்தாநாள் தொடங்கிப் பதினாறுநாள்வரையில் புருஷனோடு சம்போகிக்க நல்ல காலமாகும்; இதன்மத்தியில் நிஷித்தமான தினங்களைத்தள்ளிச் சுத்தமான தினங்களிற்றான் நாயகரும் சேரவேண்டும். இப்படிப்பட்ட இல்லறதருமத்தினால் அந்தத் தம்பதிகள் நற்பதியை யடைகிறார்கள். அந்தப்படியே சகல சாஸ்திரங்களையு முணர்ந்த எனது பிராணநாதன் நிஷித்த தினங்களைத்தள்ளிச் சுத்தமான தினங்களில் என்னுடன் கூடுகிறார். இங்ஙனம சுத்தமானதினங்களில் சேர்ந்து, உற்பத்தியான புத்திரன் தீர்க்காயுவாயும வித்துவானாயும் பாக்கியசாலியாயுமிருப்பான். அப்படிக்கன்றி நிஷித்த தினங்களில் உற்பத்தியானபுத்திரன் கேவலம் பாபியாயும அற்பாயுசாயும் தந்தைதாயர்க்கு அதிகதுக்கத்தை விளைவிப்பவனாயு மிருப்பான். என்று பெரியோரசொல்லக் கேட்டிருக்கிறேன். நிஷித்தமான தினங்கள் எவையெனில், ஷஷ்டி அஷ்டமி ஏகாதசி துவாதசி சதுர்த்தசி அமாவாசை பௌர்ணிமை மாதப்பிறப்பு சிராத்ததினம ஜன்மநக்ஷத்திரதினம் திருவோண நக்ஷத்திரதினம் விரததினம பகல் சாயங்காலம இவைகளே. மேற்சொல்லிய தினங்களில் ஸ்திரீஸம்போகம் க்ஷௌரம எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல் பல்தேய்த்துக்கொள்ளல் ஆகிய இந்நான்கு செய்கைகளையும் புரியலாகாது. அப்படி எவனாகிலும செய்வானேல்,அவன் சதுர்வேதியாயிருந்தபோதிலும,சோமயாகம் செய்தவனாயிருந்தபோதிலும, எரிநரகத்திற்கு ஆளாவான். வித்தியாவதியே! இங்ஙனம் நான் உனக்குக் கிருகஸ்த தர்மத்தைச் சுருக்கமாய்ச்சொன்னேன். ஆகையால் ஸ்திரீகள் கேவலம காமாந்தர்களாயிராமல் குறித்த தினங்களில் தத்தம கணவர்களுடன் கூடியிருக்கவேண்டியது. இனி என்னைப்பார்த்து இப்படிக்கண்டவாறு உரைக்கவேண்டாம." என்றாள்.

இதனைக்கேட்ட வித்யாவதியும் மறுபடியும் அவளுக்குப் போதிக்கத் தொடங்கினதாவது. "அடி! அசட்டுப்பெண்ணே! என்னு

டைய வார்த்தையைக்கேள், நீ இந்த இளமைப்பருவத்தில் இவ்வப்படி வேண்டிய இன்பங்களை யனுபவிக்காமல், இருந்துவிட்டாயேயானால், பின்பு இன்னும் சொற்பகாலத்தில் இந்த யௌவனம் போய், அங்கங்களெல்லாம் வற்றி, அழகும் குன்றிப்போய்விட்டால் உன்னை யார் இலக்ஷியம் பண்ணுவார்கள்? அப்பொழுது நீ இந்த இன்பங்களை நுகரவிரும்பினால், எங்ஙனம் கிடைக்கும்? அஃதிருக்க; நீ ஏதோ உனது புருஷன் உன்னிடத்தில் மகாவிசுவாசம் வைத்திருக்கிறான் என்றும், குறித்த சில தினங்களில் மட்டுமே உன்னுடன் கூடுகிறான் என்றும், சொல்ல வந்தாயே, உனது புருடனுடைய செய்திகளைச் சற்றுச்சொல்லுகிறேன் கேள். அவன் உன்னிலும் அதிக ரூபமுடைய ஓர் தாசியை வைத்துக்கொண்டிருக்கிறான். அவளிடத்தில் பிரதிதினமும்போய் அகோராத்திரமும் இன்பநுகர்ந்து சுகித்துக்கொண்டிருக்கிறான். நீ கள்ளம் கபடமில்லாமல் வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணியிருப்பதால், அவன் சூது உனக்குத் தெரியவில்லை. உனது புருஷன் விடபுருஷர்களில் தலைமையானவன்; நீ சுத்தபேதையா யிருப்பதால் அதை அறிந்துகொள்ளவில்லை. மேலும் ஒன்றுசொல்லுகிறேன் கேள். ஒருவன் அடிக்கடி ஸ்திரீ சங்கமம் செய்யாமல் இருந்தால் ரோகியாய் விடுவான். ஆகையால் உனது புருஷன் அப்படி நியமத்துடன் இருந்து குறித்த சிலதினங்களில் மட்டும் உன்னோடு கூடியிருந்தது உண்மையேயானால், அவன் இப்பொழுது நோயாளியாய் இருக்கவேண்டுமே, அப்படிக்கில்லை; மேலும் உன்புருஷனே என்னிடத்தில் நேரே தனக்கு ஒருதாசியிருப்பதாயும், தான் அவளிடத்தில் தினம்போவதாயும் சொல்லியிருக்கிறான். நீ எனக்குப் பிராணசகியானபடியால், அந்த இரகசியத்தை ஒளியாமல் உன்னிடத்தில் சொல்லிவிட்டேன்." என்றாள்.

இங்ஙனம் கேட்ட சந்திரகாந்தையும் அவளைநோக்கி மீண்டும் உரைத்ததாவது. 'அடி வித்யாவதி' எனது பர்த்தாவானவர் சுத்தராயிருந்தாலும் விடராயிருந்தாலும் சரி; புண்ணியசாலியாயிருந்தாலும் பாபியாயிருந்தாலும் மூடராயிருந்தாலும் சரி; எனக்கு அவரைத்தவிர வேறுதெய்வமில்லையாது. ஸ்திரீகள் தமது புருடன் எப்பேர்ப்பட்டவனாகவிருந்தபோதிலும் அவனையே தெய்வமெனக்கொள்ளவேண்டும். நியம விரதம் குருசேவை சுவாமிசேவை எல்லாம் புருஷனை யொழிய வேறில்லை அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்கு ஹரிபக்திகூடத் தேவையில்லை. அப்படிப் புருஷனிடத்தில் பக்திச்சிரத்தையில்லாமல் எவள் அவனைக்கண்டவாறு நிந்தித்துக்கொண்

டிருக்கிருளோ? அவள் அனேக ஜன்மம்வரையில் நாயாய்ப்பிறப் பாள்.'' என்றிங்ஙனம் உரைத்த சந்திரகாந்தையை நோக்கி, மறு படியும் வித்யாவதி சொல்லுகிருள்.

“ஓ! சந்திரகாந்திபொருந்திய முகத்தையுடைய சந்திரகாந்தை யென்னும எனது பிரியசகியே! இப்பொழுது சுவர்க்கலோகத்தி லும் கிருதாசி மேனகை அரம்பை ஊர்வசி திலோத்தமை ஸுகேசி மஞ்சுகோஷை புஞ்சிகஸ்தலே என்ற அனேக தேவதாசிகள் தங்க ளுக்கு இஷ்டர்களான புருஷர்களுடன் ஸுரதக் க்ரீடாநுபவத்தை இஷ்டப்படிச் செய்துவருகின்றனர் என்றும் கேள்விப்படுகிரு மல்லவா? ஆகையால், இம்மையிலும் மறுமையிலும் இவ்வாறு நாம் நம் இஷ்டப்படியிருநது சுகம் அனுபவிப்பதுதான் சுகமாகும். அப் படிக்கன்றி புண்ணியமென்றும பாவமென்றும் சுவர்க்கமென்றும் நரகமென்றும சொல்வதெல்லாம சுத்த அபத்தமான வார்த்தை நமது யௌவனமோ அசாசுவதமானது நாம் இருக்கும் வரையில் பிரத்தியக்ஷமாய் என்னென்ன சுகதுக்கங்கள் அனுபவிக்கின் ருேமோ அவைதாம் உண்மையானவை. மற்றப்படி அதிர்ஷ்ட மான சுகதுக்கம வேறு யாது மிலலே. புண்ணியபாவங்கள் என்று சொல்லுவவெலலாம் கல்பனை வார்த்தைகளென்பது எனக்கு நன் ருய்த் தெரிந்தவிஷயம. இதோ! என்னைப்பார். யான் என் புருஷனைக் கொன்றுவிட்டு ஒருவர்க்கும் கட்டுப்படாமல் என் இஷ் டப்படி வேண்டியவர்களுடனே சுகம அனுபவித்துக் கொண்டிருக்கி ன்றேன். எவள் ஒருவர்க்கும் கட்டுப்படாமல் இருக்கின்ருளோ? அ வள்தான எவ்விதசௌக்கியங்களையும் பெறுவாள்.'' என்று இங்ங னம் பலவித காரணங்களாலும திருஷ்டாநதங்களாலும நரகப்பிரத மான பலவித துர்ப்போதனைகளைப் புகட்டினுள். உடனே சந்திரகா ந்தையும ஏதோ பூர்வஜனமத்தில் செய்திருந்த பாவவசத்தினலும், ஸ்திரீபுத்தி பின்புத்தியாதலாலும், யௌவன மததத்தினலும், அவளு க்கிணங்கித் திருணமயமான சுகத்தை யபேக்ஷித்தவளாய்க் குலாசா ரங்களைவிட்டொருமாதம்வரையில் இரகசியமாய் வியபசரித்துப் பின்பு பகிரங்கமாய்ப் புறப்பட ஆரமபித்து விட்டனள். அவள்புருஷனை வேதராசியெனும் பிராமமணோத்தமனும் அவள் துச்சரித்திரத்தில் ஆரம்பித்த பத்துநாள்வரைக்கும் அறியாமல் அவளோடிருந்து, பி றகு அவளுடைய நடத்தைகளையும் உத்தண்டமான வார்த்தைகளை யும் கேட்டு, அவள் பதிதையாய் விட்டனளென்று நிசசயித்து, அவ ளை வீட்டினின்றும் வெளிப்படுத்தி, தன் வீட்டிலிருந்த அளவற்ற

செல்வக்களையும் துறந்துவிற்றுச் சுசீலையான நமது பெண்சாதியும் இங்ஙனம் ஆய்விட்டனளே என்று, மனதில் எண்ணிக்கொண்டு, அறியாது அவளோடு பத்துநாள் வசித்ததற்காகப் பிராயசித்தம் விதிப்படி முடித்து, விரக்தனாய் காவேரிநதிக்கரையில் வந்து தவம் புரிந்து கொண்டிருந்தனன்.


ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
௩-வது அத்தியாயம் முற்றிற்று.

---

நான்காவது அத்தியாயம்.
சந்திரகாந்தை காவேரிஸ்நானஞ்செய்து தனது
பாவத்தைப் போக்கிக்கொண்டது.

(*)

இப்பால சந்திரகாந்தையும அந்தப் பட்டணத்திலுள்ள விடபுருஷர் எல்லோரிடத்திலும விசேஷதனங்கள் ஆபரணங்கள் பரிமள வஸ்துக்கள் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு, பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் சண்டாளர் சங்கரசாதியர் என்ற ஜாதிபேதத்தையும் பாராமல, நிர்ப்பயையாய் இஷ்டப்படி க்ரீடித்துக்கொண்டு இருந்தனள். அவள் இங்ஙனம கற்பழிந்து கண்டபடி திரிவதைக் கண்ட அவ்வூர் அரயனான இந்திரத்யும்னன் என்னும் பாண்டியன் குல பிரஷ்டையான அப்பாவை இனி இப்பட்டணத்திலிருந்தால் இந்நகர வாசிகளனைவரும பாவத்துக்காளாவர் என்று நினைத்து, அவளுடைய பொருள்களையும கவர்ந்துகொண்டு, அவளையும் அந்நகர் விட்டோடும படிச் செய்தனன்.



தூர்த்தன். சந்திரகாந்தை பாண்டியராஜன்.

பின்னர் அவள் வெறுங்கையளாய்க் காவேரி தீரமடைந்தாள். காமத்தால் விரும்பிய விடர்களெல்லாம் அவளிடம் ஆசையுடையர்

களாய் எவ்விடத்திலுள்ள தனங்களையும் கொண்டுவந்து அவள் அழுகுக்குக் கொட்டிக்கொண்டு வந்தார்கள். இப்படியிருக்க; அவள் கண்டபடி வியபசரித்ததினாலுண்டான பாவத்தினால் அவளுக்குப் பலமான பல வியாதிகள் சம்பவித்தன. அதினால் பலவித அவஸ்தைப்பட்டுக் கடைசியில் பிராணனை விட்டனள். பின்பு ஒரு மன்வந்தர காலம் வரையில் இருபத்தொரு நரகங்களையு மனுபவித்து, மீண்டும் உறையூரில் ஓர் தாசியாய்ப் பிறந்து, முன் ஜன்மத்தில் செய்த பதித்துரோகமாகிய பாபத்தினால் பெரும் வியாதியுற்றுக் காது மூக்கு விரல்கள் முதலிய இடங்களெல்லாம் புழுத்து, அனேககோடி புழுக்களரிக்க வருத்தப்பட்டு, அஹோராத்திரம் ஆகார நித்திரையில்லாமல் ஐயோ! ஐயோ! வென்றழுதுகொண்டு; தேகமெங்கும் நெருப்பாய் எரிய, அதைப்பொறுக்கக் கூடாமல் அங்குமிங்குமோடி ஏதோ பூர்வஜன்மத்தில் செய்த புண்ணிய வசத்தினால் காவேரியை யடைந்தவளாய், ஸ்ரீரங்கத்துக்கு வந்து துலாமாதத்தில் அனேக பிராமணர்கள் காவேரிநதிக்கரையில் துலாகாவேரி மகத்துவத்தைப் பாராயணஞ்செய்து கொண்டிருக்கையில் தனது தேகத்திலுள்ள எரிச்சல் தணியுமாறு காவேரியில் ஸ்நாநஞ்செய்தனள். அவர்கள் படித்துக்கொண்டிருந்த ஹரி கதையில் துலாமாதத்தில் காவேரிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த மனிதனொருவன் துர்ச்சனனாயினும் பதிதனாயினும் பவித்திரனாய்ப் புருஷோத்தமபுரத்தில் பூசிக்கப்படுவான். என்ற அருத்தமமைந்த ஒருசுலோகம் காதில் விழுந்தது. உடனே அவளும் பிராணனைவிட்டாள். அப்போது யமகிங்கரர்கள் ஸௌம்யமான உருவத்தோடு பிரத்தியக்ஷமாகி திவ்ய விமானத்தைக்கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவளும் தான் இப்படிப் பக்திசிரத்தையில்லாமல் கேவலம் தேகத்தின் தாபத்தைத் தீர்க்க ஒருதரம் காவேரி ஸ்நாநம் பண்ணினதினால் சகல பாபங்களினின்றும நீங்கினவளாய், அந்த விமானத்திலேறிக் கொண்டு, காவேரியினது மகத்துவத்தை மெச்சி மார்க்கத்தில் சற்றுத்தங்கிப் பலவித பக்ஷிய போஜனாதிகளைப் புசித்துக் களையில்லாமல் சுகமாய்ச் சுவர்க்கலோகம் சென்றனள். வித்யாவதியோ வென்றால், எமனால் ஏவப்பட்ட நாய்களால் கடியுண்டு தேகமெல்லாம் இரத்தம் ஒழுகப் பிராணனைவிட்டு, ஓர் பிர்ம்மகல்பம் வரையில் ரௌரவாதி நரகங்களை யனுபவித்து, நாய் ஜன்மத்தில் மூன்றெடுத்து, பீஷ்மாசாரிக்கும் பரசுராமருக்கும் ஓர் பயங்கரமான சண்டையை யுண்டுபண்ண, காசிராஜனது பெண்களாகிய அம்பை அம்பிகை அம்பாலிகை என்ற மூவரில் மூத்தவளான

அம்பையெனும் பெண்ணாக வந்து பிறந்தாள். சந்திரகாந்தியின் காந்தனான வேதராசி யென்ற பிராம்மணோத்தமனும் காவேரிநதிக் கரையில் வெகுநாள் தவஞ்செய்து கொண்டிருந்து, துலாமாதத்தில் ஒவ்வொருநாளுந் நியமநிஷ்டையுடன் பக்திச்சிரத்தையோடு ஸ்நாநஞ்செய்து மிக்க பரிசுத்தனாயிருந்து கொஞ்சநாளில் காலதர்மத்தை யடைந்தனன். உடனே கோடிசூர்யப் பிரகாசமான திவ்வியவிமானத்திலேறி அழகிய ரூபத்தையுடைய யமகிங்கரர்களால் இயமபுரிக்குக் கொண்டு போகப்பட்டனன்.

அவன் அங்ஙனம் செல்லுகையில் மார்க்கத்தில், ஆங்காங்கு மகாபயங்கரர்களான யம படர்களால் பலவாறு இம்சிக்கப்பட்டு இயமபுரிக்கு இழுத்துக்கொண்டு போகப்படுகிற அனேகபாபிகள் ஐயோ வென்று ஓலமிடுகிற சத்தத்தைக் கேட்டு, தன்னை யழைத்துக் கொண்டு போகின்ற யமதூதர்களை நோக்கி, "ஓ! கிங்கரர்களே இங்கு ஏதோ அழுகைச்சத்தம் காதில் விழுகிறது. அங்ஙனம் ரோதனம்செய்கின்றவர் இத்தகையாரென்று பார்க்க வேண்டும். ஆதலால், அவ்வழியாய்க் கூட்டிக்கொண்டு போங்கள்.,, என்று சொல்லவே, அவர்களும் அங்ஙனமே அவர்கள் சமீபத்தில் கூட்டிக்கொண்டு போனார்கள். அங்குச் சிலவிடத்தில் அனேக தான தருமங்களையும் ஸத்கருமங்களையுஞ் செய்த புண்ணியாத்துமாக்களை யமபடர்கள் மிகவும் சௌம்மியமான ரூபத்துடன் வந்து தம்மைப்போல் விமானத்திலேற்றிக் கொண்டு, இதோ பால், இதோ தயிர், இதோ பலவர்க்கங்கள், இதோ போஜனங்களிருக்கின்றன. முன் நீங்கள் இவைகளை அனேக பிராமணர்களுக்குத் தானஞ் செய்திருக்கின்றமையால், அவை யாவும் இதோ இங்கே ஆயத்தமாயிருக்கின்றன இவைகளைச் சற்று தயவுடன் புசித்துச், சிரமபரிகாரம் செய்து கொண்டு போகவேண்டும். ஓ புண்ணியர்களே! இங்குபசிவிருத்தி கிடையாது. ஏழைகளிடத்தில் தாதாவாயிருப்பவன் நரகமடையான். தானமீயாதவனுக்கு எந்த கிரியைகளும் இட்டாது. நீங்கள் பஞ்சமகா யக்யங்களைச் செய்தீர்கள்; எப்போதும் உஷஸ்காலத்தில் ஸ்நானத்தை யாசரித்தீர்கள். காவேரிமுதலிய புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானமாடின சத்புருஷர்கள் எங்களைச் சயித்தச சொர்க்கவாசிகளாவார்கள். என்று புருஷர்களை உபசரித்தும், அடுத்துள்ள கற்புமங்கையரை நோக்கி, அவ்யமபடர்கள் "ஓ அருந்ததியொத்த பதிவிரதைகளே! நீங்கள் உங்கள் பர்த்தாக்களிடத்தில் பக்தி செய்து, பூமியில் பரலோகப் பிராப்த

மாகும் புண்ணியங்களை யியற்றினீர்கள். நீங்கள் நன்றான ஆசாரங்களை யுடையீர்; எப்போதும் பரிசுத்தரா யிருந்தீர்; பதிப்பிரேமை யுடையீர்களாகையால்: வேதோக்த கர்மங்களால் இலபிக்கும் சுரலோகம் சுலபத்தில் உங்கட்கு இலபித்தது. பர்த்தாக்கள் நிஷித்தராயினும், ரோகிகளாயினும், கோபிகளாயினும், எக்காலமும் அகலாது பக்தி பண்ணினீர்களாகையால்; அதன் பயனை எளிமையில் அனுபவிக்க சுலபமாக இங்கு வந்தீர்கள். எவ்வளவு சாதுக்களாயிருந்தாலும் எவ்வளவு தபோபலனை யுடையார்களானாலும் இகத்தில் ஏழைகளுக்கு இடாதார்க்குப் பரத்தில் மேன்மை கிட்டாது. தானத்தால் தனவந்தராவார்கள்; தபத்தால் மூவுலகும் அடைவார்கள். ஆகையால், விப்பிரோத்தமர்களுக்குச் சற்றாயினும தனம், கொடுக்கவேண்டும். தானஹீனனுக்கு தேவலோகம் கிட்டாது. சௌக்கியமிராது. மனசுத்திநேராது. புத்திரசம்பத்தும ஞானமுமிராது. அவனிடத்தில் பிதிரக்களும திருப்தியடையார்கள்." என்று இன்னோரன்ன உபசார வர்த்தைகளால் ஸ்திரீகளை உபசரித்தும், சிலவிடத்தில் கோரப்பற்களும் ஊர்த்தகேசங்களும் பயங்கரமான வடிவுமுடையவர்களாயும், கைகளில் இருப்புலக்கை கததி கதை சூலம் ரம்பம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவர்களாயுமிருக்கின்ற யமபடர்களால், வெட்டு குத்து என்று பலவாறு பயமுறுத்தப்பட்டு, நெருப்பில் போட்டு நன்றாய் வறுத்தமணல்களிலும், இரும்பு மயமான முட்கள் நிறைந்த விடத்திலும், கல்லும் முள்ளுமான விடங்களிலும், வெகு வேகத்துடன் இழுக்கப்பட்டும், குப்புறத்தள்ளப்பட்டும், பசிதாகத்தினால் பீடிக்கப்பட்டும், காட்டுத்தீயால் பொசுக்கப்படடும், பற்பல ஆயுதங்களினால் சின்னா பின்னமாய் வெட்டப்பட்டும், நிர்ஜ்ஜலமும் நிர்மானுஷ்யமுமானகாட்டில் கோரமான ரூபமுடைய வேட்டை நாய்களால் மர்மஸ்தானத்தில் கடிக்கப்பட்டும், இன்னும் பலவாறாக இம்சிக்கப்பட்டும, ஐயோ! ஐயோ! என்று பாபிகள் ஓலமிடுகிறதுங்கண்டு, வேதராசியென்னும் விப்பிரச்சிரேஷ்டனும் தன்னுள் அதிக ஆச்சரியமும் துக்கமுமுடையவனானன்.

இப்பாவிகள் எப்படிப் பட்டவர்களென்றால், தாங்கள் பூமியில் வசித்தநாளெல்லாம், பிராணிவதை செய்தல், பரநிந்தைசெய்தல், பரவித்தாபகாரம் செய்தல், பரஸ்திரிகமனஞ்செய்தல், சத்துக்களைப் பழித்தல், ஸ்நாந சந்திகளை ஒழித்தல், வேதசாஸ்திரம் படனம் பண்ணாமை, தேவதாராதனை யில்லாமை, பெற்றோருக்குச் சிராத்

தஞ்செய்யாது அவர்களைத் தூஷணைஞ்செய்தல், பிறர் குற்றங்களையே குறித்தல். அவர் சத்கர்மங்களைக் கெடுத்தல், விற்கக்கூடாத பொருளை விற்றல், குச்சித புத்திகளையுடைமை, சதாசிவகேசவாதி மூர்த்திகளை நிந்தித்தல், துர்ச்சன சகவாசங்களைப்பெற்று நல்விரதங்களை அனுசரிக்காமை, சுபகரமான யாகாதிகளைச் செய்யாமை, அபோசரியமான வஸ்துக்களைப் புசித்தல், பசுக்களுக்கு வயிறு நிறையத் தீனிபோடாமல் அவைகளின் பாலைக் கன்றுக்குக் கூடவிடாமற் கறக்குதல், பந்திபேதஞ் செய்தல், துலாகாவேரி ஸ்நானஞ்செய்யாதிருத்தல், நல்லோருக்குக்கெடுதலும் பொல்லாருக்கு நன்மையும் செய்தல், தேவப்பிராமணர்களை நிந்தித்தல், தாய் தந்தை குரு இவர்களைத் திக்காரம் செய்தல், பொய்ச்சாக்ஷி கூறல், சத்பாத்திர தூஷணமும் அசத்பாத்திர பூஷணமுஞ்செய்தல், தன்னுடைய சொந்தப் பிரயோஜனத்தின் பொருட்டுப் பரசைமரங்களை வெட்டுதல், முதலிய மகாபாபங்களைச் செய்த தகுதியையுடையவர்களாம். அவர்கள், எமபடர்களால் வதைக்கப்பட்டு, இழுத்துக்கொண்டு போகப்படும்போது, அப்பாதகர்கள் தூதுவரை நோக்கிச் சொன்னதாவது. "ஐயோ! பசிக்குக்கொஞ்சம் அன்னம் கொடுங்கள்; தாகத்துக்குத் தண்ணீர் கொடுங்கள். பசிதாகத்தினால் வருந்துகிற எங்கள்பேரில் இரக்கம் வைத்துச் சற்றுநேரஞ் இம்சிக்காமலிருங்கள்." என்றிங்ஙனம் பலவாறு பல்லையிளித்துக் கெஞ்சிக்கேட்டும், அந்த யமபடர்கள் கிஞ்சித்தேனு மிரக்கமில்லாமல் முன்னிலும் மும்மடங்கு அதிகமாக இம்சித்து, அவர்களை வானத்தில் தூக்கிப் பாறையில் ஓங்கி அடித்தும், கத்திகளாலும் பிறரயபங்களாலும் வாட்களாலும் வெட்டியும், குத்தியும், அறுத்தும். கத்தியால் வெட்டுண்டகாயங்களில் உப்புசலத்தையூற்றியும், ஊசிகளால் குத்தியும், இன்னும் பற்பல கொடூர தண்டனைகளைச்செய்து சோஷித்துப்போன அவர்களைப்பின்னும் பாவாநுபவத்திற்காகவே சுத்தஜலத்தால்நனைத்துப் பிழைப்பித்தும், விப்ர க்ஷத்திரிய வைசிய சூத்திர ஸ்திரீகளையும், மற்றும் இதர பாபசமூகங்களையுடைய மனிதர்களையும், காது மூக்கு மார்பு முதலிய அங்கங்களைக்குத்தி கயிற்றினாற்கட்டி இழுத்துக்கொண்டுபோகையில், அவர்களில் சிலர் பிராமணரும் சிலர் க்ஷத்திரியர்களும், சிலர் வைசியர்களும், சிலர் சூத்திரர்களும், சிலர் சண்டாளர்களும், சிலர் ஸ்திரீகளுமாய் இப்படிப் பற்பல வர்ணத்தாரும் பற்பல ஜாதியாருமாயிருந்துகொண்டு; தாங்கள் ஒவ்வொருவரும் பூமியில் இருக்கும்பொழுது செய்த கொடிய பாவங்களை அடிக்கடி

நினைத்துக்கொண்டு, "ஐயோ! அப்பொழுதுதெரியாமல் அந்தப்பாவஞ்செய்தேன். இப்பொழுது இப்படிப்பட்டஅவஸ்தைப் படுகிறேன்" என்று உரத்திக்கூவி யழுஞ்சத்தைக்கேட்டு, வேதராசியும் அவர்களிடத்தில் அதிக கருணை யுடையவனாய், "ஐயோ! இவ்வளவு ஜீவகோடிகள் இங்ஙனம் அனியாயமாய்ப் பீடிக்கப்படுகிறார்களே; இனக்கு இவர்கள படுந் துயரத்தைப்பார்க்க மனந்தாளவில்லை; இவர்களை எவ்வித உபாயத்தினால் இந்தக்கொடிய உபத்திரவத்தினின்றும் விடுவித்துப் புண்ணியலோகஞ் சேர்ப்பிக்கலாம்." என்று தன்னுள் யோசித்து, வேறு எவ்வித புண்ணியத்தின் பலத்தினாலும் அவர்களைமீட்பது அரிதென்றுநினைத்துத் தான் சம்பாதித்திருக்கிற துலாகாவேரி ஸ்நாநபலத்தில் மூன்றுநாள் ஸ்நாநபலனை யவர்களுக்குக்கொடுத்து, அவர்களைக் கரையேற்றலாமென்று, அவர்களை நோக்கிக்கூறுவார்.

"ஓ! பாவிகளே! யான்செய்த துலாகாவேரி ஸ்நாநபலனில் மூன்றுதினங்களின் உத்தமபலனை இதோ இங்களுக்குச் சத்தியமாய்க் கொடுத்தேன். அதினால் நீங்கள் எல்லோரும் இந்த வேதனையினின்று விடுபட்டு நல்லுலகடையக்கடவீர்கள்." என்று அன்போடு உரத்திச் சொன்னார். இவர் இங்ஙனஞ் சொன்னவுடனே அந்தப்பாவிகள் எல்லோரும யமபடர்களுடைய பாசங்களினின்றும் விடுபட்டு, யாதொரு வேதனையுமில்லாமல் சுகமாய்ப் புண்ணியசாலிகளைப்போல் சுவர்க்கஞ் சேர்ந்தார்கள். இதைக்கண்ட அந்த யமதூதர்கள் கோபமும் ஆச்சரியமு முற்றவர்களாய், அவரைநோக்கி, "ஓ! பிராமணோத்தமரே! நீர் ஏன் இநதப்பாவிகளை எங்கள் பாசத்தினின்றும் விடுவித்துச் சுவர்க்கஞ்சேரசசெய்தீர்? நாங்கள் எங்கள்யஜமானனுடைய உத்திரவின்படி பூலோகத்தில் புண்ணியபாவம செய்கின்றவர்களை எங்கள் யஜமானனிடம் கொண்டுபோய் விடுகிறோம். இவர்களை யம



யமதூதன். யமதூதன் பிராமணன். கிங்கரன்.

புரிக்குக் கொண்டுபோகையில் புண்ணியசாலிகளாயிருந்தால் அவர்களைத் திவ்யவிமானத்திலேற்றி, மகா உபசாரத்துடனே சுகமாய் இட்டுக்கொண்டுபோவோம். கொடிய பாபிகளாயிருந்தால் அவர்களைப் பலவாறு வருத்திக் கண்டபடி கல்லிலும் முள்ளிலும் இழுத்துக் கொண்டுபோய், எங்கள் யஜமானன் முன்னே விடுவோம். பின்பு யமதர்மராஜனும் அவனவன் புண்ணியபாபங்களுக்குத் தக்கபலனை யனுபவிக்கும்படிச்செய்வார். இப்பொழுது நீர் இவர்களை இங்ஙனம் எங்கள் பாசத்தினின்றும் விடுவித்துப் புண்ணியலோகம்சேரும்படிச் செய்து விட்டீரே. தருமராஜனென எங்கள் யஜமானன் "நீங்கள் அந்தப்பாதகர்க ளெல்லோரையும் என்னிடம் கொண்டுவந்து சேர்க்காமல் என்னுக்கினைக்கு முற்றிலும்விரோதமாய் அவர்களை ஏன் விட்டுவிட்டீர்கள்?." என்று எங்களைக் கோபித்துச் சிக்ஷிப்பாரே, அதற்கு நீர்தாம் உத்திரவாதியா யிருக்கவேண்டு மென்றுசொல்லி, அந்த வேதராசியென்னும்மகானை யமபுரிக்கு இட்டுக்கொண்டுபோனார்கள். அவ்விடத்தில் பார்க்க மிகவும் பயங்கரமான பலவித நரகங்களில் விழுந்து புழுத்துடிக்கிறுப்போற் றுடித்து, ஹாஹாகாரஞ்செய்கிற அநேக ஜீவகோடிகளைப் பார்த்தவுடன் அவருக்கு அவர்களிடத்தில் அதிக தயவுபிறந்து, மிக்க விசனத்துடன் அவர்களைநோக்கி, "ஓ! நரகவாசிகளே! நீங்களேன் கண்டபடி பாபங்களைச்செய்து இப்படி நரகவேதனைகளை யனுபவிக்கிறீர்கள்; தேகம் ஸ்திரமற்றதென்று தெரியாதா? மனுஷ்யஜன்மம் எடுப்பது மகாதுர்லபமாயிற்றே! நீங்கள் புண்ணியநதிகளில் ஸ்நாநஞ் செய்யவில்லையா? தான தர்மங்களை புரியவில்லையா? சிவபூஜை விஷ்ணுபூஜை செய்யவில்லையா? துலாமாஸத்தில் காவேரிநதியில் ஒரு ஸ்நாநமாவது செய்யவில்லையா? ஏகாதசிமுதலிய புண்ணியவிருதங்களை அனுஷ்டிக்கவில்லையா? எம்பெருமானுடைய திருமேனியிலும் லோகசங்கரனென சம்புவின் திருமேனியிலும் ஒரு துளசிதளத்தையாவது அர்ச்சிக்கவில்லையா? நீங்கள் பித்ரு சிஸ்ரூஷை மாத்ரு சிஸ்ரூஷை குரு சிஸ்ரூஷைகளைப் புரியவில்லையா? தேவதர்ப்பணம், ருஷிதர்ப்பணம், பிதிர்த்தர்ப்பணம் முதலியவைச் செய்யவில்லையா? தரித்திரனென ஓர்பிராமணனுக்கு உபகாரம் செய்யவில்லையா? சகல பாவங்களையும் நீக்கக்கூடிய ஸ்ரீஹரியினது புண்ணியசரித்திரங்களை ஒருநாளும் சிரவணம் பண்ணினதில்லையா." என்று வினவினார். இவ்வாறு வெகுதயரத்துடன்கேட்ட வேதராசியைநோக்கி, அந்தநரகவாசிகள் மறுமொழிசொல்லத் தொடங்கினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
ச-வது அத்தியாயம் முற்றிற்று.

## ஐந்தாம் அத்தியாயம்.

## வேதராசிக்கும் நரகவாசிகளுக்கும் நடந்த சம்வாதம்.

——(*)——

"ஓ சுவாமி! ஆம், நாங்கள் செய்த பாபங்களுக்குக் கணக்கே இல்லை. அப்படியிருந்தபோதிலும் இப்பொழுது தாங்கள் எங்களைக் கேட்டபடியால் கொஞ்சம் சொல்லுகின்றோம். நாங்கள் ஜனனமான காலந்தொடங்கிக் கொடிய பாவங்களையேபுரிந்து வந்தோம். அதினால் இந்த எரிநரகுக்காளானோம். நாங்கள் அருணோதய வேளையில் சுகமாய் நித்திரைசெய்தோம்; காலை மாலை சந்திகளை அக்காலங்களில்செய்ய வேண்டியஜபதபங்களையும் ஒருநாளும் செய்தறியோம்; நாங்கள் பஞ்சமகா யக்கியங்களை மறந்தோம்; அக்கினிஹோத்திரம்

யில்பசிதாகத்துடன் வந்தவர்களுக்கு அன்னபானங்களைஅளித்தோமில்லை. அரக்கு உப்பு அன்னம் எண்ணெய் பால் தயிர் நெய் எள் வஸ்திரம் இவைகளை விற்று ஜீவனம் செய்தோம். பரநிந்தை பரத்துரோகம் பரான்னபோஜனம் பரதனபஹாரம் பரஸ்திரீசங்கமம் இவைகளை வேண்டியவாறு செய்தோம். நிஷித்தமான தினங்களிலேயே முக்கியமாய் ஸ்திரீ சங்கமம் செய்தோம்; ஏகாதசி தினத்தில் வயிறுபுடைக்கத்தின்றோம்; அமாவாசையில் தர்ப்பணம் பண்ணியறியோம்; எப்பொழுதும துஷ்டவார்த்தை துஷ்டசகவாசம் இவைகளையே விரதமெனக்கொண்டோம்; ஒருநாளும் விஷ்ணுகதாமிருதபானம்பண்ணியறியோம்; மாத்ருபூஜை குருபூஜை பிராமணபூஜை இவைகளைப்புரிந்திலோம். யாசகர்களுக்குக் கொடுக்கிறோமென்று ஆசைகாட்டிப் பின்பு கொடாமல் அவர்களை வயிறெரியச் செய்தோம்; காலையிலெழுந்து மகாநதிகளில் ஸ்நானம்செய்தோமிலலை; மிருஷ்டான்னங்களைச் செய்து வேறு விருந்தாளிகளுக்குக் கொடுத்தும் வைசுவதேவம் புரிந்தும் சந்தோஷித்தோ மில்லை; பிக்ஷைக்கு வந்த சன்னியாசிகளுக்கு பிக்ஷையிட்டோமில்லை; தீர்த்தயாத்திரை செய்தோமில்லை; விஷ்ணுவினுடைய உத்ஸவ தரிசனம் செய்தோமில்லை; குடும்பியாயும் ஏழையாயுமிருக்கிற பிராமணனுக்கு ஏதேனும் உதவினோமில்லை. காயத்திரீ மகாஜபம் பண்ணியறியோம், யாகங்களை புரிந்தறியோம்; நிஷித்தமான வாரங்களில் எண்ணெயிடாதிருந்தறியோம்; நிஷித்தமான பார்த்தங்களைப் புசி

யாதுவிட்டறியோம்; பழையவமுது சிராத்தசேஷம் ஸ்திரீசேஷம் சூத்திரசேஷமான அன்னங்களைப்புசித்தோம்; உப்புச்சேர்ந்த பாலை யும் புளிசேர்த்த அவரைக்காயையும் முருங்கைக்காயையும் வெள் ளைக்கத்திரி வெள்ளைமொச்சை இவைகளையும் புசித்தோம்; கற்ப காலத்தில் நித்திரை செய்தோம்; பால விருத்தர் தவிர மற்றவர்கள் புஜிக்கக்கூடாத அகாலங்களில் புஜித்தோம்; பகவானுக்கு நிவேத னஞ்செய்யாத அன்னத்தைப் புசித்தோம். தாய் தந்தைகளைக் கண் டவாறு வைதோம்; ஸ்நாநம் பண்ணாத ஸ்திரீயால் சமைக்கப்பட்ட அன்னத்தைப் புசித்தோம்: இரவில் தயிர்ச்சோறும் பகலில் பாற் சோறும் சாப்பிட்டோம்; ஒருமாதகாலம் வரையில் பருப்பில்லாத அன்னத்தைப் புசித்தோம்; பஹிஷ்டையான ஸ்திரீயுடன் சேர்ந் தோம்; நாம்தாம் வித்துவான் நாம்தாம் நற்குடிப்பிறந்தோம் நாம் தாம் செல்வமுடையோம் எம்மைவிட மேலானவர் ஒருவருமில்லை என்று சொல்லிப் பெரியோர்களை அவமதித்தோம்; பகலில் ஸ்திரீ சங்கமம் செய்தோம்; சூதாடல் கள்ளுண்டல் பிராதக்கால சந்தியா காலத்தில் எண்ணெயிட்டுக்கொள்ளுதல்; பாரியாள் உடனிருந்து புசிக்கவிடல் முதலிய அகிருத்தியங்களைச் செய்தோம். முருங்கை வெள்ளைக்கத்திரி நிலவசலை இவற்றை உண்டதேயன்றித் துவாதசி யிலும் கூட்டியுண்டோம்; சந்தர்ப்பணைக்கென்று தண்டுலங்களை யா சித்து எமது வயிற்றுக்கே கொட்டிக்கொண்டோம்; வேதசாஸ்திர பண்டிதராயும், நிஷேத காரியங்களிலேயே பிரவேசித்து, ஸத்கர் மத் தியாச்சியராய், கூலிக்குவேதமோதி, எப்பொழுதும் அசத்திய மே புகன்றோம். ஆகையாற்றான் இப்பொழுது இந்த மகாகோர மான நரகத்தில் விருந்து இங்ஙனம் துடிக்கின்றோம். இப்பொழுது நாங்கள் அனுபவிக்கும் நரகங்களின் பெயர்களைச் சற்றுச் சொல்லு கிறோம் கேட்பீராக.

இரௌரவம், காலசூத்திரம், மகாரௌரவம், கராளம், விகரா ளம், துஷாக்கினி, கிருகரம், கும்பிபாகம்; தப்தஜலம், ஸந்தாபம், தப்தவாலுகம், தப்தலீஸம், தப்ததைலம் பழுக்கக்காய்ச்சின இரும் புக்குண்டை விழுங்கச்செய்தல், மலமூத்திரங்களைப் பக்ஷித்தல், ரே தஸ்ஸை அருந்துதல், நாய்மாம்சததைப் புசித்தல். தன்னுடைய மாம்சத்தையே புசித்தல், இரத்தபானம் செய்தல், சதைகளைப்புசித் தல், பாம்புகளால் கடியுண்டல், தேள்களால் கொட்டப்படுதல். உப்பு நீரைக் காயங்களில் ஊற்றல், கோரமான வைதரணி நதியில


அமிழ்த்தல், காய்ந்த கல்லின்மேலில் தள்ளிவிடுதல், உலக்கையால் புடைத்தல், காய்ந்தகல்லிற் றேய்த்தல், எரிகின்ற நெருப்பிற் றள்ளல், நெருப்புத்தணல்களை விழுங்கச்செய்தல், அலைகளில் டடுக்கச்செய்தல், நகக்கண்களில் ஊசியால் குத்தல், குறிகளில் ஆணியறைதல், குறிகளிலும் விருஷணங்களிலும கல்லைக்கட்டித் தொங்கவிடுதல், குறிகளறுத்து விழச்செய்தல், தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம், என்று கொடூரமான பற்பல கோரமான நரகங்களையெல்லாம் நாங்கள் அனுபவித்து வருகிறோம். எங்களில் சிலருக்கு ஏழுமனுவந்திரங்களாயின. சிலருக்கு பத்மம் சங்கம் அர்ப்புதம் நிர்ப்புதம், முதலிய கணக்குள்ள வருடங்களாயின: அப்படியிருந்தும் எங்களுக்கு இன்னும் இத்தினின்றும் விமோசனமுண்டாகவில்லை. புருஷர்களாகிய எங்களுடைய அவஸ்தைதான் இங்ஙனமாயிற்றே; ஸ்திரீகள் படும் அவஸ்தையை ஒருவாறு சொல்லுகிறோம் கேட்பீராக,

இதோ! இங்கொரு ஸ்திரீயைக் குப்புறத்தள்ளிக் கோடரியாற் பிளந்தும, தேள்முதலிய விஷஜந்துக்களை விட்டுக் கடிப்பித்தும் வருத்துகிறார்களே, இவள் முற்ஜன்மத்தில் வியபிசாரியான ஓர்பிராமணஸ்திரீ. இவள் இருந்த ஊர் உஜ்ஜியினிபுரம். இவள் எப்பொழுதும் கடுகடுத்த முகத்தை யுடையவளாயும், தனக்குப் பலபிள்ளைகளிருக்கவும் தன்வயிறு மாத்திரம் நிரப்பிக்கொண்டு மாமன் மாமிமார்களுக்கு அப்பிரியமாக நடப்பவளாயும், புக்ககத்துச சொத்துக்கள் எல்லாவற்றையும் தான் அடையக்கருதி தனது பிள்ளைகளையெல்லாம் கொன்றவளாயும், எப்பொழுதும் தூக்கமும் சோம்பலுமுடையவளாயும், புருஷனைக் கண்டவாறு திட்டுகின்றவளாயும், தேவப்பிராமண குருத்துரோகியாயும், மகாவியபிசாரியாயும், மாதுர்பிதுர் வர்க்கங்களைத் திக்கரிப்பவளாயும், ஏழைகளைத்தூஷித்தும் திரஸ்கரித்தும் அன்னார்த்திகளை அவமதித்தும் வியபிசாரிகளையே வேண்டியழைத்தும் பதிவிரதைகளைப் பங்கப்படுத்துபவளாயும், நாயகன் வைவானேயானால் இப்போதே சாகிறேனென்று அச்சுறுத்தும், பெரியோர்கட்கு அடங்காமல் பட்டிமாடென பட்டணமுழுதும் எதேச்சையாய்த் திரிபவர்கட்குப் பொருள் தந்தும், இத்தகைய கொடிய கிர்த்தியங்களையே செய்து கொண்டிருந்தவளாய்க் கடைசியில் குன்ம வியாதியால் பீடிக்கப்பட்டுப் பிராணனைவிட்டு, இதோ இப்பொழுது தலைகீழாகத் தொங்கிக்கொண்டு மலமூத்திரங்களைப் பட்சித்துக்கொண்டு, தேள் முதலிய விஷஜந்துக்களாற் பீடிக்

கப்படுகின்றாள். இவளுக்கு அருகில் ஐயோ! ஐயோ! என்று கதறிக் கொண்டு, அடிக்கடி மூர்ச்சையடைந்து, மீண்டும் எழுந்து, ஓலமிடுகின்ற இரண்டு புருஷர்களைப்பார்த்தீரா? இவ்விருவரில் ஒருவன் மகாபாபியும் பிராமணஹிம்ஸை செய்தவனுமான ஓர் அரசன். இவன் அரசாண்ட நாளெல்லாம் அநீதியும் அக்கிரமமுமே மேலிட்டிருந்தன. குடிகொன்று இறை கொண்டான். ஏழைகளுக்கு இரங்காதவன். ஆதலால் இதோ இப்பொழுது இங்ஙனம் வருந்துகின்றனன். மற்றொருவன் அளகமெனும் கிராமத்தில் இருந்த பிரமச்சுருதியென்னும் பிராமணச் சிரேஷ்டனுடைய குமாரன். இவன் தான் பிரமசாரியா யிருந்தும் சந்தன தாம்பூலாதிகளை யதேச்சையாய் உபயோகித்துப் பரஸ்திரீ பரிக்கிரகம் செய்தும், வேதாத்தியயனம் பண்ணாமலும், கேவலம் பாவியாயிருந்ததினால் இப்பொழுது தான் செய்த பாபங்களுக்குத் தகுந்தபலனை யநுபவிக்கின்றனன். இவர்கள் இந்த நரகங்களை யநுபவிக்க ஆரம்பித்து முப்பது பிரமப்பிரளயங்களாயின. இன்னும் இவர்களுக்கு முடிவுகாலம் பிறக்கவில்லை. இவர்கள் படுந்துக்கத்தைப் பார்க்கையில் எங்களுக்கு எங்கள் துக்கம் அவ்வளவு அதிகமாகத் தோற்றவில்லை. ஆகையால், ஓ! மகானுபாவனே ஒரு க்ஷணகாலம் இங்கு நில்லும். யாம் தங்களுடைய தரிசனத்தினால் இந்நரகத்தினின்றும் விமோசனத்தை யடைகிறோம். தேவரீர் சாக்ஷாத் ஸ்ரீ ஹரியே தவிர வேறில்லை.'' என்றிங்ஙனம் சொல்லிக் கொண்டே அந்நரக வாசிகள் எல்லோரும் நரகவேதனையினின்றும் விடுபட்டு, ஒருங்கே வைகுண்டம் சேர்ந்தார்கள். இங்ஙனம் இருந்தாற்போல் அந்நகரவாசிகள் அனைவரும் முறைமுறையாக கொடிய நரகங்களினின்றும் விடுபட்டு வைகுண்டத்துக்குப் போனதைக் கண்ட வேதராசியும் தனக்குள் அதிக ஆச்சரியமடைந்து, இவர்கள் மகா பாவிகளாய்ப் படுநரகத்தில் விழுந்து புழுப்போற் றுடித்தார்களே அப்படிப்பட்ட இவர்கள் அகஸ்மாத்தாய் நரகங்களினின்றும் விமோசனமாகி நல்லுலகமடைந்ததற்குக் காரணம் யாதோ தெரியிலேனென்று சிந்திப்பாராயினர்.

எப்பேர்ப்பட்ட மேலான புண்ணியம் செய்தாலும் இங்ஙனம் ஒருங்கே முக்தியடைய முடியாதே. உலகத்தில் மனிதர்கள் பிராப்த கர்மானுகுணமாகப் பற்பல ஜன்மங்களை யெடுத்து அந்தந்த ஜன்மங்களில் செய்த புண்ணிய பாபங்களுக்குத் தக்கபலனை யநுபவிக்க வேண்டுமே தவிர; இப்படி எல்லோரும் சேர்ந்தாற்போல் தங்கள்

கருமபந்தனத்தை யறுத்துக்கொண்டு நரகத்தினின்றும் விட்டுப் போவதற்கு ஸாக்ஷாத் அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய கிருபை யொன்றல்லது மற்றெவ்வித புண்ணியத்தினாலும் கைகூடாதே. அப்படியிருக்க இப்பொழுது இவர்கள் எப்படி முக்திபெற்றார்கள்.,, என்று பலவாறு தனக்குள்ளே யோசித்துப் பின்னர், "ஓகோ! சரி தான் தெரிந்துக்கொண்டேன்; இவர்கள் இப்பொழுது நம்முடன் பகவத் விஷயமான சம்பாஷணைசெய்து ஸ்ரீஹரி நாமோச்சாரணம் செய்ததினாலல்லவோ இங்ஙனம் இவர்கள் முக்தி பெற்றார்கள். ஆகிலும் இவர்கள் எல்லோரும் சுகமாய் வைகுண்டமடையும்படிக்கும், அவர்களை அங்ஙனம் வைகுண்டத்துக்குப் போகும்படி விட்டு விட்ட யமபடர்களைச் சர்வலோக சம்ஹாரியும் மகாகோபிஷ்டனுமான யமன் கோபிக்காமலிருக்கும்படிக்கும், அந்த ஹரிநாமத்தைக் கேளாது இன்னும் நரகிலழுந்திக்கிடக்கிற பிராணிகள் எல்லோரும் வைகுண்டலோகத்துக்குப் போகும்படிக்கும் இதோ யான் இவர்களையும் ஸ்ரீஹரிநாமா மிருதக்கடலில் ஆழ்த்திவைக்கிறேன். ஏனென்றால், ஸ்வர்ணஸ்தேயிகள், ஸுராபாணிகள், மித்திரத்துரோகிகள் குருத்துரோகிகள் பிராமணஹத்தி ஸ்திரீஹத்தி, இராஜஹத்தி, கோஹத்தி, பித்ருஹத்தி முதலியவற்றைச் செய்தவர்கள் காவேரி மகாநதியில் கார்த்திகை மாசி சித்திரை வைகாசி அற்பிசி மார்கழி முதலிய மாதங்களில் ஸ்நாநஞ் செய்யாதவர்கள், அக்கினிஹோத்திரம் ஔபாஸநம் ஜபம் தபம் இவைகளைப் புரியாதவர்கள் புத்திரனில்லாதவர்கள், அநாசாரர்கள், நிஷித்தபோஜிகள், அஸத்வியாபாரமுடையவர்கள், விஷ்ணுகதாச்சிரவணம் செய்யாதவர்கள், தீர்த்தயாத்திரை செய்யாதவர்கள், காலையில் இராமாயணம் பாரதம் பாகவதம்முதலிய விஷ்ணுசரித்திரங்களைப் படிக்காதவர்கள், அவற்றைக்கேட்காதவர்கள், சாளக்கிராமார்ச்சனை செய்யாதவர்கள், எப்பொழுதும் சூத்திரான்னத்தை யுண்டவர்கள், மகாளயச்சிராத்தஞ் செய்யாதவர்கள், அமாவாசை தர்ப்பணஞ் செய்யாதவர்கள், தாய் தந்தைகளை நிந்திப்போர், இன்னம் மற்ற மகாபாதகர்கள் எல்லோரும் ஸாக்ஷாத் பக்தபராதீனனும் தீனதயாளுவும் ஸர்வேசுவரனுமான ஸ்ரீமந்நாராயணனுடைய ஹரியென்னும் இரண்டு எழுத்துக்களேன்றுகூடிய [illegible] நாமத்தை ஒருபோதேனும் உச்சரித்தார்களேயானால், தங்கள் [illegible]பாவங்களை யெல்லாம் போக்கிக்கொண்டு வைகுண்டம் சேருவார்கள்." என்று தன்னுள்ளே சொல்லிகொண்டு கீழ் வருமாறு [illegible] பகவந்நாம சங்கீர்த்தனத்தைச் செய்தார்.



ஸ்ரீமஹாவிஷ்ணு. வேதராசியென்னும் பிராமணன்.

அஃதாவது, ஓ ஸ்வாமி! அநந்த புருஷோத்தம! புஷ்கராக்ஷ! பக்தார்த்திபஞ்சன! ஹரே! முராரே! ஸ்ரீநரசிம்ம! மனிதலோகத்தில் விளையாட்டாகப் பற்பல அவதாரங்களைச் செய்பவனே! சந்திர சூரியர்களைக் கண்களாக வுடையவனே! ஈசனே! ஸ்ரீதேவி பூதேவிகளிரண்டுபேர்களாலும் தைவரும் தாமரைமலர் போன்ற பாதங்களையுடையவனே! ஒருவராலும் இப்பேர்ப்பட்டவனென்று அளவிடக் கூடாதவனே! [illegible] ல [illegible] 'ன னும்பெயர் தரித்தவனே! மிகவு மழகிய வடிவுடையவனே! சகல நன்மைகளையும் அளிப்பவனே! விபுவே! நினது மலரடியை நினைத்த மாத்திரத்தில் பக்தர்களுடைய சம்சாரமென்னும் பந்தத்தை நீக்கி மோக்ஷமளிப்பவனே! என்று மழியாதவனே! பரமசிவனாலும் வணங்கப்பட்டவனே! நீலமேகச் சியாமளனே! பீதாம்பரத்தின [illegible] ங குகின்றவனே! பொற்றேருடையவனே! அமரர்களுக்கு [illegible]யே! நாராயணா! அச்சுதா! நவநீதசோரா! கேசவா! [illegible]ாந்த[illegible]ம் கா [illegible] ய! [illegible]வே! ர[illegible]! ஜயசீலனே! இந்திரனுக்குப் பிரியமானவனே! [illegible]! முகுந்தா! கோவிந்தா! கஜேந்திரபந்துவே! சங்குசக்[illegible]யே! [illegible] காலோகங்களுக்கெல்லாமீசனே! உலகங்களைப்பாதுக[illegible]னே! உல

ய மூர்த்தமாகவுடையவனே! உலகெங்கும்பரவிய ஒளியு டையவனே! சர்சுவதமான அங்கத்தையுடையவனே! ரூபமற்றவனே! வில்லாதவனே! நிர்விகாரனே! ஆதிசேஷசயனா! ஸமஸ்த மகமானஸவ ல உண டை உலக யை யுடையவனே! ஆராகள முனிந்திரர்கள் ய வர்களால் அதிகபக்தியுடன் வந்திக்கப்பட்டவனே! இந்திரா னே! ஹிரண்யகசிபுவின் குமாரனானபிரகலாதனால் ஸ்தோத்திரிக் கப்பட்டவனே! தோத்திரங்களுக்கு இருப்பிடமானவனே! என்னைக் காப்பாற்றுவாயாக. என்றிங்ஙனம் பலவாறு ஆநந்தபரவசனாய்ப் பகவத்பக்தி மேலிட்டு தன்னைமறந்துகூத்தாடிக்கண்களில் ஆநந்த பாஷ்பம் ஆறாய்ப்பெருக தழுதழுத்தவார்த்தையுடன் தோத்திரஞ் செய்த க்ஷணத்தில் நரகவாசிகள் எல்லோரும் அதினின்றும் விடு பட்டு திவ்யவிமானத்திலேறிக்கொண்டு வைகுண்டஞ் சேர்ந்தார் கள். ஆகையால், துலாகாவேரி ஸ்நாநஞ் செய்த வேதராசியினது மகிமை இப்படிப்பட்டதாயிருந்தது.

ஆக்கினேய புராணத்தில் காவேரிமகத்துவத்தில்
ரு-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ஆறாவது அத்தியாயம்.

விஷ்ணு கவசத்தினால் வேதராசி என்னும்
பிராம்மணன் முக்தி பெற்றது.

——:o:——

ஆகையால், இக்காவேரி மகாநதியானது கேவலம் ஜடர்களா யும் [illegible] நரகத்தில் அமிழ்ந்து கிடக்கின்றவர்களாயும், ஔபா சன [illegible] ஹீனர்களாயும் யாகங்களைச் செய்யாராயும் வைதி க [illegible]களாயும் ஆசாரஹீனர்களின் அன்னத்தைப் புசித்தவ ர் [illegible] பணம்பண்ணாராயும் [illegible] இல்லாராயும துரா [illegible] இருக்கின்றபாபிகள் யாதொரு காயக்கிலேசமன்றி [illegible] வைகுண்டமடையுமாறு பிரமனால் சிருஷ்டிக்கப்பட் [illegible] தானங்கள் மற்றெவ்வித தருமங்களைச் செய்தாலும் [illegible] யும் துலாகாவேரி ஸ்நாநத்தை ஒருவாறு செய் [illegible] சகலபாபங்களையும்போக்கி விண்ணவருலகமடை [illegible] க்கால ஸ்நாநஞ்செய்து காயத்திரி ஜபித்தால் வரும் [illegible] ாலயசிராத்தஞ் செய்தால்வரும் சுகிர்தத்தையும் அவா

தசி வியதிபாதமுதலிய உத்தமநாட்களில் செய்வதால் வரும்பயனையும் ஸ்நானமாத்திரத்திலேயே இவ்வுத்தமநதி தந்தருளும் இம்மகாநதிக்குப் பிரமதேவனே பெயரிட்டிருக்கின்றனன். ஒருவன் கங்கையில் நூறுவருடம் ஸ்நானஞ் செய்து எந்தப்பலனை யடைகின்றானோ அப்பலனை அவன் ஒருவாறு துலாகாவேரியில் ஸ்நானஞ்செய்தால் உடனே பெறுவான். மூச்சகங்களிலுள்ள மூன்றரைக்கோடி தீர்த்தங்கள் கங்கையை முன்னடத்திக்கொண்டுவந்து, இத்தீர்த்தத்தில் விஷ்ணுவின் கட்டளையால் துலாமாதத்தில் நீராடுகின்றன. இம்மாதத்தில் இந்நதியின் பிரபாவத்தைச் சிரவணித்தால் அதில் ஸ்நானமாடின பலனையடைந்து, தமது பாவத்தைத்தொலைத்து வைகுண்டபதவியைப் பெறுவார்கள். இந்த துலாகாவேரி ஸ்நானத்தினது பிரபாவத்தினாற்றான் முற்சொன்னவேதராசியென்னும் பிராமணோத்தமன் வியபிசாரியான தன் மனைவியோடு சிறிதுதினம் வாழ்ந்திருந்ததினால் தமக்குநேரிட்ட பாவங்களைத் தொலைத்துக் கொண்டதுமன்றி, நரகங்களில் அநேககோடி வருடங்களாகவிழுந்து தவித்துக்கொண்டிருந்த பிராணிகளையும் ஸ்ரீ ஹரிகதாமிருதபானஞ் செய்வித்து முக்திபெறச்செய்து, [illegible] ராதி தேவர்களாலும் எதிர்க்கவொண்ணாத தென்திசைக்கோமானான யமனையும்ஜயித்து வைகுண்டஞ் சேர்ந்தனரென்றார்.

இதைக்கேட்ட அரிச்சந்திரனும் [illegible] அகஸ்தியரைநோக்கி, "சுவாமி! வேதராசி எவ்வாறு யமனைஜயித்து வைகுண்டம் [illegible] னர்? அதை அடியேனுக்கு நன்றாய் அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கவே, அகஸ்தியரும் மனமுவந்து உரைக்கலானார். கேளும் அரிச்சந்திரமகாராஜனே! இவ்வாறு வேதராசியென்னும் பிராமணன் நரகவாசிகளனைவரையும் வைகுண்டம் சேர்ப்பிக்க [illegible] னையுணர்ந்த யமதர்மராஜனும் கடுஞ்சினமடைந்து [illegible] ஸத்துடனே மூன்றுலோகங்களையும் கோபாக்கினியால் [illegible] பொசிக்கி விடுபவன்போலவும், மலைகளைப்பக்ஷிக்கின்றவன் [illegible] கடல்களைக் குடித்து விடுபவன்போலவும், தனது [illegible]

துடன் "இதோபார் விட்டேனா அந்தவேதராசி [illegible] தலையை அசைத்துக்கொண்டு, பெருமூச்செறிந்து [illegible] நெறுநெறுவென்றுகடித்துக் காலதண்டத்தைக் கையில் [illegible] ளெங்கும் செந்தூள்பறக்க மகிஷவாஹனனாருடனாய்,

, சூழப்பட்டவனாக வைகுண்டஞ்செல்லும் வேதராசியைத்
க்கொண்டுபோனான். இவன் இப்படிச் சண்டப்பிரசண்ட
பாகின்றதைக்கண்ட சகலபிராணிகளும் இதோ இன்றை
ர்மராஜன் இங்ஙனம் வெகுசீற்றத்துடன்வருகின்றான்; என்
திக்காய் ஓடிப்பதுங்கினார்கள். இங்ஙனம் தன்னை யமன் தூர
ண்டு வருகின்றதை வேதராசியும் தூரத்திலிருந்தே உணர்
னுள் கிஞ்சித்து அச்சமுற்று, "ஓம் நமோநாராயணாய" என
முறை கெட்டியாகக் கூப்பிட்டதுமன்றி, விஷ்ணுகவசத்தி
னைச்சுற்றிலும் ரக்ஷைசெய்துகொண்டனர். இந்த விஷ்ணு
து மகாரகசியமானது. இந்த ஸ்ரீஹரியானவர் ஆதியில்
து உபதேசித்தார். பிரம்மாவானவர் க்ஷீரஸாகரத்தில்
புதனைக் கருணைகூர்ந்து உபதேசித்தனர். சகலஜயத்தையும்
ரணத்தக்கதும் மிருத்யுபயத்தைப் போக்கக்கூடியதுமான
ஷ்ணுகவசமானது உம்மாலும் ரகசியமாய் ஒருவருக்கும்
ாமல் ரக்ஷிக்கத்தக்கது. என்று அவருக்கு அந்த விஷ்ணு
க உபதேசித்தார்.

### விஷ்ணுகவச ஸ்தோத்திர மகாமந்திரம்.

ఋషిః, అనుష్టుప్ఛన్దః, శ్రీనారాయణోదేవతా, కేశవాయ అంగుష్ఠా
భ్యాం నారాయణాయ తర్జనీభ్యాంనమః, మాధవాయమధ్యమాభ్యాంనమః, గో
విందాయ అనామికాభ్యాంనమః, విష్ణవే కనిష్ఠికాభ్యానమః, మధుసూదనాయకర
తల భ్యాంనమః, త్రివిక్రమాయహృదయాయనమః, వామనాయ శిరసేస్వాహా,
శ్రీధ శిఖాయైవౌషట్, హృషీకేశాయ కవచాయహుం, పద్మనాభాయ నేత్రత్ర
యా ట్, దామోదరాయ అస్త్రాయఫట్, దిగ్బంధః.

### தியானம்.

॥ శాన్తాకారం భుజగశయనం పద్మనాభం సురేశం।
విశ్వాకారం గగనసదృశం మేఘవర్ణం శుభాఙ్గం।
లక్ష్మీకాన్తం కమలనయనం యోగిహృద్ధ్యానగమ్యం।
వందేవిష్ణుం భవభయహరం సర్వలోకైకనాథమ్॥ ౧॥
పూర్వతో మాంహరిఃపాతు పశ్చాచ్చక్రీచదక్షిణే।
కృష్ణ త్తరతః పాతుశ్రీశో విష్ణుశ్చసర్వతః॥ ౨॥
మానందకృత్పాతు అధస్తాచ్ఛార్ఙ్గభృత్సదా।
పాదౌపాతుసరోజాక్షః ఊరూపాతుజనార్దనః॥ ౩॥

జానునీమేజగన్నాధః ఊరూపాతుత్రివిక్రమః ।
గుహ్యంపాతుహృషీకేశః పృష్ఠంపాతుమమావ్యయః ॥
పాతునాభింమమానన్తఃకుక్షింరాక్షసమర్దనః ।
దామోదరోమేహృదయం వక్షఃపాతునృకేసరీ ॥
కరౌమేకాళియారాతిః భుజౌభక్తార్తిభఞ్జనః
కంఠంకాలామ్బుదశ్యామః స్కన్ధౌమేకంసమర్దనః॥ ౬॥
నారాయణోవ్యాన్నాసాంమే కర్ణౌకేశిప్రభఞ్జనః।
కపోలేపాతువైకుంఠః జిహ్వాంపాతుదయానిధిః॥ ౭।
ఆస్యందశాస్యహన్తావ్యాత్ నేత్రేమేహరిలోచనః।
భ్రువౌమేపాతుభూమీశో లలాటంమేసదాచ్యుతః॥ ౮॥
ముఖంమేపాతుగోవిన్ద శ్శిరోగరుడవాహనః।
మాంశేషశాయీ సర్వేభ్యోవ్యాధిభ్యో భక్తవత్సలః॥ ౯॥
పిశాచాగ్ని జలేభ్యోమాం ఆపద్భ్యోవతువామనః ।
సర్వేభ్యోదురితేభ్యశ్చ పాతుమాం పురుషోత్తమః ॥ ౧౦॥
ఇదంశ్రీవిష్ణుకవచం సర్వమఙ్గళదాయకం ।
సర్వరోగప్రశమనం సర్వశత్రువినాశనమ్ । ౧౧॥

இக்கவசத்தைப் பக்தியோடுகூறி, "கிழக்கில் அரியும், ... கில் சக்கிரியும், தெற்கில் கிருஷ்ணனும், உத்தரத்தில் ஸ்ரீ ஈசனு... லா இடங்களில் விஷ்ணுவும், ஊர்த்தமுகத்தில் ஆநந்தரூபியும் ... தா முகத்தில் சாரங்கபாணியும், பாதங்களில் கமலபாதனும், ... கா வில் ஜனார்த்தனும், முழங்காலில் ஜகந்நாதனும்; தொடைக... திரி விக்கிரமனும்; குஹியத்தில் ருஷிகேசனும் புருஷ்டத்தில் ... ய னும், நாபியில் அனந்தனும் குக்ஷியில் இராக்ஷஸமர்த்தனும் இ... யத் தில் தாமோதரனும், வக்ஷத்தில் நரசிம்மனும், கரங்களில் ... யத் தும்சியும், புஜங்களில் பக்தார்த்த பஞ்சனனும், கண்டங்க... கா லாம்புதச்யாமனும், ஸ்கந்தங்களில் கம்ஸமர்த்தனும், நாசியி... ரா யணனும், நேத்திரத்தில் தாமரைலோசனனும், புருவத்தி... ச னும், லலாடத்தில் அச்சுதனும், முகத்தில் கோவிந்தனும் ... களில் கருடவாகனனும், கருணைகூர்ந்து காத்தருளவேண்டு... னும் ரோகங்களினின்றும் சேஷசாயும், பிசாசாக்கினி ஜல... பக்தவச்சலனும், ஆபத்துக்களில் வாமனனும், எல்லாப்பாவ... புருஷோத்தமனும், என்னைக்காக்கக்கடவர்.,, என்று ... படி ... ராசியானவர் விஷ்ணுகவசத்தைப் பலதரம் ஜபித்துத் தன்னைச்...

றினும் ரக்ஷைசெய்து கொள்ளவே, அவரைத்துரத்திவந்த யமபடர்கள் எல்லோரும் அவர்கிட்டநெருங்கக்கூடாமல் சிங்கத்தைக்கண்ட மான்கள்போல் வெருண்டு ஓடினார்கள். யமதருமராஜன் சித்திர குப்தன் இருவர்தவிர, மற்றவியாதிகள் முதலிய யாவையும் அந்தப் பிராமண தேஜஸ்ஸினால் அடிபட்டு ஓட்டம்பிடித்தார்கள். இவ்வாறு ஓடின தனது பரிஜனங்களைக்கண்டு யமனும் தன்னுள் துணுக்குற்றுத் தனது பயங்கரமான வடிவத்தைமாற்றி, அழகிய ஸ்வரூபத்துடன் ரதாரூடனாய், அந்தப்பிராமணனுக்குப் பிரத்தியக்ஷமாகி; ரதம்விட்டிறங்கி, வந்தனஞ்செய்து, அவரது நல்வரவை விசாரித்து, அவரைப் பலவாறு புகழ்ந்து, சொன்னதாவது. "ஓ! சுவாமி! தாங்கள் இவ்விடம் எழுந்தருளி, திருப்பொன்னடிகளைச் சாத்தினபடியால், 'அடியேன் தன்னியனாயினேன்' எனது பட்டணமும் பரிசுத்தமாயிற்று. அடியேன் இங்ஙனம் தங்கள் பேரில் கோபித்துவந்த குற்றத்தை மன்னித்து, அடியேனைக் கருணையுடன் கடாக்ஷிக்கவேண்டும். தம்மால் யான் ஜயிக்கப்பட்டேன். மகா தயாளுவும் அயலார்களுடைய துக்கத்தைச் சகிக்காதவரும் விஷ்ணு பக்தாக்கிரணியுமான தம்மால் கொடிய நரகவேதனையை யனுபவித்தபாவிகள் அனைவரும் பரிசுத்தர்களாய்ப் பரமபதம் அடைந்தார்கள். ஆகிலும் பகவானவர் பாவஞ்செய்தவர்களுக்கு நரகங்களை யேற்படுத்தி, என்னை அவரவர்களுடைய பாபங்களுக்குத் தக்கவாறு தண்டிக்கும்படி நியமித்து, யமதருமராஜன் என்று பெயருமிட்டு வைத்திருக்கையில் கொடியபாவிகள்கூட ஹரியென்ற இரண்டு அக்ஷரங்களை ஒருக்கால் சொன்னமாத்திரத்தில் எல்லாப் பாவங்களையும் போக்கிக்கொண்டு என்னைக்கொஞ்சமேனும் இலக்ஷியம் செய்யாமல் வைகுண்டம் சேர்ந்தார்கள். நான்பெற்ற அதிகாரம் வீணாய்ப்போகப் பாழும் இந்நரகத்தைக் காத்துக்கொண்டிருப்பதில் பயன் என்ன? ஆகையால், இனி இந்தக்கலியுகத்தில் உலகத்தில் பிராணிகள் எல்லோரும் விஷ்ணுவிடத்தில் பக்திச் சிரத்தையில்லாதவர்களாயும், அவரது புண்ணியகதைகளில் நம்பிக்கை யற்றவர்களாயும், போகக்கூடியவர்கள். ஏதோ சிலர் மட்டும் அந்த மகாவிஷ்ணுவினது கிருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாய் ஸ்ரீ ஹரிநாமோச்சாரணம் செய்து மோக்ஷவீட்டைப் பெறக்கடவர்கள். அப்படி ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்பவர்கள் எனக்காவது அல்லது எனது படர்களுக்காவது கொஞ்சமேனும் பயப்படவேண்டுவதில்லை. நான் அவர்களைக்கண்டு பயந்து ஓடுவேன். பாவிகளுடைய கண்களுக்கு நான் பயங்கரமான

வடிவுடன் தோன்றுவேன். தங்களைப்போன்ற பாகவதோத்தமர்கள் கண்ணுக்கு மிகவும் ஸௌம்யமான உருவத்துடன் வெளிப்படுவேன். இதோ இந்தக் கோடிசூரியப் பிரகாசமான விமானத்தில் ஏறிக்கொண்டு தங்கள் இஷ்டப்படி வைகுண்டத்துக்கு ஏகலாம்., என்றிவ்வாறு யமதருமராஜனால் விடைகொடுக்கப் பட்டவராக வேதராசியும் அந்த திவ்யவிமானத்திலேறிக்கொண்டு தேவர்கள் எல்லோரும் சூழ்ந்துவர மகாவைபவத்துடன் பரமபதம் சேர்ந்தனர். இங்ஙனம் வேதராசியினது உபாக்கியானத்தை யான் உமக்கு ஸவிஸ்தாரமாய்க் கூறிவிட்டேன். யாவனொருவன் இந்த உபாக்கியானத்தைப் பக்தியுடன் படிக்கின்றானோ அல்லது கேட்கின்றானோ அவன் ஆயுராரோக்கிய ஐச்சுவரியத்தை யடைந்து, விஷ்ணுலோகம் சேர்வான் என்றார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
௬-வது அத்தியாயம் முற்றிற்று.

## ஏழாம் அத்தியாயம்.

### சுந்தோபசுந்த விருத்தாந்தம்.

பின்னும் அரிச்சந்திரன் அகஸ்திய முனிவரைநோக்கி, "ஸமஸ்த தருமங்களையு மறிந்த ஓ! முனிச்சிரேஷ்டரே! அந்தக் காவேரி மகாநதியில் ஸ்நானஞ் செய்யும் முறை எப்படி? எந்தக்காலத்தில் கமலாக்ஷனை ஸ்ரீஹரியைப்பூஜிப்பது; எந்தப்புஷ்பங்களைக்கொண்டு அக்கடவுளை அர்ச்சிக்கின்றது. இவைகளை யடியேனுக்கு விஸ்தாரமா யுரைக்கவேண்டும்.,, எனவே அகஸ்தியரும் திருவுளமுகந்து கூறலாயினார்.

வாரீர் அரிச்சந்திரமகாராஜனே! முன்ஜன்மத்தில் அதிக புண்ணியஞ் செய்திருப்பவர்கள் தான் இந்தக்காவேரி மகத்துவத்தைக் கேட்கும் பாக்கியத்தைப் பெறுவார்கள். நீ மகாபுண்ணிய புருஷனாகையால் இந்தத்துலாகாவேரி மகிமையை இன்னும் சொல்லுகின்றேன், பூர்வத்தில் அர்ச்சுனன் தனது நான்கு சகோதரர்களுடன் சேர்ந்து திரௌபதியை விவாகஞ்செய்துகொண்டு சுகமாயிருக்கையில்

யில் அவன் ஒருக்கால் தீர்த்தயாத்திரை போவதாய்த் தனது சகோ
தரர்களிடம் விடைபெற்றுச் சென்றான், அவன் சிலகாரணங்க
ளாலே காவேரி தீரத்தையடைந்து, வைகாசிமாஸத்தில் அங்கு
மௌனவிரதத்துடன் ஸ்நானஞ்செய்து அங்கிருந்த பௌராணிக
ரிடத்தில் காவேரிமகத்துவம் சிரவணம்பண்ணி அவர்களை வேண்
டிய ஆடையாபரணாதிகளால் உபசரித்து, ஸ்ரீ ரங்கநாதனையும் ஸே
வித்து, பின்பு துவாரகைக்குப்போய் அங்கு ஸ்ரீ கிருஷ்ணபகவா
னது சகோதரியாகிய ஸுபத்திரையை மணந்து, தனது தேசம்
சென்று துர்யோதனன் முதலிய சத்துருக்களைச் சம்ஹாரஞ்செய்து,
தனது சகோதரர்களுடன் சுகித்திருந்தனன். என்றுரைத்த முனி
வரைநோக்கி, அரிசசந்திரனும், "ஓ ருஷீஸ்வரரே 'அர்ச்சுனன் என்
னகாரணத்திற்காகத் தீர்த்தயாத்திரை செய்தனன்? ஹரியினது தங்
கையாகிய சுபத்திராதேவியை எங்ஙனம் மணம்புரிந்துகொண்
டான்? எங்ஙனம் சத்துருக்களை ஜயித்தனன். இவைகளை யடியேனு
க்கு விஸ்தாரமாயுரைக்கவேண்டும்." என்று பிரார்த்திக்கவே அம
முனிசேகரரும் கூறலாயினர்.

பூர்வத்தில பாஞ்சாலதேயத்தரசன் குமாரத்தியாகிய திரௌ
பதியைப் பாண்டவாகள் ஐவரும் விவாகஞ்செய்து ஒவ்வொருவரும்
அவளிடத்தில் மிக்கமோக முடையவர்களாய் ரமித்துக்கொண்டிருக்
குங்காலையில் ஓர்நாள் தேவருஷியாகிய நாரதர் வந்து அவர்கள் ஒவ்
வொருவரையும் தனித்தனியே அழைத்து இரகசியமாய் உபதே
சித்து மகாஸாத்வியான திரௌபதிக்கும் உபதேசித்ததாவது:

மகாபதிவ்ரதா சிரோன்மணியான ஓ திரௌபதியே! உலகத்
தில் ஸ்திரீகள்தான் புருஷர்களுடைய நாசத்துக்கும் நரகத்திற்கும்
விக்னத்திற்கும் கலகத்திற்கும் மற்றுமு
ள்ள கெடுதிகளுக்கும் காரணமாயிருக்கி
றார்கள். ஸ்திரீகள மேலுக்குச் சிரித்து
உள்ளத்தில் சினந்திருப்பார்கள். அவர்க
ளுடைய இருதயமானது சமுத்திரம்போ
ல் அகாதமாயிருக்கின்றது. சௌசம் ஆ
சாரம் முதலிய நன்னடக்கைகள் கொஞ்
சமேனும் அவர்களிடத்தி லில்லை. அவர்
கள் யமனுக்கும் யமனாவார்கள். கேவலம்
தம்வயிறு தண்டிகளாகவே யிருக்கிறார்
கள். தங்களுக்கு அன்னவஸ்திராதிகளைக்
கொடுத்து மிகவும அன்புடன் போஷிக்
கின்ற கணவனிடத்திற் சற்றேனும் அ
ன்பு பாராட்டார்கள். தங்கணவன் ரோ
கிஷ்டனாகவாவது அல்லது வன்மையாக
வாவது இருப்பானேல் அவனைக்கொஞ்
சமேனும் இலக்ஷியஞ்செய்யாமல், அவனை





பீமன்.



தர்மபுத்திரன்.



அர்ச்சுனன்.



நகுலன்.



சகாதேவன்.



திரௌபதாதேவி.

க்கண்டவாறு நிந்திப்பார்கள். ஸ்திரீகளுக்கு அபவாதத்திலும் நரகத்திலும் பயமில்லை. தமது பிறந்தகத்தின் குலத்தையும் புக்ககத்தின் குலத்தையும் யோசித்துப்பாரார். வெட்கமென்பது இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது. புருஷர்களுக்குக் காமம் ஒரு மடங்கானால் ஸ்திரீகளுக்கு எண்மடங்காயிருக்கின்றது. தங்கள் கணவரிடத்தில் அதிகமாய் ரமித்தால் ஒருவேளை அவர்களுக்குத் தங்களிடத்திலிருக்கின்ற மதிப்புப்போய் விடுமென்ற சங்கையினால் அவர்களோடு கிரீடிக்க அதிகமாய் விரும்புகிறதில்லை. உள்ளத்தில் கிரீடிக்க இஷ்டமிருப்பினும் புருஷர்களிடத்தில் வலுவில் வருகிறதில்லை. சாத்விகளாயிருந்தாலும் ஸ்திரீஜன்ம மெடுத்தவர்களுக்கு இங்ஙனமிருப்பது சுபாவம். விசேஷமாய்க் கலியுகத்தில் இது சாதா

ரணம். கேவலம் பிரஸவினிகளாயிருக்கிற ஸ்திரீகளுக்கே தங்கள் புருஷரிடத்தில் கொடுமை அதிகம். அப்படியிருக்க யுவதிகளுக்கும விதவைகளுக்கும் புத்திரவதிகளுக்கும் கேட்கவேண்டியதென்ன? எந்த ஊரில் மலடிகள், யுவதிகள், விதவைகள் இம்மூவரும் வசிக்கின்றார்களோ அவ்வூரில் கலி வியாதி மிருத்யு ஆகிய இம்மூன்றும் எப்பொழுதும் இடைவிடாமல் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகிலும் உலகத்தில் உன்னைப்போன்ற சில உத்தமிகளுமிருக்கின்றார்கள். அவர்கள் மகாபரிசுத்தர்களாயும் பதி சிச்ருஷையில் நிரந்தர பக்தியுடையவர்களாயும் பிறந்தகுலம் புகுந்தகுல மிரண்டையும் தமது நன்னடக்கையால் மகிமைப்படுத்தித் தங்கள் கணவன் ரோகிஷ்டனானாலும் வறுமையுற்றவனானாலும் பார்வைக்கு விகாரமானவடிவுடையவனாயிருந்தாலும் ஜடனாயிருந்தாலும் மூர்க்கனாயிருந்தாலும் முன்கோபியாயிருந்தாலும் உன்மத்தனாயிருந்தாலும் அவனை ஸ்ரீ ஹரியாகவே நினைத்து, அவன் சொற்படிநடந்து, காலாந்தத்தில் சுவர்க்கலோக மடைகிறார்கள். வாராய் திரௌபதி! நான் உனக்கு இந்நீதிகளை யுபதேசிப்பதற்கென்றே இங்குவந்தேன். ஸ்திரீகளால் புருஷர்களுக்குத் தீங்குவருவதைப்பற்றி உனக்கு யான் இப்பொழுது ஒருகதை சொல்லுகிறேன்கேள்.

முன் ஒருகாலத்தில் ஸுந்தன் உபஸுந்தன் என்று இரண்டு அசுரசிரேஷ்டர்கள் இருந்தார்கள். அந்தச சகோதரர்களிருவரும் ஒருவர்க்கொருவர் வெகு அந்நியோன்னியமா யிருந்தபடியாலும், அவர்கள் மகாபல பராக்கிரமசாலிகளா யிருந்ததினாலும் இந்திராதி தேவர்களையும் மற்றும பலசாதுக்களையும பலவாறு இம்சிக்கத் தொடங்கவே, அவர்கள் எல்லோரும ஒன்றுசேர்ந்து பிரமசபையடைந்து, தமது குறைகளை முறையிட்டுக்கொள்ள பதுமாசனன் மனமிரங்கி அழகிய வஸ்துக்களிலெல்லாம் ஒவ்வொருதிலமளவு எடுத்து ஓர்பெண்ணை சிருட்டித்து, அவளுக்கு திலோத்தமை என்று பெயரிட்டு, அவளைக்கொண்டு இவ்வசுர ரிருவரையும் கொல்வதற்கு ஓர் உபாயஞ்செய்து, அழகிற்சிறந்த திலோத்தமையென்னும்தேவதாசியை அவர்களிடத்திற்குப் போகும்படி அனுப்பினான். அந்தத் திலோத்தமையும் ஸர்வாலங்கார பூஷிதையாய்ப் புன்சிரிப்புடன் வெகு ஒயிலாய்நடந்து, அச்சுந்தோப சுந்தரிருக்கும் யுவனத்திற்குவந்து மந்தார மல்லிகை மாலதிகளைப் பறித்தும், கீதங்களைப் பாடியும், பொற்கொடி ஒல்குவதுபோல ஒயிலாய் அவ்விருவர்முன்

வரவே, அவரில் மூத்தவனான ஸுநந்தன் அவளுடைய ரூபலாவண்ணியத்தைப்பார்த்துக் காமவெறிகொண்டு, மானம் லஜ்ஜையில்லாமல் அருகிலிருந்த தனது தம்பி யொருக்கால் அவளை விரும்புவானென்று நினைத்து, அவன் அங்ஙனம் அவளைக் கருதாமலிருக்கும்படிச் செய்வதற்காக அவளைநோக்கி, "ஓ தம்பி! இதோ உன் மதினி வருகின்றனள். அவளுக்கு நீசெய்யவேண்டிய மரியாதையைச் செய்ய ஆயத்தனாயிரு" என்றனன். இதைக்கேட்ட இளையவனான உபஸுந்தனும் அவளைத் தானடையக்கருதித் தமயனான ஸுநந்தனைநோக்கி, "ஓ அண்ணா! இதோ உமது மருமகள் தமக்குப் பணிவிடைச்செய்வதற்காக வருகின்றனள். தாம் இவளைக்கருதினால் தங்களுக்குப் பாபத்துவம் சம்பவிக்கும்" என்று சொல்லவே சுந்தனும் கோபாவேசங்கொண்டு "ஓ நீசனே! நீ தமையன் மனைவியைக் கைப்பற்றும் மகா பாவியாகிறாய்" என; தம்பி, "ஓ துஷ்டா! தம்பி மனைவியைக் கொள்ள இஷ்டமடையும் சண்டாளனாகின்றாய்" எனக் கேட்ட தமையன் காலருத்திரனைப்போலக் கோபமடைந்து, தம்பியாகிய உபசுந்தனை வச்சிராயுதம்போன்ற தனது கையினால் ஓர் அடி அடிக்கவே, அவனும் தனது கதையை இவன்மேல் பிரயோகிக்கவே, இருவரும் மாண்டார்கள். இதைக்கண்ட திலோத்தமையும் தான்வந்தகாரியம் பலித்ததென்று மந்தஹாஸ வதனாரவிந்தையாய் வெகு மனமகிழ்ச்சியுடன் சுவர்க்கலோகஞ் சென்றனள். இவ்வாறு ஸ்திரீகள் புருஷர்களுடைய நாசத்துக்கென்றே உலகத்திற் பிறந்திருக்கிறார்கள்.

ஆகையால், "ஓ திரௌபதி! நீ வெகுகுணசீலையாக்கும். மகா பரிசுத்தர்களான நினது பர்த்தாக்களுக்கு எப்பொழுதும் பணிவிடை செய்துகொண்டிரு. அங்ஙனம் இருப்பாயேயானால் நீ இவ்வுலகத்தில் நல்ல போகங்களை யனுபவிப்பதுமன்றி மறு ஜன்மத்திலும் மேலானபதவியைப் பெறுவாய். என்றிங்ஙனம் நாரதர் அவளுக்கு நன்னெறியை உபதேசித்துப் பாண்டவர் ஐவரையும்நோக்கி, 'ஓ தருமபுத்திராதிகளே! நீங்களும் ஒருவர்க்கொருவர் வெகுநட்புடன் கிரகஸ்தர்களுக்குரிய தருமங்களைநடத்தி, ஸாதுக்களிடத்திலும் ஸ்ரீ ஹரியினிடத்திலும்பக்தியுடையவர்களாய், க்ஷத்திரியமுறை தவறாமல் திரௌபதியுடன்கூடி வாழக்கடவீர்கள். மேலும் சகலவித தருமங்களிலுஞ்சிறந்தது துலாகாவேரிஸ்நானந்தான். ஆதலால் நீங்கள் உங்கள் கைகால்முதலிய அவயவங்களின் சக்தி குன்றாமலிருக்கையிலேயே அர்த்தக்காவேரி மகாநதியில்சென்று, அதிலி [illegible]

த்திகை மாசி சித்திரைமுதலிய மாதங்களில் ஸ்நாநஞ்செய்யவேண்டும். அப்படிச்செய்தால் உங்களுடைய சகல பாவங்களும்போய்விடும். என்று இவ்வாறு உரைத்த நாரதமகாருஷியைத் தருமபுத்திரரும் பலவாறு பூஜித்து அகமகிழ்ச்சியுடன் மீண்டும் அவரை நோக்கி வினவுகின்றார்.

"சுவாமீ தேவரீர் இப்பொழுது திருவாய்மலர்ந்தருளிய துலாகாவேரியின் வைபவத்தைக்கேட்டு அடியேனுக்கு அதிக ஆநந்தமுண்டாயிற்று. ஆகிலும் காவேரியில் துலாஸ்நாநம் செய்வதிலும் விசேஷமாய் எந்தெந்ததினங்களில் ஸ்நாநம் செய்யவேண்டும்? அப்படி ஸ்நாநஞ் செய்யும் கிரமம் எங்ஙனம்? அதற்குதேவதையார்? இவைகளையெல்லாம் ஸவிஸ்தாரமாய்க் கூறவேண்டும் என்று பிரார்த்தித்த தருமபுத்திரரை நோக்கி நாரதமகாருஷியும் சொல்வாராயினர். "கேளும் தருமநந்தன! காவேரியில் மந்திர சங்கல்ப நியமங்கள் ஒன்றுமேயின்றி கேவலமாத்திரம் ஸ்நாநம் செய்கின்றவர்களே தமது ஏழு ஜன்மங்களின் பாபங்களைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். எவர்கள் அந்தக்கரண சுத்தியுடன் ஸ்நாநம் செய்கின்றார்களோ அவர்கள் தமதுகோடி குலங்களை உத்தாரணஞ்செய்கின்றார்கள். ஆகையால் இஹபரசுகங்களை விரும்புகிற ஒவ்வொரு பிராணியும் காவேரியில் துலாமாதத்தில் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் ஒருமுறையாகிலும் ஸ்நாநம்செய்து, மல்லிகை தாமரை மற்றும் அந்தக்காலத்திற்குரிய புஷ்பங்களால் ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பூஜித்து பாயசான்னத்தை நிவேதனம் செய்யக்கடவன். எவனொருவன் சிரவணத்துவாதசியில் ஸ்ரீஹரிக்குப் பாயஸங் கண்டருளப்பண்ணி அதைப்பக்தியுடன் பிராம்மணர்களுக்கு அளித்து, அவர்களைப் புஜிப்பிக்கின்றானோ அவன் சக்கரவர்த்தியாவான். ஒருவன் இக்குருக்ஷேத்திரத்தில் பன்னிரண்டு ஸம்வத்ஸரம்வரையில் பரிசுத்தர்களான பிராமணர்களுக்குப் போஜனங் கொடுத்தால், அவன் யாது பலனைப் பெறுவானோ அதேபலனைத் துவாதசியில் பாயஸதானம் செய்வானேயாகில் சந்தேகமின்றி யடைகின்றனன். புத்திரனில்லாத ஒரு ஸ்திரீயானவள் துவாதசியில் பகவானுக்கு நிவேதித்த பாயஸத்தைப் பக்தியுடன் உண்பாளேயானால், அவள் சத்புத்திரனைப்பெற்றுத் தீர்க்க ஸுமங்கலியாய் வாழ்ந்திருப்பாள். விதவையானஸ்திரீ இங்ஙனஞ் செய்யின் அவள் நல்ல ஞானமடைந்து, மோக்ஷத்தை யடைவாள். அமாவாசை மாதப்பிறப்பு மகாலயம் முதலிய

கிரகணம் இவைகளில் சிராத்தஞ் செய்வதற்குச் சக்தியற்றவனாயிருந்தாலும், அல்லது தகுந்த பிராமணர்கள் கிடைக்காத பக்ஷத்திலும், அல்லது தான் அயல்தேசத்தில் தனியாயிருக்குங் காலத்திலும், அல்லது சூதகம் முதலிய தடைகள் சம்பவித்தகாலத்திலும், ஆமச்சிராத்தம் செய்யவேண்டியது. சூத்திரர்களாயிருந்தால் அவர்கள் எக்காலத்திலும் ஆமரூபமான சிராத்தமே செய்யவேண்டுமேயல்லது அன்னரூபமான சிராத்தஞ் செய்யலாகாது. பத்துமணங்கு அல்லது ஐந்துமணங்கு அரிசியும், அல்லது இரண்டுபணமும், அல்லது ஒருபணமும், அதற்கு ஏற்பட்டிருக்கின்றது. எளியவனானாலும் அல்லது நோயாளியானாலும் சரி. எவனொருவன் சுவர்க்கத்தை விரும்புகின்றானோ அவன் மற்ற எவ்விததருமங்களைப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், மகாலயம் அமாவாசை சங்கிராந்தி இந்த தினங்களில் அவசியம் சிராத்தஞ் செய்யக்கடவன். அப்படிச்செய்வதற்குக்கூட அசக்தனாயிருப்பவன் துலாமாஸத்திய துவாதசியிலாவது, பன்னிரண்டு அல்லது ஆறுபிராமணர்களுக்குப் பாயஸமளித்து அவர்களைப் புஜிப்பித்தானேயாகில், அதினால் அவன் சகலதருமங்களின் பலனையும் பெறுகின்றனன். ஒருவன் வைகாசிமாதத்தில் தத்யோதந்தானஞ் செய்வதினாலும், மாசிமாதத்தில் வஸ்திரதானஞ் செய்வதினாலும், கார்த்திகை மாதத்தில் குடைதானஞ் செய்வதுடன் ஸ்ரீஹரிக்குத் தீபாராதனஞ் செய்வதினாலும், தனுர்மாதமென்னும் மார்கழிமாதத்தில் விடியற்காலத்தில் சுவாமிக்கு பொங்கல்முது கண்டருளப் பண்ணுவதினாலும், சித்திரைமாதத்தில பானகதானஞ் செய்வதினாலும், பித்ருக்கள் நித்ய திருப்தியடைகிறார்கள். லுப்தனானாலும் நாஸ்திகனானாலும் குஷ்டரோகியானாலும் வறியவனானாலும் தனது சங்கடங்கள் முற்றும் விடப்பெறுவான். கடன்படாதவனாகவும் ஆகிறான். கங்கை யமுனை ரேவை கௌதமி முதலிய புண்ணிய நதிகளும், ஸேது கங்காசங்கமம் முதலிய புண்ணியதீர்த்தங்களும், ஹிரண்வதீ துவாரகை அயோத்தி பதரிகாச்சிரமம் நைமிசாரண்ணியம் புஷ்கரம் மதுரை கோகர்ணம் குருக்ஷேத்திரம் முதலிய புண்ணியக்ஷேத்திரங்களும், துலாகாவேரியில் ஒருதடவை ஸ்நானஞ்செய்வதாலுண்டாகும் பலனைக்கூட அளிக்கமாட்டா. துலாகாவேரி ஸ்நானமாடினான் சிரமமில்லாது முக்தியடைவான். இம்மாதத்தில் நீராடி அரங்கேசனை வணங்கினோர் வைபவங்களை ஸ்ரீஹரியே கூறவல்லவர். காவேரியானவள் தனது அலைகளாகிய கைகளைத் தூக்கி "ஏடா! பாவிகளே! நீங்கள் [illegible] மகாபாவிகளாயிருக்கி

றோமே, நமது பாவங்களையெங்ஙனம் போக்கடித்துக்கொள்ளப் போகிறோம்? அநியாயமாய் நரகமென்னும் படுகுழியில் விழப்போகின்றோமே, என்று இங்ஙனம் சிந்தித்துப் பயப்படாதீர்கள், இதோ! என்னுடைய பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யுங்கள், யான் உங்களை உத்தாரணம் செய்கின்றேன்.,, என்று ஸதா கர்ச்சித்துக் கொண்டிருக்கின்றனள், சுருங்கசசொல்லில் காவேரிஜலம் மேலேவிழப்பெற்ற கேவலம் ஒரு திரயக் ஜந்துகூட முக்தியடைகின்ற போது பக்திசிரத்தையுடன் ஸ்நாநம்செய்பவர் முக்தியடைவது ஆச்சரியமோ? முற்காலத்தில் ஓர் பன்றியானது தன்பேரில் காவேரிஜலத்தின் ஒருதிவலை விழுந்தமாத்திரத்தில் சுவர்க்கமடைந்தது. என்றதைக்கேட்ட தருமபுத்திரரும் நாரதமுனிவரைநோக்கி வினவுவாராயினர்.

“சுவாமி அந்தப்பன்றி யாது? எவ்விடத்தில் எங்ஙனம் காவேரி ஜலம மேலே படப்பெற்று சுவர்க்கமடைந்தது? இதனையடியேனுக்கு ஸவிஸ்தாரமாய்க்கூறவேண்டும்.,, எனவே நாரதரும் சொல்வாராயினர். முற்காலத்தில பாஹ்லீகமென்னும் தேசத்தில் ஸதா வேதகோஷத்தினால் நிறைந்த பருகான்னியமென்ற ஓர் அக்கிரஹாரமிருந்தது. அதில் சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் முதலியவைகளில் நிகரற்றவனும், அவைகளைப் பலருக்கு ஓதிவைக்கின்றவனும், ஆஸ்வலாயனகோத்திரத்திற் பிறந்தவனுமான பிரம்ம சர்மாவென்ற ஓர்பிராமணன் இருந்தான். அவன் வேளாண்மைத் தொழிலில் அதிக தேர்ச்சியுடையவனாதலால் ஆறுயிரம் பொன்னுக்கு யஜமானனாய் விட்டனன். பின்னும் பிராமணர்கள் விற்கத்தகாத தயிர் பால் வஸ்திரம் முதலியவைகளை விற்றுத் திரவியங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டுவந்தனன். அவன் எப்பொழுதும் பராந்ந போஜனம் செய்துவந்தானே யல்லது, ஒருநாளாகிலும் தனது வீட்டில் சாப்பிட்டறியான். சோதிடமோ அவனுக்கு நன்றாய்த்தெரியும். மேலும் அவன் கிராமங்களில் பற்பலயாகங்களைச் செய்வித்தவன். இவ்வளவு யோக்கியதையிருந்தும் அவன் ஒருநாளும் ஸ்நான சந்தியாவந்தனாக்கினிஹோத்திரங்களைச் செய்ததில்லை. அவன் எப்பொழுதும் கையில்தர்ப்பை சமித்து பவித்திரம் கூர்ச்சம் முதலியவை வைத்துக்கொண்டு ஊரில் சிராத்தம் நடக்கின்றது? எங்கே தனக்கு தக்ஷிணை கிடைக்கும்? என்று ஸதா சிராத்தபோஜனப் பிரியனாய் ஊரூராய் அலைந்து திரிந்தான். அவன் சொத்துக்,

முதலிய வைதிக கிருத்தியங்களைப் பண்ணிவைக்கத் தெரிந்தவனா யிருந்தமையால், ஊரார் பலரும் அவனையே எப்பொழுதும் பிரார்த் தித்து நிமந்திரணத்துக்கு ஏற்படுத்தி வந்தார்கள். அப்படி ஊரில் எவராவது தன்னை அழைக்காவிட்டால் அப்பொழுது தானே வலு வில் அவர்வீட்டுக்குச்சென்று நான்தான் ஒருவனைப் விட்டேன். மற்ற இரண்டுபேருக்கு யாரை அழைத்திருக்கிறீர்கள்? என்று வெகு சுவாதந்திரியம் பாராட்டி, அவர்வீட்டில் உண்பான். தான் சுருதிஸ்மிருதிகளின் பொருளை யுணர்ந்தவனா யிருந்தபோதிலும் தான்செய்த அபசாரிதங்களுக்காகப் பிராயச்சித்தங்கூடச் செய்கிற தில்லை. கேவலம் பொருளாசையுடையவனாய் எங்கே சிராத்தம் நடக் கின்றது.' யார் தக்ஷிணை கொடுக்கின்றார்கள், என்று ஊரூராய் அலை ந்து திரிவானே யல்லது ஒருநிமிஷமாகிலும் தன்வீட்டில் வசியான். அப்படி எப்போதாவது ஒருநாள் வீட்டில் சாப்பிட்டானே யானால் அப்பொழுது அவன் தன்குழந்தைகளுக்கு நல்ல சாப்பாடுபோடா மல் அவர்களைக்கண்டவாறு வைது தான்மட்டும் சம்பிரமமாய்ச் சாப் பிடுவான். அவனுக்கு ஸுசீலை என்று ஒருபத்தினி இருந்தாள். அவளோ மகாபதிவிருதை. அவள் எப்பொழுதும் தன் கணவனுக் குப் பணிவிடை செய்துகொண்டு அவன் ஊரில் இல்லாதகாலங்க ளில் மிதாஹாரபோஜனம் செய்துகொண்டு, அவன் தன்னை எத்தகை ய கடுஞ்சொற்களால் வைதபோதிலும் தான் அவன்மீது கோபிக்கா மல் அவனிடத்தில் பக்திச் சிரத்தையுடனிருந்தது மல்லாமல் அவ னது அடிக்குப்பயந்து தானும் பொருள் சேர்க்கக்கூடிய உபாயங் களைச் செய்துவந்தாள். இப்படி இருக்கையில் அவள் ஒருநாள் தன்கணவனைநோக்கிக் கூறுவாள்.

"பிராணநாயகரே! இந்தத்தேகம் நீர்க்குமிழிபோல் நிலையற் றது. பிராணிகளுக்கு இன்றைக்கோ அல்லது நாளைக்கோ மரண முண்டென்பது நிசயம். ஆகையால் தேகம் தளர்ச்சியடையுமுன் தருமம் புரிந்தால் நல்லுலகை யடையலாம். இல்லாவிட்டால் கோர மான நரகவாதனையை அனுபவிக்கவேண்டுமே. நாம் இப்பொழுது அநேக பாபகரமான செய்கைகளைப் புரிந்துசேர்த்து வைத்திருக் கின்ற பொருளால் நமக்குக் கிஞ்சித்தேனும் பிரயோஜனமுண்டோ? இவ்வளவு திரவியங்களையும் திருடரோ அல்லது அரசனோ அல்லது

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.






பந்துக்களோ கைப்பற்றிவிடுவார்கள். அப்பொழுது மனதுக்கு ஓர்கிலேசமுண்டாகுமே தவிர வேறில்லை. பாபத்துக்கு ஏதுவான பரான்னத்தையே தாம் ஏன் புஜிக்கவேண்டும்? தன் கணவனுக்கு அப்பிரியமாய் நடக்கின்ற ஸ்திரீயும் பிக்ஷையெடுத்து உண்ணாத சன்னியாசியும் பிராமணபக்தியில்லாத அரசனும், அக்கினிஹோத்திரமில்லாத கிரஹஸ்தனும் ஆகிய இந்நான்குபேரும் நசித்துப் போவார்கள். என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா? ஆகையால் தாங்கள் இனிமேல் ஔபாஸநம் அக்கினிஹோத்திரம் முதலிய அநுஷ்டானங்களைச் செய்துகொண்டு பரான்னபோஜனம் செய்யாமல நம் இல்லத்திலேயே ஸதா புஜித்துக்கொண்டிருக்க வேண்டியதுந் தவிரத் தாங்கள் இக்குழந்தைகள்பேரில் ஒரு நாளும் அன்புபாராட்டாமல் வீட்டில் கால்வைத்த போதெல்லாம் அவர்களை வைதுக்கொண்டிருப்பதினால் அவர்கள் கேவலம் தகப்பனற்ற குழந்தைகள் போலிருக்கிறார்கள். தாங்கள் வீட்டிலிராமல் எப்போதும் தேசந்தேசமாய் அலைந்துகொண்டிருப்பதினால் நான் சுமங்கலியாயிருந்தும் அமங்கலிபோல் இல்லற சுகமற்றவளாயிருக்கிறேன். கிரஹஸ்த தருமந்தான் மற்ற ஆச்சிரமங்களைவிடச் சிறந்தது என்று சொல்லப்படுகின்றது. உமக்குப் பெண்சாதியாகிய யான் எதுவரையில் அனுகூலையாயிருக்கின்றேனோ அதுவரையில் தான் உமது கிரகத்தில் இலக்ஷுமி வாசஞ்செய்வாள். பெண்சாதி பிரதிகூலையாயிருந்தால் இலக்ஷுமி அவள் புருஷனைவிட்டு விலகிப்போய் விடுவாள். இப்பொழுது நமதுபுத்திரர்களோ வேதசாஸ்திரங்களை யோதாமல் ஆசாரசூன்னியர்களாய்க் கேவலம் சூத்

திரர்கள்போல் இருக்கின்றார்களே, அவர்களைச் சன்மார்க்கத்தில் நடக்கும்படிச் செய்யவேண்டாமா? இந்தவீடு இந்தபுத்திரர்கள் இம் மனைவியாகிய நான் இந்தத் திரவியங்களெல்லாம் நீர் இறந்துபோன வுடன் உம்முடன்கூட வரமாட்டாவே, தருமம் ஒன்றுதான் உம்மோ டுகூட வருகின்ற சினேகிதனாகும். ஆகையால் தர்மமொன்றையே சதமென்றெண்ணி, மற்றவைகளில் பற்றற்று இருக்கவேண்டும். எங்ஙனம் யாத்திரைக்காரர்கள் தங்கள் வீட்டைவிட்டுப் புறப்படு கையில கட்டமுதுகட்டிக்கொண்டு செல்கிறார்களோ அவ்வாறே நீர் பரலோக யாத்திரைக்கு வேண்டிய கட்டமுதாகிய புண்ணியத்தைச் சமபாதிக்கவேண்டும். யமலோகயாத்திரை செய்கையில் கட்டமுது வேண்டியதற்காக நீர்பிராமணர்களுக்கு அன்னதானஞ் செய்யவே ண்டும். துலாமாதத்தில் காவேரி ஸ்நாநஞ்செய்யும். இந்தப்பதினான் குலோகங்களிலுமுள்ள அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் கேசவ னுடைய ஆஞ்ஞையால் துலாகாவேரியில் வந்துசேருகின்றன. விசே ஷமாய்க் கர்மபூமியாகிய இந்தப் பாரதவருஷத்தில் இருப்பவர்களு க்குக் காவேரி ஸ்நாநந்தான் சகலஸித்திகளையும் உண்டுபண்ணத் தக்கதாயிருக்கிறது. ஆகையால் அதில் ஸ்நாநஞ்செய்யும். என்று இங்ஙனஞ்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றாள்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில்

எ-வது அத்தியாயம முற்றிற்று.

---

எட்டாவது அத்தியாயம்.

## சுசீலை தனதுகணவனுக்குக் காவேரிமகத்துவத்தை வெளியிட்டது.

—:*:—

சுசீலை மீண்டும் தனதுகணவனுக்கு உரைத்ததாவது:—காவே ரிதீரத்தில்வந்து ஜனிக்கும் சிறப்பையுற்றவர்களும், அம்மகாநதியி னது ஜலத்தில் ஸ்நாநஞ்செய்தவர்களும், அந்நதியினது குளிர்ந்த காற்று மேலேபடப்பெற்றவர்களும், ஸ்ரீஹரியினது திவ்யபாதார விந்தத்தை யடைகின்றார்கள். ஆதலின் அந்நதியில் ஸ்நாநஞ்செய்வீ ரேல், சகல அபீஷ்டஸித்திகளுமுண்டாகும். இப்பொழுது யானு ரைப்பதுதான் சகல தர்மங்களினுடைய ஸாரம். இதனைக்கேளும்.

தனம் கிருகம் அன்னம் முதலிவற்றைக் குடும்பியான ஓரந்தணனுக்குக்கொடும். தேஹியென்று ஒருவன்வருந்தி உம்மிடம்வந்தால், அவன் சத்பாத்திரமாயிருக்கும்பட்சத்தில் உமதுதேகத்தைக்கூட அவனுக்குக் கொடுத்துவிடும். ஒருவனுக்குச் சுசீலையான ஓர்பெண் சாதி கிடைப்பது அவன் ஜன்மாந்திரத்தில்செய்த சுகிருதவிசேஷமேயல்லது வேறில்லை. யாவனொருவன் தன்னிடத்தில் அன்னம் கொடுமென்று வருகின்றவனுக்கு இல்லையில்லை என்று சொல்லுகின்றானோ அவனுக்குத் தேவர்கள் அவ்வளவுக்கவ்வளவு துக்கஞ்செய்வார்கள்; என்று சொல்லுகின்றார்கள். ஏதோ நீர் பூர்வஜன்மத்தில் செய்த புண்ணியத்தினாலும், யான் பூர்வஜனனத்தில் சேர்த்துவைத்திருந்த சுகிருதங்களினாலும, யானுமக்கு அனுகூலையாகவிருக்கின்றேன். ஆதலின் நீர் உமதிஷ்டப்படி தர்மகிருத்தியங்களைப் புரியலாம். இவ்வுலகத்தில் எவன் எவனுக்குபந்து? எவன் எவனுக்கு இரக்ஷகன்? எவன் எவனுக்கு மரணகாலத்தில் நண்பன்? தர்மமொன்றுதான் ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் எப்பொழுதும் விட்டுப்பிரியாது பாதுகாக்கக்கூடிய நண்பன். நீர்செய்த பாவத்தின்பலனை நீரே அனுபவிக்கவேண்டுமேயொழிய, யான் அனுபவிக்கப்போகிறதில்லை. ஆதலால் கண் கால் முதலிய உறுப்புக்களும் புலன்களும் பலங்குன்றாமலிருக்கும்பொழுதே தர்மங்களைச்செய்யும். அங்ஙனம் இப்பொழுது ஓர் பிராமணனுக்குக் கிஞ்சித்தேனும் அளிக்காமல் இருப்பீரேயானால், பின்னர் உமக்கு வறுமைநேரிடும். என்று இங்ஙனம் தன்கணவனுடைய நன்மையைவிரும்பி, அவனுக்குப் பலவாறு நற்புத்திபுகட்டின சுசீலையை நோக்கி, அவளது கணவனும் "ஓ! பிராணநாயகி! இப்பொழுது நீ புகன்றவையாவும் என் மனதிற்பட்டன. இதுகாறும் ஏதோ எனது மூடத்தனத்தினால் தருமங்களைப் புரியாமல் காலத்தை வீணாகக் கழித்துவிட்டேன். இனி யான் தருமங்களைப் புரிகின்றேன். அதினால் எனக்கு நரகவாதனைநேரிடாது. யான் இதுவரையில் அக்கினிஹோத்திரம் வைஶ்வதேவம் சிவபூசை விஷ்ணுபூசை, ஹரிகதாச்சிரவணம் துலாகாவேரிஸ்நாநம் அதிதிகளுக்கு அன்னமிடல் இவை யாதொன்றேனும் புரியாமல், கேவலம் விடனாகவும் சிற்றின்பப் பிரியனாகவுமிருந்தேன் என்பது வாஸ்தவமே. ஆகிலும் இப்பொழுது யான் எவ்விததருமத்தைப்புரிய வேண்டுமோ அதனை நீ எனக்கு ஒரே உறுதிமொழியாய்ச் சொல்வாயேயானால் யான் அங்ஙனம் தடையின்றிப் புரிகின்றேன்!" என்று அவளை மிகவும்வருந்தி வினவினன்.

அப்பொழுது சுசீலை யுரைத்ததாவது; "ஓ! நாதா! நீர் பிரதிதினமும் காலையிலெழுந்திருந்து ஸ்நாநஞ் சந்தியாவந்தனம், பஞ்சமஹாயக்கியங்கள், இஷ்டாபூர்த்தம்முதலிய சத்கருமங்களைப்புரியும் அஸ்வத்தம் என்கின்ற விருக்ஷத்தைவைத்துப் பயிர்செய்து அத்தருவைப் பக்தியுடன் ஆராதிக்கக்கடவீர். எவர்கள் இங்ஙனம் இரண்டு அல்லது ஒரு அரசமரத்தைதைவைத்து விருத்திசெய்விக்கின்றார்களோ அவர்கள் சகல பாக்கியங்களையும் பெறுவார்கள். யாவனொருவன் அஸ்வத்த விருக்ஷத்தை ஏழுபிரதக்ஷிணஞ் செய்கின்றானோ அவன் ஸப்தசமுத்திரங்களாலும் ஸப்தகுல பருவதங்களாலும் மற்றும் பலவனங்களாலும் சூழப்பட்ட இப்புவனமனைத்தையும் பிரதக்ஷிணஞ்செய்தவனாவான். திரிமூர்த்திகளின் ஸ்வரூபமான அஸ்வத்த விருக்ஷத்தை எவன் நமஸ்கரிக்கிறானோ அவன் முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் திரிமூர்த்திகளையே வந்தனஞ் செய்தவனாவான். எவன் அஸ்வத்த விருக்ஷத்தைக் கந்தபுஷ்ப தூபதீப நைவேத்தியங்களால் அர்ச்சிக்கின்றானோ அவன் மகாபாக்கிய சாலியாவான். ஆகிலும் மத்தியானத்திலும், சாயங்காலத்திலும், இராத்திரியிலும், செவ்வாய்க்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் அச்வத்தஸேவனம், பண்ணக்கூடாது. இன்னும் இதனைப்பற்றிப் பௌராணிகர்களிடத்திலிருந்து யான் ரகசியமாய்க் கேட்டதைச்சொல்லுகிறேன் கேளும். எந்த மறையோன் சிராத்தகாலங்களிலும் சனிக்கிழமையிலும் பரிசுத்தனாயிருந்து, அத்தருவுக்குப் பிரதக்ஷிண நமஸ்காரங்களைப்புரிந்து, புருஷஸூக்தம பித்ருஸூக்தம் முதலிய மந்திரங்களை ஜபித்துக்கொண்டு தனது பித்ரு தேவதைகளை ஸ்மரித்துக்கொண்டு சுத்தமானஜலத்தையெடுத்து அம்மரத்தைச் சுற்றிலும் ஊற்றுகின்றானோ அவன் கயாச்சிராத்தம் செய்தவன் பலத்தையடைந்து, பித்ருக்களுக்குத் தான்பட்டிருக்குங் கடனையும் தீர்த்துக்கொள்வான். காலையில் அதனை ஆலிங்கனஞ் செய்துகொள்பவன் வியாதி மிருத்யுபயம் இன்றியிருப்பான். எவன் ஞாயிற்றுக்கிழமைதினம் அதற்கு அபிஷேகஞ் செய்கின்றானோ அவனுக்குக் கண்ணோயினது உபத்திரவம் நீங்கும். திங்கட்கிழமை புதன்கிழமைகளில் அபிஷேகஞ் செய்விப்பவன் கிரகபாதைகளினின்றும் நீங்குவான். குருவாரத்தில் அபிஷேகஞ்செய்விப்பவன் நல்லபெண்ணைப் பெறுவான். ([illegible]) என்றதைச்சொல்லி ஆலிங்கனஞ்செய்து கொள்ள வேண்டும். எந்தசிவபக்தன் இங்ஙனஞ்செய்து ஸதாசிவசிவவென்று

உச்சரித்துக்கொண்டு இருக்கின்றேனே அவன் சகலாபீஷ்டங்களையும் அடைவான்" என்று உரைத்தனள். பின்னர் பிரமசர்ம்மாவென்ற பிராமணனும் இங்ஙனம் தனது மனைவியாகிய சுசீலைபுகட்டின த் புத்தியால் ஞானம்பிறந்து, தான் அதிகவயது சென்றவனாயிருந்த போதிலும் ஸ்நான சந்தியாவந்தன முதலிய சத்கருமங்களைப்புரிந்து வந்ததுந்தவிர, தனது பெண்சாதியினது சொற்படியே இரண்டு அச்வத்த விருக்ஷத்தை வைத்து வளர்த்து, அதைச்சுற்றிலும் சுவர்ணம்போல் பளபளப்பான மேடையைக்கட்டி, அம்மேடையில் விசித்திரமான கோலங்களைத்தீட்டி அலங்கரித்து, அம்மரத்தைப் பிரதிதினமுஞ்சேவித்து, அபிஷேகஞ் செய்துகொண்டு வந்தனன். பதிவிருதைகளுக்குள் உத்தமியான அவனதுபெண்சாதியும் மகாபரிசுத்தையாய் எப்பொழுதும் தனதுபதிக்கு ஹிதத்தைக் கருதினவளாய் இந்திரன் விஷயத்தில் இந்திராணிபோல ஸதா அவனுக்கு சிச்ருஷை செய்துகொண்டு, சகலவித சத்காரியங்களிலும் ஜாக்கிரதையாயிருந்தனள். மேலும், தனது கணவன் எப்பொழுதேனும் தன்பேரில் கோபமுற்றிருந்தால், தான் புன்சிரிப்புடன்கூடிய முகத்தையுடையவளாகவும், அவன் ஒருக்கால் தன்னைவெருட்டி யதட்டினால் பயந்து நடுநடுங்கியும், அவன் சந்தோஷமா யிருக்குங்காலங்களிலும் தானுமவன்பக்கத்தில் இருந்து சந்தோஷித்தும், அவன் போஜனஞ்செய்தபிறகு சேஷஅன்னத்தைப் புசித்தும், இராத்திரி அவன் நித்திரையுற்றபிறகே நித்திரைசெய்தும், காலையில் அவன் எழுந்திருப்பதற்குமுந்தியே எழுந்து, அவனை ஹரிபோல் பாவித்து நமஸ்கரித்தும், அவனுக்கு ஆயுராரோக்கிய முண்டாகும்பொருட்டுத் தான் பிரதிதினமும் சூரியனைத்தொழுதும், தேவாலயம் மடாலயமுதலிய விடங்களிற்சென்று, சத்கதைகளைக்கேட்டும், தன்னுடைய மங்கலசூத்திரமானது நெடியகால மிருக்கவேண்டுமென்று பெரியோர்களைப் பிரார்த்தித்தும்வந்தனள். கௌண்டின்னிய கோத்திரத்திற்பிறந்த அப்பெண் இவையேதவிர, துலாமாஸம் கார்த்திகைமாஸம் மாசிமாஸம் சித்திரைமாஸம் இவைகளில் காவேரிஸ்நானம்புரிந்தும், தன்கணவனுக்குப் பிரியமான போஜனபதார்த்தங்களையும் பக்ஷியங்களையுஞ் செய்து, அவற்றைத் தனதுகைகளால் அவனுக்குப்பரிமாறி, அவனை யதேஷ்டமாய் உண்ணும்படிப் பிரார்த்தித்து உண்பித்தும், அவனுக்குத் திருப்தியுண்டாகும்படி பல இனிமைகளைச் செய்தும், இராத்திரி அவன் உறங்குமளவும் அவனுக்குக் கைகால் பிடித்தும்

முதலிய கைங்கரியங்களைச்செய்தும், அவன் உறங்கினபிறகு, தான் ஏதேனும் சத்தஞ்செய்தால் தனது கணவனுடைய நித்திரைக்குப் பங்கம் வந்துவிடுமென்று அஞ்சி, மௌனமாய் அவன் காற்கடையில் படுத்துறங்கியும், வைகறையில் அவன் எழுந்திருப்பதற்கு முன்பே எழுந்திருந்து தனது கிருகத்தைச் சுத்திசெய்தும், இத்தகைய நல்லொழுக்கத்தில் ஒழுகிவந்தாள். அவள் தனது புருடனைப் போலவே தானும் அவனுடைய நெடிய வாழ்நாளைக்கருதிப் பிரதிதினம் பிராதஸ்நாநஞ்செய்து வருவாள். அவள் மாதவிடாயான மூன்று தினங்களிலும தனது கிருகததின் ஓர் மூலையில் இருநது பசியால் வருந்தின போதிலும், அன்னாகாரமில்லாமல் கொஞ்சம் ஜலத்தை மாத்திரம் பானஞ்செய்து, உபவாஸமாயிருந்து, ஸ்நாநதினத்தில் பரிசுத்தையாய மஞ்சள் குங்குமங்களை யணிந்து நல்ல வஸ்திரமுடுத்தி, பரபுருஷரை மனதிலும நினையாமல் எப்பொழுதும் குனிந்ததலை நிமிராமல் தனது காற்பெரு விரலைப் பார்ததுக்கொண்டு தனது புருஷனைச் சாக்ஷாத் சிவபெருமான் என்று தியானித்து, அவனது பாதத்தில் வீழ்ந்து பணிநது துதிசெய்வாள். அவள் மத்தியான்ன காலத்தில் வநத அதிதிகளுக்கும் பிக்ஷுகர்களுக்கும் அன்னமுதவி சத்கரிப்பாள். தனது கணவனுடைய அனுமதியின் பேரில் தரித்திரர்களுக்குத் திரவியங்களைக்கொடுத்து உபகரிப்பாள். இவள் இங்ஙனம் சத்கருமங்களைச் செய்துகொண்டிருக்கையில் ஓர் நாள் மத்தியான்னத்தில் அதிதிகளையும் பிக்ஷுகர்களையும் போஜனம் செய்விப்பித்துப் பின்னர் தனது புருஷனுக்குப் போஜனம் பரிமாறப்போயினள். அத்தருணத்தில் யமபடர்கள் தென்திசைக் கோமானது உத்திரவின்படி, அந்தப் பிரமசர்மாவென்னும் பிராமணனை யமபுரிக்குக் கொண்டுபோகுமாறு வந்தனர். அவர்கள் வந்து அவன்வீட்டில் நுழைய முயலுகையில் பதிவிரதா சிரோமணியான சுசீலையினது கற்புநிலைமையின் மகத்துவத்தினால் அவர்கள் அவன் அருகே நெருங்கச் சக்தியற்றவர்களாய், மீண்டும் தங்கள் யஜமானனாகிய யமதர்மாாஜனிடம் சென்று முறையிட்டுக் கொள்வாராயினர்

“ஸ்வாமி நாங்கள் தம்முடைய கட்டளைப்படிப் பிரமசர்மாவென்னும் மறையோனைப் பாசத்தால் கட்டியிழுத்துக்கொண்டு வரப் போனோம். ஆயினும் அவனது பெண்சாதி சுசீலையினது பாதிவ்ரத்தியத்தினா லுண்டான தேஜஸ்வினால் தகிக்கப்பட்டிருக்கின்

இலங்தோம். அவனைப் பிடித்துக்கொண்டுவர எங்களுக்குச் சக்தியில்லை." என்றார்கள். உடனே யமதர்மராஜனும் சித்திரகுப்தனை நோக்கி, "ஓ சித்திரகுப்தா இப்பொழுது பிரமசர்மா வென்பவன் பலவித தீச்செயல்களைப் புரிந்ததினால க்ஷீணமான ஆயுளையுடையவனா யிருக்கின்றான். அவனைக்கொண்டுவரும்படி நம்முடைய படர்களையனுப்ப அவர்கள அவனது பெண்சாதியின் கற்பின் மகத்துவத்தினால் கிட்ட நெருங்கவொட்டாமல் துரத்தப்பட்டார்களாம். நல்லது நீ நேரேபோய் விரைவில் அவனை இங்கே அழைத்துக்கொண்டுவா." என்றான். சித்திரகுப்தனும் விரைவில் பிரமசர்மாவின் கிருகத்தை யுற்று, சுசீலையினது கற்புநிலைமைக்கு அஞ்சி, அவள் அருகில் செல்லாமல் அவளது புருஷன் சமீபத்தில் ஒருவருக்கும் தெரியாமல் இருந்து, அவனைக்கொண்டுபோகச்சமயம் பார்த்துக்கொண்டிருந்தனன். இத்தருணத்தில் பிரமசர்மாவானவன் தனது பெண்சாதியைநோக்கி, "ஓ பிரியநாயகி! இன்று இராத்திரி நீ யெனக்கு இன்னகறியமுதைச்செய்து கொடு." என்று தனக்குப் பிரியமான ஓர் கறியமுதைக் குறிப்பிட்டுச் சொன்னான். அருகில் மறைந்துநின்ற சிததிரகுப்தனும் இதனைக்கேட்டுக் கலீர் என்று நகைத்தனன். இவன் நகைத்தசத்தம் சுசீலையினது காதில் விழவே அவளும் இதேது இருந்தாற்போல் இங்கு ஓர்சத்தம் காதிற்படுகின்றது? இவ்விடத்திலோ ஒருவரையும் காணோம். இஃதென்ன விநோதமாயிருக்கிறதென்று தன்னுள் வியப்படைந்து, நாற்புறமும் உய்த்துநோக்கியும் சத்தத்தின் காரணம் தனக்குப் புலப்படாததினால் அவள் உடனே சொன்னதாவது, "யான் கடவுளைப்பக்தியுடன் பூஜித்திருப்பது மெய்யாயிருந்தாலும், யான் பதிவிரதையாயிருப்பது ஸத்தியமாயிருக்கும் பக்ஷத்திலும், யான் சுத்தமான எண்ணமுடையவளாயிருப்பதும உண்மையாயிருந்தால், இப்பொழுது எனது காதில் விழுந்த சத்தத்திற்குக் காரணமானவஸ்து எனக்குக் கட்புலனாகக்கடவது, இவ்வுலகத்தில் எந்தெந்தவஸ்து பார்க்கப்படுகின்றதோ? அல்லது கேட்கப் படுகின்றதோ? அந்தந்த வஸ்துவினுடைய அகத்திலும் புறத்திலும் சாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் வசிக்கிறான் என்ற வசனம் ஸத்யமாயிருப்பின், இச்சத்தத்தின் காரணம் எனக்குப் புலப்படக்கடவது. கணவனே தெய்வம் என்று பெரியோர் உரைசெய்யும் மொழி சத்தியமாயிருந்து, யானும் அங்ஙனம் கணவனையே தெய்வமென்று எண்ணியிருப்பது உண்மையானால், எனக்குச் சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது. யான் காவேரியில் அதி

யாய்த் துலாஸ்நாநஞ்செய்து பெரியோர்களை ஆராதித்தது வாஸ்தவமாயிருப்பின்; எனக்கு அச்சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது. ஸ்ரீமந்நாராயணனே பரப்பிரம்மம் என்றும், நாராயணனே பரத்துவம் என்றும், நாராயணனே பரஞ்சோதி யென்றும், நாராயணனே பரமாத்மாவென்றும், ஓலமிடுகிற வேதவாக்கியம் உண்மையாயிருப்பின் எனக்குச சத்தத்தின் காரணம் புலப்படக்கடவது." என்றிங்ஙனம் சுசீலை கடவுளைப் பிரார்த்தித்த மாத்திரத்தில சித்திரகுப்தன் அவளது பக்திச்சிரத்தைக்கு மெச்சி, உடனே அவளுக்கு ஸௌம்யமான வடிவுடன் பிரத்தியக்ஷமாயினன். இங்ஙனம் கிரீட மகர குண்டல ஹார கேயூர கடக கங்கண முதலிய திவ்யாபரண பூஷிதனாய்ப் புன்சிரிப்போடு கூடியமுகத்துடன் தன்கண்களுக்குத் தோன்றின சித்திரகுப்தனைக்கண்ட சுசீலையும், தன்னுள் இவர் "அக்கினி தேவனோ? அல்லது சூரியபகவானோ? அன்றேல் ஸ்ரீஹரியோ?" என்று பலவாறாகச் சந்தேகித்துப் பின்பு தனது பதிவ்ரத்தியத்தின் மகத்துவத்தினால், அவன் தன்கணவனைக்கவர்ந்து செல்லவந்த சித்திரகுப்தன் என்று உணர்ந்து, உடனே அவனுக்கு நமஸ்காரஞ்செய்தனள். சித்திரகுப்தனும் தன்னை நமஸ்கரித்த சுசீலையை நோக்கி, (தீர்க்கஸுமங்கலீபவ) என்று ஆசிர்வதித்தனன். உடனே சுசீலையும் தன்னுள் அதிகசந்தோஷமுற்று, அவனுக்கு அர்க்கியம் முதலிய உபசாரங்களைசசெய்து, அவனைநோக்கி "ஓ சித்திரகுப்தரே! நீர் இப்பொழுது என்னைநோக்கித் தீர்க்கஸுமங்கலீபவ என்று ஆசிர்வாதம் செய்துவிட்டீர். அங்ஙனமே உமது வாக்குவீண்போகாமல் சத்தியமாயிருக்கும்படிச் செய்யப் பிரார்த்திக்கின்றேன்." என இதனைக்கேட்ட சித்திரகுப்தன் கிஞ்சித்து வெட்கமடைந்து, அவளைநோக்கி உரைக்கின்றான்.

"யான் இப்பொழுது நினதுகணவனை யமனிடம் அழைத்துப் போமாறு இங்குற்றிருக்கிறேன். நீ என்னை நமஸ்கரித்தமையால் யான் உலகவழக்கம்போல ஆசீர்வாதஞ் செய்தேன். ஏனென்றால்; சிறியோராயிருப்பவர் பெரியோருக்கு வந்தனம் புரிந்தக்கால் அக்கலைப்பெரியோர் அச்சிறியோருக்கு ஆசிர்வாதம்செய்யாவிடில் அப்பெரியோர்களுடைய ஆயுள் க்ஷீணித்து அச்சிறியோரை வந்தடையும். அங்ஙனம் ஆசீர்வதிப்பதிலும் இலக்ஷணங்கள் உண்டு. அஃதெங்ஙனமெனில், உபநயனமாகாத ஓர் சிறுவன் தனக்குக்குருவாகியவோர் சுரோத்திரியனை வந்தனம் செய்தால், அந்தக்குருவானவர் அச்சிறு

வனைநோக்கி, (ஆயுஷ்மான்பவ) என்றும், மேதாவியாயிருக்கக் கடவை என்றும், ஆசீர்வதிக்கவேண்டும். ஓர் பிரமசாரி அல்லது கிரகஸ்தன் நமஸ்கரித்தால் அவனைநோக்கி ஓர் பெரியவன் இன்னபெயரையும் இன்ன சர்மாவையுமுடைய ஓ குழந்தாய்! (ஆயுஷ்மான்பவ ஸௌம்யா) என்று அவனது சர்மநாமங்களைக் குறிப்பிட்டு ஆசீர்வதிக்கவேண்டும். ஓர் மறையோன் தன்னை நமஸ்கரிக்கின்ற ஓர் கன்னிகாப்பெண்ணை நோக்கி, (சம்யக் பர்த்துரு மதிபவ – நல்ல பர்த்தாவை யடையக்கடவை) என்று அனுக்கிரகிக்கவேண்டும். ஒரு ஸ்திரீ விவாஹமானவளாயிருப்பின் அவளைநோக்கித் (தீர்க்கஸுமங்கலீபவ) என்று ஆசீர்வதிக்கவேண்டும். ஒருமறையோன் தன்னை வணங்குகின்ற விதவையைநோக்கி, (ஞானவதீபவ) என்று ஆசிகூறவேண்டும், ஆசீர்வாதம் செய்யும் முறைகள் இவைதான். இங்ஙனம் ஆசீர்வதிப்பவன் உலகத்தில் சுகியாயிருப்பான். ஆனதுபற்றியே யானும் என்னைவணங்கின உனைநோக்கித் தீர்க்கசுமங்கலியாயிருக்கக்கடவை யென்று ஆசீர்வதித்து விட்டேன். இனி யென்வார்த்தையும் பொய்யாகக்கூடாது. யான் உனக்கு ஓர் உபாயம் சொல்லுகின்றேன். அங்ஙனம் நீ செய்வாயேல் நினதுபர்த்தா தீர்க்காயுஸாக விருப்பான். அஃது என்னவெனில், நீ இதுகாறுஞ் செய்திருக்கின்ற காவேரிஸ்நாநங்களில் ஒருவருடத்திய ஸ்நாநபலனை நினது புருடன் நெடிபவாழ்வை யடையுமாறு அவனுக்குத் தத்தம் செய்வாயேல் அவன் இனி தீர்க்காயுஸாயிருப்பான். எனது வார்த்தையும் வீண்போகாதிருக்கும். இப்பொழுது யான் இவனையமனிடம் கொண்டுபோய்க் காண்பித்துவிட்டு, இவனை மீண்டும் இங்கு அழைத்துக்கொண்டு வருகிறேன். இதைப்பற்றி நீ எவ்விதமேனும் சிந்திக்கவேண்டுவதில்லை" என்றன்.

இதனைக்கேட்ட சுசிலையும், நல்லது இஃதிருக்கட்டும்; "நீர் கொல் என்று நகைத்ததற்குக் காரணம் யாது? அதனை அடியாளுக்கு உரைசெய்யவேண்டும்" என்று பிரார்த்திக்கவே, சித்திரகுப்தனும் அவளைநோக்கி, "அம்மணி! யான் பாபத்தினால் க்ஷீணமான ஆயுளையுடைய நினது புருடனைக்கொண்டு போகுமாறு பக்கத்தில் வந்திருக்கின்றேன். இன்னுஞ் சிறிது நிமிஷங்களில் இவன் உயிரை யிழக்கப்போகின்றான். இதனையறியாமல் தான்வெகுகாலம் ஜீவித்திருப்பவன்போல் நின்னைநோக்கி, "அடி! இன்று இராத்திரி இன்ன கறியமுது செய்துகொடு" என்று ஓர் கறியைக் குறிப்பிட்டுக்

கேட்டதற்காகத் தான் யான் அங்ஙனம் நகைசெய்தேன். உலகத்தில் மானிடஜன்மமெடுத்த ஒவ்வொரு பிராணியும் அவனவன் பெண்டுபிள்ளைகளை காப்பாற்றவேண்டி அங்குமிங்குமோடி, ஏதேனும் ஓர் இழிவான செய்கையைப் புரிந்தாகிலும் தனதுகுடும்ப சம்ரக்ஷணை செய்யமுயன்று, அதே கவலையாய்த் தன்காலங்களை யெல்லாம் வீணேகழித்து, பாபத்துக்கு ஆளாகின்றானே யன்றித் தனது கைகால் முதலிய உறுப்புக்கள் திடமாயிருக்கையிலேயே நல்ல கருமங்களைப் புரிந்து, நற்கதியடைய முயலுகிறதில்லை. இங்ஙனம் அவன் தனது தேகத்தில் வலிமை இருக்குங் காலமெல்லாம் ஸம்சாரபாசத்தினால் கட்டுண்டவனாகத் தன்மனதிற் கிசைந்தவாறு தீச்செயல்களைப் புரிந்துவிட்டுப் பின்னர் தேகத்தில் வலிமைகுன்றி, வார்த்திகம் மேலிட்டு, வியாதியஸ்தனா யிருக்குங்காலையில் எழுந்து நடக்கவும் சக்தியற்றவனாகி, "ஓ புத்திரனே! ஓ பெண்சாதியே! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறியழுகின்றான். அப்பொழுது அவனுடைய பந்துக்கள் எல்லோரும் "சீ! சீ! கிழப்பிணமே! வாயை யடைத்துக்கொண்டு சும்மாவிழுந்துகிட" என்று அதட்டிச் சொல்லுகிறார்கள். அப்பொழுதுதான் மூடாத்துமாவான இவனுக்கு நல்லபுத்தி பிறந்து, "ஐயோ! யானிதுவரையில பரமலோகத்திற்கு ஹிதமான நற்கிரியைகளில் அணுவேனும் புரியாமல் கேவலம் துஷ்டகிருத்தியங்களையேசெய்து, வீணேகாலம் கழித்துவிட்டேன். என்னசெய்வேன்?" என்று விசனப்பட்டுக்கொண் டிருக்கையில், நமன் இதுதான் சமயமென்று நினைத்துப் பூனை யெலியை எங்ஙனம்பிடிக்குமோ அங்ஙனம் அவனுயிரைக் கவர்ந்துபோகின்றான். ஆகலின், ஒருவன் தனது புத்திர மித்திர களத்திரர்களிடத்தில் ஆசையை முற்றிலுமொழித்து, தருமங்களையே புரியக்கடவன். ஓ பதிவ்ரதா சிரோமணியான சுசீலையே! நீ இப்பொழுதுகொடுத்த காவேரிஸ்நான பலத்தினாலே நினதுபுருடன் தீர்க்காயுஷாயிருப்பான் தடையில்லை. ஆகையால், நீ இவனது சரீரத்தை ஒருஜாமகாலம் பத்திரமாய்க் காப்பாற்றிக்கொண்டிரு. யான் இன்னும ஒரு யாமநேரத்திற்குள் இவனுயிரைக் கவர்ந்துகொண்டுபோய் நமனுக்குக்காண்பித்து மீண்டும் கொண்டுவந்து விடுகிறேன் என்றனன்.

ஆக்கிநேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

௮-வது அத்தியாயம் முற்றிற்று.

## ஒன்பதாம் அத்தியாயம்.

## பிரமசர்மாஉபாக்கியானம்.

—:o:—

இங்ஙனமுரைத்த அகஸ்திய நாரதர்களைநோக்கி, ஹரிச்சந்திர மகாராஜனும், "முனிசேகரர்களே! பிரமசர்மா வென்போன் யமனிடம்போய் வந்தவரலாற்றைச் சவிஸ்தாரமாய்க் கூறவேண்டும்" என்றுபிரார்த்திக்கவே, முன்பு நாரதர் தர்மராஜனுக்கு உரைத்தபடி கும்பமுனிவருஞ் சொல்லத்தொடங்கினார். கேட்பாய் மகாராஜனே! இங்ஙனஞ் சுசீலைக்கும் சித்திரகுப்தனுக்கும் நடந்த சம்வாதங்கள் முற்றும் இவ்விருவரைத்தவிர வேறுஒருவர்க்குந்தெரியாது. இச்சங்கதியில் ஏதுமுணராத சுசீலையின் கணவனும் அவளைநோக்கி,"ஓநாயகி!யான் கழனிக்குப்போய்ப்பார்க்கவேண்டும். சீக்கிரம்அன்னம் பரிமாறு" என்று சொல்லி, அவள் அங்ஙனஞ் செய்தவுடன் போஜனம் சீக்கிரம் பண்ணவேண்டுமென்ற வெண்ணத்துடன் கவளங் கவளமாய் வாயிற்போட்டு விழுங்கவே, அதினால் நெஞ்சடைந்து இறந்தானென் னும்வியாஜத்தினால்சித்திரகுப்தனும் அவனது ஆத்துமாவைக் கிரகித்துக்கொண்டு ஸம்யமினீயென்ற யமபுரியைநோக்கிச் செல்லுங் காலையில், வழியில் பூர்வம் அவன் கடன்காரர்களாகிற இரண்டு சக்கிலிகள்வந்து, வழியை மறித்துக்கொண்டு "அடா கெடுவாய்! எங்களிடத்தில் பாதரக்ஷையை வாங்கிக்கொண்டு பணந்தருகிறனென்று சொல்லி யேமாற்றி விட்டனையல்லவோ? இப்பொழுது நீ எங்குச் செல்கின்றனை? எங்கள் பாதரக்ஷையைக் கொடுத்துவிட்டுப் பின்பு எங்கேனும் போகுதி. அன்றேல், யாங்கள் நின்னைவிடோம்" என்றார்கள். இதனைக்கேட்ட சித்திரகுப்தன் அவர்களைநோக்கி, "ஓ சக்கிலிகளே! அப்பாதரக்ஷயின் விலையை யானிதோ கொடுக்கின்றேன்" இவ்வந்தணனை மறிக்காது விட்டுவிடுங்கள். என்றுரைக்க; அவர்கள் "ஐயா! முன் நாங்களிருவரும் வயிற்றுக்கு ஒன்றுமில்லாமல் பசியால் பிடிக்கப்பட்டு இவனிடத்தில் அதனைக்கிரயத்துக்கு விற்றோம். அங்ஙனம் நாங்கள் பசியால் வருந்தியகாலத்தில் இவன் எங்கள் பணத்தைத்தராமல் கேட்டபொழுதெல்லாம் எங்களைக்கண்டவாறு திட்டினான். நாங்களும் நீசஜாதியிற் பிறந்தவர்களா யிருந்ததினால், அவன் வீட்டிற்குள்போய் கேட்கக் கூடாதவர்களா யிருந்தோம். இப்பொழுது எங்களுக்குப் பணம்வேண்டாம். அப்பாதரக்ஷயின் அளவுக்குச்சரியான தோலைக் கொடுத்தாலல்லது நாங்களிவனை

டோம். மேலும் கோஹத்தி, பிராமணஹத்தி, ஸ்திரீஹத்தி, முதலியவற்றைச் செய்தவர்கள்கூட ஏதேனும் அதற்குத்தக்க பிராயச்சித்தஞ் செய்வார்களேயானால், அவர்களுக்கு நற்கதிகிடைக்கும். கடன் பட்டவனுக்கோ யாதொரு பிராயச்சித்தங்கிடையாது. அப்படி வாங்கின கடனைக் கொடாமலிருபபவனுக்கு அநேக கற்பகாலம் வரையினும் நரகமேயல்லது வேறில்லை. இப்பொழுது நாங்களிருவரும் இவனுக்குப் பிள்ளைகளாக வாகிலும்பிறந்து, இவனுடைய தனங்களையனுபவிக்கின்றோம்" என்றுசொல்லி அவ்வந்தணனை நையப்புடைக்க ஆரம்பித்தார்கள். அதசருணத்தில் திடீரென்று வாலிபர்களான இரண்டு பிரமசாரிகள் தோன்றி அங்கு வழக்கிட்டுக் கொண்டிருந்த சக்கிலிகள் இருவரையும் நோக்கி, உரைப்பாராயினர்.

"ஓ சக்கிலிகளே! பூர்வம் எமக்குப் பரமோபகாரம் செய்த இம்மகானுபாவனை ஏன் இங்ஙனம் வதைக்கின்றீர்கள்: அவன் உங்களுக்கு யாது கொடுக்கவேண்டுமோ அதனை யுரைப்பீரேல் யாமுமக்கு அதனைத் தடையின்றி இப்போதே யளிக்கின்றோம்." எனவே, அச்சர்மகாரர்களும் அவ்விளங் குமரரைநோக்கி, "ஐயமாரே இவ்வந்தணன் எமதிடத்தில் பாதரக்ஷை வாங்கிக்கொண்டு அதின் கிரயத்தைக் கொடாமலிருக்கின்றான். இப்பொழுது அந்தப்பாதரக்ஷையையாகிலும் அல்லது அதன் நிறைக்குச்சமமான வேறு தோலையாகிலும் கொடுத்தாலலலது யாம் இவனை விடமாட்டோம் எனவே, அவ்விளைஞர்களும், "அதே பாதரக்ஷையை இப்பொழுது எங்ஙனம் கொடுக்கக்கூடும்? ஆதலின் அதற்குச் சரியான தோலைத்தருகின்றோம்; அதனைப்பெற்றுக்கொண்டு இந்த மகா தார்மிஷ்டனை மறையோனை உங்களுடைய ருணபந்தத்தினின்றும விடுவித்து அவன சுகமாய்ச் செல்லுமபடிச் செய்யுங்கள்." என்றுரைத்து, உடனே தங்களுடைய துடைகளின் தோலையுரித்துப் பாதரக்ஷையின் நிறைக்குச் சரியாயிருக்குமபடி நிறுத்து அளித்தார்கள். அச்சக்கிலிகளும் அதனைப்பெற்றுக்கொண்டு, "ஓ பிராமணா! நீ இனி சுகமாய்ச்செல்; என்றுரைத்துத் தங்களிருப்பிட மேகினார்கள் பின்னர் பிரமசர்மாவும் தன்னுள் மிதமற்ற களிப்பையடைந்து, அப்பிரமசாரிகளை நோக்கி, "ஓ புண்ணியபுருடர்களே? நீங்கள் யாவர்? எங்கு நின்று இங்குற்றீர்கள்? அகாரணபந்துக்களான உங்களுக்கு நீசனான யான் பூர்வம் யாது நன்றிபுரிந்தனன். யான் உங்களுடைய தரிசனத்தினால் மிகவும் புனிதனானேன். என்று துதித்துக்கேட்கவே, அப்பிரமசாரி

கள் "ஐயா! நாங்களிருவரும் பூர்வம் நீர் வைத்துப் பயிர்செய்து பிரதிதினமும் தண்ணீர்வார்த்து ஆதிவாரம் தோறும் வலம்பிரதக்ஷிணங்களையும் பண்ணிவந்த அஸ்வத்த விருக்ஷங்கள். நீர் புரிந்த நன்றிக்குக் கைம்மாறாக இப்பொழுது யாமிருவரும் எங்களுடைய தேகத்தினது தோலையளித்து உம்மை விடுவித்தோம். நீர் மீண்டும் உமது இருப்பிடமுற்றும் நதிக்கரையில் நீர் வைத்துப் பயிர்செய்த அம்மரங்கள் இரண்டையும் பார்ப்பீரேல், அவை தோலுரிபட்டிருப்பதைத் தெரிவீரென்றுரைத்து, உடனே அந்தர்த்தானமானார்கள்.

பின்னர் சித்திரகுப்தன் மறையோனை நோக்கி, 'பார்த்தாயா? புண்ணியத்தின் மகிமையை; நீ முன்னம் அவ்வரசமரங்களை வைத்துப் பூசித்ததினாலும் அவைகளின் தரிசனத்தினாலும் நீ செய்த பாவங்கள் தொலைந்து புனிதனாய் விட்டனை, இனிமேலாகிலும் நீ புண்ணியகருமங்களைப் புரிந்துகொண்டிரு. யான் உன் மனைவிக்குச்செய்த ஆசீர்வாதம் பொய்யாகாமல் உனக்குத் தீர்க்காயுஸ்ஸு சித்திக்கும் பொருட்டும் யமதருமராஜன் உன்மீதுகொண்டிருக்கின்ற கோபந்தணிந்து, அவர் உன்னிடத்தில் பிரியமாய் இருக்கும்படிக்கும் இப்பொழுது யான் யமனது ஸ்தோத்திரத்தை நினக்கு உபதேசிக்கின்றேன். அதனைப் பரிசுத்தனாயிருந்துகேள். என்றுரைத்து அவனுக்கு அதனையுபதேசித்து, மீண்டும் அவனை நோக்கி, யான் உன்னை நமனிடம் கொண்டுபோய் விட்டவுடன் நீ அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, இந்த யமஸ்தோத்திரத்தை யவர் முன்னின்று ஜபித்து, அவர் உன்மீது இரங்குமபடிப் பிரார்த்தித்துக் கேட்பாயாகில்' அவர் கருணை கூர்ந்து, நமஸ்கரிக்கின்ற உனக்கு ஆசீர்வதிப்பார். அதினால் உனக்குத் தீர்க்காயுஷ்ய முண்டாகும். என்றுரைத்து அவனை யமபுரிக்கு இட்டுக்கொண்டுபோய் யமன் முன் விட்டனன். பிரமசர்மாவும் சபையில் வீற்றிருக்கின்ற யமதர்மராஜனைத் தூரத்தினின்று காணும்பொழுது அவருடைய ஸ்தோத்திரத்தை வாக்கினால் உச்சரித்துக்கொண்டே அணுகி, அவருக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தனன்.

### வைவஸ்வத ஸ்தவம்.

శ్లో॥ ధర్మరాజనమస్తేస్తు సాక్షాద్ధర్మస్వరూపిణే।
ధర్మస్థితా స్తరూపాయ సత్యరూపనమోనమః॥

యమాయమృత్యవేతుభ్యం కాలాయచనమోనమః।
సూర్యపుత్రనమస్తేస్తు సర్వభూతక్షయాయతే॥ ౨॥

సాధూనాంపితృతుల్యాయ వచనామృతశాయినే।
కటకాఙ్గదకేయూరహారనూపురధారిణే॥ ౩॥

దూరాదేవసతోదృష్ట్వాదురాచారాద్యవిప్లుతాన్।
అర్చ్యతేగన్ధపుష్పాద్యైః ప్రత్యుత్థానాసనార్హణైః॥ ౪॥

మధ్యస్థాయనమస్తుభ్యం తత్త్వజ్ఞాయనమోనమః।
దదతేఽజసర్వస్వం సాధూనాం సమవర్తినాం॥ ౫॥

దేవదేవనమస్తుభ్యం వేదవేదాన్తవేదినే।
సత్కృతంస్వకృతంపూర్వంజాతంపాథేయమద్యవః॥ ౬॥
స్వర్లోకాన్గచ్ఛతేక్షిప్రమితిసంప్రియవాదినే।
నమస్తేపితృరూపాయభక్తానామభయంకరం॥ ౭॥

కమలాకాన్తభక్తాయ కమలోదర చక్షుషే।
కమలోద్భవభవ్యాయ కమలాభాసకత్విషే॥ ౮॥

నమోలావణ్యనిధయే కారుణ్యవచనాలయ।
పాపినాంఘోరరూపాయగర్జతేదుర్జనాగ్రతః॥ ౯॥

దంష్ట్రాంకరాళభ్రుకుటీ భీషణాననతేనమః।
ఊర్ధ్వరోమ్ణేమహారోమ్ణేదీర్ఘరోమ్ణేనమోనమః॥ ౧౦॥

ఘంటారవమహాచణ్డ కాలదణ్డాయచణ్డినే।
దణ్డ్యాన్దణ్డయతేనిత్య ముగ్రదణ్డాయతేనమః॥ ౧౧॥

కోదణ్డకాలదణ్డాసి పరశ్వథవరాయుధాన్।
ధారిణేమారిణేలోకాన్ పుణ్యరాశిస్వరూపిణే॥ ౧౨॥

గ్రహణేసర్వలోకానాం జాగరూకాధికారిణే।
దివ్యజ్ఞానప్రశస్తాయ సనుస్తాంగాయతేనమః॥ ౧౩॥

విశ్వరూపనమస్తుభ్యంసమస్తాకృతయేనమః।
చతుర్హస్తాయసాధూనాం చతురాస్యాయతేనమః॥ ౧౪॥

నమస్తలోకవన్ద్యాయ స్తుమస్తోత్రరూపిణే।
కాలామ్బుదమహానీల మహామహిషవాహన। ౧౫॥

కల్పానలమహాకీల జ్వాలాలోచన తేనమః।
భయంకరాయ పాపానామభయాయ సుధర్మిణాం॥ ௧௬॥

ద్రవత్సుధాంశుసంపూర్ణచంద్రాస్యాయ నమోనమః।
ప్రళయాంబుదనిర్ఘోష భీషయిత్రేఽఘదర్శనే॥ ௧௭॥

గోభ్యాం కారుణ్యపూర్ణాభ్యాం పశ్యతే సుకృతాత్మనాం।
తత్త్వాయ తత్త్వరూపాయ తత్త్వద్రష్ట్రే నమోనమః॥ ௧௮॥

అతీవగర్జత్ప్రళయాంబుదధ్వని ప్రమూర్ఛితాశేషదిగంతరాయ।
ఛిన్ధీతిభిన్ధీతిచచూర్ణయేతిప్రక్ష్వేడతే వీక్ష్య విభో నమోనమః॥ ௧௯॥

కరాళశాయాలికఘోరవాచాపాపిష్ఠసంఘం భృశభీషయిత్రే।
జ్వలద్యుగాన్తోద్యతబాడబాగ్నిసమోర్ధ్వరోమ్ణే పరపీడకానాం॥ ௨௦॥

విషోల్బణాభీషణకృష్ణసర్ప దంష్ట్రాఘాతాహివిమోహయిత్రే।
సాధుమిత్రాయ తే శశ్వన్మిత్రపుత్రాయ తే నమః॥ ௨௧॥

శాంతగాత్రాయ శాంతానాం మేరుగోత్రసమాజసే।
పూజామాత్రాతితుష్టాయ భక్తాభీష్టప్రదాయినే॥ ௨௨॥

శిపివిష్ట నమస్తేఽస్తు నమస్తే పరమేష్ఠినే।
వాచా ప్రీణయతే సాధూన్ పూజాన్ పూజయతే నమః॥ ௨௩॥

ప్రదాత్రే సాధుసల్లోకమపహర్త్రే సతాం భయం।
ధర్మశాస్త్రస్వరూపాయ న్యాయశాస్త్రార్థచక్షుషే॥ ௨௪॥

వృకోదర నమస్తుభ్యం యమునాసోదరాయ చ।
యమాయ ధర్మరాజాయ మృత్యవే చాన్తకాయ చ॥ ௨௫॥

వైవస్వతాయ కాలాయ సర్వభూతక్షయాయ చ।
ఔదుమ్బరాయ దధ్నాయ నీలాయ పరమేష్ఠినే॥ ௨௬॥

వృకోదరాయ చిత్రాయ చిత్రగుప్తాయ తే నమః।
భూయో భూయో నమస్తుభ్యం భక్తరక్షణ తే నమః॥ ௨௭॥

இத்துதியைக் கேட்ட யமனும் வெகு சந்தோஷத்துடன் "ஸௌம்யனே! தீர்க்காயுஷ்மானாக இருக்கடவை," என்று ஆசீர்வதித்து மீண்டும் அவனை நோக்கி, "ஓ பிரமசர்மாவே! நீ இப்பொழுது சொன்ன எனது ஸ்தோத்திரத்தை எவனாகிலும் படித்தாலும் அல்லது பிறருக்குச் சொன்னாலும் அவன் தீர்க்காயுஷ்மானாகவும் அதிக சம்பத்துடையவனாகவும் இருப்பான்.

இத்தோத்திரம் பாவங்களைப்போக்கும். மிருத்துவை வர வொட்டாது, புண்ணியத்தையே விருத்திசெய்யும்; ஆயுசைத்தரும். பிரதிதினமும் இத்தோத்திரத்தைப் பாராயணம் பண்ணுபவன் எல்லாத்துன்பங்களையும்போக்கி இன்பமயமாவான். உனக்கொரு இரகசியத்தை யுபதேசிக்கிறேன். ஒவ்வொருவருடைய ஜன்ம நக்ஷத்திரத்திலும், என் நக்ஷத்திரமான பரணியிலும், இத்தோத்திரத்தைப் படித்தால் அவனுக்கு ரோகங்களணுகா. அவன் வம்சமும் தீர்க்காயுவையடையும். இதைப்படித்தாலும், படிப்பித்தாலும், அவர்கள் சதவருஷம் ஜீவித்திருப்பார்கள். என்று கூறியருளினர்" பின்னர் பிரமசர்மாவும் யமனை நோக்கி, "சுவாமி! அடியேன எந்தத் தீவினையால் இப்பொழுது நஷ்டாயுள்ளாய் யமபுரிக்கு வந்தேன்? எந்தப் புண்ணியத்தின் மகத்துவத்தினால் மீண்டும் தீர்க்காயு மானாக ஆயினேன்? சகலமுமறிந்த தேவரீர் அதன் காரணத்தை அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்." என்று பிரார்த்திக்கவே யமதர்மராஜனும், "நீ முன் ஜன்மத்தில் உனதுவீட்டினுக்கு மிடியாலும் பசியாலும் ரோகத்தாலும பீடிக்கப்பட்டு வந்த ஓர் அந்தணனுக்கு உணவளித்து ரோகநிவர்த்திசெய்து, அவனைப்பாதுகாத்த புண்ணியத்தினால் இப்பொழுது உனக்குத் தீர்க்காயுஷ்யமுண்டாயிற்று. பராந்நபோஜனம் அபக்ஷ்ய பக்ஷணம் முதலிய பாவசெய்கைகளால் நீ நஷ்டாயுவானாய், ஆதலின் இனி எப்பொழுதும் தர்மமே நிச்சயம் என்று இருக்கக்கடவை. தர்மமுடையவனுக்கு எக்காலம் பயமில்லை. பூர்வம நளமகாராஜன் இந்த ஸ்தோத்திரத்தால் நம்மைத்துதித்து திரிலோகங்களையும் ஜயித்து, தீர்க்காயுவானான். பாபிகள் பாவகதியையே யடைவார்கள். சாதுக்கள் சத்கதியையே அடைவார்கள். இன்னும் சிலவிஷயங்களை விளக்குகிறேன்; அவற்றைக் கேட்பாயாக. எட்டுவயதுடையபெண்ணைக் கௌரியெனலவேண்டும்; ஒன்பது வயதுடையவளை ரோகிணி எனப்படும்; பத்துவயதுடையாள் கன்னிகையாவள்; அதற்குமேற்பட்டவள் ரஜஸ்வலா என்பர். இவர்களுள் கௌரி என்பவளைத் தானஞ்செய்யில நாகலோகத்தையும், ரோகிணியைத் தருபவன், வைகுண்டத்தையும், கன்னியைத் தருபவன் பிரமலோகத்தையும், ரஜஸ்வலையைக் கொடுப்பவன் ரௌரவத்தையும், அடைவான் ஸ்ரீஹரியின் ஆராதனைக்காக குங்கிலியமும் நெய்யும் தண்டுலமும் தருபவனும், வைசுவதேவம் செய்பவனுக்குத் தண்டுலம் தருபவனும், சொர்க்கமடைவான். துலா கார்த்திக மாக வைசாக மாதங்களில் காவேரி ஸ்நாநம் செய்பவரும் புண்ணிய புராணங்களில் ஆசக்தியுடையவர்களும்,

ஞானசாஸ்திர உபதேச பௌராணிகரை வஸ்திர புஷ்பாக்ஷதைக ளால் பூசிப்பவர்களும், விஷ்ணுபூசைக்காகத் தூப தீப கலயங்களைக் கொடுப்பவரும், தேவலோக வாசம் பெறுவார்கள். ஓ பிரமசர்ம் மனே! இனி பாவங்களின் பான்மையைப் பகுத்துக்கூறுகிறேன். பாபிகள் சிரித்துக்கொண்டே செய்த ஒவ்வொரு காரியத்திற்கும் மறுமையில் அழுதுகொண்டே அநுபவிக்கப்பெறுவர். பிராதக்கால ஸ்நானமில்லாது பகவானுக்கு ஆராதனை செய்யாத அன்னத்தைப் புசிப்பவர்களும், நாஸ்திகரும், புராண நம்பிக்கை யற்றவரும், பரப் பிரயோசனத்தைக் கெடுப்பவரும், மணி தூபம் தீபம் துளசி முதலி யவையில்லாது பூசிப்பவரும், ஆமணக்கு எருக்கு முருக்கு இலவி லைகளில் துளசி தளத்தையும் புஷ்பத்தையும் கொண்டுவருபவரும், காமபாண பின்னராகி நிஷித்த தினத்தில் ஸ்திரீ சங்கமம் செய்யவ ரும், அவுபாசனம் அக்னிஹோத்திரம வைசுவதேவம் புரியாது உண் பவரும், ஸ்திரீகளுடனும் குழந்தைகளோடும் உடனிருந்துண்பவரு ம், கொடுநரகங்களை யநுபவிப்பார்கள். இத்தகைய பாவங்கள் அனந் த முண்டு. ஆதலால், எதுசெய்யினும் சாஸ்திர விசாரணையோடே செய்யல்வேண்டும். அங்ஙனம் செய்யாது மங்குவானானால் நரகமே அவர்க்குப் பிராப்தமாகும். என்று அவனுக்குப் பலதர்மோபதேச ங்களைச்செய்து, பின்னர் அவனைநோக்கி, இனி நீ இங்குத்தாமதம் செய்யாமல் உன் இருப்பிடஞ் சேர்ந்து, உன் பிரிவினையால் வருத்த முற்றிருக்கின்ற நினது பெண்சாதி ஸுசீலையைச் சந்தோஷப்படுத் தென்று சொல்லவே, பிர்ம்மசர்மாவும் சந்தோஷத்துடன் தன்னிரு ப்பிடஞ் சேர்ந்து தனது சரீரத்திற்குள் பிரவேசித்துத் தூங்கி எழு ந்திருந்தவன்போல எழுந்திருந்தான். அவனது மனைவியும் அவனைக் காடாலிங்கனம் செய்துகொண்டு, அவன் யமபுரிக்குப்போய்வந்த விருத்தாந்தங்கள் யாவையும் விசாரிக்க; அவனும் அவைகளை ஸவி ஸ்தாரமாய்ச் சொல்லக்கேட்டு, ஆநந்தக்கடலில் மூழ்கினவளாய் முன்னிலும் மும்மடங்கு அதிகமாய்க் காவேரிஸ்நானம், அசுவத்த ஸேவைமுதலிய நற்கிரியைகளைப்புரிந்து, பர்த்ரு சிசுருஷை செய்து கொண்டிருந்து, காலதர்மத்தை யடைந்து திவ்யவிமானத்தி லே றிக்கொண்டு, பிர்மலோகம் சென்றனள். இந்தச்சுசீலையினது உபாக் கியானத்தைப் பக்தியுடன் படிப்பவரும் கேட்பவரும் நீடுழிவாழ் ந்து நல்லுலகடைவர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில் கூ௨வது அத்தியாயம் முற்றிற்று.

## பத்தாவது அத்தியாயம்.

## வ ரா க வி ரு த் தா ந் த ம்.

—:0:—

இப்பால் சுசீலை இறந்தவுடன் பிர்ம்மசர்மாவென்பவன் மிக்கவிசனமடைந்து தனதுவீட்டிற் சிறிதுகாலமிருந்து, பின்னர் சோரர்கள் அவனது திரவியங்களை யபகரித்துக் கொண்டுபோகவே, அதிக துக்கமுற்றவனாய்த் தேசாந்தரம் சென்று, பற்பல துராசாரங்களை முன்னையபடியே அனுஷ்டித்து ஸ்நாநசந்தியில்லாமல் கண்டவிடங்களில் புஜித்தும், ஈனர்கூட்டுறவே ஒப்புடையதென மதித்தும், தனது பெண்சாதியின் இனிய நற்போதனைகளை மறந்தும், பலவிடந் திரிந்தும் ஒரு நாள் ஒரு பிராமணோத்தமனது கிருகத்தின் வாசலில் உட்உட்கார்ந்திருந்தான். அவ்வந்தணனும் வழக்கப்படி வைஸ்வதேவம் செய்துவிட்டு, வாசலில்வந்து யாராகிலும் அதிதிகள் வந்திருக்கிறார்களோ வென்று பார்க்கையில், இவனைக்கண்டு அதிக பக்தியுடன் அழைத்துக்கொண்டுபோய்ப் போஜனம் அளித்து, அவன் வேதசாஸ்திரங்களில் வல்லோனாயிருப்பதை யறிந்து, அன்றுமுதல் அவனைத் தனது கிருகத்திலேயே வைத்துப் போஷித்தான். பின்னர் ஒருநாள் அந்தக் கிருகஸ்தனுக்கு ஏதோ ஒரு சூதகம் சம்பவித்தபடியால், இந்தப் பிர்ம்மசர்மாவைத் தான்செய்யும் நித்யபூசையான சுவாமிபூஜையைச் செய்யும்படி நியமிக்க; அவனும் ரகஸ்ஸியமாய் பிறர்வீட்டில் சாப்பிட்டுவிட்டு ஸ்வாமிபூஜைசெய்தான். அந்தப்பாபத்தினால் அஜீர்ணரோகம் சம்பவித்து, மரணமுற்றுப் பற்பல நரகானுபவம் செய்து, ஐந்துஜன்மங்கள்வரையில் நாலுக்கனாயும், பிறகு ஒட்டையாயும், பின்னர் ஸ்ரீமுஷ்ணாரண்ணியத்தில் மலந்தின்பதும் பூமியை முகர்ந்துகொண்டு கோரைப்பற்களால் பூமியைப் பிளந்துகொண்டு செல்வதும் மதங்கொண்டு எல்லோரையும் வெருட்டுவதும் சரீரத்தை அசக்கித் தள்ளுவதும், பூமியைக்காலால் கிண்டி குர் குர் என்று ஓசை செய்வதுமான கோர்முள்ளம் பன்றியாய்ப் பிறந்தான்.

இப்படியிருக்க; விருத்தாசலத்தில் ஆத்ரேய கோத்திரோத்பவனை பத்மகர்ப்ப னென்கின்ற ஓர் வைதிகப் பிராமணோத்தமனிருந்தான். அவன் நித்யமும் பஞ்சாக்ஷர ஜபமுடையவன். ஔபாசன வைசுவதேவங்களைத் தவறாதுசெய்பவன். இந்திரிய நிக்கிரகம் செய்து, சீதோஷ்ண சுகதுக்கங்களைச் சமமாகக்கொள்பவன். யோகநி

ரதன். தனது வருணத்துக்குரிய ஷட்கருமங்களையும் செய்பவன். தினமும் இருபோதும் ஸ்நாநமாசரிப்பவன். வேதபாராயணத்தோடு வைஷ்ணவ புராணச்சிரவணமும் மற்றும் சத்கர்மங்களும் ஒன்றும் விடாது செய்பவன். இவன் ஒருநாள் அனேக வைதிகர்களுடன் சிவ ஸ்மரணை செய்துகொண்டு துலாகாவேரி ஸ்நாநம் செய்யுமாறு அர்த்தராத்திரியில் புறப்பட்டு வழியிற்சென்று கொண்டிருக்கையில், காற்றும் மழையும்வந்து உபத்திரவிக்க, அந்தப்பிராமணர் எல்லோரும் வழிதெரியாமல் அலைந்து திரிகையில், மிகவும் பயங்கரமான முன் சொன்ன முட்பன்றிவந்து அவர்களைத்துரத்தவே அந்தப்பிராமணர்கள் எல்லோரும் பயந்து வடக்குதிக்கை நோக்கி யோடினார்கள். பத்மகர்ப்பன் எனற பிராமணன்மட்டும் தென்திசையை நோக்கி, ஓட்டம் பிடித்தனன். அந்தப்பன்றியும் அவர்களைவிட்டு இந்தப் பத்மகர்ப்பனை மாத்திரம் துரத்திக்கொண்டு போகவே, அவனும் மிகப் பயந்து ஒரே ஓட்டமாக வோடிக் காவேரியின் ஜலத்திற்குள் முழுகி விட்டனன். பன்றியும் வெகு கோபத்துடன் தனதுமுட்களைச் சிலிர்த்துக்கொண்டு, அவன் பிறகே விடாது துரத்திச்சென்று காவேரிக் கரையணித்தாக வருகையில், அங்குத் துலாஸ்நாநம் செய்து தலைமயிரை யாற்றிக்கொண்டிருந்த ஓர் தாஸியினது தலைமயிரின் ஜலத்திவலை அதின்மேற் பட்டது. உடனே முன்பு தான்செய்துள்ள அசுவத்த சேவை சிவபூசை இவற்றின் மகிமையால், அக்கரையிலிருந்த எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கவே பன்றியுருவமபோய்த் திவ்வியஸ்திரீகள் உபசரிக்க ஓர் திவ்விய புருடனாய் விமானத்தில் ஏறினதைக் கண்ட பத்மகர்ப்பனும பயந்தெளிந்து, ஆச்சரியமடைந்து, அந்தத்திவ்விய புருடனை நோக்கி, "நீர்யார்? இப்பன்றிஜன்மம் வரக் காரணம்யாது?,, என்று வினவினன். பூர்வம் பிர்மசர்ம்மாவென்னும் பிராமணனாய்ப் பின்பு கெட்டதொழில் புரிந்து, பன்றிஜனனமும் பெற்று, துலாகாவேரிஸ்நாநம் செய்த தாஸியினது தலைமயிரின் ஜலத்துளி பட்டதால், அப்பன்றிஜன்மம் போய்த் திவ்வியபுருடனானேன் அம்மஹானும் அப்பத்மகர்ப்பனுக்குத் தனது ஜன்மவிருத்தாந்தங்களைச் சவிஸ்தாரமாய் உரைத்துத் தாஸியைப் பலவாறுபுகழ்ந்து பத்மகர்ப்பனிடத்தில் விடைபெற்றுத் திவ்வியலோகம் சென்றனன். பின்னர் அங்குஸ்நாநம் செய்யவந்திருந்த சகலபிராமணர்களும் பத்மகர்ப்பனை நோக்கி, "சுவாமி! தேவரீர் இங்கெழுந்தருளி இந்தக் காவேரிஸ்நாந மகத்துவத்தை நன்றாய் விளக்கிவைத்தீர், ஆனாலும், இதின்

ஸ்நாந ஜபாநுஷ்டானங்கள் செய்யுமமுறையையும், அருளிச்செய்ய வேண்டும்.,, என்று பிரார்த்திக்கவே, அம்மறையோனும் அவைகளை விசிதமாயுரைக்கத் தொடங்கினார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில்
க0-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினோராவது அத்தியாயம்.

## பத்மகர்ப்பனுக்கும் திவ்வியபுருஷனுக்கும் நடந்த சம்வாதம்.

:0:

கேளும் தருமபுத்திரரே! இங்ஙனம்பத்மகர்ப்பனென்னும் மறையோன் மற்றஜனங்களுக்குத் துலாகாவேரியினது மகத்துவத்தைச் சொல்லிக்கொண்டிருக்கையில் அந்நதியில் இருந்த ஓர் முதலையானது அதில் ஸ்நாநம் செய்யப்போன ஓர் பிராமணனை விழுங்குவதற்காக அவனது அருகில்சென்றது. அத்தருணத்தில், பத்மகர்ப்பன் படித்துக்கொண்டிருந்த துலாகாவேரி மகத்துவத்தில் ஒரு சுலோகம் அம்முதலையின்காதில் விழுந்தது. [ ప్రాతఃకాలే తులామాసే యస్స్నాయాత్సహ్యజాజలే । సర్వకర్మవినిర్ముక్తో యాతివిష్ణోఃపరంపదం] (உதயத்தில் காவேரியில் ஸ்நாநமாடுபவன் சர்வ கர்மங்களினின்றும் விடுபட்டு விஷ்ணுவினுடைய பரமபதத்தையடைவான். என்ற அருத்தமுடைய அச்சுலோகம் அதன் காதிற்படவே) கொடியதும் நீங்கு நிலையற்றதுமான உடனே அந்த முதலைஜன்மம்போய் ஓர் திவ்வியபுருஷனாய் விமானத்தில் தோன்றிற்று. அதுகண்ட பத்மகர்ப்பன் ஆச்சரியசித்தனாய் அத்தேவதேவனையை நோக்கி, "நீர்யார்? உன்தேயமெது? நீதேவகுமாரனா அல்லது உபதேவனா? எங்கு ஜனித்தவன்.,, என்று வினவவே, அவன் ஐயா! யான்பாஞ்சாலதேசத்தில் கங்ககோத்திரத்தில் ஜனித்த சூரியபந்துவென்னும் பேருடைய ஓர் பிராமணன். நான்வசித்தகிராமத்துக்கு உத்கலையென்றுபெயர். யான் எல்லாவிஷயத்திலும் வல்லோனாயிருந்தும் மகாநிர்த்தயனாகவும் கோபிஷ்டனாகவும் ஸ்நாநசந்தி யற்றவனாய் விடாக்ரகண்ணியனாயும் இருந்துமன்றி, ஒருநாள் கணவனென்ற ஏழையான ஒரு வைதிகப்பிராமணன் யாகம்புரியவேண்டி மற்றொரு பிராம்மணனிடத்தில் திரவியம் யாசித்தபோது, அவர்கள் என்னைப் பெரியோனாக மதித்திருந்தமையால், என்முன் அவ்விப்பிரனையனு

ப்ப, மகாசண்டாளனும், உலோபியுமான யான் ஒரு குருட்டுக் கவடி யும் அவனுக்குக் கொடாதுவிட்டேன், என்னைக்கண்ட அன்னோரும் அப்படியே அவனை வெறுத்தார்கள். இந்த பாபத்திற்குயானே முத லானவனுகையால், பற்பல கொடியநரகங்களை யனுபவித்துக் கடை சியில் இந்தக்காவேரியில் ஓர் முதலையாய்ப்பிறந்தேன். இன்றையதி னம் ஸ்நாநஞ்செய்யவந்த ஓர் பிராமணனை விழுங்குமாறு அவனரு கே செல்லுகையில் தாங்கள்படித்துக் கொண்டிருந்த காவேரி மக த்துவத்தின் ஓர் சுலோகம் காதிற்படவே, யான் வக்ரதந்தத்தையும் கோரரூபத்தையும் விட்டு இங்ஙனம் ஆயினேன்.,, என்று சொல்லி அவரைப்பலவாறு துதிசெய்து, மீண்டும் அவரைநோக்கி, "சுவாமி! மகாபாபியாயிருந்த யான் இப்புராணச்சிரவணம் பண்ணும்படி யாது புண்ணியம் செய்தேன். அதனை யுரைக்கவேண்டும்.,, என்று வினவி ற்று. பத்மகர்ப்பனும் அவ்விஷயத்தை யோகதிருஷ்டியால் அறிந்து, "கேளாய் திவ்வியபுருஷனே! ஒருக்கால் வங்கதேசத்தரசன் வேட் டையாடி ஸஹ்யகிரிவழியாய் வந்தனன். அப்பொழுது அநேகர் துலா காவேரி ஸ்நாநம் செய்து காவேரிபுராணச் சிரவணம் பண்ணிக்கொ ண்டிருப்பதைப் பார்த்து அவ்வரசனும் துலாகாவேரி ஸ்நாநம் செய் து, புராணசிரவணம்செய்து, அங்குள்ள சகலபிராமணர்களுக்கும் அநேக தானதருமங்களைச் செய்தான். அப்பொழுது நீ உள்ளத்தில் கெட்டவனுயிருந்தபோதிலும், அரசன் கொடுக்கின்ற திரவியங்க ளைப் பெறுவதற்காக மகாபரிசுத்தன்போலப் பாசாங்குபண்ணி, நீயும் காவேரிஸ்நாநம் செய்து பக்தியுடன் புராணச்சிரவணம் பண் ணுபவன் போலப் பாவித்திருந்தாய் அந்தப் புண்ணியத்தினுற்ருன் இப்பொழுது நீ திவ்விய புருஷனுனாய். என்றுரைக்கவே, அருகில் இருந்த எல்லோரும் கேட்டு வியப்புற்றார்கள். திவ்விய புருடனும் அவரை நமஸ்கரித்து விமானத்திலேறிக்கொண்டு சுவர்க்கஞ் சென் ருன். பின்பு பத்மகர்ப்பனும் அங்குள்ள ஜனங்கள் எல்லோருக்கும் துலாகாவேரியின் மகத்துவத்தைச் சவிஸ்தாரமாய்ச் சொல்லிமுடித் தான். தர்மநந்தனு! இத்யாதி விபவங்கள் நிரம்பியிருப்பதால் நீயும் துலாகாவேரி ஸ்நாநம் செய்யக்கடவை." என்று நாரதமகாருஷி கூறியருளினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

கக-வது அத்தியாயம் முற்றிற்று.

## பன்னிரண்டாம் அத்தியாயம்.

# மண்டூகோபாக்கியானம்.

பின்னும் நாரதமகாருஷி தர்மபுத்திரரைநோக்கி, " ஓ தர்மநந்தன! யான் இப்பொழுது உனக்குக் கார்த்கைமாசத்தில் ஸ்நாநம் செய்பவர் அடையும்பலனைச் சொல்லுகின்றேன், ஸாவதானமாய்க் கேட்பாய். யாவனொருவன் கார்த்திகைமாஸத்தில் நெல்லிமரத்தின் நிழலில் ஸ்நாநம் செய்கின்றானோ அவன் (முன்னம் கார்த்திகைமாஸத்தில் நெல்லிமரத்தின் நிழற்கீழ் காவேரி ஜலத்தின் பாம்பின் வாயில் அகப்பட்டதவளை ஜன்மாந்தர ஞானத்தோடு அப்பாம்பினுடன் முக்தியடைந்தது போல) நல்லுலகமடைவான். எனத் தர்மபுத்திரரும் அஃதெங்ஙனமென நாரதமுனிவர் உரைப்பாராயினர்.

### கார்த்திகைமாஸ ஸ்நாநவிசேடம்.

முன்னம் விராட தேசத்தில் வாஸ்து ஹோமமெனும் அக்கிரஹாரத்தில் வேதசாஸ்திர புராணங்களை நன்குணர்ந்தவர்களும் அதிதர்மிஷ்டர்களுமான அநேகப் பிராமணோத்தமர்க ளிருந்தார்கள்: அவர்கள் எல்லோரும் கார்த்திகை மாஸத்தில் அருணோதயகாலத்தில் அங்கிருந்த குளத்தில் ஸ்நாநஞ்செய்து, அதின் கரையிலிருந்த நெல்லிமரத்தின கீழிருந்து ஜபஞ்செய்து, கார்த்திகை மாஸத்தின் காவேரி மகாத்மியச் சிரவணஞ்செய்து கொண்டிருந்தார்கள். அக்காலையில் ஓர் தவளையானது பசியால் வருந்தின ஓர் காக்கையால் துரத்தப்பட்டு, பயந்து அங்கு ஜபஞ்செய்துகொண்டிருந்த ஓர் பிராமணன்காலில் ஸ்பரிசமடைந்து, மெல்லமெல்ல ஜலத்திற்குள் பிரவேசித்தது. அங்கிருந்த ஓர் நீர்ப்பாம்பானது அதனைப் பிடித்துக்கொண்டு விழுங்க ஆரம்பிக்கவே, தவளையும் மிகவும் களைப்பும் துக்கமுமுற்று, அப்பாம்பைநோக்கி யுரைக்கின்றது:—"அடா மூடா! நீயேன் என்னைவதைக்கின்றாய்? ஓ நீசசன்மமுடைய சர்ப்பமே! என்னை ஏன் வருத்துகின்றாய்? இதரர்களைப் பீடிக்கிறதைப்பார்க்கிலும் ஜீவஹிம்சை வேறுண்டோ? எல்லாரிடத்தும் நன்மைபாராட்டுபவனும், நல்லவிருத்தியுடையவனும், சலனமற்ற சுபாவமுடையவனும், கிடைத்தவளவில் திருப்தியுமுடையவனுமான என்னை ஹிம்சிக்கத்துணிந்தால் உன்குலம் நசிக்குமேயன்றி, விருத்தியடையாது. நாமிருவரும் பூர்வஜன்மத்தில்செய்த கொடியபாவத்தால் இந்தஹீன

ஜன்ம மடைந்திருக்கின்றோம். அதனையறியாமல் இக்காயம் சாசுவதம்போல நினைத்து, நீயேன் என்னைக் கொல்லுகின்றனை?" எனக் கடிந்துசொல்லவே, அந்தப்புஜங்கமும் நடுநடுங்கி அதனை வாயினின்றும் உமிழ்ந்து, "மகானுபாவனே! இப்பிழையைப் பொறுத்து, நீநம்மிருவருடைய பூர்வஜன்ம வரலாற்றை யுரைக்கவேண்டும்" என்று பிரார்த்திக்கவே, மண்டூகஞ் சொல்லா நின்றது.

மண்டூகத்தின் பூர்வஜன்மம்.

"மூர்க்கனையும் பரஹிம்சைசெய்து களிப்பவனையும் மோசத்தன்மையுடைய பாம்பையும் ஒருபோதும் நம்பப்படாது. நீயோ நஞ்சுள்ளபாம்பு உன்னை நம்பேன்" என, அப்புஜங்கம் பின்னும் கூறுகிறது. "ஓ மண்டூகமே! கிருஷ்ணசர்ப்பத்தையும் ஸ்திரீகள் வாக்யத்தையும் துஷ்டமூர்க்கருடைய வசனத்தையும் நம்பலாகாதென்பது வாஸ்தவந்தான். ஆயினும் சாதுவான உன்னோடு வசனித்த விசேஷத்தால் சுத்தனுயினேன். ஆகையால், என்னை நம்பிக் கூறுவாயாக. நீ தவளையாதற்கு பூர்வஞ்செய்த பாவம்யாது? சென்ற ஜன்மங்களில் எத்தகைய புண்ணியஞ்செய்து பூர்வஞானம் பெற்றனை? எனக்கு எப்பாவ விசேடத்தால் இந்நீர்ப்பாம்பு வடிவம்வந்தது. நான்கொடியகுரூரனுதற்கும் நீ பரமசாதுவாதற்கும் ஏது என்னை? இவ்விவரத்தைவிசிதமாகக் கூறவேண்டும்" என்ன; சற்று பட்சத்துடன் பாம்பைநோக்கித் தவளை கூறத்தொடங்கிற்று.

யான் பூர்வஜன்மத்தில் காஞ்சிபுரத்தில் மகாபண்டிதனும் வேதசாத்திரங்களில் நிபுணனும், ஸ்மிருதி ஸ்ருதிகளை மாணவர்கட்கு உபதேசிப்பவனும், உபந்நியாச காலத்தில் சுரோதாக்களிடத்தில் மிக்ககோபஞ்செய்து திக்காரம்பண்ணுபவனும், அவ்விய கவ்யாதிகள் செய்வதில் மிகவுந் தெரிந்தவனுயு மிருந்தேன். திரவிய ஆசையால் உலோபியா யிருந்ததேயன்றிப் பிராமணர்கட்குச் சேரவேண்டிய வித்தங்களையும் அபகரித்து துராசாரதுரந்தரனுய் சதா ஸ்திரீசங்க நிரதனுய் வித்யாகர்வ முடையவனுய் அஸத் வ்யாபாரமுள்ளவனுமாய் பிராமணவம்சத்தில் பிறந்திருந்தேன். ஒருக்கால் அவ்வூரார் எல்லோரும் என்னை மாகமாகத்மியம் வாசிக்கும்படிப் பிரார்த்தித்தார்கள். யானும் அங்ஙனமே படித்துமுடித்து, அதற்காக அவர்கள் எனக்கு வெகுமதியாகச்செய்த அனேகவிலையுயர்ந்த வஸ்துக்களை யான் என் பெண்சாதி பிள்ளைகளுடன் அனுபவித்தே

னேயல்லாமல் ஒருவருக்கும் கொடுக்கவில்லை. அது எங்ஙனமெனில் மாகமாச வைபவ புராணபடன சமாப்தமத்தில் எனக்குப் பரிசாக வந்த பட்டுவஸ்திரத்தைப் பாரியாளுக்கும், மோதிரத்தை புத்திரனுக்கும், புடவைகளை அத்தைக்கும், வஸ்திரங்களை மாமனுக்கும், குண்டலங்களை மைத்துனனுக்கும்,மற்றும்வஸ்திரமுதலியவைகளைப் புத்திரிக்குங்கொடுத்து, அவர்கள் களித்திருக்க அதனைக்கண்டுயான் பெருங்களிப்படைந்து இறுமாந்திருந்தேன். உடுக்கத் துணியில்லாதொருவன் என்னை ஒருவஸ்திரம் யாசித்தகாலத்தில் பணங்கொடுத்து வாங்கிக்கொள்ளென்று சொல்லி அவனைத் துரத்திவிட்டேன். இங்ஙனம் மகாபரிசுத்தன்போல் மேலுக்கு வேஷம்போட்டுப் பிறர் திரவியங்களை யேமாற்றிப்பிடுங்கி ஸ்வகுடும்ப போஷணஞ் செய்த யான் அதிசாரபேதியினால பீடிக்கப்படுங்காலத்தில், எனதுபுத்திரன் என்பக்கத்திலிருந்து என்னைநோக்கி, "ஐயா! நீர் செவ்வையாயிருக்குங்காலத்தில் ஆத்மார்த்தமாய்ப் பக்திச்சிரத்தையுடன் புராணபடனம் முதலியதைச்செய்யாமல், ஆஷாடபூதி வேஷம்போட்டு ஏழைகளுடைய தனத்தைப்பறித்து உமது ஸம்ஸாரத்தைப் போஷித்தீர். எங்களால் யாதுபயன்; யோசிக்குங்காலத்தில் யான் யார்? நீர் யார்? பகைவர்கள்தான் யாவர்? எவர் உறவினர்? உம்மால் சம்பாதித்த இத்திரவியாதிகள் உனக்குத்துணையாமா? உமது நல்வினை தீவினையன்றோ உம்மைவிடாது பற்றத்தக்கன. நீர் படித்துள்ள பலபுராணத்துள்ளும் எம்பெருமானைப்பற்றிய ஒரு சுலோகத்தையேனும் துதிப்பீராக. நீர் புராணகாலக்ஷேபத்தால் சேகரித்த திரவியம மிகவிருக்கின்றமையால், அவைகளும் கிஞ்சித்தேனும் ஏழைகளுக்குக் கொடுப்பீராக, இப்பொழுது நீர் துன்பப்பட்டு இறக்குங்காலத்தில் நாங்கள் உதவுகிறதில்லை. இனியாகிலும் எங்களிடத்தில் ஆசாபாசத்தையொழித்து, ஸ்ரீமந்நாராயணனைப்பஜித்து வைகுண்டத்தையடைட வழிதேடும்.,, என்றான். மற்றொருபக்கத்தில் மகாபதிவ்ரதையான எனது பெண்சாதி கையில் ஆயிரம் பொன்களை வைத்துக்கொண்டு என்னை நோக்கி, "ஓ பிராணவல்லபா; இதோ இந்தத்திரவியங்களை யேழைகளுக்குத்தானம் செய்யும். தருமந் தலைகாக்கும் எங்கள்பேரில் மோஹத்தை விட்டுக்கடவுளைப் பஜியும். நீர் ஆர்ஜ்ஜித்த திரவியத்தை உமது இஷ்டப்படித் தானம் பண்ணும். கோதானஞ்செய்யும். வைகுண்டபதவிக் கிடைக்மாறு சாளக்கிராமதானஞ் செய்யும். பூதான கிருகதானமேனும் செய்யும். ஸ்மசான சமானமான இக்கிருகாபிமானம் உமக்கு இன்னும பந்திக்கின்

றது. உமக்கும் எங்களுக்குமுள்ள சிநேகம் சந்தையிற் கூடியவழிப் போக்கருடைய சினேகம் போன்றதென்றறியீரா? புத்திரமித்திர பந்து களத்திர கிருகாதிகளின் றுணைநுபந்த மென்றறியீரா? எமபடர்களோ மிகக் கொடியராயிற்றே! நரகங்களோ அனந்தபேதமாய் நெருப்புப் போலச் சுவாலித்துக் கொண்டிருங்கின்றனவே? இத்தகைய விஷயங் களெல்லாம் தேவரீர் செய்யும் புராணப்பிரசங்கத்திற்றான் அடியாள் தெரிந்துகொண்டனன். நீங்கள் இவைமுற்றும் மறந்து விட்டீர்போ லும். இத்திரவியாதிகளில் ஆசக்தி அதிகமாகச்செலுத்தி நிற்பீரெனி னும் அவை வீட்டினளவேநிற்கும். புத்திரமித்திர பந்துக்களோ ஸ்மசானத்திற் பிரிவார்கள். யானோ வாயிற்கடையில் நிற்பேன். தாம் செய்தசுகிர்த துஷ்கிருத்தியங்களே தமமைநிழலைப்போற்றொடர்ந்து விடாது பற்றிவந்து அதற்குரிய பயனைப் பையத்தரும. ஆகையால் போனநாட்கு இரங்குவதில் பயனென்னே? இனியேனும் தருமத்தை ஆசரியும். தேகமும் உறுப்புக்களும் திடமாக இருக்கும்போதே ஈஷணைதிகளைவிட்டு சதா சத்கதிக்கு ஏதுவான சத்காரியத்தைச்செய் யவேண்டும்" என்று பலநற்போதனைகளைப் புகட்டினள். யானோ அவர்கள் மொழிக்குச் செவிகொடாமல், ஐயோ! நான் அநியாய மாய் என்பெண்டு பிள்ளைகளையிழந்து போகிறேனே! இனி அவர்க ளுக்கு நாதன் ஒருவருமில்லையே! அவர்கள் எவ்வாறு ஜீவிப்பார்கள்; இப்பொருள்களை யெல்லாம் யாவர் காப்பாற்றுவார்கள்! இவைகள் எவ்வாருமோ! என்று நான்போகும் வழியைச்சற்றும் யோசியாது பலவாறு துக்கித்துக்கொண்டே பிராணனைவிட்டேன். உடனே பய ங்கரரான யமபடர்கள்வந்து என்னை யிழுத்துக்கொண்டு கொல்லு வெட்டு குத்து அறு தெறு எய்யென்று பற்றிக்கொண்டு பலவித மான நரகங்களில் தள்ளினார்கள். இங்ஙனம் ஏழுமன்வந்தரம் வரை யில் நரகாநுபவஞ்செய்து மலப்புழு ஜன்மமெடுத்து, நூறுஜன்மம் காக்கையும், பத்துஜன்மம் பன்றியும், ஐந்துஜன்மம் பருந்தும், பத்து ஜன்மம் கழுகும், ஏழுஜன்மம் குள்ளநரியும், நாலுஜன்மம் தவளையு மாய் ஜனித்தேன். இப்பொழுது கார்த்திகைமாசத்தில் இந்தநெல்லி மரத்தின் நிழலில் பிராமணர் பாதத்தின் ஸ்பரிசமடைந்து ஜலத்தில் ஸ்நாநஞ்செய்ததினால் எனது பாவங்கள்போய்ப் பூர்வஞானமுண் டாயிற்று. இனியான் சுவர்க்கசுகம்பெற்று மீண்டும் விஷ்ணுபக்த னய்ப் பூலோகத்தில் ஜனித்துப் பிறகு வைகுண்ட மடையப்போ கின்றேன்.

சர்ப்பத்தின் பூர்வஜன்மம்.

நீயோ காஞ்சிபுரத்தில் வசித்த ஓர் கிருபணனான வைசியன்; நீ கார்த்திகைமாசத்தில் பாலாற்றில் ஸ்நாநஞ்செய்து என்னிடத்தில் புராணச்சிரவணம் பண்ணிக்கடைசியில் எனக்குத் தக்ஷிணைகொடாமற் போய்விட்டனை. அதினால் அநேக நீசஜன்மங்களையெடுத்துக் கடைசியில் ஒரு வேடனாகப்பிறந்து காட்டில்வேட்டையாடித் திரியுங்காலத்தில் ஓர் யானையினால் துரத்தப்பட்டுச் சோமவாரத்தில் இராத்திரி நதிஜலத்தில் நெல்லிமரத்தின் அருகேயிருந்த ஒரு சிவாலயத்தில் வெறுப்புடன் விழுந்து இறந்தனை. அந்தப்புண்ணியத்தால் நீ சிவசாயுஜ்யத்தை யடையப்போகின்றனை. இப்பொழுது உனது வாயினின்றும் விடுபட்டுக் குற்றுயிராயிருக்கிறவெனக்கு மரணவேதனை யதிகமாயிருக்கிறது இனி நீ இங்ஙனம் ஒருபொழுதும் பரஹிம்சை செய்யாதேயென்று சொல்லித் தவளை சிவனைவிட்டு உடனே வானத்தில் ஓர் திவ்விய புருடனாய் விமானமேறிச் சுவர்க்கஞ் சென்றது. என்று நாரதர் அருளிச்செய்தார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரிமகத்துவத்தில்
கஉ-வது அத்தியாயம் முற்றிற்று.

---

பதின்மூன்றும் அத்தியாயம்.

## சோமவார விரதத்தின் மகிமை.

———:O:———

மீண்டும் யுதிஷ்டிரர் நாரதரைநோக்கி, "சுவாமி! எல்லா மாதங்களிலும் துலாமாதம் எங்ஙனம் சிறந்ததோ? அங்ஙனமே எல்லா வாரங்களிலும் இந்து வாரஞ் சிறந்தது. அதிலும் கார்த்திகைமாசத்திய சோமவாரம் மிகச்சிறந்ததல்லவா? அங்ஙனஞ் சோமவார விரதத்தை யநுஷ்டித்து நற்கதியடைந்தவரில் ஓர் திருஷ்டாந்தம் அடியேனுக்கு உரைக்கவேண்டும்" என்று பிரார்த்திக்கவே நாரதரும் கூறுவார்.

மாதங்களில் கார்த்திகையும் வாரங்களுக்குள் இந்துவாரமும் உத்தமமானது. கார்த்திகைமாதம் முப்பதுதினமும் பிதிர்த்தினங்களுக்குச் சமானமாகும். இந்நாட்களில் விஷ்ணுவுக்கு தீபாராதனை செய்தவனுடைய பிதிர்க்கள் நரகவாசிகளாயினும் சுவர்க்கமடைவா

கள். சோமவாரத்தில் சிவசந்நிதானத்தில் நெய்தீபம்வைத்தால் அக்குலம் மேன்மையடையும். கார்த்திகை சோமவாரத்தில் சிவபூஜை செய்பவன் பிரமஹத்தியாதிகளை ஓட்டி அக்ஷணமே முக்தனாவான். கிருதயுகத்தில் இக்கார்த்திகைமாத சுத்தநவமியில் இந்திரன் ஜனித்தான். சர்வகாம சமிர்த்தியடைய விரும்பினவன் கார்த்திகை சோமவார திரயோதசி அல்லது நவமியிலும் சிவபூஜைசெய்யில் அக்ஷய பலனைப்பெறுவன். எட்டுயாமங்களிலும் ருத்திராபிஷேகஞ் செய்தால் அவன் ஈஸ்வரனேயாவான். கார்த்திகை சோமவாரத்தில் உபவாசமிருந்து பிரதோஷகாலத்தில் அபிஷேக முதலியவற்றைச் செய்து மறுநாள் பாரணஞ்செய்பவன் சிவனேயாவன். நிஷ்காமனாய் அர்ச்சித்தால் சிவைக்யமடையலாம். காம்யத்தால் சுவர்க்கமடையலாம். பாபிகளாயினும் கார்த்திகை சோமவாரத்தில் சாயங்காலம் வரையில் உபவாசமிருந்து பூஜித்து இரவிலுண்பவன் பரிசுத்தனாவான். கார்த்திகைமாதத்தில் நெல்லிமரநிழலில் சிவவிஷ்ணுவைப் பூஜித்தவன் சொலற்கரிய பலனையடைவான். மேற்படி சோமவாரத்தில் விசுவேசனுக்கு பாலாலும் நீராலும் அர்க்கியம் கொடுக்க வேண்டும். (அர்க்கிய மந்திரம்.—(నమశ్శివాయ శాన్తాయ నమస్సామ్బాయ శమ్భవే । గృహాణార్ఘ్యం మయాదత్తం సఫలంవ్రతమస్తు మే॥) அம்பிகையாருக்கு (అంబికాయైనమస్తుభ్యం నమస్తేదేవిపార్వతి । గృహాణార్ఘ్యం మయాదత్తం సుప్రీతావరదాభవ) இம்மந்திரத்திலும் ஸ்கந்தமூர்த்திக்கு (సుబ్రహ్మణ్యమహాభాగ కార్త్తికేయ సురేశ్వర । గృహాణార్ఘ్యం మయాదత్తం సర్వసమ్పత్ప్రదోభవ॥) இம்மந்திரத்தாலும் அர்க்கியஞ் சமர்ப்பிக்கவேண்டும். அரசனே இதை திடமாகச சிந்திக்கக்கடவை. என்று அதின் மகிமையையும் பலனையும் விஸ்தாரமாயுரைத்து அங்ஙனம்புரிந்து நற்கதியுற்றவரின் கதையைச்சொலல ஆரம்பித்தார.

• கோதாவரி தீரத்தில் சகலசாஸ்திர பாரங்கதனான விந்தன் எனும் ஓர் பிராமணனிருந்தனன். அவன் கேவலம் பிறர்பொருளைக் கவர்வதிலேயே ஆஸக்தியுடையவனாய் டம்பத்துக்காகவே மேனியெங்கும் பஸ்மோத்தூளனஞ்செய்து ருத்திராக்ஷதாரணஞ்செய்தும் மகாசிவபக்த சிரோமணிபோல் பொய் வேஷந்தாங்கி சுமார் ஐயாயிரம்பொன் சம்பாதித்து தன் சம்சாரத்தைப் போஷித்துவந்தனன். இங்ஙனமிருக்கையில் ஒருநாள் அமாவாஸ்யைவந்தது. அன்று நடுமத்தியானத்தில் அவன் தர்ப்பணம் முதலிய யாதுஞ் செய்யாமல் தனதுபிள்ளை பெண்சாதி பேரன்மார்களுடன் மிஷ்டான்னமாய்ச்

சாப்பிடப்போகையில், ஓர் ஏழையான அதிதிப்பிராமணன் பசியாலும் நோயாலும்வருந்தி அவனிடத்தில் அன்னம் யாசித்தான். விந்தனென்பவனோ கடுஞ்சினமடைந்து அவனைநோக்கி, "அடா மூடா! நீ தர்ப்பணஞ்செய்யாமல் இங்குவந்து அன்னங்கேட்கலாமா?" என, அதிதி "ஐயா! ஆபத்துக்குப் பாவமில்லை. எனக்குப் பசி களைசெய்கின்றது. இந்தக்ஷணம் கொஞ்சம் அன்னங்கொடாவிடில் எனதுயிர் போய்விடும் போலிருக்கின்றது. ஸ்நாநஸந்தி செய்யாமல் அந்நியருடைய கிருகத்தில் செய்யப்படுகிற சிராத்தம் நரகத்துக்கு ஹேதுவானது. ஆதலின் ஓர் கவளமன்னங்கொடுத்து எளியேனுயிரைக் காப்பாற்றவேண்டும்" என்று பலவாறு கண்ணீருகுத்து நின்று பிரார்த்தித்துக்கேட்டும் அந்த விந்தன் கிஞ்சித்தேனும் கருணையில்லாமல், "அன்னமில்லை போ! போ!" என்றுரைத்துத் துரத்த; அவ்வேழைப் பிராமணனும் மெல்லமெல்ல மற்றொரு வீடுசென்றான். விந்தனோ சனிதுலைந்தது என்றுசொல்லித் தன்னுடைய புத்திர பௌத்திர பந்துவர்க்கங்களுடன் சுகமாகச்சாப்பிட்டான். அப்பொழுது அவனுடைய பிதிர்த்தேவதைகள் அவன் அங்ஙனஞ் சிராத்தஞ் செய்யாமல் புஜித்ததினாலும், பசிக்கு அன்னம் வேண்டிவந்த அதிதியைத் துரத்தினதினாலும் மிக்ககோபமுற்று, "இவன் சீக்கிரத்தில் அழிந்து போகக்கடவன்" என்று சாபங்கொடுத்துச் சென்றனர். அன்று இராத்திரியே சோரர்கள்வந்து அவனது தனங்களைக்கொள்ளையடித்துக்கொண்டு அவனதுவீட்டில் நெருப்பையும் பற்றும்படி வைத்துவிட்டுப் போயினர். அச்சமயத்தில் விந்தன்வெளியே போயிருந்தமையால் அவனொருவனுமே உயிர்தப்பிப் பிழைத்தான். அவனுடைய பெண்சாதி பிள்ளைகள் எல்லோரும் அக்கினிபகவானுக்கு ஆகாரமானார்கள்.

பின்னர் விந்தன் ஐயோவென்று அழுதுகொண்டு ஐந்துயோஜனைதூரத்திற் கப்பாலிருந்த பிரமேசுவரமென்ற ஓர் சிவாலயத்தையடைந்து, மனதில் மிக்கவருத்த மிருப்பினும் அதனைத்தெரிவிக்காமல் மேலுக்கு மஹாசிவபத்தனைப்போல் பாவனைகாட்டி எவ்விதத்தால் திரவியமகப்படும்? என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்குநாளில் ஒருநாள் கார்த்திகை மாசத்திய சோமவாரம் சம்பவித்தது. அப்பொழுது அவன் விபூதி ருத்திராக்ஷமணிந்து சிவத்தியானஞ் செய்பவன்போலப் பாசாங்குபண்ணிப் பொருளேக்கத்தினால் இராத்திரி முழுதும் நித்திரையில்லாமலிருந்து, மறுநாள் அருணோதய வேளை

யில் எல்லோரும ஸ்நாநஞ்செய்யப்போன தருணம்பார்த்துத் தேவா லயத்திற்சென்று, ஒருவர்க்குந் தெரியாமல் அம்பிகையினுடைய கர்ணாபரணத்தையும் ஒட்டியாணத்தையும் அபகரித்துக்கொண்டு, ஓட்டம் பிடித்தனன். அத்தணத்தில் பூசைசெய்யுமாறுவந்த அர்ச்சகன் அம்மணியாருடைய பூஷணங்களைக் காணுமற்றியங்கி வெளியேவந்து பார்க்கையில், அங்கே ஓடுகின்ற விந்தனைக்கண்டு வெகு வேகமாய்ச்சென்று, "அடா! நீதானே திருடன்" என்று சொல்லிக் கையிலிருந்த ஆயுதத்தினால் ஓரடி அடித்தனன். விந்தனும் அர்ச்சகனைத் தன்கையிலிருந்த தடியால் தாக்கினான். உடனே இருவரும் மாண்டார்கள். அப்பொழுது யமபடர்கள் மகாபாவியான விந்தனை நரகத்துக்குக் கொண்டுபோகுமாறு அநேக ஆயுதங்களுடன் வந்தார்கள். அப்பொழுது சிவகணங்கள்வந்து யமபடர்களைத் துரத்தி அடித்து, "யமகிங்கரர்களே! அவ்வந்தணனை விடும் விடும்" என்று விடுவித்தார்கள். பின்னர் இருதிறத்தாருக்கும் தொந்தயுத்தம் நடந்து யமகிங்கரர்கள் சிவகணங்களால் தோல்வியடைந்து தங்கள் யஜமானனிடம்போய் நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னார்கள். யமதருமராஜனும் அவர்களைச் சமாதானப்படுத்திச் சித்ரகுப்தனோடு ஆலோசித்து, தனது கிங்கரர்களைப் பார்த்துக் கூறுவான். "கிங்கரர்களே! யான் சற்றும் ஆராயாமல் அவ்விப்பிரனைக் கொண்டுவர உங்கட்கு இப்பணியைப் பணித்திட்டேன். உமக்கேயன்றி எனக்கும் சிவாபராதம் சம்பவித்தது. எஜமானனிமித்தம் சேவகன் கஷ்டமனுபவிக்கினும் புண்ணியம் லபிக்கும்" எனவே, யமகிங்கரர்கள் "சுவாமீ தருமதத்துவங்கள் எத்தகையது? அவற்றை எங்கட்குத் தெளிவாய்க் கூறவேண்டும்" என்று கேட்டார்கள். யமனும் அவர்களை நோக்கி, "கிங்கரர்களே! கேட்பீர்களாக. சரீராந்தம் ஹரி ஸ்மரணை செய்வது பாவஹாரமாக்கும். சாளக்கிராமதானம் பரோபகாரம் சாதுக்களை அநுசரித்தல் லோபத்தை வர்ஜஜித்தல் விஷ்ணுபூசை விஷ்ணுதகாச்சிரவணம் ஆகிய இவைகள் புண்ணியங்களாம். நாஸ்திகரும் ஸதாநிஷ்டூர சித்தரும் பிராணிகளில் தயையில்லாமல் புத்திர மித்திர களத்திரங்களில் அதிமோஹானுபவருமே எனதுலகத்தை யடைவார்கள். தருமஞ்செய்பவரும் தயாளுவும் சாளக்கிராமதானஞ் செய்பவரும் சிவலிங்கதானஞ் செய்பவரும் ஏற்றார்க்கு ஈவாரும் நிஷ்காமிய சித்தரும் நித்தியநைமித்திக கருமங்களை ஆசரிக்கிறவரும் என்னையும் என்னகரத்தையும் ஒருபோதும் காணார்கள். கூரா

பானராயினும், சோரராயினும் நாஸ்திகராயினும் துர்ச்சனராயினும், தேகாவசானத்தினுல் ஹரியை ஸ்மரித்தால் ஹரிபதவியையடைவார்கள். சம்போ! கிரீசா! ஹரா! சங்கரா! பார்வதீசா! ஸ்ரீசந்திரசேகரா! மகேசா! ருஷபத்துவசா! என்று துதிகளைச்செய்து சோமவார உபவாச ஜாகாரஞ்செய்தால் சிவலோகஞ் சேர்வார்கள். இந்தவிந்தன் என்பவன் மகாபாவியா யிருந்தபோதிலும் கார்த்திகைமாசத்திய சோமவாரத்தில் மேலுக்காகிலும் சிவதரிசனஞ்செய்து இராத்திரி முழுதும் தூக்கமில்லாமல் இருந்தமையால் சோமவாரவிரதம் அனுஷ்டித்தவர்கள் அடையும் பலனையடைந்து, சிவஸாயுச்சியஞ் சென்றனன். இவன் பூர்வம் இந்த இந்துவாரத்தில் பிறர் தன்னை தாதா என்று கூறும்படி இசசித்து, ஒருபுராணிகனுக்கு பன்னிரண்டு வராகன் தக்ஷிணையும் ஒரு சிவநாபமும் பாணலிங்கமும் தானஞ்செய்தான். அப்புண்ணிய விசேடத்தால் இம்மகத்தான பலனையு மடைந்தனன். இனி நீங்கள் இங்ஙனம் சோமவார விரதத்தை யனுஷ்டிப்பவர்பக்கலிலும் சிவபக்தி விஷ்ணுபக்தி செய்பவரிடத்திலும், அணுகவேண்டாம். என்றுரைத்ததுமன்றி, அவர்களுடன் யமனும் சிவபெருமானிடஞ்சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். ஆதலின் ஓ! தர்மபுத்திரனே சோமவார விரதத்தின் மகிமை இப்படிபட்டது. என்று நாரதர் அருளிச்செய்தார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில

கரு-வது அத்தியாயம முற்றிற்று.

---

பதினைந்காம் அத்தியாயம.

## ஸ்நாநவிதி.

—:0:—

பின்னர் அகஸ்தியர் சொன்னதாவது:—அரசனே! இப்பொழுது நான் உனக்குத்துலாஸ்நாந விதியைச்சொல்லுகிறேன். சற்று ஸாவதானமாய்க் கேட்பாய். சாதாரணமாய் நியமமில்லாமல் துலாஸ்நாநஞ்செய்தால் பாபங்கள் போகும். நியமநிஷ்டையுடன் துலாஸ்நாநம் செய்தால் முக்தியுண்டாகும். அங்ஙனம் விதிஸ்நாநம் செய்ய உத்தேசித்திருப்பவன் துலா ஸங்கிராந்திக்கு முதல்நாளை

பிராமணபோஜனம் செய்வித்து, தாம்பூலதக்ஷிணை கொடுத்துத்தான் ஆரம்பிக்கப்போகின்ற துலாஸ்நாந ரூபமான விரதமானது நிர்விக்கினமாய் முடியவேண்டும் என்று அவர்களைப் பிரார்த்தித்து, அனுமதிபெற்றுக்கொண்டு, ஒருவேளை போஜனம் செய்து, மறுநாள் உதயத்தில் எழுந்து ஆசமனம் செய்து, ஹரியைஸ்மரித்துக் கிராமத்துத் தென்மேற்கு மூலையில் வெகுதூரஞ்சென்று தலையை வஸ்திரத்தினால் மூடிக்கொண்டும் வாயைக்கையால் பொத்திக்கொண்டும் பூமியில் செத்தைகளைப்பரப்பி அவற்றின் மேரில் ஜலமலவிஸர்ஜஜனங்களைச் செய்யவேண்டும். மார்க்கத்திலும் தைவப்பிராமண ஸந்நிதியிலும் நதியிலும் வயல்களிலும் வரப்பிலும் மரத்தின்மேரிலும் மற்றும் சுத்தவிடங்களிலும் இருந்துகொண்டு ஜலமல விஸர்ஜஜநம் செய்யக்கூடாது. மலவிஸர்ஜஜனம் செய்தபிறகு ஆண்குறியை இடதுகையால் பிடித்துக்கொண்டு சென்று புற்றுமண் எலிவளையில் இருக்கும் மண் இவைதவிர வெறுமணல்களில் ஏதேனும் கொண்டு ஒருசாண் ஆழமுள்ள ஜலத்தின் அருகேயிருந்து குதத்துக்கு பதினாறுதரமும், இடதுகரத்துக்கு பத்துதரமும், வலதுகரத்திற்கு ஏழுதரமும், இரண்டுகால்களுக்கு எவ்வேழுதரமும், மண்ணிட்டுக்கொள்ளவேண்டும். ஜலஸ்பரிசம் மாத்திரம் செய்தால் அப்பொழுது ஆண்குறிக்கு ஒருதரமும் கைகால்களுக்கு மூன்றுதரமும் பிரக்ஷாளனஞ் செய்துகொள்ளவேண்டும். அப்படிக்கொள்ளும் மண்ணும் நெல்லிக்காய் அளவே இருக்கவேண்டும்; சுசியாம்படி இங்ஙனம் சௌசஞ் செய்தபிறகு அந்த இடத்தையும் சுத்திசெய்யவேண்டும். அன்றேல், தானும் அசுசியாவதுமன்றித் தனது பிதிர்க்களையும் அங்ஙனம் செய்கிறான். இப்பொழுது சொன்ன சௌசவிதி கிரகஸ்தனுக்கு எடுத்தது. பிரமசாரிகளுக்கு இதுபோல் இரண்டுமடங்கு. வாநப்பிரஸ்தருக்கு மூன்றுமடங்கு. யதிகளுக்கு நான்குமடங்கு. ஸ்திரீ சூத்திரர்களுக்குச் சௌசம் இவ்வளவென்று கணக்கில்லை. பொதுவாய் எல்லோருக்கும் மனச்சுத்திதான் விசேஷமானது.

இங்ஙனம் சௌசமானபிறகு மலவிஸர்ஜஜனமானால் பன்னிரண்டு முறையும் மூத்திரவிஸர்ஜனமானால் ஆறுமுறையும், வாய்கொப்பளிக்கவேண்டும். பின்னர் முழங்கைவரையில் நன்றாய் அலம்பிக்கொண்டு ஆசமனஞ்செய்யவேண்டும், அது எப்படி என்றால், கிழக்கு முகமாகத் திரும்பியிருந்துகொண்டு மூன்றுவேத தியானத்தோடு உழுந்து முழுகு மவ்வளவு ஜலம் அல்லது அகங்கையின் ரேகை

மறையுமவ்வளவு ஜலத்தைக் கையை கோகர்ணம்போல குவித்துத் தேவதீர்த்தமெனனும கைவிரல்நுனியால் ஜலமெடுத்து, சூரியனைத் தியானித்துப் பிரமதீர்த்தமென்னும் பெருவிரல் அடியால் உட்கொள்ள வேண்டும். பின்னர் தந்ததாவனஞ்செய்து ஸந்தியாவந்தனத்தை விதிப்பிரகாரம் செய்து முடித்துத் தர்ப்பாஸனத்திலிருந்து காயத்திரீஜபத்தைச் செய்யவேண்டும். காலையில் கைகளை முகத்துக்கு நேரேவைத்துக்கொண்டும், மத்தியானத்தில் தோளுக்கு நேரேவைத்துக்கொண்டும், மாலையில் நாபிக்குநேரே வைத்துக்கொண்டும், விரல்களின் நடுவே வெளியில்லாமல் ஜபம்செய்யவேண்டும். ஜபம் செய்யுங்கால் இவ்வளவு ஆவிர்த்தியென எண்ணிக்கொள்ளவேண்டும். எண்ணிக்கையில்லாமல ஜபஞ்செய்தால் அதுநிஷ்பலமாய்விடும். எண்ணும் விதம் எங்ஙனமெனில் கைவிரல்களின் கணுக்களை எண்ணவேண்டும். அக்ஷமாலை முதலியவற்றால் எண்ணக்கூடாது. முதலில் பவித்திரவிரலின் நடுக்கணுவில் ஆரம்பித்துப் பிரதக்ஷிணமாய் ஒவ்வொரு கணுவையும் எண்ணிக்கொண்டு ஆட்காட்டிவிரலின் அடிக்கணுவரையில் எண்ணவேண்டும். பாம்புவிரல் என்கிற நடுவிரலின் மேல் கணுபோக மற்ற விரண்டுகணுக்களும் மேருவென்று சொல்லப்படும். அதனைக் கடக்கலாகாதாகையால் அவ்விரண்டு கணுக்களையும் எண்ணாமல் மற்றக்கணுக்கள் பத்தையும் எண்ணவேண்டும். இங்ஙனம் ஜபம் செய்தபிறகு முறைப்படி ஔபாஸநாதிகளைச் செய்து துளஸீதளத்தினால் ஸாளக்கிராம சிலா ரூபியான ஸ்ரீமந்நாராயணனை யாராதிக்கவேண்டும். இங்ஙனம் நியமத்துடன் இருந்து துலாஸ்நாநஞ் செய்து ஹரியை ஆராதிப்பவர் சூரியமண்டலவாசரான ஸ்ரீமந்நாராயணனை யடைவார்கள். மேலும் காலையிலும் மாலையிலும் ஔபாஸனம் புரிவோர் உத்தமலோகத்தை யடைவார்கள். துளஸீகாஷ்டாக்கினியில் ஔபாஸநஞ் செய்பவர் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவார்கள். எவனுடைய சிதையில் ஒரு துளஸீகாஷ்டமாகிலும் வைக்கப்பட்டிருக்கின்றதோ அவன்மகாபாவியாயிருந்தாலும் முக்தியடைவான். ஔபாஸநாக்கினியில் ஹோமாதிகள் செய்தாலல்லது ஒருவன் முக்தியடையான். அநக்கினிமாயிருப்பவனுக்கு எப்பொழுதும் நரகவாசமேதவிர வேறில்லை. முன்னம் விசுவாமித்திரர் தனது ஆச்சிரமத்திற்கு அதிதியாகவந்த வஸிஷ்டமகா ருஷிக்குத் தான்செய்த தபசுக்களின் புண்ணியத்தில் ஐந்துகோடி புண்ணியம் அளித்தனர். வஸிஷ்டரோ தனது ஆச்சிரமத்துக்கு வந்த விசுவாமித்திருக்குத் தான் ஒருசாயமௌபாசனத்தின் புண்ணியத்தைத்

தத்தஞ்செய்தனர். அந்தப்புண்ணியம் விசுவாமித்திரர் கொடுத்த தைவிட அதிகமாயிருந்தது என்றார்.

ஆக்கினேய புராணத்தில் காவேரி மகத்துவத்தில்
கச-வது அத்தியாயம் முற்றிற்று.

---

பதினைந்தாவது அத்தியாயம்.

## சந்தாபநனென்னும் பிராமணன் கதை.

:0:

வாரீர் அரசனே! இந்த ஔபாஸந விஷயத்தைப்பற்றி முன்னம் தர்மர்த்தி தர்மலன் என்பவருக்கும் யமனுக்கும் நடந்த சமவாதத்தைச் சொல்லுகிறேன் கேளும். சாளக்கிராமமென்னும் புண்ணியக்ஷேத்திரத்தில் சந்தாபநனென்னும் ஓர் மறையோன் இருந்தனன். அவன் மகாதயாவானாகவும் புண்ணியாத்மாவாகவும் எல்லா சாஸ்திரங்களையு முணர்ந்தவனாகவும் இருந்ததுமன்றிப் பிரதிதினமும் பத்தினிசமேதனாயிருந்து ஔபாஸநஞ் செய்துவந்தனன். அவனுக்குத் தர்மர்த்திதாமலன் எனவிரண்டு குமாரர்களிருந்தார்கள். அவன் அவர்களைநோக்கி, "ஓ புத்திரசிகாமணிகளே! நீங்களிருவரும் ஒருநாளாகிலும் ஔபாசனமின்றியிருக்கவேண்டாம்." என்று உபதேசித்துத் தன்ஜீவகாலாந்தியத்தில் தனது பெண்சாதியுடன் திவ்யவிமானமேறிச் சுவர்க்கஞ் சென்றனன். அவனது புத்திரர்களும் அவனுக்குச் செய்யவேண்டிய உத்திரகிரியைகளை முடித்தபிறகு அவ்விருவரில மூத்தவனான தர்மர்த்தியென்போன் தன்தகப்பன் சொல்லியவண்ணம் பிரதிதினமும் ஸபத்நீகனாய் ஔபாசனஞ் செய்து, வந்த அதிதிகளைப் பூஜித்து வந்தனன். இளையவனான தர்மலனென்பவனோ எப்பொழுதும் அதிதிபூஜை கோபுரமண்டபப் பிராகாராதி நிர்மாணம், கோதான பூதான ஹிரண்ணிய தானங்கள் இவைமுதலிய தர்மங்களைச் செய்து வந்ததுமல்லாமல் அநேகதிவ்விய தேசயாத்திரைசெய்து, அநேகபுண்ணிய தீர்த்தங்களின் ஸ்நாநம் செய்து, வேதாத்தியயனம் செய்துவந்தவன். இங்ஙனமிருக்கையில் அவன் தகப்பனுடைய சிராத்ததினம்வந்தது. அப்பொழுது தர்மலன் பிறந்தகத்திற்குப் போயிருந்த தனது பத்தினியைச் சிறுமியென்று நினைத்துக் கூட்டிக்கொண்டு வராமலும் ஔபாஸநம் பண்ணாமலும் சிராத்தம் செய்தனன். ஔபாஸனமின்றிச் செய்த சிராத்தம் இராக்ஷஸார்ஹமானதால் அவனுடைய பித்ருதேவதைகள்

கோபங்கொண்டு "நீ நிஸ்ஸந்தானனும் நிர்த்தனனும் ஞானஹீன னுமாகக் கடவை." என்று அவனைச்சபித்து விட்டுப்போயினர். இவர்கள் பின்னர் காலாந்தரத்தில் யமன் இந்த ஸஹோதரர் இருவ ரையுமிட்டுக்கொண்டு வரும்படி விமானமனுப்ப யத்தனிக்கவே, அருகிலிருந்த சித்திரகுப்தன் அவரைநோக்கி, "சுவாமி! இவ்விருவ ரில் இளையவன் அனேக தானதருமங்களைச் செய்திருந்தபோதிலும ஔபாஸநமின்றிச் சிராத்தம் செய்தமையால் நரகில தள்ளத்தக்க வன்." என, யமனும் அப்படியே மூத்தவனான தர்மத்திக்கு விமா னத்தையும இளையவனான தாமலனுககுப பயஙகரமான வேட்டை நாய்களையும் அனுப்பினன். உடனே தர்மத்தி விமானமேறி யம னிடம உற்றனன். தாமலனோ வேட்டைநாய்களால் தேகமெங்கும் கடியுண்டு மிக்கவேதனையுடன் யமனிடம் இழுத்துக்கொண்டு போ கப்பட்டு, நரகில் தள்ளப்பட்டனன். அதனைக்கண்ட தாமத்தியும் யமனைநோக்கி, "சுவாமி! எனது தம்பி மகாபுண்ணியசாலி யன்றோ? அங்ஙனமிருக்க அவனுக்கு இந்நரகாநுபவம் நேரிடக் காரணம் யாது." என, யமதர்மராஜனும அவனைநோக்கி, "அப்பா தர்மத்தி யே! உனது தம்பியாகிய இவன் அனேக தானதர்மங்களைச் செய்தா னென்றாலும் ஔபாஸநஹீநனாயிருந்தமையால்இககதிக்காளானான். எனத் தர்மத்தி "அப்படியானால் யான்செய்த ஔபாஸனத்தின் புண் ணியத்தில் இவனுக்குப் பாதிகொடுக்கின்றேன். இவனும என்னு டன் சுவர்க்கம் செல்லட்டும்." என, யமன் அங்ஙனன் செய்யக் கூடாது. அன்னபானாதிகளைத தானஞ்செய்யும் விஷயத்தில் பாத் திரவிசாரணை வேண்டியதில்லை. இந்தப் புண்ணியத்தைத் தானஞ் செய்யும் விஷயத்திலோ ஸத்பாத்திரமறிந்தே கொடுகக வேண் டும். இல்லாவிடில் தானஞ் செய்தவனுக்கும பாபமுண்டாகும்; ஆதலின் நீ உனது தமபிக்காக விசாரப்படாமல இந்த விமா னத்திலேறிக்கொண்டு சுவர்க்கம்செல். இவனோ அநேககோடி வரு ஷம்வரையில் நரகவேதனையை யனுபவிக்கக் கடவன்,, என்றுசொ ல்லி அவனை யனுப்பிவிட்டுத் தாமலனை நரகில்வீழ்த்தினன். ஆகை யால் பிராமண ஜன்மமெடுத்தவனுக்கு ஔபாஸநம முக்கியமானது. ஒருவன் இவ்வாறு அக்கினிஹோத்திரஞ் செய்துகொண்டு துலாஸ்நா நஞ் செய்து ஸ்நாநஸமாப்தி தினத்தில் தன்சக்திக் கியன்றபட்டில் பிராமணபோஜனம செய்விக்கவேண்டும என்றார்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

கரு-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினொன்றாம் அத்தியாயம்.

# சந்தனுமகாராஜாவின் விருத்தாந்தம்.

—:*:—

மீண்டும் நாரதர் தர்மபுத்திரரைநோக்கி, "ஓ தர்மநந்தனா! முன்னாள் உனதுபாட்டனான சந்தனுமகாராஜன் துலாகாவேரி ஸ்நானமகத்துவத்தினால் யோஜனகந்தி யென்பவளை விவாகஞ்செய்து சுகித்திருந்தான்." என, யுதிஷ்டிரன் "அஃதெங்ஙனம்? அடியேனுக்கு அதனை விரித்துரைக்க வேண்டும்." என்று பிரார்த்திக்க; நாரதர் சொல்லத் தொடங்கினார்.



கேளும் அரசனே! முன்னம் பீஷ்மபிதாவான சந்தனுராஜன் ஒருநாள் வேட்டை மேற் காதல்கொண்டு வேட்டை சைநியங்களோடு புறப்பட்டுக் காட்டையடைந்து, வலையிறுக்கி பறையடித்து தூறுகளைச்சரித்து விலங்குகளை எழுப்பி கடும்வேட்டையாடி மிகச் சோர்ந்து, யமுனை நதிக்கரையில் வந்து உலவாநின்றபோது, அங்கு அக்கரையினிடத்தில் யோஜநகந்தியென்ற ஓர் அழகிய பெண்ணைக் கண்டு, அதிமோகிதனாய் அவளைப்பார்த்து, "ஓ கன்னிகாமணியே! நீயார்? உன்தேயமெது? உன் அதராமிர்தம் உண்பவன் யாவன்? அவன் புண்ணியம் எத்தன்மையதோ? நீ என்னை இராஜ்யத்துக் காய

பாணத்தின் பாதையிலிருந்து விலக்கவேண்டும்." என்று பிரார்த்திக்க; அவள் அரசனை நாணத்தோடு நோக்கி, "அரசனே! நான் சுதந்தரியல்லவே தந்தை கட்டளையின்படி முனிவர்கட்கு ஓடமவிட்டுத் திரிபவள்" என்றாள். கேட்ட அரசன் ஓடக்காரர்களுக்குத் தலைவனான அவளது தகப்பனிடஞ்சென்று, அப்பெண்ணை யாசிக்க; அந்தத் தாசபதியும், "அரசரே! தாம் எனது புத்திரிக்குப் பிறக்கும் பிள்ளைக்கு முடிசூட்டும் பக்ஷத்தில் தடையின்றி இவளை விவாகஞ் செய்துகொள்ளலாம்." என்றான். அரசன் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு எனக்குப் பிரியனான கங்காபுத்திரனுக்குப் பட்டங்கட்டுவதை விட்டு, நீசனான இச்செம்படவன் பௌத்திரனுக்கு முடிசூட்டுவது நமது சந்திர வம்சத்திற்கழகோ' என்று தன்னுள் எண்ணி, ஒன்றும்பேசாமல் வீடுவந்துசேர்ந்தனன். என்றாலும், அவனுக்கு அந்த யோஜநகந்தியின் பேரிலிருக்கும் மோகம் போகாமல் எப்பொழுதும் அதேசிந்தையா யிருந்ததினால், அங்குமத்தியான நேரத்தில் அதிதியாகவந்த தௌம்யரென்னும் பூஸுரரைக்கூட மரியாதை செய்யாமல் ஏக்கம் பிடித்திருந்தான். இதனை ஞானதிருஷ்டியாலறிந்த தௌம்யரும் அவனை நோக்கி, "அரசனே! நீ அதிதியான வெனக்கு மரியாதை செய்யாமல் மனதில் ஏக்கமுற்றிருக்குங் காரணம எனக்குத் தெரிந்தது. நான் இவ்வபராதத்தைப் பொறுத்தேன்.

நீ ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்குச் சென்று, துலாகாவேரி ஸ்நாநஞ் செய்து, இப்பொழுது யான் உனக்கு உபதேசிக்கப்போகிற ஸ்ரீரங்கராஜநாமரத்தின ஸ்தவமென்னும்ஸ்தோத்திரத்தினால் ஸ்ரீரங்கநாதனைத் துதித்து ஆராதித்து வருவாயேயானால், உனதுமனோரதம் பலிக்கும் என்றுசொல்லி அந்தஸ்தோத்திரத்தை யவனுக்கு உபதேசித்து, அவனால் உபசரிக்கப்பட்டுத் தமதிடஞ்சென்றனர். பின்னர் சந்தனுராஜனும் தனது அரசாக்ஷியை மந்திரியிடம் ஒப்புவித்துத் தனது பத்துக்கோடி பத்தினிமார்களுடனும், அநேக மாயிரம் இரத கஜ துரக பதாதிகளுடனும், ஸ்ரீரங்கக்ஷேத்திரமடைந்து அங்கு விதிப்படி துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து, அரங்கநாதனைத் தௌம்யர் உபதேசித்த ஸ்தோத்திரத்தினால் துதிப்பானாயினன்.




ஸ்ரீரங்கராஜ நாமரத்ந ஸ்தவம்.

అస్య శ్రీరఙ్గరాజనామరత్న స్తోత్రమహామన్త్రస్య - వేదవ్యాసో భగవానృషిః - అనుష్టుప్ఛన్దః - భగవాన్ శ్రీవిష్ణుర్దేవతా - శ్రీరంగశాయీతిబీజం - శ్రీకాన్త ఇతి శక్తిః - శ్రీప్రదఇతికీలకం - మమ సమస్తపాపనాశనార్థే శ్రీరంగరాజ ప్రసాద సిద్ధ్యర్థే జపేవినియోగః

శ్లో॥ శ్రీరఙ్గశాయీ శ్రీకాన్తశ్శ్రీప్రదశ్శ్రితవత్సలః ।
అనన్తోమాధవో జేతాజగన్నాథో జగద్గురుః ౧।

సురవర్యస్సురారాధ్యస్సురరాజానుజః ప్రభుః ।
హరిర్హతారిర్విశ్వేశ శ్శాశ్వతశ్శమ్భురవ్యయః । ౨

భక్తార్తిభంజనో వాగ్మీవిన్ధ్యోవిఖ్యాతకీర్తిమాన్ ।
భాస్కరశ్శాస్త్రతత్త్వజ్ఞః దైత్యశాస్తామరేశ్వరః ॥ ౩॥


నారాయణో నరహరిర్నీరజాక్షో నరప్రియః ।
బ్రహ్మణ్యోబ్రహ్మకృద్బ్రహ్మా బ్రహ్మజ్ఞోబ్రహ్మపూజితః ॥ ౪।

కృష్ణఃకృతజ్ఞోగోవిందో హృషీకేశోఽఘనాశనః ।
కేశిప్రభంజనః కాంతోనన్దసూనురరిన్దమః ॥ ౫

రుక్మిణీవల్లభో రామో బలభద్రో బలానుజః ।
దామోదరో హృషీకేశో వామనో మధుసూదనః ౭ ॥

పూతః పుణ్యజనధ్వంసీ పుణ్యశ్లోకశిఖామణిః ।
ఆదిమూర్తిర్దయామూర్తిః శాన్తమూర్తిరమూర్తిమాన్ ॥

పరంబ్రహ్మ పరంధామ పావనః పవనః ప్రభుః ।
ఇన్దుశ్చన్ద్రోదధిశ్శౌరిః సంసారామ్బుధితారకః ॥ ౮ ॥



ఆదితేయోచ్యుతోభానుః శఙ్కరశ్శివఊర్జితః ।
మహేశ్వరో మహాయోగీ మహాశక్తిర్మహాప్రియః ॥ ౯ ॥

దుర్జనధ్వంసకశ్శిష్టసజ్జనోపాస్తిసత్ఫలం ।
పక్షీన్ద్రవాహనోఽక్షోభ్యః క్షీరాబ్ధిశయనోవిభుః ౧౦ ।

జనార్దనో జగద్ధేతుర్జితమన్మథవిగ్రహః ।
చక్రపాణిశ్శఙ్ఖధారీశార్ఙ్గీఖడ్గీగదాధరః ॥ ౧౧ ॥

பின்பு அத்திவ்விய தேசத்தில் அநேக மண்டபங்களைக் கட்டுவித்து, மீண்டும் தனது பட்டணமாகிய ஹஸ்தினாபுரியை நோக்கிச் செல்லுகையில், மத்தியில் மாகிஷ்மதியெனும் பட்டணத்தில் தங்கி, அங்கிருந்த மிலேச்சர்களோடு யுத்தஞ்செய்து, தனது சேனையையெதிர்த்துவந்த முப்பத்திரண்டு அக்ஷௌஹிணி வீரர்களையும் துலாஸ்நாந பலத்தினால் வென்று, ஜயலக்ஷ்மியுடன் தனது புரஞ்சேர்ந்து அந்த யோஜனகந்தி தனக்கு எங்ஙனம் கிட்டுவாளென்று ஸதா சிந்தித்துக் கொண்டிருந்தனன். அதனையறிந்த அவன்புத்திரனான பீஷ்மனும் தாசபதியிடஞ் சென்று, அவன் பெண்ணைத் தன் தகப்பனுக்கு விவாகஞ் செய்து கொடுக்கும்படி வேண்ட, அவனும், "இளவரசே உமக்குப் பிறக்கும் பிள்ளைக்கு இராஜ்ஜியத்தைக் கொடாமல் எனது புதல்விக்குப் பிறக்கும் குமாரனுக்குப் பட்டங் கட்டுவிப்பதாக வாக்களிக்கும் பக்ஷத்தில் இவளை உமது தகப்பனருக்கு மணஞ் செய்விக்கலாம்.,, எனவே கங்காபுத்திரனான பீஷ்மனும் அவனை நோக்கி, "ஓ பரதனே! நீ கேட்டவண்ணம் உனது பேரனுக்கே பட்டங் கட்டி வைக்கிறேன், ஒருவேளை எனக்குப் பிறக்கும பிள்ளைக்கு முடிசூட்டி விடுவேனென்கின்ற சந்தேகம் உனக்கிலலாம லிருக்கும்படி இதோ யான் தேவர்கள் முன்னிலையில் சபதம் செய்துகொள்ளுகிறேன். அஃதாவது:— எனது ஜீவகாலபரியந்தம் யான் விவாகமே செய்துகொள்ளுகிறதில்லை; நித்தியப்பிரமசாரியாய் இருக்கக்கடவேன்" என்றான். இதனைக்கேட்ட தேவர்கள் அவனுக்குப் பிதாவினிடத்திலிருக்கும் பக்திக்கு மெச்சி, அன்றுமுதல் அவனுக்குப் பீஷ்மனெனப்பெயரளித்தார்கள். தவிரவும், அவனுக்கிருக்கும் பிதுருபக்தியின் மகிமையினால் அபுத்திரவான்க ளனுபவிக்கவேண்டிய புத் என்னும் நரகம் அவர்க்கு உண்டாகாம லிருக்கக்கடவதென்றும், அவன் தனக்கிஷ்டமான காலத்தில் ஜீவனை விடலாமென்றும் வரமளித்தனர். பின்னர் சந்தனுவும் யோஜநகந்தியை மணந்து, அவளிடத்தில் சித்திராங்கன் விசித்திரவீரியன் என இரண்டு புத்திரர்களைப் பெற்றனன். ஆகையால், யாவனொருவன் துலாகாவேரியில் பக்தியுடன் ஸ்நாநம் செய்கிறானோ அவனுக்குப் புத்திரலாபம் தனலாபம் முதலியன உண்டாகின்றன. ஸ்நாநமில்லாது ஹரிபூசைசெய்யில் குன்மநோயடைவன் தடாகத்தில் ஸ்நாநமாடினால் நாலுபிடி மண்ணையெடுத்து வெளியிலிட்டே ஸ்நாநமாடவேண்டும். விஷ்ணுபூசை செய்ய அசக்தனா துளசிதளம் ஒன்றையேனும் சிரசிற்றரிக்க வேண்டும். ஆஷாட

சுத்ததுவாதசி சிரவண சுத்ததுவாதசியில் பாலால் ஹரிக்கு அபி டேக மியற்றுபவன் சுத்த தரித்திரனாயினும் தனவானுவான். அமா வாசை பூசை கயாச்சிராத்த பலனைத்தரும், பூசைக்கு புட்பங்களில் பழமைபட்டன உதவா. துளசி தளமாத்திரம் பழமையானாலும் வர் ஜ்ஜிக்கக்கூடாது. கிருகத்தன் செய்யும், (கண்டினி-அறுத்தல்) (பேஷினி-அரைத்தல்) (சுல்லி-வறுத்தல) (உதகும்பி-வேகவைத்தல்) (உபஸ்கரம்-பெருக்கல்) இத்தொழிள்களே அவனுக்குப் பஞ்சஹத்தி யெனப்படும். இவை ஒழியவே அவன் பஞ்சயக்யங்களைச் செய்ய வேண்டும். புராணபடனங்கள் பண்ணவேண்டும். இதிகாசமான இரா மாயண பாராயணம் ஒவ்வொருவனுக்கு அவசியமானது. அதில் ஒரு சுலோகத்தைச் சிரவணம் பண்ணுலும் மகாபலனைத்தரும். அதன் விருத்தாந்தத்தைச் சற்றுக் கூறுகிறேன்.

இராமாயண பாராயண மகிமை.

---

அக்ரபூமியென்னும் கிராமத்தில் சிவமூர்த்தி என்ற ஒரு பிராம ணனிருந்தார். அவர் எவ்விதத்திலும் இழிந்தவரல்லர். சகலசாத்திர புராண இதிகாசவல்லவர். அவர் சுகுணங்களை இவ்வளவென்று கூற முடியாது. அத்தகையாரை அக்கிராம பிராமணர்கள் ஸ்ரீமத் ராமாய ண காலக்ஷேபம் செய்யும்படி மன்றாடி வேண்டிக்கொண்டு திரவிய பூஷணங்களைத்தந்து உபசரித்தார்கள். அவரும் அங்ஙனமே கால க்ஷேபஞ் செய்து வந்தார். கிராமவாசிகள் சில நாளில் அவரிடத்தில் அசூயைகொண்டு இவர் மிக்க திரவியாசக்தி யுடையாரென்று தூஷி த்து திரஸ்கரித்தார்கள். சிவமூர்த்தியும் அவர்களை வைது கிராமத் தைவிட்டுக் குடும்பத்தோடு அப்புறம் போயினர். கிராமவாசிகளோ? இராமாயண கதாப்பிரசங்கியாரை அவமதித்த மகத்தான தோஷத் தால் வறியோர்களாய் நாளுக்கு நாள் வியாதியஸ்தராய் ஜீர்ணதசை யடைந்து இறந்து, வேத்திரகியத்தில் பிராமணர்களாய் ஜனித்து, பகாசுரனுக்கு இரையானுர்கள், இராமாயண சிரவணஞ்செய்த புண் ணியத்தால் பின்னும் சூரியவம்சத்தில் சகரர்களாய்ப் பிறந்து, கங் கையால் சுத்தமடைந்து, பரமபத மடைந்தார்கள். சிவமூர்த்தியோ? அக்கிராமத்திற்கு அருகில் வெகுநேரம் காத்திருந்தும் கிராமத் தாரால் அழைக்கப்படாமற் பசிநோயால் வருந்தி, சிலநாள் தரித்தி ரமடைந்து, பின்பு இறந்து பகாசுரனுனர். அப்பார்ப்பானிடம் அத்தகைய பாவம் யாதோ எனில், அக்கிராம விப்பிரர்கள் தன்னை

அவமதித்ததற்கு இராஜனிடம் முறையிட, அவன் அவர்களைத்தண்டித்தான். அந்த பிராமணஹிம்சையால் இந்த தைத்திய சன்மமடைய வந்தது. அத்தைத்தியன் பின்பு பீமனால் அதமடைந்து, இராமாயண காலக்ஷேபஞ்செய்த விசேடத்தால் பரிக்ஷித்துவாய் இனிப் பிறப்பான். இராமாயண காலக்ஷேபத்தின் பயனும், அதைச் சிரவணஞ் செய்யும்பயனும், இப்படி இருக்கின்றது.

ஸ்ரீஹரியினது பக்தி மிகுந்தவனாய் சத்கைங்கரியத்தில் ஈடுபடுபவன் நரகமடையவே மாட்டான். வைகுண்டபதவியைப் பெறுவான். என்று இங்ஙனம் நாரதர் தருமபுத்திரர்க்குத் துலாகாவேரிஸ்நானமகிமையையும் ஸ்நாநஞ் செய்யும் முறைமையையும் புராணச்சிரவணம் பண்ணும் விதத்தையும் இன்னும் பலதர்மோபதேசங்களையும் அருளிச்செய்தனர். இவ்வாறு நாரதர் உபதேசித்த தர்மங்களைக் கேட்ட தாமபுத்திரனும் கண்களில் ஆநந்தபாஷ்பம் ஆறாய்ப்பெறுக அவரை ஸ்வர்ணபுஷ்பங்களால் அர்ச்சித்து நான்குமுறைவலம்வந்து அனேக நமஸ்காரங்களைப் பிரியத்துடன் செய்து அவருடைய பிரிவினை யாற்றக்கூடாதவனாய் அருகில் பயபக்தி விசுவாசத்துடன் நின்றனன். நாரதரும் அவ்வுதிஷ்டிரனுக்கு ஆறுதல்சொல்லி யவரை ஆசீர்வதித்துப்போக யத்தனிக்கையில் திரௌபதியும் மற்றநான்கு சகோதரர்களும் தனித்தனியே அவரையுற்று நமஸ்கரித்து அவரிடத்தில் தர்மோபதேசம் கேட்க விரும்பினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
கசு-வது அத்தியாயம் முற்றிற்று.

---

பதினேழாவது அத்தியாயம்.

## நாரதர் திரௌபதிக்கு மோக்ஷோபாயம் கூறுதல்.

—:*:—

அவர்களில் முதலில் திரௌபதி நாரதரை நமஸ்கரித்து மிக்க விநயத்துடன் வினவினதாவது:—"சுவாமி! அடியாள் தங்கள் தரிசன விசேடத்தால் தன்னியளாயினேன். யான் எவ்வித கைங்கரியஞ்செய்யில் நற்கதி கிடைக்கப்பெறுவேன். சிறியாளான எனக்கு ஞானோபதேசம் பண்ணியருளவேண்டும்." என்று பிரார்த்திக்கவே, அவரும் அங்ஙனமே தர்ம இரகசியத்தை உரைக்கத்தொடங்கினார்

கேளாய் திரௌபதியே! ஸ்திரீகள் நற்கதி யடையவேண்டுமா னால் புருஷர்களைப்போல் அனேக திவ்விய க்ஷேத்திரயாத்திரை செய்தல், காயக்கிலேசத்துடன் தபஸ்ஸுகளைச் செய்தல், முதலிய நிர்ப் பந்தங்களில்லை. அவர்கள் செய்யவேண்டிய தர்மமெதுவெனில், பதிசிச்ரூஷை யொன்றுதான். புருடனுயிரோடிருக்கையில் எவள் உபவாசமிருந்து பற்பல விரதங்களைச் செய்கின்றாளோ? அவள் தனது பர்த்தாவின் ஆயுளை அபகரிப்பதுமன்றித் தானும் படுநரகில் வீழ்கின்றாள். பிரமசாரிக்கு குருசிச்ரூஷையும், புத்திரனுக்குப் பிதுர் சிச்ரூஷையும், ஸ்திரீயினுக்குப் பர்த்ரு சிச்ரூஷையுமே முக் கியமானது. ஆதலின் நீ உனது பார்த்தாக்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் சாப்பிட்டவுடன் சேஷத்தைச் சாப்பிட்டு, அவர்கள் நித் திரைசெய்த பின்னர் நீயும் நித்திரைசெய்துவந்து, அவர்கள் உன்னை யழைத்த காலத்தில் குனிந்ததலையுடன் அருகில் வந்து அவர்கள் உன்னோடு சம்பாஷித்தகாலத்தில் தங்கவிடையளித்து, அவர்கள் உன்மீது கோபித்தகாலத்தில் எதிர்நின்று பதில்பேசாமல் புன்சிரிப் புடன் இருக்கக்கடவை. விளையாட்டிலாலேயும் பிரியமில்லாதவார்த் தையை யுரைக்கலாகாது. பிரதிதினமும் அஷ்டாக்ஷரஜபம்செய்து கொண்டு அகத்திலும் புறத்திலும் பரிசுத்தையாயிருந்து, வந்த அதிதிகள் ஸந்நியாசிகள் முதலிய சாதுக்களுக்கு ஸத்காரஞ்செய்து கொண்டிருக்கடவை. தவிர, உனது பர்த்தாக்களுக்கு கைகால் பிடி த்தல், விசிறிகொண்டு விசிறுதல், தாகத்தினால் பீடிக்கப்பட்டகால த்தில் வெகு பிரீதியுடன் நீரளித்தல், முதலிய பர்த்ரு சிச்ரூஷை செய்துகொண்டிரு. இங்ஙனம் நீ செய்வாயேல் உனக்கு நல்லபதவி கிடைப்பதிற் சந்தேகமில்லை. இது விஷயத்தில் யான் உனக்கு ஓர் கதை சொல்லுகிறேன் கவனமாய்க்கேட்பாயாக.

முன்னம் ஒரு எறும்பானது தன்முற்பட்ட ஒரு பெண்ணெ றும்பைநோக்கி, "ஓ அழகியபெண்ணே! இப்பொழுது யான் உனது தேக ஸௌந்தரியத்தைப்பார்த்து மிகவும் மதன பீடிதனாயிருக்கின் றேன். நீ வேறு ஒருவனுடைய பத்தினியாயிராமல் கன்னிகையா யிருக்கும் பக்ஷத்தில் எனக்குப் பாரியையாக உடன்படுவாயா?" என அந்தப் பிபீலிகையும் அதற்குடன்பட இரண்டு எறும்புகளும் அன் றுமுதல் வெகுநட்புடன் இல்லறநடாத்தி யநேக எறும்புகளைப்பெற் றுச் சுகித்திருக்குங்காலத்தில் ஓர்நாள் ஆண் எறும்பு தனதுமனைவி யை வீட்டில் இருக்கச்செய்து, தான் தன் பரிவாரங்களுடன் ஆகா

காரங்தேடும்படி புறப்பட்டுப் போயிற்று. அத்தருணத்தில் வேறொரு ஆண் எறும்பு வந்து வீட்டில் ஏகாந்தமாய் இருந்த அந்தப் பெண்ணெறும்பைக்கண்டு காமமீறி "ஓ பெண்ணே! நீ இவ்வெறும்பு ஜன்மமாயிராதிருந்தால் உன்னைத் தேவரும் நச்சுவார். நமது கூட்டத்துள் உன்னை நச்சாதவர் யாவரிருப்பார். ஒருவருமே இரார். இது உண்மை. காமம் அனலையொத்தது. அதனால் தகிக்கப்படுகின்றேன். என்னுயிருக்கு இரங்கி என்னோடுகலந்து இன்பந்தருவையேல், தேவவின்பமும் வெறுப்பேன். பெண்மணியே! தயைகூர்தல் வேண்டும். இளமன முடையார் இளம்பெண்களென்பார். உன் மனம் இன்னும் வலிதாக இருக்கிறது மிக்க ஆச்சரியமே." என்றது. அதைக்கேட்ட அப்பெண்ணெறும்பு "அடா பாவி! பஞ்சபாதகத்துள் காமம் மிக்ககொடிய தென்பதை யுணராயா? அக்காமத்தைத் தனக்குரிய மனைவியினிடமே காலங்கடந்து அனுபவிப்பானேல் அதற்கே மகாபாபம் கூறியிருக்கிறதே? பிறன்மனைவியான என்னைத் தனித்த இடத்தில் இவ்வாறு பாவமெனப்பாராது கூறலாமா? பிறன் மனைவியை நயந்தவன் மறுபிறப்பில் ஆணாய்ப்பிறந்தும் பெண்வேடம் தரிப்பானன்றோ? அற்ப இன்பத்துக்குப் பெறும்பயனைப் போக்கத் துணியலாமா?" என்று வெகுபுத்தி கூறிற்று. அது என்ன நற்புத்தி சொன்னபோதிலும் கேளாது பலாத்காரமாய்ப் புணர ஆரம்பிக்கவே, அந்தப் பெண்ணெறும்பும் தனது பாதிவ்ரத்தியத்தினது மகிமையினால், அதனைச் சாம்பராய்ப் போகும்படிச் சபித்துவிட்டுத் தனது நாயகன் வந்தவுடன் நடந்தசங்கதிகளைத் தெரிவித்தது. அந்த ஆண் எறும்பும், "ஆ எனது பிரியநாயகி! யான் உனைப்போன்ற பதிவிரதையையுலகிற்கண்டதில்லை." என்று சொல்லி அந்தப் பெண்ணெறும்பைப் பலவாறு கொண்டாடிற்று. இங்ஙனம் இவ்விரண்டு எறும்புகளும் ரகஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்ததை ஸ்திரீகளுப்ப் படுத்துக்கொண்டிருந்த கேகயதேச கேகய மகாராஜன் தனது வரத்தின் விசேடத்தால் அறிந்து, தான் எல்லா ஜந்துக்களுடைய பாஷைகளையு மறிந்தவனாதலால் கலீர் என்று நகைத்தனன். உடனே அருகிலிருந்த அவனது மகிஷியும் அவனை நோக்கி, "இப்பொழுது நீர் அகாரணமாய் நகை செய்யக்காரணம் யாது?" எனக் கேகயராஜன் யான் இப்பொழுது நகைத்ததற்குக் காரணத்தை யுனக்குத் தெரிவித்தேனேயானால், எனது தலையுடனே வெடித்து யானிறந்து படுவேன் என்பதற்கு யாதும் ஐயமில்லை. ஆகையால் அதனைப்பற்றி நீ கேட்கவேண்டாம்." என்றனன்.

அதைக்கேட்டும் அவள் பாபத்துக்குச் சற்றும் அஞ்சாதபடி, அவனைக்கண்டவாறு வைது, "நீ இப்பொழுது என்னைப்பார்த்து ஏதோ பரிகாசமாய் நகைத்திருக்கிறாய். அங்ஙனமில்லாவிடில் சிரித்தகாரணத்தை யெனக்கு நீ ஏன் தெரிவிக்கக்கூடாது. அப்படி எனக்குத் தெரிவிப்பதினால் உனது உயிர்போனாலும் போகட்டுமே. நீ அதனைச் சொல்லாவிட்டால் எனது உயிரைமாய்த்துக் கொள்ளுவேன்.'' என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லவே, கேகயனும் பரமதுஷ்டையான அவளைநோக்கி, "அடீ! சண்டாளீ! உலகத்தில் ஸ்திரீகளுக்குப் புருஷனல்லவோ தெய்வம்? அப்படிப்பட்ட புருஷனை நீ இங்ஙனம் கடுஞ்சொற்களைச் சொல்லிப் பிடிவாதம் பிடிப்பதினாற் பாழ்நரகில் வீழ்வாய். இவ்வளவு துஷ்டையான நீ உயிரோடிருப்பதிலும் இறந்துபோவது உத்தமம். ஆகையால் நீ என்னைத்துறந்தாலும் சரி; அல்லது இறந்தாலும் சரி; இனி நான் உன்முகத்தைப் பார்ப்பதில்லை." என்று சொல்லி அவளை விலக்கிவிட்டுச் சுகமாயிருந்தனன். கேட்டாயோ திரௌபதியே! உலகத்தில் ஸ்திரீகள் அனேகமாய் இப்படிப்பட்ட குணமுடையவர்களாகவே யிருக்கிறார்கள். நீயோ மகாபதிவிரதை; உனக்கு நான் அதிகமாய்ச் சொல்லத்தக்கது யாதொன்று மில்லையென்றார். பின்னர் நாரதர் பஞ்சபாண்டவர்களை நோக்கிக் கூறுவார்:—நீங்கள் ஐந்துபேரும் பதிவ்ரதா சிரோமணியான திரௌபதியிடத்தில் ஜேஷ்டக்கிரமமாய் வருஷத்திற்கு ஒருவராக இருந்துகொண்டு உங்கள் குருவம்சத்திற்கு யாதொரு தாழ்வுமுண்டாகாமலிருக்கும்படி வாழ்ந்திருக்கக் கடவீர்கள். உங்களில் ஒருவன் திரௌபதியோடு கூடியிருக்குங் காலத்தில் மற்றொருவன் பார்த்துவிட்டால், அவன் ஒருவருடம் வரையில் தேசயாத்திரை செய்யக்கடவன். என்று அருளிச்செய்தார். பாண்டவர் ஐவரும் "சுவாமீ! தேவரீர் பாதத்தாணை கட்டளையிட்ட வண்ணமே யிருக்கிறோம்." என்று சொல்லிப் பின்னும் அவரிடத்தில் பல தர்மோபதேசங்களைப் பெற்று அவரைச் சுவர்ணபுஷ்பம் முதலியவைகளால் பூஜித்துப்பிரிய மனமில்லாதவர்களாய் கண்ணும் கண்ணீருமாய்க் கரைந்து வழியனுப்பிவிட்டுத் தங்களிருப்பிடம் வந்து நாரதருடைய கட்டளைப்படி வருஷம் ஒவ்வொருவராய்த் திரௌபதியுடன் வாழ்ந்திருந்தார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
கஎ-வது அத்தியாயம் முற்றிற்று.

## பதினெட்டாம் அத்தியாயம்.

# அர்ச்சுனனுக்கும் பிராமணனுக்கும் நடந்த சம்வாதம்.

—:*:—

பாண்டவர் ஐவரில் ஜேஷ்டரான தர்மபுத்திரர் திரௌபதியோடு சுகித்திருக்குங் காலத்தில் ஓர் பிராமணன் வந்து அரண்மனை வாசலிருந்துகொண்டு "ஓ அரசனே! முறையோ! முறையோ என்னை இரக்ஷிக்கவேண்டும்." என்று ஓலமிட்டனன். அதனைச் செவியுற்ற அருச்சுனன் உடனே அந்தப்பிராமணனிடம் வந்து, "ஓ பிராமணோத்தமா? நீர் ஏன் இங்ஙனம் முறையிடுகின்றீர்?' என, அவன் "ஐயா! யான் இத்தனைநாள் கஷ்டப்பட்டு நியாயமாய்ச் சம்பாதித்த தனங்களையும் மாடுகளையும், பசுக்களையும், எருமைகளையும், கள்வர் கொள்ளையாடிப் போய்விட்டார்கள். அரசன் விஷயபரனாயிருந்துகொண்டு முறைப்படிச் செங்கோற் செலுத்தாவிட்டாற்றான் இங்ஙனம் நடக்கும். அர்த்தராத்திரியில் கோக்கள் முதலியவை இவ்வாறு கள்ளஞ் செய்தற்குக் காரணம் இராஜனுடைய திரவிய காமியமே துஷ்குணமே காரணமாகும்." என அர்ச்சுனன் "ஐயா! உமது வீட்டில் களவுபோனால் அரசனையேன் நிந்திக்கின்றீர்? அது உமது தோஷத்தால் ஏன் நேரிட்டிருக்கலாகாது?" எனப், பிராமணன் மிக்கசினங்கொண்டு சொல்லுகின்றான்:—யான் எனக்கு நினைவு தெரிந்தகாலந் தொடங்கியே தற்காலபரியந்தம் யாதொரு அகிர்த்தியங்களையும் புரிந்ததில்லை. யான் பிரமசாரியாயிருந்தகாலத்தில் ஸாங்கமாக வேதாத்தியயனம், குருகுலவாஸம் பிக்ஷாசரணம் முதலிய ஸத்கருமங்களைச் செய்தேன். பின்னர் ஸத்குலப் பிரசூதையான ஓர்கன்னிகையை அலங்காரகன்னிகாதானமாக விவாஹஞ் செய்து கிரகஸ்தாச்சிரம நிலைகுலையாமல் இருந்துகொண்டு, அனேக புத்திர பௌத்திரர்களையும் பெற்று, அவர்களையும் நல்லொழுக்கத்தில் நடக்கும்படி செய்து, காவேரி கங்கை முதலிய புண்ணியதீர்த்தங்களில் ஸ்நாநஞ் செய்தேன். பரான்ன போஜனம் பரத்திரவியாபகாரம் பரதாரகமனம் துர்வியாபாராநுகூலம் முதலியவை செய்திலேன். எனது பாரியாளோ என்னோடு என்னிஷ்டத்திற்கு மாறாகாது ஒழுகுவாள். புத்திரர்களோ எம்மோடு தினமும் பிராதக்காலத்தில் காவேரி ஸ்நானமாடி ஸ்ரீ அரங்கநாதனைத் தரிசிப்பார்கள்.

பௌத்திரரோ சத்கரும பிரவேசரேயொழிய வேறுவித துர்க்காமத்திற் சற்றும் சென்றோரல்லர். என் குமாரத்திகளேயோ காலத்தில் சொர்ணாபரண பூஷிதராய்க் கன்னிகாதானஞ் செய்தேன். இருபத்தையாயிரம் பொன்களை நியாயமார்க்கமாய்ச் சம்பாதித்து சாதுக்களுக்கு உபகரித்துக்கொண்டு இங்ஙனம் யான் யாதொரு தோஷமானகாரியங்களையுஞ் செய்யாமலிருக்க; எனக்குத் தோஷம் எங்கிருந்து வந்ததென்று கோபத்தினாற் கண்கள் சிவக்கப் புருவங்கள் நெரியப் படபடத்துச் சொன்னான்.

உடனே அருச்சுனன் அவரைச் சாந்தப்படுத்திச் "சுவாமி! தேவரீர் சம்பாதித்த தனங்களைச் சாதுக்களுக்கு விநியோகப் படுத்திக்கொண்டு வருவதாய்ச் சொன்னீர்களே; அங்ஙனம் அந்தத்தனத்தை அடிக்கடி செலவழித்துவிட்டால் பின்னர் அதுகுறைந்துவிடுமேயல்லது விருத்தியடைய மாட்டாதே': எனப் பிராமணன் "சாதுக்கள் விஷயத்தில் செலவழித்த தனம் தனக்குத்தானே விருத்தியடையுமேயல்லது குறையாது: இவன் ஆபத்துக்கு வைத்துப் பாதுகாக்கத் துணிந்த திரவியம் பூமியில் புதைத்துவைத்தாலும் உதவாது. சாதுக்களுக்கு உபயோகித்தால் இது இம்மை மறுமைக்கும் உதவும்." என்றான். பின்னர் அருச்சுனன் அந்தப்பிராமணரது யோக்கியதைக்கு மெச்சி, நல்லது இக்கொடியில் உமது தனங்களையும் மாடுகளையும் வரவழைத்துக் கொடுக்கிறேன். திருடர் சென்ற மார்க்கத்தை மட்டும் காண்பியும் என்றுசொல்லி, ஆயுதத்தை எடுக்கும்படி உள்ளேநுழைந்தான். அப்பொழுது அங்கு யேகாந்தத்தில் ஸரஸமாய் விளையாடிக்கொண்டிருந்த தர்மபுத்திரரையும் திரௌபதியையும் பார்த்தனன். அப்போது அருச்சுனனைக் கண்டவுடன் திரௌபதியும் லஜ்ஜையுடன் ஒளித்துக்கொண்டாள். அருச்சுனனோ தலையைக்குனிந்து கொண்டவாறே ஆயுதத்தை யெடுத்துக்கொண்டு வெளியே வந்து பிராமணன் காண்பித்த மார்க்கமாய் வனத்திற்குட் சென்று, திருடர்கள் ஐயாயிரம் பேர்களையும் பலவிதபாணங்களாற் கொன்று அவர்கள் கவர்ந்துபோன தனங்களையும் மாடுகளையும் அந்தப் பிராமணனிடம் அளித்து, அடியேன் செய்த அபசாரத்தைப் பொறுத்து ரக்ஷிக்கவேண்டுமென்றான். பிராமணனும் வெகு சந்தோஷத்துடன் அவனை ஆசீர்வதித்துத் தனது இருப்பிடம் சென்றனன். பின்னர் அருச்சுனன் தர்மபுத்திரனிடஞ் சென்று, அவனையும் திரௌபதியையும் நமஸ்கரித்து "அண்ணா! தமது அனுக்

கிரகத்தினால் திருடர்களைச் சம்ஹரித்துப் பிராமணனுடைய சொத்துக்களையும் மீட்டுக்கொடுத்தேன். நாம் நாரதர் முன்னிலையில் செய்த சபதம் அஸத்தியமாய்ப் போகாமலிருக்குமாறு அடியேனுக்குத் தீர்த்தயாத்திரை செய்ய விடையளிக்கவேண்டும்" என்று அவரைப் பிரார்த்தித்தனன். தர்மபுத்திரரும் அவனைப்பிரிய இஷ்டமில்லாதவராயும், ஸத்தியத்தைப் பரிபாலனம் செய்யும் பேராசையொன்றாலேயே அவனுக்குச் செல்ல விடைதந்தார். உடனே அருச்சுனன் நிராயுதனாய் அனேகப் பிராமணருடன் புறப்பட்டுப் பிரபாஸதீர்த்தஞ் சென்று, அங்கு விதிப்படி ஸ்நாநஞ் செய்து, பதரிகாச்சிர மத்திற்குப் போய, அங்கு வியாஸபகவானைக் கண்டு



(அருச்சுனன்.) (வியாஸமுனி.)

நமஸ்கரித்து அவர் செய்த ஆதரணையைப் பெற்று, அவரை நோக்கி யுரைத்ததாவது, சுவாமி வஸுதேவ குமாரனை நமது கிருஷ்ணருக்குச் சுபத்திரை யென்று ஓர் அழகியதங்கை யிருப்பதாயும் அப்பெண்ணைப் பலராமர் துர்யோதனனுக்குக் கொடுக்கப் போகிறதாயும் கேள்விப்பட்டேன் அதுமுதல் எனக்கு அந்தப் பெண்பேரில் அதிக மோஹமுண்டாயிருக்கின்றது. ஆதலின் நான் அவளை எங்ஙனமாகிலும் மணம்புரிந்து கொள்ளும்படித் தேவரீர் ஒரு உபாயஞ் சொல்லவேண்டும்,, என்று மன்றாடிப் பிரார்த்தித்தனன்.

ஆக்கிநேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

கஅ-வது அத்தியாயம் முற்றிற்று.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

## வாதராயணர் அருச்சுனனுக்குச் சுபத்திராவிவாகம் லப்தமாம்படிக்குக் காவேரி ஸ்நானமாடும் விதங்கூறுதல்.

—(*)—

இங்ஙனம் அருச்சுனன் பிரார்த்திக்கவே, வியாசமகாமுனிவர் அன்பினோடு அறைவாராயினர். "அப்பா அருச்சுனா! நீ இப்பொழுது கொண்டிருக்கிற எண்ணம் மிகத் துர்லபமானது. ஆகிலும் நீ அச்சுபத்திரையை அடையும் படிக்கு உனக்கு ஓர் உபாயம் கூறுகின்றேன் கேள். அஃதாவது இலக்ஷ்மீஹ்ருதயம் என்றொரு ஸ்தோத்திர முண்டு. அது அதிபாவனமும் ஸர்வாபீஷ்டப் பிரதமுமானது. யான் அதனை நினக்கு உபதேசிக்கின்றேன். நீ பரிசுத்தனா யிருந்து கொண்டு பிரதிதினம் திரிசந்தியிலும் ஜபிப்பதுடன் கூட சுக்கிரவாரங்களில் விசேஷமாய்ச் ஜபம் செய்து வரவேண்டும். தவிர, ஸ்ரீரங்கக்ஷேத்திரஞ் சென்று துலாகாவேரி ஸ்நானஞ்செய்து ஸ்ரீரங்கநாதனையு மாராதித்து வரவேண்டும். பின்னும் கீழ்ச்சமுத்திரத்துக்கு இப்பால் இரண்டு யோசனை தூரத்தில் மாயூரமென்றொரு சிவக்ஷேத்திர மிருக்கின்றது. அங்கேயும் துலாஸ்நாநம் செய்து அங்கிருக்கும் சிவபெருமானை யாராதிக்க வேண்டும். பூர்வத்தில் க்ஷத்திரியராயிருந்த விஸ்வாமித்திர ருஷியானவர் இந்த மாயூர க்ஷேத்திரத்தில் காவேரிஸ்நாநம் புரிந்த புண்ணியத்தினால் அடைதற்கரிய பிராமண ஜன்மத்தை யடைந்தனர். ஆகையால் நீ சீக்கிரம் செல்லென்று அவனுக்கு விடையளிக்கவே, அருச்சுனனும் அவ்விடம் விட்டுப்புறப்பட்டுப் பிரயாகைக்குச் சென்று அங்கு ஸ்நாநஞ் செய்து ஜலத்திற்குள்ளிருந்து கொண்டே யந்த லக்ஷ்மீஸ்தோத்திரத்தை யநேகாவிர்த்தி ஜபம்செய்யவே, அங்கு உலூபி யென்ற ஓர் நாககன்னிகை முன்தோன்ற அவளைக் காந்தர்வ விவாஹஞ் செய்து அவளிடத்தில் அதிபலிஷ்டனான இராவானென்ற தநயனைப் பெற்றுப் பின்னர் காவேரியும் சமுத்திரமும் கூடுகிற இடமாகிய சங்கமுகத்துக்குச் சென்று ஸ்நாநஞ் செய்து, அநேக பிராமணர்களுக்குப் பத்துலக்ஷம் பொன்னை வழங்கிய பின்னர் சுவேதவனம் (திருவெண்காடு) மார்க்கமாய் மாயூரத்துக்கு வந்து, அங்கு துலாஸ்நாநஞ் செய்து, அங்குள்ள சிவபெருமானை யாராதித்து, வெகு வேகமாய்ப் புறப்பட்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தனன்.

அங்குத் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து துலாகாவேரி மகத்துவச் சிரவணஞ் செய்து பிரதிதினமும் பிராமணர்களுக்கு நூறு பொன் வழங்கி அரஙகநாதனை யாராதித்து, அனேக மண்டபப் பிராகாரகோபுரங்களைக் கட்டுவித்துச் சந்திரபுஷ்கரணில் ஸ்நாநஞ்செய்து, ஷோடசமகாதானங்களை அற்பிசி கார்த்திகை மார்கழி ஆகிய இம் மூன்று மாதகாலம் வரையில் செய்து, ஸ்ரீரங்கத்திலேயே வாஸஞ் செய்து வந்தான். பின்னர் தைமாஸத்தில் அங்கு நின்றும் சேதுவை நோக்கிப் புறப்பட்டு ஸத்தியகிரியில் தங்கி ஸத்தியகிரீசனை வணங்கி ஸத்தியபுஷ்கரிணிஸ்நாநஞ் செய்து, பின்பு ஹிரண்ய கசிபுவினது பயத்தினல் தேவர்கள் எல்லோரும் கோஷ்டியாய்ச் சேர்ந்து, சுகமாய் வசித்த இடமாய் கோஷ்டபுரம் என்ற பெயர் பெற்ற திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து, அமிர்தபுஷ்கரணியில் ஸ்நாநஞ் செய்து ஸ்ரீநரஸிம்மனைச் சேவித்து, அப்புறம் விருஷபாத்திரி (சோலைமலை)க்குச் சென்று நூபுரகங்கையில் ஸ்நாநஞ்செய்து அங்குப் பன்னிரண்டு நாளிருந்து பகவானை யாராதித்து மோஹனபுரஞ் சென்று பிரம்மதீர்த்த ஸ்நானஞ் செய்து முன்னம் அசுரரை மயக்கி அமரருக் கமுதீந்தவரும் மதுவெனும் அசுரனைக்கொன்று மலர்மகனுக்கு மறையை யளித்தவருமான ஸ்ரீஹரியை யாராதித்து, மத்ஸ்யாவதாரமெடுத்த இடமாகிய மதுரை யெனும் பாண்டியநகரையடைந்து, அங்குத் தன்னைச் சுயம்வரமாக வரித்த சித்திராங்கதை யெனும் பெயர்கொண்ட பாண்டியனது மகளைமணந்து, அவளோடு சிறிதுநாள் சுகித்து, பின்னர் ஸேதுவையடைந்து ஸ்நாநஞ் செய்து தநுஷ்கோடியிலும முழ்கி அங்கு முப்பது லக்ஷம் பொன்னைப் பிராமணர்களுக்குத் தானஞ் செய்து, தாசரதியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மகாலிங்கத்தை வணங்கி, அங்கு மாசிமாதம் முழுதுமிருந்து, மாகமகத்துவச் சிரவணஞ்செய்து மீண்டும மதுரைக்கு வந்து சித்திராங்கதையோடு சுகித்து, பின்னர் கர்ப்பவதியான அசசித்திராங்கதையுடன் சைத்திரோத்ஸவம் சேவிக்கக்கருதி ஸ்ரீரங்கம்வந்து சேர்ந்தனன்.

அங்குச் சித்திராங்கதையும பப்ருவாஹனென்ற புத்திரனைப் பெற்றனள். அருச்சுனன் சைத்ரோத்ஸவம் சேவித்துப் பின்னர் மேல்நாட்டை நோக்கிச் சென்று ஸஹ்யகிரியைக்கிட்டி ஹியாமலைக

ஸந்நிதியில் காவேரிஸ்நாநஞ்செய்து, கோகர்ண க்ஷேத்திரஞ்சென்று அங்கு மகாபலேசனென்னும் சிவபெருமானை யாராதித்து, மீண்டும் பிரபாஸதீர்த்தத்தை யடைந்து ஸ்நாநஞ் செய்து அவ்விடத்தில் தன்னோடு வந்த பிராமணர்களை நிறுத்தி, துவாரகைக்குச் சென்று ஏகாந்தமாய் ஓரிடத்தில் இருந்து கொண்டு, கௌதம ருஷியானவர் பூர்வம் எங்ஙனம் அகல்யை வலுவில் வந்தடையப் பெற்றாரோ அங்ஙனம் சுபத்திரை நம்மை வலுவில் வந்தடைவது எங்ஙனம்? என்று தனக்குள் பலவாறு ஆலோசித்தும் ஒன்றும தோன்றாமல் கடைசியில் சத்புருஷர்களுக்கு நிவாசமாக யோக்யமான விருக்ஷமும் ஆபத்தடைந்தோர்க்கு பரமமானகதியும், பக்தர்களால் பூஜிக்கப் பட்டவரும், ஸ்ரீலக்ஷ்மீகாந்தனுமான ஸ்ரீகிருஷ்ணனே எனக்குக் கதி யானவன். அனந்தனும், யதுவம்சநாதனும், பக்தார்த்தி பஞ்சனனும், தயாசீலனும, என்ற அருந்தமடங்கிய இச்சுலோகத்தால் ஆபத்ரக்ஷகனான கிருஷ்ணனை ஸ்மரித்தனன். அடியவர் முறைக்கு

శ్లో॥ నివాసవృక్షస్సాధూనాం ఆపన్నానాంపరాగతిః ।
భక్తార్తిభంజనశ్శ్రీమాన్ శ్రీకృష్ణస్సగతిర్మమ ।

அநந்தரமும் செவிசாய்க்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானும் உடனே ரதாரூடராய் அவனுக்குப் பிரத்தியக்ஷமாயினார்.


ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில

௧௯-வது அத்தியாயம் முற்றிற்று.

# இருபதாவது அத்தியாயம்.

## சுபத்திரா விவாகம்.

——— o: ———



ஸ்ரீகிருஷ்ணன்.　　அருச்சுனன்.

இங்ஙனம் ரதாரூடராய்ப் பிரத்தியக்ஷமான ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கண்டமாத்திரத்தில் அருச்சுனன் வெகு சந்தோஷத்துடன் அவர் திருவடிகளில் விழுந்து தொழுது "சுவாமி! பக்தவத்ஸலா! பவரோகவைத்யா! காரணனே யான் கொண்டுள்ள இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். அதாவது சுபத்ரா விஷயத்தில் யான் கொண்ட மோகம் அகத்தைவருத்துகிறது. அது முடிவு பெறுவதுதான், அடியேனது மனோரதத்தை நிறைவேற்றிரக்ஷிக்க வேண்டுவது உமது கடமை என்றான். கேட்ட ஸ்ரீகண்ணபிரானும் அவனை நோக்கி, அர்ச்சுனா! நீ இத்தருணத்தில் வார்த்தையாடின விஷயம் இவ்வடிவால் முடிவாகிறதில்லை. நீ ஸந்நியாசி வேஷம்பூண்டுத் துவாரகைக்குச் சமீபத்தில் உபவனத்தில்வந்து இருப்பாயாகில் யான் உனது அபீஷ்டம் நிறைவேறும்படிச் செய்விக்கிறேன்" என, அருச்சுனனும் "சுவாமி! யான் இப்பொழுது யதிரூபம் தரித்துக்கொண்டேனேயானால், பிறகு கிருஹஸ்தன் ஆகக்கூடாதே" என, கிருஷ்ணன் "அப்பா! அருச்சுனா காஷாயதண்ட மாத்திரத்தினாலும் வே

தாந்த காலக்ஷேபத்தினாலுமே ஒருவன் ஸந்நியாசி யாகமாட்டான். எவனொருவன் எப்பொழுதும் என்னையே மனதில்தியானஞ் செய்து கொண்டிருக்கின்றானோ அவன்தான் யதீசுவரன். அங்ஙனமல்லாமல் மனச்சுத்தியின்றி வேஷமாத்திரத்தினால் யதியாகவிருப்பவன் நரகில் விழ்வான். ஆகிலும் துவாபரயுகாந்தமாகிய இக்காலத்தில் யதிபோல நடிப்பதினால் தோஷமில்லை. கலியுகத்தின்மட்டும் அப்படிப்பட்ட ஸந்நியாசங்கூடாது. ஆகையால், நீ ஏதுமஞ்சாமல் யான் சொல்லியவண்ணம் யதிவேஷத்துடன் துவாரகையருகில் வந்திரு' என்று சொல்லி உடனே அந்தர்த்தானமாயினார்.

அருச்சுனனும் அவ்வாறே யதிவேடம்பூண்டு கமண்டல திரிதண்டங்களைத்தரித்தது துவாரகைக்கு அணித்தாயிருக்கும் ஓர்வநத்தில் ஓர்மலைக்குகையில் இருந்துகொண்டு, மகாயோகிபோலப் பாவனைசெய்து கண்களை மூடிக்கொண்டு மௌனவிரதத்துட னிருந்தனன். அக்காலத்தில் கபடநாடகனான கண்ணனும் உக்கிரஸேநன் பலராமன்முதலிய கோபாலர்களையழைத்து, "நாமெல்லோரும் வனபோஜநஞ்செய்துவரலாம் வாருங்கள்" என்று சொல்லிக் கபடமாய் பந்துக்களையும் அவர்களையும், மற்றையோரையும் அழைத்துக்கொண்டு அருச்சுனன் இருக்கும் மலையருகில்வந்து, சம்பிரமமாய் வநபோஜநஞ்செய்தார்கள். பின்னர் பலராமன் உக்கிரஸேநன் முதலியவர்கள் கண்ணனில்லாமல வேடிக்கையாய் அம்மலையைச்சுற்றி மனோரமணியமான இடங்களையும் தருவிருக்ஷங்களையும் அவைகளில் பூத்துமணக்கும் மலர்களையும மற்றும் வனத்தில்வாழும மிருக பக்ஷி சாலங்களையும் அவைகளின் சேட்டைகளையும் பார்த்துக்கொண்டு வருகையில், அங்கு யோகத்திலிருந்த அருச்சுன ஸந்நியாசியைக்கண்டு வெகுபக்தியுடன் நமஸ்கரித்து, "அடிகளே! தாங்கள் எங்களுடைய எல்லைக்குள் வந்திருந்தது அடியோங்கள் தங்களுக்குச் செய்யவேண்டியதைச் சொன்னால் உடனே அங்ஙனஞ்செய்ய சித்தமாயிருக்கின்றோம். கட்டளையிடவேண்டும். யாங்கள் தன்னியராகஇதுவே எது" என்று பலவாறு வேண்டியும் அவன் யாதும்பேசாமல் மௌனமா யிருந்ததையறிந்து; எல்லோரும் கிருஷ்ணனிடம வந்து, "கிருஷ்ணா! உன்னைவிட்டுத் தனியாய் நாங்கள் வனவேடிக்கைகளைக்காண விரும்பிசசென்றோம். அங்கு யாங்கள்கண்ட அதிமனோஉல்லாசத்தை நீ யனுபவிக்காது போயினாய்; அங்கு மலைப்பக்கமாய் ஓர் மகாயோகி யிருக்கின்றார். அவர் பிரமதேசஸ்வையும் தே



யோகீஸ்வரன்.



பலராமன.



கிருஷ்

கசசாயையும் நியமநிஷ்டையும் இஷ்டமுண்டாகப் பார்க்கத்தக்கவையாயிருக்கின்றன. அடா கிருஷ்ணா! இந்த யோகீஸ்வரரை யெப்படியாவது இட்டுக்கொண்டுபோய் நமது நகரத்தின் உத்தியானத்தில் ஓர் ஆச்சிரமங்கட்டி யதில் இருக்கும்படிச்செய்து பிக்ஷைபண்ணிவைத்தால் நமக்கு மிக்க க்ஷேமங்கிடைக்கும்" என்றார்கள். கிருஷ்ணனோ ஒன்றுந் தெரியாதவர்போல் அவர்களைநோக்கி, ஆம் நீங்கள்சொல்லியபடி ஓர் யதிக்குப் பிக்ஷைபண்ணிவைப்பதினால் பிதிர்க்கள் எல்லோரும் திருப்தியையடைவார்கள் என்பது வாஸ்தவமே. ஆகிலும் ஸந்நியாசி தானேவலுவில் பிக்ஷைக்கு வாராமலிருக்க அவனை ஒருவன்வலுவில் அழைத்துவரப்படாது. அல்லது வலுவில் வந்து ஏற்றுக்கொள்வானாயின் அவனை இந்திரன் நாய்களால் கடிப்பிப்பான் என்பர். அதனால் பிக்ஷைபண்ணிவைத்தவன் பிக்ஷைபண்ணவன் இவ்விருவரும் நரகத்தையடைவார்கள். ஆகையால் அவர் தாமாகவந்தாலல்லது நாம்போய்க் கூப்பிடுவது தக்கதன்று. ஆபத்காலத்தில் ஓரிரவுக்குமேலும் ஓரிடந்தங்கி உண்ணலாம். அப்படிச்செய்யினும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமே? நீங்கள் சொல்வது யுக்தமல்ல இவ்வெண்ணத்தை விட்டொழியும்" என்றனர்.

அப்பொழுது பலராமன் "கண்ணனே! இவ்வாறு பேசுதல் அடாது. அம்மகனீயரான யதிக்கு வேண்டுவனசெய்து அவர் குக்ஷியில் நமது அன்னம் விழச்செய்வதே யுசிதம். அதுவே நமது குல விருத்திக்கேது. இது அறியாது கூறுகிறாய்" என்று விடைகூறி

உக்கிரஸேநரைநோக்கி, "ஐயா! இந்தக்கிருஷ்ணன் கேவலம் சிறுவனாதலால் ஒன்றுமறியான்; இதுவோ மழைக்காலமா யிருப்பதுந் தவிர சாதுர்மாசகாலமா யிருக்கிறது. ஆகையால் அவரையிட்டுக் கொண்டுபோய் ஓர்மடத்திலிருக்கச்செய்து பிக்ஷைசெய்விக்கவேண்டும்" என்றுசொல்லி, எல்லோரும் அவனிடஞ்சென்று பிரார்த்தித்து வேண்டவும், சற்றுஞ் சலியாதுநின்ற அவ்வருச்சுனசந்நியாசி சிறிது போதுபோக்கி, கம்பீரமாகக் கண்விழித்துநோக்கி, அவர்களை ஆசிர்வதித்ததுபோல சிறுநகையரும்பி, விண்ணப்பித்தவைகளுக்கு சசந்திருப்பவன்போல் நடித்துகாட்டி, அவர்களது மிக்க மன்றாடலின் பேரில் துவாரகைக்கு வந்தனன். அந்த அருச்சுனனை ஓர் மடத்தில இருக்கும்படி செய்தார்கள். அருச்சுனனும் மௌனவிரதத்துடன் வீடுதோறுஞ்சென்று, பிக்ஷாடனஞ்செய்து, புஜித்துவந்தனன். இங்ஙனமிருக்கையில் பலராமன் மற்ற யாதவர்களைநோக்கி, இப்பொழுது மழைக்காலம் வந்துவிட்டது. யதீசுவரர்ச் சாதுர்மாசவிரதம் அநுஷ்டிக்கவேண்டும். ஆதலால் அவர் மடத்திலிருப்பது தகுதியன்று. நமதுவீட்டின் நந்தவனத்தில் ஓர் குகைக்குள் இருக்கச்செய்து உபசரிப்போம். எனவே, கண்ணன் "ஆகா! நன்று! நன்று! ஸந்நியாசியை வீட்டிற்குள் குடிவைக்கலாமா? விரக்தரான ஸந்நியாசிகள் எவ்விதத்திலும் பூஜ்யர்களேதவிர வேறில்லை. வேண்டுதலும் வேண்டாமையுமில்லாதவரானயதிகள் தாங்களே ஒன்றும் கோருதலே கிடையாது. அல்லது கோரிலும் அது யுக்தமாயினற்றன் நாமுந்தரவேண்டும். இல்லாவிடில் விடுதலேயுக்தம். அப்படியிருக்க; நீங்களாகவே காட்டிலிருந்தவரை நாட்டிலிருத்தினீர்கள். அதுவும்பொறாது வீட்டிலுமிருத்த இஷ்டமடைகிறீர்கள். இது எங்குபொறுக்கப்படுவது. மிக்க அழகும் யௌவனமுமுடைய கன்னிகள் நடமாடிக்கொண்டிருக்கிற விடத்தில இந்த யதியையிருக்கச்செய்வது அநுசிதம். அங்ஙனம் நாம்செய்வது உசிதமென்று நினையாதீர்கள். அவ்யதிகளுக்கு இடர்செய்வதாய் முடியுமேயன்றி வேறன்று. அது யாதெனில், தவமுடையார் காட்டில்வசிப்பது யாதுக்கெனில் எவ்வன ஸ்திரீகள் நோக்கமில்லாமைக் கன்றோ? அவ்வாறு நோக்கமுடையவராய் ஒருபோதேனும் அவரிடம் ஒருவார்த்தையாடப் பழகுவாராயின் அவர்மனத்திட்பம் எறும்பூறக் கற்குழியும் என்றபடி அலைந்துவிடுமன்றோ? முன்னம் மகாயோகியாயிருந்த ஸௌபரி என்பவர் ஜலத்திற்குள் தபசுசெய்துகொண்டிருக்கையில்

அங்குத் தம்பரிவாரங்களுடன்சென்று ஓர் மீனைக்கண்டு தானும அப்படியே பெண்சாதி பிள்ளைகளுடன் சூழ்ந்திருக்க வேண்டுமென்று நினைத்து உடனே தபசைவிட்டு மாந்தாதாவினது நூறுபெண்களையும் விவாகஞ்செய்து சிற்றின்பப் பிரியராரைன்றோ! கௌதமர் அஹல்யை தம்மால் சபிக்கப்பட்ட பிறகு ஆயிரம்வருஷம் ஜலத்திற்குள்ளேயிருந்தும அவளுக்குச் சாபவிமோசனமானபிறகு அவளுடன்கூடி ரமித்தாரன்றோ? ஸாக்ஷாத் ஸ்ரீஹரியினுடைய அம்சமாகிய பராசரரும் செம்படவனது மகளாகிய யோஜநகந்தியைப் புணர்ந்தாரல்லவா? பிரமன் திலோத்தமையைச் சிருஷ்டித்த காலத்தில் அவளது ரூபலாவண்யத்தைக்கண்டு காமமீறி அவளுடன்புணர ஆரம்பிக்கையில் மன்மதன் அதனைக்கண்டு பரிகாசஞ்செய்யவே, பிரமனும கோபித்து நீ பரமசிவனது நேத்திராக்னிக்கு இரையாகக்கடவையென்று சபித்தானன்றோ? மகாவிரக்தரா யிருக்கிறவர்கள்கூட ஸ்திரீகளுடைய வலையிற்பட்டு அதிக விஷயபரர்களாகிறார்கள். நீங்கள்செய்யும் இக்காரியத்தால் என்ன அநர்த்தம் விளையுமோ தெரியாது" என்றார். அதுகேட்ட பலராமன் "அடா! கிருஷ்ணா! நீ மற்ற கேவல ஸந்நியாசியைப்போல இவரை நினைக்கக்கூடாது. இவரோ மகாவிரக்தர். ஆகையால் இனி யான் எனதிஷ்டப்படி செய்வேன். அதற்கு நீ தடைசெய்யக்கூடாது. என்றுசொல்லி, எல்லா யாதவர்களும் ஒன்றுகூடி அந்தக் கபடஸந்நியாசியை வசுதேவருடைய கிருகத்தின் உத்தியானத்தில் வசித்துக்கொண் டிருக்கும்படிச் செய்தார்கள்.

பின்னர் பலராமன் அந்த யோகீஸ்வரருடைய விரக்தியையும் மனோதிடத்தையுங்கண்டு வியப்புற்றுத் தனது தங்கை சுபத்திரையை அவருக்குப் பணிவிடை செய்யும்படிச் செய்ய உத்தேசித்துக் கிருஷ்ணனைச்சேர்ந்து "தம்பி! நான் ஒருசித்தமுற்றேன். அதாவது: நமது தங்கை சுபத்திரையை அந்தச் சந்நியாசிக்குச் சிசுருஷைசெய்விக்க வேண்டுமென்பதே. கன்னிகைகளுக்கு பெரியோர்கள் உபசாரமே உசிதமாகும். அந்த விசேடத்தால் நல்ல பர்த்தாவை யடைவார்கள். பர்த்தாவன்றிக் கன்னிகைகட்கு ஏது விசேடம். வேறொன்றுமில்லை யல்லவா? இச்சந்நியாசி யாரோ மிகச் சிரேஷ்டர் ஜிதேந்திரியர் தபோபலர் ஸாதுவானர் புண்ணியதேகி தரிசனமாத்திரத்திலேயே தேவர்களையும் தன்னியராக்குவார், இத்தகைய இவருக்கு இக்காலமன்றி வேறுகாலத்தில் நமது தங்கை கைங்கரி


யம் செய்யப்போகிறானென்பது ஐயம்.,, என்றனர். இவற்றையெல்லாம் செவிசாத்திய கோபாலரும "அண்ணா! இதென்ன விபரீதம; உங்களது எண்ணம் சாத்தியமான தல்லபோலும். உங்களையும் கடந்து செல்கின்றது. கிருகத்துக்குள் யதிகளை வரவழைப்பதே உசிதமன்று. வரினும், அவரிடம் நமது தங்கையை சிசுருஷைக்கு வகுப்பது உசிதமன்று. எனது எண்ணம் இவற்றிற்கிடந்தராது. பெரியோர்களிருக்க எனக்காவதென்ன என்றுகூற; நீலாம்பரர் இளையவர் வார்த்தையில் மதிப்பற்று, அவரையு முடன்கூடிக்கொண்டு உக்கிரசேனன் முதலியவர்கள் புடைசூழ சந்நியாசியாரிடம் சென்றார் இவர்கள் வருவதையறிந்த அருச்சுனனும் பத்மாஸநமாக உட்கார்ந்து கிழக்கொக்குபோல் கண்களைமூடிக்கொண்டு கைகால்களை யசைக்காமல் மௌனமாய்த் தியானத்திலிருந்தனன். அப்பொழுது சகலமும் அறிந்த கண்ணன் ஸுபத்திரையை அருச்சனனுக்குக் கொடுக்கவேண்டும் என்ற நமது எண்ணம் இன்றுதான் பலித்தது என்று தன்னுள் எண்ணி, வெளிக்கு யாதுமறியாதவர்போல் அந்த யோகியை நமஸ்கரித்து விநய புரஸ்ஸரமாகச் சொல்லுகின்றார்.

"சுவாமி! தேவரீர் எப்பொழுதும் பரமாத்துமாவையே இந்த யகலத்தில் தியானஞ்செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆதலில் தங்களைப்போன்ற பாக்கியசாலிகள் யார் இருக்கிறார்கள்? என்று பலவாறு துதிசெய்தும், அவன் கண்திறவாமலும மறுமொழி யுரையாமலும் முன்போலவே தியானபரனாயிருக்கவே, கண்ணன் பலராமனை நோக்கி "அண்ணா' பார்த்தீரா இந்தயோகியை, ஆகா! என்ன தியானம்! என்னபக்தி என்னதிடம்! என்னநிலம்' இவற்றை யறியாதன்றோ! நான் வீண்வார்த்தையாடினேன்." என்றுசொல்லி வியந்தார். பின்னர் பலராமனும் தமது தங்கையாகிய ஸுபத்திரையை அழைத்து அவளுக்கு தக்ககணவன் கிடைக்குமாறு அவருக்கு சிச்ருஷை செய்யும்படி நியமித்தார். அவளும் அங்ஙனமே அந்த யதிசேகரருக்கு அதிகபக்திச் சிரத்தையுடன் பணிவிடைசெய்து வருங்காலத்தில், ஒருநாள் அவ்யோகியினுடைய அங்கங்களைக்கண்டு தான் முன்பு கேட்டிருந்த அருச்சுனரைப்போ லிருக்கக்கண்டு, மனதில் சந்தேகமுற்று, தபசியை நோக்கி, "சுவாமி! தாங்கள் தீர்த்தயாத்திரை யாகச்சென்ற அருச்சுனரைப்பார்த்ததுண்டோ? அல்லது தேவரீர் அந்த அருச்சுனர்தானோ? ஒளியாமல் உரைக்கவேண்டும்." என்று பிரார்த்திக்கவே, அருச்சுனனும் புன்சிரிப்புடன் ஆம் அந்த

அர்ச்சுனன்தான்; உன்மீது ஆசையுற்று உன்னைவிவாகம் பண்ணிக் கொள்ளும் பொருட்டே இங்ஙனம் இக்கபட ஸந்நியாசிவேடம் பூண்டிருக்கின்றேன." என்றான். இதனைக்கேட்ட ஸுபத்திரையும் ஆநந்தபரவசையாய் நாம மனதிற் கொண்டிருந்த வெண்ணம் நிறைவேறிற்றென்று, தன்னுள் எண்ணிக்கொண்டு அவனை நோக்கி, "ஐயா! எனக்குத் தங்களைத்தவிர வேறுபுருஷனிடத்தில் பிரியமில்லை. ஆனால் எனது தமயனான பலராமன் முதலானோர் என்னைத் துர்யோதனனுக்குக் கொடுக்கப்போகிறதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நம்மிருவருடைய விவாஹமானது வெகு ரஹஸ்யமாய் நடக்கவேண்டும். அங்ஙனம் எப்படி நடக்கும்?" என; அருச்சுனன் "ஓ ஸுபத்திரையே! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், எல்லாவற்றிற்கும் கண்ணன் இருக்கிறார். அவரை நீ தஞ்சமென்றடைந்தால் அவர் எவ்விதத்தினாலாவது நமது கோறிக்கையை முடித்து வைப்பார்" என்றான். உடனே ஸுபத்திரையும் தனதுதாயாகிய தேவகியிடஞ்சென்று தனது கருத்தைத் தெரிவிக்க, அவளும் தன்மகள் கருத்துக்கிசைந்து கிருஷ்ணனை யேகாந்தமாயழைத்துச் சங்கதியைத்தெரிவிக்கவே, கபடநாடக ஸூத்திரதாரியாகிய கண்ணபிரானும் தன்னுள் மகிழ்ந்து "அப்படியே ஆகட்டும் அம்மா தங்கை இது விஷயத்தில் வருந்தவேண்டாமென்று சொல்லுவீர்களாக. தமயனுக்கு விரோதப்படினும் தாய்சொற்பரிபாலனம் தருமமாயிருக்கிறபடியால், யான் உமது எண்ணம முடித்துவிடுகிறேன்." என்று சொல்லிவிட்டுப் பலராமன்முதலிய யாதவர்களை யழைத்து "நாம் தீர்த்தயாத்திரை யாகச்சென்று சமுத்திரத்தில் ஸ்நாநஞ்செய்து வரலாமவாருங்கள்." என்றுசொல்லி வஸுதேவர் தேவகி இவ்விருவரைத்தவிர மற்ற யாதவர்களெல்லோரையும அழைத்துக்கொண்டு சமுத்திரத்தில் நீராடி எல்லோரும் வழிக்களைப்பினால் சமுத்திரக்கரையில்படுத்து உறங்குந்தருணம்பார்த்துத் தான்மட்டும் ஏகாங்கியாய் ரதத்திலேறித் தனது இல்லம்வந்து சேர்ந்து, தனது பிதாவாகிய வஸுதேவருக்கும் சங்கதி தெரிவித்து இப்பொழுது ஏகாந்தமாய் விவாஹத்தை நடத்தவேண்டு மென்றுசொல்லி கல்லியாணச்சடங்கிற்கு வேண்டிய ஸகல ஸாமக்கிரிகளையும் ஸித்தப்படுத்தினர்.

அப்பொழுது அருச்சுனனும் தனது பிதாவாகிய தேவேந்திரனை மனதில் ஸ்மரிக்கவே, அவனும் இந்திராணி ஸமேதனாய் ஸப்தருஷிகளோடும் அருந்ததியுடனும் வர; அவர்கள் எல்லோரும ஒருவர்க்

கொருவர் குசலப்பிரசினை செய்துகொண்டார்கள். பின்னர் இந்திரன் ஸப்தருஷிகளைக்கொண்டு நல்ல லக்கினத்தில் வதூவரர்களாகிய ஸுபத்திரா அர்ச்சுனன் இருவர்களுக்கும் மங்களஸ்நாநம் செய்வித்து, கற்பகத்தருக்களின் திவ்விய புஷ்பங்களாலும் திவ்விய பூஷணங்களாலும் அருச்சுனனை இந்திரனும், சுபத்திரையை இந்திராணியும், அலங்கரிப்பித்தார்கள். பின்னர் வஸுதேவருடைய மடியில் வெட்கத்துடன் குனிந்ததலையுடன் உட்காந்துகொண்டிருந்த ஸுபத்திராதேவியினது கண்டத்தில் திருமங்கல்லியதாரணம் செய்து மணவரையில் இருந்திசப்தருஷிகளைக்கொண்டே விவாகத்திற்குரிய சகலமந்திர தந்திரங்களையும் குறைவறநடத்தினன். அருச்சுநனும் ஸுபத்திரையைப் பாணிக்கிரகணம்செய்து, அம்மிமிதித்து, அக்கினியை மூன்றுதரம் வலம்வந்து, களிப்புற்றனன். பின்னர் தம்பதி




வஸுதேவன்.   கிருஷ்ணன.

கள இருவரும் ஸ்ரீ கண்ணபிரானையும் மற்றும் அச்சபையிலிருந்த எல்லோரையும் நமஸ்கரித்தார்கள். அவர்களும் அந்தத் தம்பதிகளையாசீர்வதித்து மந்திராக்ஷதை யளித்தார்கள் பின்னர் தேவேந்திரன் ஸப்த ருஷிகளோடு தனது மகளையும் மருகியையும் ஆசீர்வதித்துக் கிருஷ்ணன் முதலானோரிடத்தில் விடைப்பெற்றுச் சுவர்க்கம் சென்றான். கண்ணனும் இவ்வாறு அருச்சுனனுக்குச் சுபத்திரையை யேகாந்தமாய் மணம்புரிவித்து மீண்டும் ஒருவர்க்குந்தெரியாமல் சமுத்திரதீரஞ்சென்று அங்குப்படுத்து உறங்குகிறவர்களோடு தானு மொருவராகப்படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

மகாபவித்திரமான இந்த ஸுபத்திரா கல்லியாணகதையைப் படிப்பவரும் கேட்போரும் சகலபாவங்களினின்றும் விடுபட்டுப் புண்ணிய லோகமடைவார்கள். விசேஷமாம் இதனை வெள்ளிக்கிழமை படிப்பவர்களுக்கு இஷ்ட ஸித்தியுண்டாகும். பூர்வத்தில் சிவபெருமான் தனது மனைவியாகிய தாக்ஷாயணீ உயிர்விட்டபின்பு இந்தப் புண்ணியகதையைப் படித்ததினால் அவர்மீண்டும் அந்தத் தாக்ஷாயணியின் அம்ச ஸம்பவையான பார்வதியை மணம்புரிந்தார். மேலும் முன்னம் காமதேவன் ருத்திரபகவானுடைய நெற்றிக்கண்ணால் எரிந்தபோது அநாதையான ரதிதேவி துக்கிதையாய் புலம்புங்காலத்தில் சிவபெருமான் அவளை இந்தப்புண்ணியகதையையொருவாறு கேட்கும்படிநியமிக்க; அவளும் அங்ஙனமே இந்த ஸுபததிரா கல்லியாண கதையைப் பக்தியுடன் கேட்டு மீண்டும் பர்த்தாவை யடைந்தனள். ஆகையால் இதைப்போல் அபீஷ்டஸித்தியை யளிக்கக்கூடிய வேறுபுண்ணியத்தை உலகத்தில் கிடையாது என்றார்.


ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உO-வது அத்தியாய முற்றிற்று.

## இருபத்தோராவது அத்தியாயம்.

# பலராமன் அர்ச்சுநனோடு யுத்தஞ்செய்ய ஆரம்பித்தது

—:o:—



அருச்சுனன்-சுபத்திரை.

பின்னர் அருச்சுனன் அருணோதயவேளையில் ஸுபத்திரையை ரதத்தின்மீது ஏற்றிக்கொண்டு அவளைக்கையில் கடிவாளம்பிடித்துச் சாரத்தியஞ்செய்யத் தான் காண்டீவமென்னும் வில்லைவளைத்துக் குணத்துவனிபண்ணி இராஜவீதிமார்க்கமாய்ப் புறப்படவே அந்நகர பாலகர் எல்லோரும் அவனோடு எதிர்த்துச் சண்டைசெய்தார்கள். அருச்சுனனோ தநுஸ்ஸில் அநேகபாணங்களைத் தொடுத்து அவர்களை முறியடிக்கவே அவர்களில் அநேகர் திசைதப்பி திக்குதிக்காய் ஓடினார்கள். சிலர் உடனே ஸங்கேதபேரியை யடித்தார்கள். அந்தச்சத்தம் காதிற்படவே பலராமன் முதலிய யாதவர்கள் நித்திரைதெளிந்திருந்து "ஓகோ! நம் நகரக்குள் ஏதோ கலகம் நடக்கிறதுபோல் தோற்றுகிறது. நாமில்லாத சமயம்பார்த்து யாராவது பகைவர்வந்து முற்

றுகைபோட்டிருக்கிறார்களோ? என்னமோ" என்று ஒருவர்க்கொருவர்சொல்லிக் கொண்டிருக்கவே கண்ணபிரான், கபடநித்திரை தெளிந்து "அண்ணா! நம்நகர்க்குள் சாக்ஷாத் தேவேந்திரன்கூடக் கண்ணெடுத்துப்பார்க்க வல்லவனல்லவே, அங்ஙனமிருக்க; இப்பூலோகத்தில் நமக்கு விரோதியாய் யாவன்வருவான்; நான் முன்னமே அந்தச் சந்நியாசியை நமநகரத்திற்குக் கூட்டிக்கொண்டு வரவேண்டாம் வேண்டாம் என்று பலமுறையுஞ் சொன்னேன். என்பேச்சை அலக்ஷியஞ் செய்துவிட்டுக் கூடாவொழுக்கச் சந்நியாசியை நமது கிருகத்துக்கே அழைத்துக்கொண்டு வந்ததுமல்லாமல் நமதுசகோதரி சுபத்திரையையும் அவனுக்குச் சிசுருஷை செய்யும்படி நியமித்துவிட்டீர்கள். இப்போது அவனால் ஏதோ அனர்த்தம் விளைந்திருக்கிறதென்று என்புத்திக்குப் புலப்படுகின்றது" என்றார். பின்னர் எல்லோரும் வெகுவேகமாய்ப் புறப்பட்டுவரவே, வழியில் ஒரு போர்ச்சேவகன்வந்து அவரிடத்தில் அருச்சுன நாமாங்கிதமான ஓர் பாணத்தைத்தந்து, "பிரபுக்களே! நமது கிருகத்தில் குடியிருந்த சந்நியாசியானவன் சுபத்திராதேவியைத் தேரின்மீது ஏற்றிக்கொண்டுபோனான். அதுகண்டு நாங்களெல்லோரும் அவனைத் தடுக்கப் போகையில் அவன் எங்களை இத்தன்மையான அம்புகளால் அடித்துத் துரத்திவிட்டுச் சற்றேனும் இலக்ஷியம் பண்ணாமல் செல்லுகின்றான்" என்றான். கிருஷ்ணன் பலராமன் முதலியவர்களும் அந்தப் பாணத்தில் அருச்சுனனது பெயர்வரைந்திருந்ததைக்கண்டு அதிக கோபமும் ஆச்சரியமுமுற்றவர்களாய் இந்த க்ஷணத்தில் அக்கபட சந்நியாசியைச் சம்ஹரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது பலராமன்கையில் தனது ஆயுதமாகிய கலப்பையையேந்தி வெகுமானத்துடனே புறப்படவே, கண்ணன் அவரைநோக்கி, "அண்ணா! யான முன்னமே வேண்டாமென்று முறையிட்டேனே. சிறுவன் என்று என்மொழியைக் கேளாமல் வயதில்பெரியவர்களான நீங்கள் எல்லோரும் ஒன்றாய்க்கூடி ஆலோசனைசெய்து அந்தச் சந்நியாசியை நம்மில்லத்தில் குடிவைத்ததுமல்லாமல் நம்சகோதரியையும் அவனுக்குப் பணிவிடை செய்யச் சொன்னீர்கள். அதின்பலனை இப்பொழுது அனுபவிக்கிறீர்கள்; யான் அந்த அருச்சுனனை ஒருநொடியில் ஸம்ஹரித்து விடுவேன். ஆகிலும் காரியம் முடிந்தபிறகு அவனைக் கொல்லுவதில் வீண் அபகீர்த்தியுண்டாகும். நமது சகோதரிக்குப்



கிருஷ்ணன். பலராமன்.

புருஷனுய் விட்டதால் அவனைக்கொன்றால் நமதுசகோதரி விதந்து வாய்ப்போய் நமது காலில்விழுந்து பிராணனைவிடுவாள். அவளாக வே அவன்பேரில் பிரியப்பட்டு மாலையிட்டிருப்பதாகத் தோன்று கின்றது. மேலும் அவள் அங்ஙனம் அருச்சுனனைப் புருஷனுகப் பெற்றவிஷயத்தில் நமதுதாய்தந்தைகளுக்கும் சம்மதமிருந்துதான் கல்யாணம் நடந்திருக்கவேண்டும். ஆகையால் இதுவிஷயத்தில் நாம கோபித்துப் பதறுவதில் பிரயோசனமில்லை. மேலும் க்ஷத்திரியர் களுக்குக் காந்தர்வவிவாஹஞ்செய்வதால் யாதொரு தீமையுமில்லை. முன்னம் சுக்கிராசார்யருடைய பெண் தேவயானை என்பவள் யயாதி யையும், சகுந்தலை துஷ்யந்தனையும், இவ்வாறு காந்தர்வ விவாஹமே செய்துகொண்டார்கள். அந்தச சகுந்தலையின் புத்திரனுன பரதன் என்பவனுற்றான் பாரதவம்ச முண்டாயிற்று. சாக்ஷாத் கங்காதே வியை சந்தனுமகாராஜனைக் காந்தர்வ விவாஹஞ்செய்து அவரிடத் தில் ஸ்ரீ வைஷ்ணவச் சிரேஷ்டரான பீஷ்மாசாரியைப் பெற்றாள். மற்றவர்களைச் சொல்லுவானேன். யான் இந்தருக்மணியை அவ ளது தாய்தந்தை சகோதரர் முதலானோர்க்கு விரோதமாய்ப் பலாத் காரமாய்த் தூக்கிக்கொண்டுவந்து காந்தர்வ விவாஹஞ் செய்து கொள்ள வில்லையா? ஆகையால் இனி கோபிப்பதில் பயனில்லை. நா மெல்லோரும் புறப்பட்டு இந்திரப் பிரஸ்தஞ்சென்று, அங்கு நமது சகோதரியின் மணக்கோணத்தை நிறைவேற்றி வருவதே நலம். அதனுல் நமது தாய்தந்தை சகோதரி இவர்களுக்குச் சந்தோஷ முண்டாவதுந்தவிர உலகத்தாரும் நம்மைக்கொண் டாடுவார்கள். என்று வெகுதந்திரமாய்ச் சொல்லிப் பலராமனது கோபத்தைச சாந்தப்படுத்தினர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
உக-வது அத்தியாயம் முற்றிற்று.

---

இருபத்திரண்டாம் அத்தியாயம

## கிருஷ்ண பலராமர் இந்திரப்பிரஸ்தமடைந்து வதூவரர்களுக்கு காவேரி மகத்துவத்தை யுரைத்தது.

:0:

இங்ஙனமுரைத்த கிருஷ்ணனுடைய வசனத்தைக்கேட்டு உக்கி ரஸேனன் உத்தவர்முதலிய யாதவோத்தமர்களோடு ஆலோசித்துப்













அருச்சுனன். சுபத்திரை.







கிருஷ்ணன். தருமராஜன். பலராமன்.



பின்னர் இராமகிருஷ்ணர்களிருவரையும்நோக்கி, "நீங்களிருவருமே அநேக ரதகஜ துரக பதாதிகளுடன் இந்திரப் பிரஸ்தஞ்சென்று, நம சுபத்திரையினது விவாஹமங்களத்தை முடித்து, அவளுக்குக் கொடுக்கவேண்டிய ஸ்திரீ தனங்களையும அளித்துவாருங்கள். நாங்கள் இப்படியே நமது நகரஞ்செல்லுகின்றோம்" என்றுரைக்கவே, ராமகிருஷ்ணரிருவரும் அங்ஙனமே அநேகவஸ்துவாஹனங்களுடன் இந்திரப்பிரஸ்தஞ் சென்றார்கள். இவர்களுடையவரவை பேரிகை முதலிய வாத்தியங்களாலும் துவஜங்களாலும் அறிந்த தருமபுத்திரரும் தனது பிராதாக்களுடன் எதிர்சென்றழைத்துப்போய்க் குசலப்பிரசனைசெய்து, மிக்கசந்தோஷங் கொண்டு, "உங்கள்வரவு எங்கள் மனதைக் களிப்பித்தது. உங்கள் சேவை எங்கள் கண்களை விளக்கிற்று. தன்னியரானோம்" என்று அடங்கா மகிழ்வால் அவர்களுக்குத் தக்கமரியாதை செய்தார்.

பின்னர் இராமகிருஷ்ணர்க ளிருவரும் அங்கு சுபத்திரையினது விவாஹ மகோத்ஸவத்தை வெகு ஆடம்பரமாய்ச்செய்து, அவளுக்குச் சீதனமாக அநேக ஆடையாபரணங்களையும் இரதகஜ துரகபதாதிகளையும அநேக தாஸ தாஸீவர்க்கங்களையும் அளித்து, பொன்னாலும் மணியாலும் அவள்மனதைக் களிப்பித்து, அங்குச் சிறிதுகாலிருந்து, பின்னர் துவாரகைக்குச்செல்ல நிச்சயித்துக் குந்தியையடைந்து, "அம்மா நீசெய்த பாக்கியமேபாக்யம்; தருமரூபனான புத்திரனோடு புஜ பல கீர்த்திவாய்ந்த நற்குண மக்களைப்பெற்றாய் உன குமாரனான அருச்சுனனுக்கு வாய்த்த எங்கள் தங்கையை உனதாதீன மாக்கினோம். அவள் மிக்க சிறியவள் அவளை நற்குண விசேடத்தால் பெரியவளெனும்படிச் செய்வது உமதுகடமை." என்று கூறி,



சுபத்திரை.



திரௌபதி.



பலராமன்.



கிருஷ்ணன்.

அடுத்துள்ள துரௌபதியை நோக்கி, "தங்கையே நீ மிக்க குணசீலை; பதிவிரதை; ஆயினும் சக்களத்தின் உறவு சச்சரவுக்கிடமென்பர்; இவ்வுலக வழக்கை உனது தங்கையினிடம் காட்டப்படாது. சின்னம் சிறியளான அவள் ஏதோ தெரிந்தும் தெரியாதும் செய்யும் பணிவிடைகளில் குற்றங்கள் நேரினும் குணமாகக்கொண்டு குறைகொள்ளாமல் திருத்திப் பர்த்தாவினிடத்திலும் மாமியிடத்திலும் உன்னிடத்திலும் பக்திவரும்படி நடத்திக்காட்டுவாயாக." என்று உபசாரங்கூறி, பின்பு சுபத்திரையைப்பார்த்து, "அம்மா தங்கையே! நீ காலையில் புருஷனைத் தியானித்துக் கொண்டே எழுந்திருப்பாய்; பின்பு கிரமப்படிக் காலக்கடனை முடிப்பாய்; பர்த்தாவையும் மாமியையும் தமக்கையான துரௌபதியையும் வணங்கு; அவர்கள் கைங்கரியத்தில் சலிப்படையாதே; பர்த்தாவைவிட உனக்குத் தெய்வமேயில்லை; இது முக்காலத்திலும் உண்மையாதலால் சத்தியமாக உள்ளத்தில் கொள்வாய். பிராதக்காலத்திற் றுயில் விடுதலும் நித்யகர்மங்களையும் மற்றும் நியமங்களையும் நடத்துதலும், மஞ்சள் குங்குமம் புஷ்பங்களையும் இடைவிடாது தரித்தலுமே புருஷனுக்கு ஆயுசு விருத்தியைச் செய்யத்தக்கது. இவற்றைக் கவனித்து ஒழுகக்கடவாய். பெரியோரிடம் எதிர்த்து உரையாடாதே; உயர்ந்த இடத்தில் இராதே, இவற்றைக் குருமொழியாகக் கொண்டொழுகுவாய்." என்று கூறித் தருமபுத்திரரை யடைந்தார்கள்.

அடைந்த இராமகிருஷ்ணர்கள் தருமபுத்திரரை துவாரகைக்குச் செல்ல, விடை கேட்கையில் அவரும் ஸ்ரீ கிருஷ்ணரை நோக்கி, "ஓ! எனது பிரியமுள்ள மைத்துனரே! இவ்வுலகத்தில் எங்களைவிட நிர்ப்பாக்கியர் எவருமில்லை; நாங்கள் பால்லியத்திலேயே எங்கள் பிதாவை யிழந்தோம்; பின்னர் பெரிய தந்தையின் பிள்ளைகளால் அநேக அவமதிப்பை யடைந்தோம்; நகரினின்றும் வனத்துக்குத் துரத்தப்பட்டோம்; அரக்குமாளிகையினின்றும் தப்பினோம்; இன்னும் அநேக ஆபத்துக்களை யடைந்தோம்; நீங்களும் நாங்கள் ஏழைகளாய் விட்டோமென்று உபேக்ஷையாயிருந்துகொண்டு எங்களைப்பற்றி விசாரியாமலே யிருந்துவிட்டீர்கள். ஆம்; தரித்திரரை யார்தான் இலக்ஷியம் செய்வார்கள்? தரித்திரம் மிக்ககொடியதல்லவா? அது களிப்புக்குக் கடலுக்கு வடவையொத்ததல்லவா? துர்எண்ணங்களுக்கு இருப்பிடமல்லவா? பலபல துக்கங்களுக்கும் ஆகரமாகுமல்லவா! தலைவி தலைவனுக்கும் கலகம் விளைப்பதும் அது வல்லவா? ஆகையால் எங்களுக்கு எப்பொழுதும் சுகங்கிடையாது." என்றிங்ஙனம் பலவாறு நிஷ்டூரவார்த்தைகளைச் சொல்லி விசனப்பட்ட; தருமபுத்திரரை நோக்கிக் கிருஷ்ணன் அநேகவித நலவார்த்தைகளால் தேறுதல் செய்து பின்னும்கூறுவார், "அப்பா தருமபூபதி! நாங்கள் இளமையில் பட்டபாட்டை நினைக்கில் உங்கள் கஷ்டம் ஒரு அளவாமா? பூதனை முதலிய பேய்களால் கலக்கமடைந்தோம்; இடைக்கிடை வனங்

களில் நேர்ந்த ஆபத்துக்களுக்கோ அளவில்லை. முடிவில் கம்சனென்னும் மாமனால் மடியவும் நேர்ந்தது. ஏதோ தெய்வகடாக்ஷம் நாங்கள் தப்பினது. கடைமுறையால அவனை எங்களால் மடிய நேர்ந்தனன். நீ அப்படியல்ல; நால்வர் தம்பிகளைப்பெற்றாய்; அவரோ குணசீலர்; உன் வார்த்தைக்கு எதிர்வார்த்தை யாடார்கள். மனைவியோ அக்கினியிற்பிறந்த அணங்கானவள் இத்தகைய சிறப்புவாய்ந்த உனக்கு எவ்விடத்தும் எவ்விதத்தும எக்காலத்தும்யாதுங் குறையில்லை. துலாமாதத்தில் பிராமிய முகூர்த்தத்தில் காவேரியையடைந்து ஸ்நானமாடி நியமப்படி விப்பிரர்களுக்கு வெறுககப் பொன்னீந்து அப்புராணத்தைச் சிரவணம்பண்ணி பௌராணி கோத்தமர்கட்கு வேண்டிய பொன் முதலியவைகளைக் கொடுத்து உபசாரிப்பாய்? அதனால் சர்வசித்திகளையும அடைவாய்; இதுவேயன்றி முன்பு பார்த்தன் தியானம்பண்ணிய லக்ஷ்மிஸ்தோத்திரம் ஒன்று உபதேசிக்கிறேன். அதைப் பக்திச்சிரத்தையோடு ஜபிப்பாய; அதனால கைகூடாத நன்மைகள் ஒன்றுமேயில்லை. எல்லாம உன்வசமே யாகும" என்று இதங்கூறி, மைத்துனா! நீ ஒன்றுக்கும அஞ்சவேண்டாம. என்று இலக்குமி ஸ்தோத்திரத்தை யுபதேசித்தார்.



தர்மராஜர். ஸ்ரீமகாலக்ஷிமி. அர்ச்சனன்.

இலக்ஷ்மீ ஹிருதய ஸ்தோத்திரம்.

శ్రీదేవీప్రథమంనామ ద్వితీయమమృతోద్భవా।
తృతీయంకమలాప్రోక్తా చతుర్థంచంద్రశోభనా॥ ౧॥

పఞ్చమంవిష్ణుపత్నీ చ షష్ఠం శ్రీవైష్ణవీతథా।
సప్తమంతువరారోహా హ్యష్టమంహరివల్లభా॥ ௨॥

నవమంశార్ఙ్గిణీప్రోక్తా దశమందేవదేవికా।
ఏకాదశంమహాలక్ష్మీ ద్వాదశంలోకసున్దరీ॥ 3॥

శ్రీః పద్మా కమలా ముకున్దమహిషీ లక్ష్మీః త్రిలోకేశ్వరీ మా-
క్షీరాబ్ధిసుతా విరిఞ్చజననీ విద్యా సరోజాసనా । సర్వా
భీష్టఫలప్రదేతి సతతంనామానియేద్వాదశ ప్రాతశ్శుద్ధతరాః
పఠన్త్యభిమతాన్ సర్వాన్ లభన్తేశుభాన్॥ ௪॥

ఇత్యేతద్గీష్పతిప్రోక్తం లక్ష్మీహృదయముత్తమం।
తౌలాస్నాత్వాచకావేర్యాంజపశ్రీవృక్షసన్నిధా॥ ௫॥

తౌలాసహ్యోద్భవాతీర్థే శ్రీరఙ్గే స్నానమాచరన్।
జప్త్వైతత్కమలాస్తోత్రం సర్వాన్ కామానవాప్స్యసి॥ ௬॥

ஸ்ரீதேவி! அமிர்தோத்பவி! கமலா! சந்திரசோபனு! விஷ்ணுபத்னி! ஸ்ரீவைஷ்ணவி! வாரோஹா! ஹரிவலலபா! சார்ங்கிணி! தேவதேவிக மகாலக்ஷிமி லோகசுந்தரி என்று பன்னிரண்டு திருநாமங்களுண்டு. இவையேயன்றி ஸ்ரீ பத்மா கமலா முகுந்தமஹிஷீ லக்ஷிமீ திரிலோகேசுவரீ மாக்ஷீராப்திசுதா விரிஞ்சசனனீ வித்யாசரோஜாஸனு ஸர்வாபீஷ்ட பலப்பிரதா என்றும் பன்னிரண்டு திருநாமங்களுண்டு. இவற்றைத் தினமும் பாராயணம் பண்ணுவாய். காலையில் காவேரி ஸ்நாநமாடுவாய். அது சகலசித்தியும சகலபுத்தியும் தரத்தக்கது, அதைப்பற்றிப் பலபல கூறியாவதென்ன. என்று அவருக்குத்துலா காவேரி மகத்துவத்தை யுபதேசித்ததே யல்லாமல் இலக்குமிதோத்திரத்தையும அருளி, திரௌபதி சுபத்திரை இவர்களுக்குத் தக்க நற்புத்திகளை யுரைத்து, அவாகள் எல்லோரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு பலராமனுடன் தனதுநகரகமாகிய துவாரகைக்கு எழுந்தருளினர். கேட்டாயோ! ஹரிச்சந்திரமகாரசனே? துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து அதனது மகத்துவத்தையுங்கேட்டு அந்தப் பௌராணிகருக்குத் தக்கமரியாதைசெய்து பட்டணப்பிரவேசம் பண்ணிவிப்பீரேல், சகல அபீஷ்டங்களையு மடைவீர்; என்பதில் அணுவேனும் ஐயமில்லை. என்று அகஸ்திய மாமுனிவா உரைத்தனர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
௨௭-வது அத்தியாயம் முற்றிற்று.

## இருபத்துமூன்றும் அத்தியாயம்
## அகஸ்தியர் அரிச்சந்திரனுக்குக் காவேரியினது உற்பத்தியைப்பற்றி யுரைத்தல்.

—:0:—

மீண்டும் அரிச்சந்திரன் அகஸ்தியமுனிவரைநோக்கி, "சுவாமி! தேவரீர் இதுவரையில்சொன்ன துலாகாவேரியின் மகிமையானது அதி யற்புதமாயிருந்தது. ஆகிலும் அந்த மகாநதியின் உத்பத்தியையும் அதற்குக் காவேரியென்ற பெயர்வந்ததற்குக் காரணத்தையும் அந்நதியே அகஸ்தியர் பத்தினியாகி லோபாமுத்திரையென்ற பெயர் பெற்றதற்கு ஹேதுவையும், தக்ஷிணகங்கையென்ற நாமமுண்டானதற்குக் காரணத்தையும், அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்" என்று பிரார்த்திக்கவே, அகஸ்தியரும் அகமகிழ்ந்து கருணையோடு சொல்லுவாராயினர்.

கேளாய் அரசனே! ஸுபத்திரா கல்யாணத்தின் பின்பு ஸ்ரீகிருஷ்ணர் தர்மபுத்திரருக்குத் துலாகாவேரியினது மகிமையைப்பற்றிச் சங்கிரகமா யுரைத்துத் துவாரகைக்கு எழுந்தருளின பின்னர், தர்மநந்தனரும் தௌம்மியரென்னும் ருஷீஸ்வரரையழைத்துக் காவேரியினது உற்பத்தி விஷயமாய் வினவினகாலத்தில் அம்மகாருஷி சொன்னதாவது:—"கேளும் தர்மநந்தனே! பூர்வத்தில் அதிகவிரக்தரும் யோகநிஷ்டரும் நிஸஸ்பிருகருமாயிருந்த கவேரனென்ற ராஜருஷியானவர் இமையமலைச்சாரலில் பதினாயிரவருட காலம்வரையில் பிரமதேவனைநோக்கித் தவம்புரிகையில், பிரமனும் அவருக்குப் பிரஸன்னராகி, என்னவேண்டுமென அரசன், "சுவாமி! அடியேனுக்கு மோக்ஷம் வேண்டும்." எனப், பிதாமகன் "அரசனே! மோக்ஷமளிக்கும் சக்தி யெனக்கில்லை. ஆகிலும், ஸ்ரீமந்நாராயணனுடைய மாயையே யெனக்குக் கன்னிகையா யிருக்கின்றாள். அவளை உமக்குப் புத்திரியாகக்கொடுக்கின்றேன். அவள் உமக்கு மோக்ஷங்கொடுப்பாள்." என்றுசொல்லி, அம்மாயையை ஸ்மரிக்கவே, அவளும் சர்வாபரணபூஷிதையாய் ஓர் கன்னிகை வடிவுடன் எதிர்நிற்க; பிரமனும், "பெண்ணே! இந்த கவேரனுக்குப் பெண்ணாகிக் காவேரியென்ற பெயருடன் நதிரூபிணியாய்ப் பூலோகத்தில் பிரவேசித்து, இந்த அரசனையும் மற்றும் உனது ஜலஸ்பரிசம்பெற்ற மனிதர்களையும் மோக்ஷமடைவிப்பாய்," என்று கூறி, இருப்பிடஞ் சேர்ந்தார். கவேரனும்

ஜகன்மோகினியான விஷ்ணுமாயையைப் புத்திரியாகப் பெற்றவுடன், அவளை நோக்கி, "பெண்ணே! நீயோ ஸாக்ஷாத் ஜகதம்பிகையான விஷ்ணுமாயை. நான் இப்பொழுது லௌகிக வ்யாபாரங்களில் விரக்தியடைந்து, மோக்ஷகாமியா யிருப்பதினால், எனக்கு மோக்ஷமளிக்கக்கடவை" என்று பலவாறு அவளைப்புகழ; காவேரியும், "அரசனே' ஸகலலோக பாவனையான யான் உமக்குப் பெண்ணாக ஆய்விட்டேன். ஆதலால் உமக்கு இனிமோக்ஷம் கையிலிருப்பதாக நினைத்துக்கொள்ளும்; இனி நீர் விரும்பிய விடத்துக்குப் போகலாம்," எனவே, கவேரனும் மகாவிரக்தனாய்த் தேசமெங்குந்திரிந்து காலாந்தரத்தில் மோக்ஷத்தை யடைந்தனன். பின்னர் காவேரியும் லோபாமுத்திரை யென்றவடிவை வகித்துத் தனது புண்ணிய ஜலத்திலேயே ஸ்நாநஞ்செய்து ஸ்ரீஹரியை நோக்கித் தவஞ்செய்யுங்காலத்தில், ஸ்ரீ மகாவிஷ்ணுவும் பிரசன்னராய் "பெண்ணே! என்னவேண்டும்" எனக், காவேரியும் "சுவாமி! யான் பூலோகத்தில் நதிரூபிணியாய்ச் செல்லும்படிக்கும் எனது ஜலத்தில் ஸ்நாநஞ்செய்பவர் எவ்விதபாபிகளாக விருந்தபோதிலும் அவர்களுக்கு முக்தியுண்டாகும்படிக்கும் வரமளிக்கவேண்டும்." எனவே, பகவானும "பெண்ணே! நீ கேட்டபடி வரமளித்தனன். அதிக பாவனமான ஸக்யபருவதத்தினருகே யான் ஓர் நெல்லிமரமாக விருக்கிறேன். அங்குப் பிரமதேவன் விரஜாநதி ஜலத்தை சங்கில் சுத்தமாகத்தாங்கி வந்து எப்பொழுது எமது பாதத்தில் அபிஷேகஞ் செய்வானோ? அப்பொழுது அந்த சக்யாசலத்தினின்றும் தக்ஷிணகங்கையென்றபெயருடன் நதிரூபிணியாகச்சென்று எலலோரையும் பரிசுத்தம் பண்ணக்கடவை. நீ சகலபுண்ணிய நதிகளிலும் சிறந்தவளாகக்கடவை. தவிர, யாம் தத்தாத்திரேய னென்னும் நாமத்துடன் உனது சிரஸ்தானத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். மேலும் கங்கையானவள் எனது பாதத்தினின்றும் உண்டானமையால் நதிகளுக்குள் சிறந்தவளாகின்றாள். நான் ஸ்ரீரங்கநாதனாக உனது மடியில் படுத்துக்கொள்ளப் போகின்றேனாதலால், நீ கங்கையைவிடச் சிறந்தவளாய் விடுவாய். ஸக்யாமலக தீர்த்தத்தினது மகிமை மற்றெந்தப் புண்ணிய நதிக்குமுண்டாகமாட்டாது. உனது தீர்த்தத்துக்குச் சங்கதீர்த்தமென்றும் ஸக்யாமலக தீர்த்தமென்றும இரண்டு பெயர்கள் உண்டாகப்போகின்றன. எனது அம்சஜரான அகஸ்தியர் இங்கு தவஞ்செய்யும் உன்னைத் தனது கமண்டலத்தில் எடுத்துக்கொண்டு இங்குநின்றும் ஸக்யமலைக்குக் கொண்டுபோவார். நீ லோபாமுத்திரையென்ற பெயரு

டன் அவருக்குப் பார்யை யாகக்கடவை." என்றுசொல்லி அந்தர்த்தானமாயினார். இப்படியிருக்கப் பிரமனானவர் அம்மலையிலேயே நித்திய பிரமசாரியா யில்லறவாழ்க்கையில் வெறுப்புற்று, மோக்ஷத்தைக் கருதித் தவம்புரிந்து கொண்டிருந்த அகஸ்தியமா முனிவர்க்குப் பிரசன்னராகி, "நீர் இங்குத்தவஞ் செய்துகொண்டிருக்கிறலோபாமுத்திரை யென்றகாவேரியை விதிபூர்வகமாய் விவாகித்து, ஜலரூபிணியான இவளை யுமதுகமண்டலத்தில் எடுத்துக்கொண்டு! சூரிய சந்திரர்களுடைய மார்க்கத்தைத் தகைந்துகொண்டு ஆகாயமட்டும் அளாவியிருக்கின்ற விந்தியகிரியின் கர்வத்தையடக்கி, சக்யமலைக்குச் சென்று, அங்கு இந்தக் காவேரியை நதியாகச் செல்லும்படிச் செய்து, பின்னர் மலயகிரிக்குச்செல்லக்கடவீர்." என்று கட்டளையிட்டு அந்தர்த்தானமாயினார். அகஸ்தியரும் அங்ஙனமே இமையகிரியினது வடசாரலில் தவஞ்செய்து கொண்டிருந்த காவேரியைக் கண்டு அவளது வடிவழகிற்கு மெச்சி, அவளைநோக்கி, "ஓ! ஜகதம்பிகையான காவேரி! உனது மநோபிப்பிராயத்தை யறிந்தேன். ஏன் இன்னம் தியானத்திலிருக்கின்றாய்? என்னைக் கண்திறந்துபார்." என்றுரைக்கவே, காவேரியும் கண்களைத்திறந்து தன் முன்னிலையில் அகஸ்தியமாமுனிவ ரிருக்கக்கண்டு வெகு பரபரப்புடன் எழுந்து அவருக்கு அர்க்கியபாத்திய முதலிய உபசாரங்களைச்செய்தனள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்
உ௩-வது அத்தியாயம் முற்றிற்று.

---

இருபத்துநான்காம் அத்தியாயம்.

## அகஸ்தியமாமுனிவர் லோபாமுத்திரையென்ற காவேரியை விவாகஞ் செய்துகொண்டது.

—:0:—

பின்னர் அகஸ்தியரும் அவளைநோக்கி, இப்பொழுது உனது விருப்பம் யாது? அதனை யுரையென, அவளும் "சுவாமி! யான் உமக்குப் பத்தினியாயிருக்க விரும்புகின்றேன். ஆகிலும் யான் பூலோகத்தில் காவேரியென்ற நதிரூபிணியாய்ச் சென்று, சகலபாபிகளையும் முக்தியடைவிக்கும்படியாயும் சகல புண்ணிய தீர்த்தங்களும எப்பொழுதும் என்னிடத்தில் வசிக்கக்கடவன வென்றும், வரமளிக்கும் பக்ஷத்தில் யான் தேவரீருக்குப் பத்தினியாகின்றேன்." என,

அகஸ்தியர் "ஓ! லோபாமுத்திரையே! முன்னமே பிரமதேவன் உமக்கு இவ்வரங்களை யளித்திருக்கையில் யான் அளிக்கவேண்டிய வரமொன்றுமில்லை; உனது அபீஷ்டப்படிச் சகலமும் ஆகக்கடவன. எனது கமண்டலத்தில் உன்னை யெடுத்துக்கொண்டு பிரமதேவனது அம்சமான ஸஹ்யகிரியில் திவ்வியாமலகை சமீபத்தில் உன்னை நதியாகச் செல்லும்படி செய்கிறேன்." எனவே, காவேரியும் ஜலரூபிணியாய் அவரது கமண்டத்தில் பிரவேசித்ததுமல்லாமல் அவர் அருகில் திவ்வியாலங்கார பூஷிதையான ஓர் கன்னிகையாகவும் நின்றாள். உடனே அகஸ்தியரும் கல்யாணத்திற்காகப் பிரமதேவனை ஸ்மரிக்கவே, பிர்மா விஷ்ணு மஹேசுவரர்கள் மூவரும் இந்திரன் முதலிய தேவகணங்களுடன் ஸபத்னீகர்களாகத் தங்கள் தங்கள் வாகநங்களிலேறிக்கொண்டு வந்து சேர்ந்து, அகஸ்திய லோபாமுத்திரை இவ்விருவருடைய விவாஹ மஹோத்ஸவத்தை வெகு சம்பிரமத்துடன் செய்வித்துத் தம்பதிகளை யாசீர்வதித்ததுமன்றிக் காவேரிக்கு வெகு வரங்களையும் அளித்தார்கள். அப்பொழுது ஸ்ரீ மகாவிஷ்ணு அளித்த வரமாவது:—"கங்கையில் மூன்றுதினம் ஸ்நாநம் செய்தவனும் யமுனையில் ஐந்துதினம் ஸ்நாநம் புரிந்தவனும் காவேரியில் ஒருதரம் ஸ்நாநம் செய்தவனும் ஆமரணாந்தம் புரிந்த பாவங்களைப் போக்கிக்கொள்ளக் கடவன்." என்பது. சிவபெருமான் அளித்தவரமாவது:—"ஓ காவேரி! தக்ஷிணதிக்கை ரக்ஷிக்குமாறு நதிரூபிணியாய்ச செல்லப்போகின்ற உனது உற்பத்தி ஸ்தானமுதல் ஸமுத்திர சங்கமம் வரையில் யான் அநேக ருஷீஸ்வரர்களுடன் உனது தீரங்களில் வசிக்கின்றேன்." என்பதாம். இவர்கள் ளிப்போடு பலவரங்களை யளித்தபின்னா காவேரியானவள் ஸரஸ்வதி இலக்ஷ்மி பார்வதி இம்மூவரையும் நமஸ்கரித்தனள். அவர்களும் பல ஆசிகள் கூறி, அவள் தன் கணவனிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அதனைப்பற்றியும் பலவாறு உபதேசித்தார்கள். பின்னர் எல்லோரும் அகஸ்தியரிடத்தில் விடைபெற்று அவரவரது இருப்பிடஞ் சேர்ந்தார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உச-வது அத்தியாயம் முற்றிற்று.

## இருபத்தைந்தாம் அத்தியாயம்.

# காவேரி கமண்டலத்தினின்றும் வெளியிற் புறப்பட்டது.

பின்னர் அகஸ்தியமாமுனிவர் தீர்த்த ரூபிணியான காவேரியைத் தனது கமண்டலத்தில் வைத்துக்கொண்டும், லோபாமுத்திரையென்ற ஸ்திரீரூபங்கொண்ட அக்காவேரியைத்தன்னுடன் அழைத்துக்கொண்டும், இமைய மலையினின்று தக்ஷிணதிக்கை நோக்கிப் புறப்படுகையில், அம்மலையில் தவஞ்செய்து கொண்டிருந்த சகலமான ருஷிகளும் காவேரியினருகுற்றுத் "தாயே! நாங்கள் எல்லோரும் உனது விவாஹகாலத்தில வந்து அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீஹரியினிடத்தில் எங்கட்கு மோக்ஷமளிக்கவேண்டுமென்று முறையிட்ட காலத்தில், அவர் "நீங்கள் எல்லோரும காவேரியானவள் எங்கு நதியாகப்பெருகுவாளோ அங்குச்சென்று அவளது தீர்த்தத்தில் ஸ்நாநபானஞ் செய்துகொண்டு, அவளது தீர்த்தத்தில வஸிப்பீரேல் உங்களுக்கு மோக்ஷம் ஸித்தமாய் கிடைக்கும்" என்றார். ஆகையால் இப்பொழுது எங்களுக்கு மோக்ஷமளிக்கக் கடவையென்று பலவாறு பிரார்த்திக்கவே, காவேரியும் அவர்களை நோக்கி, யுரைத்ததாவது: "ஓ முனிபுங்கவர்களே! இப்பொழுது என்னை எனது பர்த்தாவான இந்த அகஸ்தியமாமுனிவர் தெற்கே ஸக்யகிரிக்குக் கொண்டு போகின்றார். அங்கு யான் காவேரியென்ற ஓர் மகாபுண்ணிய நதியாய்ப் பெருகப் போகின்றேன். அங்குற்று நீங்கள் எனது தீரத்தில் நியமத்தோடு வஸித்து ஸ்நாநபாநஞ் செய்துகொண்டிருங்கள். யான் உங்களை மோக்ஷமடையச் செய்விக்கிறேன்" என்றாள். பின்னர் அகஸ்தியரும் விந்திய கிரியைக் கிட்டி அதனைக் கையால் தட்டி "ஓ கிரிராஜனே! யான் தெற்கே சென்று மீண்டு வருமளவும் வானமட்டு மளாவியிருக்கின்ற உனது சரீரத்தைத் தணித்துக் கொண்டிருக்கக் கடவை" என்று நல்வார்த்தையாகச் சொல்லி, யதனைத் தாழ்த்திப் பின்னர் பிரமனது அம்சமாகிய ஸக்யாசலத்தை யுற்று, அதின் பேரில் தனது கமண்டலத்தை வைத்துக் காவேரியை நோக்கி, "ஓ காவேரி! இதுதான் உனது உத்பத்தி ஸ்தானமாகிய ஸக்யாசலம். நீ கமண்டலத்தினின்றும் வெளிப்புறப்படுவதற்கு ஏற்றசமயம் சொல்லுவேன்.

அப்பொழுது நீ இம்மலையினின்றும் நதியாகப் புறப்படலாம்." என்றுரைத்துத் தனது சிஷ்யர்களை நோக்கி, ஓ சிஷ்யர்களே! இந்தக் கமண்டலத்திலிருக்கின்ற காவேரியை யான் வருமளவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொண்டிருங்கள்." என்றுரைத்து ஸுவர்ண முகீ தீர்த்தத்தில் ஸ்நாநஞ் செய்யுமாறு சென்றார். கமண்டலத்திலிருந்த காவேரியும் தன்னுள் நமது பர்த்தாவானவர் நம்மையெப்பொழுது நதியாகப் பெருகும்படிக் கட்டளையிடுவாரோ தெரியவில்லை. அவர் எத்தனை நாளானபோதிலும் தமது வாயால் நம்மை புறப்படென்று சொல்லப்போகிறதில்லை. ஆகையால் நாம் புறப்படுவதற்கு இதுதான் நல்லசமயம். அவர் முன்னம் நம்மை நோக்கி, நீ ஸக்யபருவதத்தை யடைந்தவுடன் நதியாகப்பெருகலாம் என்று உத்திரவு கொடுத்திருப்பதினால் நமக்குப் பர்த்தாவினது வார்த்தையை மீறிநடந்த தோஷமுண்டாக மாட்டாது. என்று கமண்டலத்தினின்றும் வெளிப்புறப்படத் தீர்மானித்தாள். இத்தருணத்தில பிரமதேவன் ஹம்ஸாரூடராய்ச சகல தேவர்களோடுகூட அந்தச் சக்யகிரியை யடைந்து, ஸுவர்ண முகியில் ஸ்நாநஞ்செய்து ஜபம் பண்ணுங்காலத்தில் அங்கு ஸ்ரீமந்நாராயணனது அம்சமாகிய ஓர் நெல்லிமரம் அவர் முற்றோன்ற அவ்வரும் மிக்க ஆச்சரியத்துடன் அதனருகில் செல்லுகையில் திடீர் என்று அம்மரம் கண்ணுக்குத்தெரியாமல மறைந்து அந்தவிடத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீஹரியே பிரசன்னராய் ஸேவை ஸாதித்தனர். உடனே வானத்தில ஓர் அசரீரிவாக்குமுண்டாயிற்று. அதாவது, "ஓ பிரமனே! இங்கு ஸ்ரீஹரியானவர் ஆமலகவிருக்ஷரூபியாயிருக்கிறார். இவரை நீ யாராதிக்கக்கடவை." என்பது. இங்ஙனம் அசரீரிவாக்கைக் கேட்டவுடன பிரமதேவனும் மறுபடி விருக்ஷரூபங்கொண்ட பகவானுக்கு விரஜாதீர்த்த பூரிதமான தனது கமண்டலத்தினின்றும தீர்த்தத்தைச சங்கல்வார்த்து அந்த விருக்ஷத்தினது அடியில் அபிஷேகஞ்செய்து திவ்வியபுஷ்பங்களாலும் துளஸீ தளங்களாலும் அர்ச்சித்துப பலவாறு தோத்திரஞ்செய்தார். அத்தருணத்தில் காவேரிக்கும ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று. அதாவது, "ஓ! காவேரி! இப்பொழுது பிர்ம்மாவானவர் விரஜாதீர்த்தத்தைக் காயத்திரீ ரூபமான சங்கில் வார்த்து விஷ்ணுவினது அம்சமான ஆமலகவிருக்ஷத்தினது பாத ஸ்தானத்தில் அபிஷேகஞ் செய்கின்றார். இது துலாவிஷு புண்ணிய காலமானதால் நீயும் கமண்டலத்தினின்றும புறப்பட்டு விரஜா தீர்த்தத்துடன் சேர்ந்து திவ்

ஸ்யாமலக ரூபியான பகவானது பாதத்தை யலம்பிக் கொண்டு செல்லலாம். என்பதே இந்த வசனத்தைக் கேட்ட காவேரியும் மிக்க ஆநந்தத்துடன் கமண்டலத்திலிருந்த மற்றுமனேக புண்ணிய தீர்த்தங்களோடு கூட ஸ்யாமலகத்தினது வழியாகப் புறப்பட்டனள். அப்பொழுது இந்திரனும் மேகங்களை வர்ஷிக்கச் செய்தான். அதினால் காவேரியும் அதிக ஜலப்பிரவாகத்துடன் பிரவாகித்தனள். இப்பால் ஸ்நாநஞ் செய்யப்போன அகஸ்தியரும் திரும்பி வந்து பார்க்கையில் கமண்டலம் கீழே உருண்டு கிடப்பதையும் காவேரி யில்லாதிருப்பதையும் பார்த்து வெகு விசனத்துடனும் கோபத்துடனும் சிஷ்யர்களைக் கேட்க, அவர்களும், "ஸ்வாமி நாங்கள் மழைக்காக மரத்தடியிற் சென்று ஒண்டியாயிருந்தோம். அத்தருணத்தில் காவேரி தானே நதியாகப் பிரவாகித்தனள். பின்னர் நாங்கள் எம்மால் கூடியமட்டும் அவளைத் தடுத்துப் போகவேண்டாமென்று சொன்னோம். அப்படி சொல்லியும் கேளாது 'நான் நதியாகச் செல்லுவது உங்களுடைய குருவுக்குப் பிரியந்தான்; அவர் உங்களைக் கோபிக்க மாட்டார் போங்கள்,, என்று சொல்லி வெகுவேகத்துடன் சென்றாள், என்றார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உ௬-வது அத்தியாயம் முற்றிற்று.

---

இருபத்தாறு அத்தியாயம்.

## அகஸ்தியருக்கும் காவேரிக்கும் நடந்த சம்வாதம்.

:():

இங்ஙனம் சிஷ்யர்களுடைய வசனத்தைக் கேட்ட அகஸ்தியமுனிவரும் காவேரியினது விரகத்தைச் சகிக்காதவராய் அவளை இங்குமங்குந் தேடித்திரிந்துங் காணாமல் அதிதுக்கிதராய்ப் பலவாறு துதிசெய்யவே, காவேரியும் ஸஹ்யபர்வதத்திற்கு இரண்டு குரோசத்திற்கு (நான்குமைல்களுக்கு) அப்பால் அவர் கண்ணுக்குத் தோன்றினள். அப்பொழுது அகஸ்தியரும் அவளைநோக்கி, "ஓ காவேரி! நீ எனது வார்த்தையைமீறி இங்ஙனம் நதியாகச் செல்லலாமா? அப்படிச் சென்றாலும் எனது முன்னிலையில் செல்லக்கூடாதா?" எனக்

காவேரியும், "சுவாமி! நான் தேவரீருடைய கட்டளையை மீறி நடக்கவில்லை. ஸஹ்யகிரிக்குப் போனவுடன் நதியாகப் பிரவேசிக்கக் கடவை" யென்று தேவரீராலும் பிரமனாலும் முன்னமே கட்டளையிடப்பட்டிருக்கின்றேன். மேலும் இப்பொழுது துலாவிஷு புண்ணியகாலமானதாலும் பிரம விரஜாதீர்த்தத்திலே ஸக்யாமலக ரூபியான பகவானை யபிஷேகஞ் செய்தமையாலும், அந்த விரஜாதீர்த்தத்துடன் புறப்படும்படி ஆகாசவாணியும் கூறினபடியாலும் யான் நதியாகப் புறப்பட்டு விட்டேன். என்மீது தயவுசெய்து யான்செய்த பிழையைப் பொறுத்தருளவேணும்." என்று பலவாறு சொல்லிச் சமாதானப்படுத்தவே அகஸ்தியரும் மனமகிழ்ந்து காவேரியை நோக்கி, "ஓ காவேரி! நீ இப்பொழுது நதியாகச் செல்வதில் எனக்கு மிக்க சந்தோஷந்தான். நீ ஸாக்ஷாத் பகவான் மாயையென்றும் பிரமாத்திரி என்றும் சகல பாபிகளையும் இரக்ஷிக்கவந்த ஜகதம்பிகையென்றும் நான் அறிவேன். ஆகிலும் உன்மீது எனக்கு இருக்கும் பிரீதியாலும் உன்னைக் காண வேண்டுமென்ற ஆசையாலும் யானிங்ஙனம் உரைத்தேன். இனி நீ உனதிஷ்டப்படி செல்லலாம். உனது தீர்த்தம் கங்கையாதி புண்ணியதீர்த்தங்களைக்காட்டிலும் பரிசுத்தமானது. உனது சிரஸ்ஸ்தானத்தில் பகவான் தத்தாத்திரேயரென்ற நாமத்துடன் விளங்கிக்கொண்டிருக்கிறார். இன்று முதல் எல்லோரும் உன்னைக் காவேரியென்றும் தக்ஷிணகங்கையென்றும் திவ்யதேவியென்றும் சொல்லுவார்கள். மேலும் உன்னுடைய தீர்த்தத்துக்குச் சியாமலக தீர்த்தமென்றும் சங்கதீர்த்தமென்றும் பிரசித்தியுண்டாகும். உனது தீரத்தில் யான் அநேக ருஷிகளுடன் ஸதா வாஸஞ்செய்கின்றேன். உனது தீர்த்தத்தில் ஸ்நானதர்ப்பணாதிகள் செய்பவர் எவ்வித பாபிகளாயிருந்த போதிலும் தங்களுடைய பாவங்களைப் போக்கிக்கொண்டு மோக்ஷானந்தத்தை யனுபவிக்கக்கடவர்கள். மேலும் யான் உனக்கு மற்றொரு இரகசியம் சொல்லுகின்றேன் கேள். கங்கைமுதலிய புண்ணிய நதிகளும் புண்ணிய தீர்த்தங்களும் தங்களுடைய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யும் பாபிகளுடைய பாவங்களின் ஸம்பர்க்கத்தால் மிகவும் கலுஷிதாகளாய்த் தங்களையடைந்த அப்பாபங்களைப் போக்கிக்கொள்ளுமாறு பிரமனிடம் சென்றார்கள். அப்பொழுது பிரமனும் ஸ்ரீஹரியினது ஆக்ஞைப்படி அவர்களை நோக்கி, "ஓ! புண்ணிய தீர்த்தங்களே! நீங்கள் எல்லோரும் துலாவிஷு புண்ணியகாலத்தில் காவேரியில்

ஸக்யாமலகத்தினருகிலும் ஸ்ரீரங்கநாதன் ஜம்புகேசுவரன் இவர்கள் ஸந்நிதிக்கருகிலும் சென்று ஸ்நானஞ் செய்வீர்களேல் நீங்கள் பரிசுத்தர்களாவீர்கள். என்று சொல்லியிருப்பதால் துலாஸங்கிரமண காலத்தில் அநேகப் புண்ணிய தீர்த்தங்கள் யாவும் உன்னிடம் வந்து சேரும்'' என்றுசொல்லித தனது சீடர்கள் ஏழுபேருடன சென்றார். பின்னர் காவேரியும் அனேக புண்ணிய தீர்த்தங்களோடு ஏகோபித்து திரண்ட அலைகளுடனும நுரைகளுடன குமிழிகளுடைய மகாபயங்கரமான வேகத்துடனும செடிகளையும கொடிகளையும் விருக்ஷங்களையும் அடியோடு பிடுங்கிக்கொண்டு வேதகோஷம்போன்ற சத்தத்துடன் அநேக காடுகளையும மலைகளையும் கடந்து சிலவிடங்களில் நேராகவும சிலவிடங்களில் வக்கிரமாகவும இன்னும் பலவிடங்களில் மண்டலாகாரமாகவும இங்ஙனம வெகு விநோதமான காக்ஷியுடன் புறப்பட்டனள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உசு-வது அத்தியாயம முற்றிற்று

---

## இருபத்தேழாம அத்தியாயம.

## தேவர் முதலாயினோர் காவேரியைத் தரிசித்தது.

---

பின்னர் தேவர்கள் கந்தருவர்கள் கிங்கரர்கள சித்தர்கள் சாரணர்கள் கிம்புருஷர்கள் பிதிர்க்கள் முதலிய எல்லோரும் திவ்யவிமானருடர்களாய்வந்து, காவேரிநதி கரைபுரண்டு செல்லும் அத்புதத்தைக் கண்களாரக்கண்டு வெகு ஆநந்தமுற்றார்கள். அப்பொழுது தேவர்கள் காவேரியின்மீது பூமாரிபொழிய கந்தர்வர்கள் திவ்விய கானஞ் செய்தார்கள். அப்ஸரஸ்திரீகள் நடனஞ்செய்ய மற்றும் எல்லோரும் காவேரியை ஜயஜய வென்று துதித்தார்கள். பிர்ம்மா விஷ்ணு மகேஸ்வரர்களும் சனக சனந்தன சனத்குமார சனற்சாதர் முதலிய யோகிகளும காவேரியினது பிரவாஹத்தைத் தரிசிக்குமாறு அங்குற்றார்கள். அப்பொழுது தேவர்கள் எல்லோரும அடங்காமகிழ்ச்சியோடு தங்களுக்குள் ஒருவருக்கொருவர் வார்த்தையாடிக் கொள்வாராயினர்.

"ஆகா! இந்தக் காவேரியின் அத்புதத்தை யென்னவென்று சொல்வோம்; இதன் மகிமையை யாவர்; அறிவர் இனி நாம தன்னி யராயினும் ஏனெனில், சகலஜனங்களும் இக்காவேரியினது ஜலத் தில் நீராடி நம்மை யுத்தேசித்துப் பற்பல யக்கியங்களையும் தர்ப்ப ணாதிகளையும புரிந்து, நமக்குத் திருப்தி செய்விப்பார்கள்." என்று சொல்லிப்பலவாறு காவேரியைப் புகழ்ந்தார்கள். பிதிர் தேவதை களும் அங்ஙனமே "இனி நமது வம்சஸ்தாகள் இக்காவேரி ஜலத் தில நீராடிச் சிராத்ததினத்தில் தர்ப்பணம் முதலிய கிரியைகளைப் புரிநது, நமககுத்திருப்தி பண்ணிவைப்பாாகள்." என்று சொல்லிக் காவேரியைப் புகழ்நதார்கள். பின்னர் ருஷிகளும மற்றுமுள்ளவர் களும, அங்ஙனமே அத்தீர்த்ததைத நோக்கி, "இது மனிதருடைய பாவங்களைப் போககவே இந்நதிவடிவாயிறறெனறும, இதில் பிதிரக்களை உத்தேசித்து தாப்பணாதிகளை முடிபபவர் காலதண்டத் தை யடையாாவென்றும், வைகுண்டமென்னும மீளாப்பதவிககுச சோபனமான தென்றும, தாமரை குமுத உற்பல கல்ஹார முதலிய மலர்களால் அலங்கார முடையதென்றும், இலக்ஷ்மீ நாராயண சிவ சத்திவடிவ மானதென்றும" பலவாறு துதிசெய்தார்கள். பின்னர் பிர்ம்மா விஷ்ணு மஹேசாகளும தனித்தனியே காவேரிக்குப் பலவ ரங்களை யளிக்கவிருமபி, பிரமதேவா, "ஓ காவேரி! நாஸ்திகர் முத லிய மகாபாபிகளாயினும, பரதார பரத்திரவ்விய அபஹரணைமசெய் யும் தூர்த்த மக்களாயினும உனது ஜலததில ஸ்நாநஞ்செய்த மாத் திரத்தில பரிசுத்தர்களாகி எனது பதவியை யடையக்கடவர்கள்." என்றார். உருத்திரபகவான், "ஓ காவேரி! சுவேதாரண்ணியத்தில நீ சமுத்திரத்தோடு சங்கமிக்குமிடத்தில் யான் எப்பொழுதும வசித் துக்கொண்டு உனது ஜலத்தில் ஸ்நாநபாணாதிகள் செய்பவர்களுக்கு ஸப்தஸாகரத்திலும அர்த்தோதய புண்ணியகாலத்தில ஸ்நாநஞ் செய்பவரடையும பலனையளிப்பதேயன்றிக் கயாவில ஆயிர ஸ்நாநம நியமத்துடன செய்தோா அடையும பலனை உனனிடத்திலாடுவோரக குத் தவராது தருவேன்" என்றார். ஸ்ரீ மகாவிஷ்ணுவும, "ஓ கவேர புத்திரி! இப்பொழுது உனக்கு யாதுவரம வேண்டுமோ அதனைக் கேட்பாயாகில் தடையின்றி யளிக்கின்றேன்." எனவே, காவேரியும், "ஓ தேவதேவனே! தேவரீருக்கு அடியாள்பேரில் கிருபையிருக்கும் பக்ஷத்தில் அதிபாபிகளாயும் துராசாரர்களாயும வேதபாஹ்யர்களா யும் குருப்பிராமணத் துவேஷிகளாயு மிருக்கிற பிராமணர் முதலிய

சகலவர்ணத்தாரும் எனது ஜந்மதினத்தில் ஏகாதசியன்று ஒருதடவை ஸ்நாநஞ்செய்த மாத்திரத்தில சதகல்மஷர்களாய் யோகிகளாலு மடைவதற்கரிதாகிய தமது வைகுண்ட லோகத்தை யடையவேண்டும்." மென்றாள். உடனே வைகுண்டநாதனும் அவளை நோக்கி, "அங்ஙனமே வரந்தந்தேன். மேலுமின்னமொரு வரமுந்தருகின்றேன். அதாவது:-- உனது தீர்த்தத்தில் எந்தவிடத்திலேயாவது துலாமாஸத்தில் பிராதக்கால ஸ்நாநஞ்செய்து எமது சேவைசெய்பவர் எமது பதவியை யடையக் கடவர்கள்." என்றார். இங்ஙனம் வரம்பெற்ற காவேரியோடு ஸஹஜையோதிகை, கங்கையென்ற இரண்டு புண்ணிய நதிகளும் சேர்ந்து காவேரியைப் பூஜித்தன. இவ்விரண்டு நதிகளும் காவேரியோடு சங்கமிக்குங் கட்டத்தில் ஸ்நாநஞ்செய்பவர் சர்வபாபங்களினின்றும் முக்தராவார்கள். இப்படிப் பிரக்கியாதியோடு சென்ற காவேரி பஹுதூரம் சென்று. ஹேமவதி, கபிலையென்ற நதிகளின் ஸங்கமத்தை யடைந்து, கடைசியில் ஸாகரத்தோடு இன்புற்று கூடிற்று. மேற்சொன்ன ஹேமவதி கபிலை இவைகள் காவேரியோடு சந்திக்குமிடங்களில ஸ்நாநஞ்செய்பவர் சகலவித பலனையும் அடைவார்கள். இவ்விரு நதிகளுடைய சங்கமங்களில் சிராத்தாதிகள். செய்வோருடைய பிதிர்க்கள் எல்லோரும் திருப்தியடைவார்கள். இங்குவாசஞ்செய்வோர் நைமிசவனவாசபலனை யடைவதோடு நூறுதுலா தானபலனையும் அப்போதே பெறுவர். இது முக்காலும் சத்தியம். ஸாக்ஷாத விரஜையே இக்காவேரி ரூபமாய் வந்திருக்கின்றது. ஸ்ரீவைகுண்டமே ஸ்ரீரங்கமாகப் பரிணமித்திருக்கிறது. இந்தக்காவேரியினது இருகரைகளிலும் உற்பத்தி ஸ்தானமுதல் சமுத்திரசங்கம பரியந்தம் அங்கங்கே அநேக சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களு முண்டாயின. அநேக ருஷீஸ்வரர்களும் பிராமணசிரேஷ்டர்களும் இக்காவேரியினது தீரங்களில் வசித்துக்கொண்டு ஜபதபாதிகளைப் புரிகின்றார்கள். ஆகையால், யாவனொருவன் இக்காவேரியில் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் துலாவிஷு புண்ணியகாலத்தில் ஸ்நாநஞ்செய்து தனது பிதிர்க்களுக்குத் திலதர்ப்பணாதிகளைப் புரிவானோ அவன் குருக்ஷேத்திரம் கயைமுதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில அநேகமாயிரம் சிராத்தங்களைப் புரிவதினா லுண்டாகும் பலனை யடைவான். காவேரியினது மகிமை இத்தன்மையானது வென்று ஒருநாவால் ஓதத்தக்க தல்லவென்று முனிவர் கூறிமுடித்தனர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உஎ-வது அத்தியாயம் முற்றிற்று.

இருபத்தெட்டாம் அத்தியாயம்.

## சமுத்திரராஜன் காவேரியை விவாகஞ் செய்துகொண்டது.

---

பின்னர் வாயுவானவன் வருணபகவானது கட்டளையின்படி அநேக அப்ஸரஸ்ஸுக்களோடுகூட காவேரியை யெதிர் சென்றழைத்தான். காவேரிக்கும் ஸமுத்திர ராஜனுக்கும் நடக்கப்போகின்ற விவாகத்திற்காக பிர்மா விஷ்ணு மகேஸ்வரர்களும் மற்று மநேக தேவகணங்களும் விமான ரூடர்களாய்வந்து சேர்ந்தார்கள். அந்த விவாஹ மஹோத்ஸவமானது ஸ்வேதாரண்யத்தில் நடந்தது. அப்பொழுது தேவதுந்துபிகள் முழங்கின. கந்தர்வர்கள் கானஞ்செய்தார்கள். அப்ஸரஸ்ஸுக்கள் நடித்தார்கள். இவ்வளவு கோலாகலத்துடன் பிரமதேவர் மகேஸ்வரனை முன்னிட்டுக்கொண்டு தனது புத்திரியாகிய காவேரியை மேன்மைபொருந்திய ஸமுத்திர ராஜனுக்குக் கன்னிகாதானஞ்செய்தார். பின்னர் திரிமூர்த்திகளும் காவேரிக்குப் பலவரங்களை யளித்துத் தங்களிருப்பிடஞ் சென்றார்கள். காவேரியும் ஸமுத்திர ராஜனோடு சேர்ந்து பரமாநந்தத்தை யடைந்தனள். காவேரி ஸமுத்திரசங்கமத்தில் துலாஸங்கிரமண புண்ணியகாலத்தில் ஸ்நாநஞ்செய்து தர்ப்பணாதிகளை செய்பவனடையும் பலனைச் சொல்லுதற்கு சாக்ஷாத் ஜநார்த்தனர் தாம் வல்லவராவர். ஸமுத்திரசங்கம ஸ்நாநம் புரிபவர் புத்திரலாபம் தனலாபம் கன்னிகாலாபம் ஆயுர்லாபம் மோக்ஷலாபம் இவைகளைப் பெறுவார்கள். சுருங்கச்சொல்லில் ஒருவன் காலையில் எழுந்து பக்திபூர்வமாய்க் காவேரி! காவேரி!! காவேரி!!! என்று மூன்றுமுறை யுச்சரிப்பானேயானால், அவன் துலாவிஷுவில் காவேரிஸ்நாநம் புரிந்தவனடையும் பலனைப் பெறுவான். அதிபாபிஷ்டையாயும் துஷ்டையாயு மிருந்த சந்திரகாந்தை யெனும் ஸ்திரீயும் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் ஒருவாறு துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து ஸ்வர்க்கமடைந்தன ளன்றோ? ஆதலின் சகல மூடாத்துமாக்களுக்கும் காவேரியினது மகிமையை யறிந்துகொள்வதற்கு இதுவே திருஷ்டாந்தம். எந்தவிதவைகள் ஞானவைராக்கிய ஹீனர்களாய்க் கெட்ட செய்கைகளைப் புரிந்துகொண்டு இருக்கிறார்களோ? அவர்கள் இக்காவேரியைத் தவிர்த்து மற்று எந்தப்புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநஞ் செய்தபோதிலும் அவர்களுக்குப் பாப

விமோசன மாகமாட்டாது. ஆகிலும் காவேரி தீரவாசிகளா யிருப்பவர் எப்பொழுதும் புண்ணியமே புரிந்துவரவேண்டும். பாபமென்பது சிறிதேனும் புரியகூடாது. ஏனெனில், காவேரி தீரத்தில் புரிந்த புண்ணியமானது எங்ஙனம் அக்ஷயமா யிருக்குமோ? அங்ஙனமே அந்த தீரத்தில் செய்தபாபங்களும் அக்ஷயமாயிருக்கும். மற்றஸ்தலங்களில் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம் எதுவெனில் காவேரிஸ்நாநந்தான். காவேரி தீரத்தில் செய்யும் பாபங்களுக்குப் பிராயச்சித்தமோ எங்குமேயில்லை. ஆகையால், காவேரிஸ்நாநஞ் செய்ய விரும்புவோர் அனைவரும் ஸதாசார சம்பன்னர்களா யிருந்துகொண்டு ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் துலாமாதத்தில் ஸ்நாநஞ்செய்து இக்காவேரி மகத்துவத்தைப் பௌராணிகரிடமிருந்து பக்திசிரத்தையுடன் சிரவணம்பண்ணிப் பௌராணிகருக்கு வேண்டிய வெகுமதிசெய்து, அவரை ஸுகந்தபுஷ்பாதிகளால் அர்ச்சிக்கவேண்டும். எந்த மூடன் பௌராணிகரை அவமதிக்கின்றானோ? அப்பாவியானவன் நிர்ஜ்ஜலமும் கோரமுமான ஆரண்ணியத்தில் ஓர் பிரமராக்ஷஸனாகப் பிறப்பான். ஆகையால் புராணசிரவணம பண்ணவேண்டும். இங்ஙனம் காவேரியினது மகிமையில் எனக்குத் தெரிந்தமட்டில் லேசமாத்திரம் சொன்னேன். என்று தௌம்மிய முனிவரானவர் தர்மபுத்திரருக்கு உரைத்தார். இதைக்கேட்ட தருமபுத்திரரும அதிக ஆச்சரியமும் ஆநந்தமு முற்றவராய் அவரைசசிங்கா சனத்திலிருத்தி அவருக்குரச்சகல உபசாரங்களையும செய்து அவரைப்பலவாறு பணிந்தார். தௌம்மியரும் வெகுசந்தோஷத்துடன் அவர்க்குப் பல ஆசிகள்கூறித் தமது இருப்பிடஞ் சென்றார். கேட்டீரா மகாராஜனே! என்று அகஸ்தியமுனிவர் அரிச்சந்திரனை நோக்கி, இங்ஙனம காவேரியினது மகிமையை யுரைத்து முடித்தனர்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில
உ௮-வது அத்தியாயம முற்றிற்று.

---

இருபத்தொன்பதாம அத்தியாயம.

## அரிச்சந்திரன் காவேரியின் மகத்துவத்தைப் புகழ்ந்தது.

—:O:—

இங்ஙனம் அகஸ்தியமாமுனிவர் அரிச்சந்திரமகாராஜனுக்குத் துலாகாவேரியினது மகத்துவத்தை பற்றி சவிஸ்தாரமாய்

உரைத்து அவரைநோக்கி, "ஓ அரசசிகாமணியே! நீரும் ஸ்ரீரங்க க்ஷேத்திரஞ்சென்று ஸ்ரீரங்கநாத ஸந்நிதியில் யதாவித துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து, அங்கு மூன்றுநாள் வாசஞ்செய்து அங்குள்ள பிராமணர்களுக்குத் தானதருமங்களைப் புரிந்து, ஸ்ரீரங்கசாயிக்கும் அநேக மண்டபப் பிராகாராதி கைங்கரியங்களைச்செய்து, மீண்டும் இங்குற்று அசுவமேத யாகத்தைப் புரிவீரேயானால் நீர் இந்தமரெனும மகாருஷியால் நேரிட்டிருக்கின்ற விப்பிராவமானமாகிய பாபத்தினின்றும் விடுபட்டு ஐஹிக ஸுகங்களை யனுபவித்துக் காலாந்தரத்தில் பிரமலோகத்தை யடைவீர்." என்றார்: இங்ஙனம் கேட்ட அரிச்சந்திர மகாராஜனும் பேரானந்தத்தோடு அவரைப்பலமுறை நமஸ்கரித்துக் கந்தபுஷ்பாதிகளாலர்ச்சித்து அஞ்சலிசெய்து விநய பூர்வகமாக விண்ணப்பம் செய்ததாவது:— "ஓ முனீஸ்வரரே! இன்றுதான் எனது ஜன்மம் ஸபலமாயிற்று. இன்றுதான் எனதுகுலமே ஈடேறிற்று. இன்றுதான் என்னால் சகலதருமங்களும் செய்யப்பட்டன. ஏனெனில், யான் தற்செயலாய்த் தேவரீர் சந்நிதியையடைந்து தேவரீர் திருவாக்கினின்றும் அதிபாவனமும் அத்யத்புதமுமான துலாகாவேரி மகாத்மியத்தைச் சவிஸ்தாரமாய்க் கேட்கும் பாக்கியத்தைப் பெறவேனன்றோ? ஏதோ ஜன்மாந்தரத்தில் எனது முன்னோர்கள் செய்த பூஜாபலத்தினால் அடியேனுக்கு இப்பொழுது தங்களைப்போன்ற மகத்துக்களுடைய ஸகவாசம் கிடைத்தது. இனி யான் ஸம்ஸார சாகரத்தினின்றும் கரையேறி விட்டேன்." என்று இங்ஙனம் பலவாறு அவரைக்கொண்டாடி அவரைப் பத்து லட்சம சுவர்ண புஷ்பங்களா லர்ச்சித்து அவரிடத்திலும் மற்று மங்குள்ள ருஷீஸ்வரர்களிடத்திலும் விடைபெற்று, ரதாரூடராய அநேக சைந்நியங்கள் புடைசூழச் சகலவாத்திய கோஷங்களுடனே ஸ்ரீரங்க க்ஷேத்திரம் நோக்கிப் புறப்பட்டு, வழியில் அங்கங்கே யிருக்கின்ற கிராமங்கள் நகரங்கள் முதலியவைகளின் காட்சியைப் பார்த்துக்கொண்டு ஸ்ரீரங்கம வந்து சேர்ந்து, அங்கு அகஸ்தியர் கட்டளையிட்டபடி மூன்றுநாள், தங்கி விதிப்படி துலாகாவேரி ஸ்நாநஞ்செய்து, புராண சிரவணம்பண்ணி அந்தப் பௌராணிகருக்குத்தக்க மரியாதைசெய்து, அங்குள்ள பிராமணர்களுக்குச் சுவர்ணங்களை வர்ஷம்போல் வர்ஷித்து, அரங்கநாதனைப்பணிந்து, அநேகமண்டபகோபுரப் பிராகாரங்களைக் கட்டுவித்துச் சந்திரபுஷ்கரிணி ஸ்நாநஞ்செய்து, மீண்டு குருக்ஷேத்திரமுற்று, அகஸ்தியரை வணங்கி, "சுவாமி!

தேவரீர் அருளிச்செய்தவாறு செய்துவந்தேன். இனி அடியேனுக்கு அசுவமேதயாகத்தை நடத்திவைக்க வேண்டும்." என்று பிரார்த்திக்கவே, அகஸ்தியரும் அப்படியே அங்கிருக்கும் ருஷிகளைக்கொண்டு அந்த யாகத்தை விதிப்படி நடத்திவைத்தார். உடனே அரிச்சந்திரனும் சந்தோஷ சித்தனாய் அகஸ்தியாதி முனிவரர்களைப் பணிந்து அவர்களிடத்தில் விடைபெற்று வெகுகோலாஹலத்துடன் தனது நகரமாகிய அயோத்திக்குச் சென்றான்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

உ௯-வது அத்தியாயம் முற்றிற்று.

---

முப்பதாம் அத்தியாயம்

## காவேரிசமுத்திர ஸங்கமத்தின் மகிமை.

---

இங்ஙனம் தால்பியமகா ருஷியானவர் தர்மவர்மாவென்னும் அரசனுக்குக் காவேரியினது மகிமையை அறிவித்துப் பின்னும்சொல்லுகின்றார். யாவனொருவன் இந்தக் காவேரியினது விவாஹ கட்டத்தை விசேஷமாய் வெள்ளிக்கிழமையில் கேட்கின்றானோ அவன் புத்திர பௌத்திரர்களோடு சுகமாய் வாழ்வான். குருடர் செவிடர் மூடர் ஊமைகள் மலடிகள் பாபிகள் முதலியவர்கள் துலாமாஸத்தில் இந்தக்காவேரி கல்யாண கட்டத்தைக் கேட்பார்களேயானால், உடனே அவர்களுடைய தோஷங்கள் நீங்கிப் புண்ணியசாலிகளாவார்கள்: ஆகையால், நீரும் துலாகாவேரி ஸ்நாநம் செய்யக்கடவீர். என்று இங்ஙனம் தால்பியர் தர்மவர்மாவுக்குக் காவேரியினது மகத்துவத்தை யுரைக்கவே, தர்மவர்மாவும் ஆநந்தபரவசனாய் அவருக்குச் சகல உபசாரங்களையும் புரிந்து, அவரைப்பலவாறு கொண்டாடினான். தால்பியரும் தனக்கு அரசன்செய்த உபசாரங்களுக்கு மனமுகந்து, 'அரசனே! நீர் நல்லபுண்ணியவானானபடியால் இந்தப்புண்ணிய சரித்திரத்தைக் கேட்கும்படி யுமக்குப் புத்தியுண்டாயுற்று. நல்லது யான் போய்வருகிறேன். எனக்கு விடைகொடும்." எனவே அரசனும் அவரைப் பிரிய மனமில்லாதவனாய்மீண்டும் அவரிடத்தி

னின்றும் அர்த்தோதயமகோதய புண்ணியகாலத்தில் துலாகாவேரி ஸ்நாநஞ்செய்தலின் பலனையும் அந்த அர்த்தோதய மகோதயங்களின் இலக்ஷணங்களையும் இராமஸேது தனுஷ்கோடி இவைகளின் மகத்துவத்தையும் நன்கு கேட்டுப் பின்னர் அவரைப் பிரியமனமில்லாது பிரயாசத்தின்பேரில் அவருக்குச் செல்ல விடையளித்தனன். அந்தத் தால்பிய ருஷியும் தமது சிஷ்யர்களுடன் தபோவனத்துக்குச் சென்றார். கேட்டீர்களோ! சௌனகாதி முனிவர்களே! இப்பொழுது யான் உங்களுக்குக் காவேரியினது மகிமையில் இலேசமாத்திரம் சுருக்கமாய் எமக்குத்தெரிந்தமட்டில் தெரிவித்தேன். அதன் விரிவைக்கூற எனக்குத்தரமாகாது. என்று ஸூதபுராணிகர் கூறினர். சௌனகாதி ருஷிகளும் வெகு ஆச்சரியமும் ஆநந்தமுமுற்றவர்களாய் அந்தச் சூதமா முனிவரைப்பணிந்து, கந்த புஷ்பாக்ஷதைகளால் அர்ச்சித்துக் கொண்டாடினார்கள்.

ஆக்கினேய புராணத்தில் துலாகாவேரி மகத்துவத்தில்

௩0 - வது அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீரங்கநாத பரப்பிரம்மணே நம:

—:*:—

மகாமகோபாத்யாய, டாக்டர்
சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.